கடவுள் துணை.

போகரேழாயிர
சூஸ்திரமெழுநூறு.

இஃது,

யூநாநி வைத்திய

தாருட்யவிர்த்திபோதினி முதலிய

பல வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய

ஹக்கீம்

பா - முஹம்மது அப்துல்லா சாஹிபு

அவர்களால்

சென்னை

முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பட்டது.

FIRST EDITION.

1907ஹு

Rigistered Copyright.

Blank page counted

Digitized By Roja Muthiah Research Library

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST-INDIA

விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்குந்தெரியப்படுத்துவது யாதெனில்:—'போகரேழாயிர சூஸ்திரமேழுநூறு" ௧௮௯௭௵ (௨௫-வது) ஆக்டின் (௨௦-வது) பிரிவில் (௬-வது) விதியின்பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராஸிலும்,

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகையால், இக்கிரந்தத்தையாவது, அல்லது இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது, இதில் ஏதேனும் பாகத்தையாவது, என் உத்தரவின்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், மேற்கண்ட ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

☞ ஹக்கீம் பா முகம்மது அப்துல்லா.

Digitized By Roja Muthiah Research Library

விசேஷ விளம்பரம்.

எம்மால் அச்சிடப்பட்டிருக்கும் கிரந்தங்களின் டைட்டில்பேஜில் அடியிற் கண்டிருக்கின்ற என்னுடைய பெயர் எழுதப்பட்டிருக்கும். அவ்விதப் பெயர் எழுதப்படாத கிரந்தங்கள் மாறுபாடானவையாயிருக்கும்; ஆனதுபற்றி, அப்படிப்பட்ட கிரந்தங்களைக் கொண்டுவந்து கொடுக்குமவர்களுக்கும், அல்லது, அப்படிப்பட்ட கிரந்தங்களை வைத்து விற்பனை செய்யுமவர்களைக் காண்பிக்கு மவர்களுக்கும் தக்க வெகுமதி கொடுக்கப்படும்.

ஹக்கீம் - பா - முகம்மது அப்துல்லா.

HAKEEM B. MUHAMMAD ABDULLA SAIB.
MADRAS

Library copy lacks p. 5-8

Digitized By Roja Muthiah Research Library

போகர் ஏழாயிர சூஸ்திர மேழுநூற்றின்

அட்டவணை.

அ.	பக்கம்.
அஞ்சு சுண்ணக் குகை	202
அஞ்சுநீர்	203
அட்டையில் சூதக்கட்டு ...	113
அண்டச்சத்து	169
அண்டமெழுகு	130
அண்டம்	79
அப்பிரேகச் சத்து	87
அமுரி மூதண்டக் கஷாயம் ...	71
அயச்சவளை	130
அயச் செம்பு	95
ஷை (வேறு) ...	111
ஷை (வேறு)	164
அயநாகம்	65
ஷை (வேறு)	153
அயமுருக்கு	64

இ.	
இந்துப்பு வைப்பு	61
இரசசெந்தூரம்	60
ஷை (வேறு)	135
ஷை (வேறு)	41
இரசப் பதங்கம்	133
இரசமணி	122

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.

Digitized By Roja Muthiah Research Library

		பக்கம்.
இரசித பாஷாண மெழுகு	...	44
இரசித பாஷாணம்	... ...	44
இரத்தசிங்கி வைப்பு	...	155
இலவண பாஷாண வைப்பு	...	119
இலிங்க மெழுகு	... ...	42
ஷை (வேறு)	... ...	104

.உ

உப்புக்கட்டு	... ...	6
ஷை (வேறு)	... ...	10
ஷை (வேறு)	...	84
ஷை (வேறு)	... ...	103
ஷை (வேறு)	... ...	186
உப்புக்களங்கு	... ...	86
உப்புக்கிண்ணி	... ...	186
உப்புக்குரு	... ...	12
உப்புச்சுண்ண செயநீர்	... ...	189
உப்புச்சுண்ணம்	... ...	86
உலகவாதி	... ...	166
ஷை (வேறு)	...	184
உலோகத் திராவகம்	...	99

ஊ.

ஊத்துக்குக் காலம்	... ...	198
ஊத்துமுறை	... ...	200

எ.

எரிப்பினம்	... ...	200

Digitized By Roja Muthiah Research Library

ஏ.	பக்கம்.
ஏமச்சிங்கி	156
க.	
கடுங்காரச் செயநீர்	3
கடுஞ்சுண்ணக் குகை	202
கட்டினம்	198
கரிசாலைக் கற்பம், வேம்பின் சூரணம் ...	74
கற்பூரச் சுண்ணம்	189
களங்கு சூதக்கட்டு	52
கற்பங்கொள்ள	70
கற்பங்கொள்ள மாதம்	71
கா.	
காந்தசத்து	66
காந்தசத்துச் செந்தூரம்	68
ஷை (பத்தியம்) ...	69
காந்தசத்துச் செம்பு	96
காரீயச் சுண்ணம்	27
கு.	
குகை	200
குங்கும பாஷாணம்	118
குடோரி வைப்பு	63
குருமுறை	198
குளிகை	28
ஷை (வேறு)	174
குளிகைக்குள் மருந்துபூச ...	175
குளிகை சாரணை	41

Digitized By Roja Muthiah Research Library

கெ.	பக்கம்.
கெந்தகத் தைலம்	109
கெந்திசத்துச் செந்தூரம்	92
கெந்தித் தைலம்	36
கெந்தியுப்பு	62
கெவுரி மெழுகு	46
கெவுரி வைப்பு	145
கே.	
கேசரத்தினத் தைலம்	110
கொ.	
கொடுஞ்சிங்கித் தைலம்	121
கோ.	
கோழித்தலைக் கெந்தி	141
ச.	
சகத்திரவேதிச் சத்து	168
சங்குச் செம்பு	16
சத்துவிடுவி பிடாரனை	175
சபிலகாரணித் தைலம்	203
சருக்கரை வேம்பு	75
சவுக்காரக்குரு	2
சவுக்காரச் சுண்ணம்	181
சவுக்காரச்சுத்தி	2
சவ்வீர வைப்பு	30

Digitized By Roja Muthiah Research Library

சா. பக்கம்.

சாதிலிங்க வைப்பு 113
சாஸ்திர விபரம் 38
சாபம் 32
ஷை (வேறு) 167
ஷை (வேறு) 173
சாரஜெயநீர் 147
சாரம் 126

சி.

சிங்கிச்செம்பு 159
சித்தர்கள் கற்பமுண்ட விபரம் ... 83
சிவப்புக் கற்றாழை 75
சிவப்புச் சவ்வீர வைப்பு 34
சிவப்புச் சாரசெந்தூரம் 49
சிவப்பு நவச்சார வைப்பு 48
சிவனார் வேம்பு 79

சீ.

சீந்திக் கற்பம் 78

சு.

சுண்ணாம்பு 81

சூ.

சூடன் வைப்பு 65
சூதக்கட்டு 131
ஷை. (வேறு) 152
சூதசெந்தூரம் 55
சூதச் செம்பு 164

2

Digitized By Roja Muthiah Research Library

பக்கம்.

சூத பாஷாணம் 116
சூதமணி 59
ஷை (வேறு) 76
ஷை (வேறு) 187

செ.

செந்தூரக்காலம் 199
செம்புச் சுத்தி 132
செயநீர்க் காலம் 198

சோ.

சோரவீர வைப்பு 39

ஞா.

ஞானி 33

த.

தம்பனக் குளிகை 192
தலைமுழுக 80

தா.

தாம்பிரக்குரு 150
தாம்பிரச் செயநீர் 152
தாளக செந்தூரம் 47
தாளகச்சத்துக் கிண்ணி 112
தாளகச் செம்பு 111
தாளகமெழுகு 46

தி.

திசமுகக் கரு 124
திராவகம் 58

Digitized By Roja Muthiah Research Library

	பக்கம்.
து.	
துருசு	126
துருசுக் களங்கு	56
துருசுக்குரு	40
துருசுச் சுண்ணம்	190
துருசுச் செந்தூரம்	57
துருசுச் செயநீர்	148
துருசுத் திராவகம்	101
துருசு வைப்பு	53
துவாதசத் தைலம்	123
தே.	
தேவ வணக்கம்	1
ந.	
நடராஜர்	91
நா.	
நாகக்கிண்ணிப் பதங்கம்	154
நாக செந்தூரம்	26
நாகச் சுண்ணம்	26
நாகச் செயநீர்	195
நாகபற்பம்	170
நாகபாஷாண வைப்பு	114
நீ.	
நீற்றினம்	197
நெ.	
நெல்லிக்காய்ச் சூரணம்	78
ப.	
பச்சைக்கர்ப்பூர வைப்பு	137
பச்சைச் சூதக்கட்டு	53

Digitized By Roja Muthiah Research Library

பக்கம்.

பஞ்சபக்ஷிப் பாஷாணம் 143
பஞ்சபூதக் குகை 201
படிகச் செம்பு 162
பவளப்புற்றுப் பாஷாணம் 144
பறங்கிப் பாஷாண வைப்பு 37

பா.

பாஷாண மெழுகு 37
ஷை (வேறு) 43
பாஷாணவகை முப்பத்திரண்டு 158
பாஷாண்டி 51
பாலரசம் 104

பு.

புடநிதானம் 199
புத்தி 188

பூ.

பூநாகச் செம்பு 161
பூரம் 125

பொ.

பொன்தொட்டி 152

ம.

மகாதிராவகம் 105
மகா வெடியுப்பு ஜெயநீர் 145
மயூரச் செம்பு 93
மலக்கழற்றக் கஷாயம் 72

Digitized By Roja Muthiah Research Library

	பக்கம்.
மி.	
மித்திரவகை	1[illegible]5
மிருதார் சிங்கி	157
மிளகுக்கற்பச் சூரணம்	73
மூ.	
மூலிகைக் கருப்பு	82
மூலிகை விபரம்	76
வ.	
வங்காளப்பச்சை வைப்பு	132
வராகவித்தை	191
வர்ண இனம்	197
வழலை	125
வழலைவாங்க	81
வீ.	
வீரக்குரு	126
வீரமெழுகு	36
வெ.	
வெடியுப்பு ஜெயநீர்	9
டிை (வேறு)	146
வெண்காரமணி	194
வெண்கார வைப்பு ... —	194
வெள்வங்க பற்பம் — —	172
வெள்ளை = —	127
வெள்ளைப் பதங்கம் — — —	136
வை.	
வைக்கிராந்தச் செந்தூரம் —	165

போகரேழாயிர சூஸ்திர மெழுநூற்றின்

அட்டவணை முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

Blank page counted

Digitized By Roja Muthiah Research Library

போகரேழாயிர

சூஸ்திரமெழுநூற்றின்

முகவுரை.

கனவான்களே!

இந்தப் போகரேழாயிர சூஸ்திரமெழுநூறு என்னும் நூலானது இருடியருட் சிறந்த மகாத்மாவாகிய போகரிஷியென்பவராற் செய்யப்பட்டது. மேற்கண்ட முனி சிரேஷ்டருடைய பெருமையும்; அவராற் செய்யப்பட்ட போகரேழாயிர மென்னும் நூலினது உன்னத நிலைமையும் நமது நேயர்களாகிய அறிவாளிகள் ஒவ்வொருவருக்குந் தெரிந்தவைகளே. மேற்கண்ட போகரேழாயிரமென்னு நூலாகிய வுடலுக்கு இந்தச் சூஸ்திரம் உயிர்போலாகும். மேற்கண்ட நூலின் முக்கிய சாராம்சங்களெல்லாம் இதிலடங்கியிருக்கின்றன. உயிரற்ற வுடலானது எவ்விதம் பிரயோசனப்படாதோ அதுபோலவே இந்தச்சூஸ்திரமெழுநூற்றைக் கற்றுணராவிடில் போகரேழாயிரத்தாலுண்டாம் பிரயோசனத்தை யடைவதரிதாகும். மேற்கண்ட நூலானது ஓர் பாவையும் இச்சூஸ்திரம் அப்பாவையை யாட்டிவைக்குங் கயிறும்போன் றிருத்தல் பற்றியே இதற்குப் போகரேழாயிர சூஸ்திரமெழுநூறெனத் திருநாமஞ் சூட்டினர். சித்தர் முதலியோரெல்லாம் ஓர் நூலைச்செய்தால் அதைப் பரிபாஷையாகவும், மிகவும் மறைவாகவும் சொல்லி அம்மறைப்பை யெல்லாங் காணுவதற் காதாரமாக வேறொரு நூலைச் செய்து அதற்கு வேறு நாமஞ் சூட்டிவைப்

Digitized By Roja Muthiah Research Library

பதுவழக்கம். அதுபோலவே இவரும் இந்தச் சூஸ்தி ரத்தைத் தம்முடைய நூலிற் காதாரமாகவும், இரகசியங் களையெல்லாம் விளக்கும் பொருட்டாகவுஞ் செய்து வைத்தனர். இதைப் பார்த்தால் போகரேழாயிரத்தி ன் மர்மங்களெல்லாம் வெகு சுலபமாக வெளிப்பட்டு ப்போம். பின் அவைகளில் எவ்வித சந்தேகங்களு மேற்படா. இந்த நூலானது திவ்யமாகிய 761 பா டல்களா லமைப்பெற்றது. அப்பாடல்களெல்லா ம் சாமானியர்க்கும் பொருள் விளங்கத்தக்கன. இ தில் ஜெயநீர்வகைகள், சுண்ணவகைகள், கட்டுவகை கள், சத்துவகைகள், உருக்குவகைகள், கற்பவகைக ள், வைப்புவகைகள், களங்குவகைகள், மெழுகுவ கைகள், பதங்கவகைகள், பற்பவகைகள், செந்தூரவ கைகள், திராவக வகைகள், உப்பு வகைகள், குருவ கைகள், பாஷாண வகைகள், கஷாயவகைகள், மணி வகைகள், தைலவகைகள், செம்புவகைகள், சுத்திவ கைகள், கருவகைகள், குளிகை வகைகள் முதலாகிய வைகளைச் சம்பந்தித்த சுமார் 150 முறைகளும் செந் தூரகாலம், ஜெயநீர்க்காலம், ஞானிதன்மை, உலகவா திதன்மை, சாப விபரங்கள், தீமுழுகல், மலங்கழற் றல்முதலியவிபரங்கள், மூலிகைவிபரங்கள் முதலான வைகளும் மிக விளக்கமாகவும், சுலபமாகவும் சொ ல்லப்பட்டிருக்கின்றன. போகரேழாயிரத்தின் ஏழா யிரம் பாடல்களையும் பார்த்து மனம் அலைச்சற் படுவ தைக்காட்டிலும் இந்தச் சூஸ்திரத்தைப் பார்த்தால் அதிலுள்ள விஷயங்களெல்லாவற்றையும் வெகு சுலபமாக த் தெரிந்துகொள்ளலாம். வைத்தியத்தை விரும்பும் ஒவ்வொருவர்க்கும் இந்த நூல் பெரும்பிரயோசனத்

Digitized By Roja Muthiah Research Library

த்தைத் தரத்தக்கது. இதன் பெருமையானது இதனை வாங்கி வாசிக்கும் ஒவ்வொருவர்க்கும் தானே விளங்குமாதலினால் இங்கு நாம் விரித்தெழுத வேண்டிய தனவசியம். இது இதுவரை அச்சாகி வெளிப்படாத நூதனகிரந்தம். பண்டைக்காலந்தொட்டு ஏட்டுப்பிரதியிலிருந்து சிலருக்கே பிரயோசனத்தைக் கொடுத்துவந்த இதை உலகநலத்தைக்கருதி எல்லோர்க்கும் பிரயோசனப் படும்பொருட்டு சில மகான்களுடைய உதவியைக்கொண்டு அச்சிட்டு வெளிப்படுத்தினோம். இது (உ௱௪) பக்கங்கள்கொண்ட புஸ்தகமாக உயர்ந்த கடிதத்திற் பதிப்பித்து நல்ல பைண்டு செய்யப்பட்டிருக்கின்றது. உலகநலத்தைக் கருதியே இதன் உயர்வையும், இதை அச்சிடுவதற்காக நாமெடுத்துக்கொண்ட பிரயாசையையும் நோக்காமல் இதற்கு மிகவுங் குறைந்தவிலையே யேற்படுத்தியிருக்கின்றோம். ஆதலினால் இந்த அருமையான கிரந்தத்தை ஒவ்வொருவரும் தருவித்துப்பார்த்து இதனாலுண்டாம் பிரயோசனத்தையடைந்து எம்மைக் களிப்படுத்துமாறு வேண்டுகின்றோம். இதனை அச்சிடுமாறு உதவிபுரிந்த மகான்களுக்கு எக்காலத்தும் இதயபூர்வமாக நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். இன்னும் இதுபோன்ற பல அரிய கிரந்தங்களை அச்சிட்டு வெளிப்படுத்துமாறு கடவுள் மேலும் மேலும் பூரண அருளைத் தருவாராக. சுபம்.

அச்சீம் - பா - மு - அ.

Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

கடவுள் துணை.

போகரேழாயிர

சூஸ்திர மெழுநூறு.

தேவ வணக்கம்.

ஆனந்த மாய்நிறைந்த ஆயிபாத மகண்டபரி பூர ணமா னமைபர்பாதம், வானந்த மாகிநின்ற கணேசன் பாத மருவியதோர் மூலத்தில் நந்திபாதந், தானந்த மாகியதோர் காலாங்கிபாதஞ் சனகருடன் வியாக்கி ரமர் பதஞ்சலியின்பாதம், போனந்த மாகியதோ ரிஷிகள் பாதம் போற்றியெழு நூற்றிரட்டு புகலு வேனே. (க)

புகலுவேன் வாதியென்ற பேர்களுக்குப் போற் றரிய மெய்ஞ்ஞானம் வரவேவேண்டும், நிகலுகின்ற ஆதார மறியவேண்டும் நீக்கறிய சாபத்தை நிறுத்தவே ண்டும், பகலுகின்ற பராபரையைப் பூசிக்கவேண்டும் பாணமென்றால் தூஷிக்கப் பருவம்வேண்டு, மகலுகி ன்ற குருமுறையுங் கைமுறையும்வேண்டு மறுகாட் டா லீதெல்லாம் வாதம்போச்சே. (உ)

போகாமல் வாதத்தை நிறுத்தவென்றால் போக் கோடே சவுக்காரக் குருவைப்பண்ணு, வாகாக உப் பைநன்றாய்க் கட்டியாடு மருவியபின் பூரத்தை யுப்பு பண்ணு, தாகமுறுந் தாளகத்தை நீறுபண்ணு சயத்து டனே வங்கத்தைச் சுண்ணம்பண்ணு, வேகாத துரிசி

Digitized By Roja Muthiah Research Library

யைத்தான் குருவாய்ப்பண்ணு விளங்கியதோர் வாத மெல்லாங் கைக்குள்ளாச்சே. (௩)

சவுக்கார குரு.

ஆச்சப்பா சவுக்காரக் குருவைப்பண்ண அரை கிறே ஞனந்தா அறிந்தமட்டும், போச்சப்பா சவுக் காரமென்ன வென்பார் பொல்லாதா ரெண்ணையைத் தான் கழட்டமாட்டார், வாச்சப்பா பூநீறி லெல்லா மாச்சு மருவியதை பழச்சாற்றை விட்டேயாட்டி, பா ச்சப்பா புடம்போட்டு எடுத்துப்பார்த்துப் பாரமில் லையிலேசாச்சு என்பார்பாரே. (௪)

சவுக்காரச் சுத்தி.

பாரப்பா சவுக்காரஞ் செய்யுமார்க்கம் பங்கு னியி லெடுத்துவைத்த பூநீர்தானும், நேரப்பா படி ரெண்டு பாண்டத்திலிட்டு நீக்கரிப கற்சுண்ணம் படி தான்போட்டு, வாரப்பா அமுரிபடி எட்டுத்தானு மருவியதோர் கல்லுப்பு மரைதான் போட்டு, தாரப் பா யதட்டிநன்றாய்க் கலக்கிவைத்துச் சமத்துடனே நாலாநாள் தெளிவைவாங்கே. (௫)

வாங்கியே யடுப்பில்வைத்து பெரிநேர்பாக வற் றியே குழம்புபோல் வருதல்கண்டு, தேங்கியே படிய ரைதான் நல்லெண்ணை தானுஞ் சிறப்பாகக் கூடவிட்டு த் திறளங்காய்ச்சிப், பாங்கியே பக்குவத்தி லானபின் பு பருவமுடன் விபூதிமேற் சீலைபோட்டு, நீங்கியே அ கப்பையினு லெடுத்துவிட்டு நெகிழாமல் விளாங்காய் போலுண்டை செய்யே. (௬)

செய்தவுண்டைரவிதனிலே யுலரவைத்துச் சிறப் பாக எடுத்துவை புதுப்பாண்டத்தில், மைதபின்பு

Digitized By Roja Muthiah Research Library

லோகத்தோர் சவுக்காரந்தான் வாதத்துக் காகாது வ
ண்ணார்க்காகும், பைதபின்பு இதற்கடுத்த சுத்திகே
ளு பாங்காகப் பாக்குப்போற் சீவிக்கொண்டு, கொய
தமல்லிச் சாறுதனால் பாவகமேசெய்து கூறரிய ரவித
னிலே காயப்போடே. (எ)

காயவே ஏழுனாள் நனைத்துப்போடு காய்ந்தபி
ன்பு செய்கின்ற வரிசைகேளு, மாயவே நெல்லுதனைப்
பாண்டத்திட்டு வகையாகத் தண்ணீரும் கூடவிட்டு,
நேயமா மல்லிகையி னிலைபரப்பி நினைவாக அதுமே
லே சவுக்காரம்வைத்து, தோயவே மேலுமந்த இலைப
ரப்பித் தோணகட்டி மேல்மூடி யடுப்பிலேற்றே. (அ)

கடுங்கார செயநீர்.

அடுப்பேற்றிக் கடிகைரெண்டு தீயைமூட்டி ஆ
விமேல் வருதல்கண் டெடுநேர்பாக, துடுப்பேற்ற ர
விதனிலே யுலரப்போட்டுத் துலங்கமுன்போ லிலைப
ரப்பி நெல்லில்வைத்து, வடுப்பேற்ற ரவிதனிலே யுல
ரப்போட்டு மறுகாலு முன்போல விலைபரப்பிக், கடுப்
பேற்றி எரித்துமுன்போல் பதத்தைப்பார்த்துக் கன
மான வெயிலுக்குள் காயப்போடே. (கூ)

போட்டுடனே தந்தம்போல் சுத்தியாகும் புக
மூாகக் கிளிபோல தாளக்கட்டி, ஆட்டுடனே கற்சுண்
ணங் கிளிஞ்சிற்சுண்ண மப்பனே யண்டோடு நத்
தைச்சுண்ணம், நீட்டோடே சங்குசுண்ணம் புதிதாய்ச்
சுட்டு நீற்றுமலொன்றாக கலந்துக்கொண்டு, மாட்டுட
னே கிளியெடுத்து நடுவேவைத்து நலமான சட்டியி
லே வைத்திடாயே. (க0)

Digitized By Roja Muthiah Research Library

வைத்தபின்பு அபத்தட்டு வெண்ணைப்பார்த்து
ளமாக பதினாறு தமருபோட்டு, ஒத்தபின்பு அமுரி
தனில்மல்லிகையி னிலையை யுறவாகப்போட்டு நன்று
ய்க்காயச்சிக் கொண்டு, நைத்தபின்பு இந்நீரை விட்டு
நீற்றி நலமாக மேற்சட்டி மூடிப்போடு, அந்தபின்பு
கிளிவாங்கி யுலரப்போடு யைந்துதிர மிப்படிதா னீற்
றிடவே. (கக)

நீற்றியபின் கிளிவாங்கி யுலரப்போட்டு நினைவாக
அண்டோட்டி லிதனைவைத்து, மாற்றியபின் அண்
டோடு மேலேமூடி மறவாமற் சுண்ணாம்புசீலைசெய்து;
தோற்றியதோர் பத்தெருவிற் புடத்தைப்போடு சுக
மாக குளிர்ந்தபின்பு எடுத்துப்பாரு, அத்திப்தோர் த
ளமாம் படிகம்போல அம்மம்மா சவுக்காரங் குருவு
மாமே. (கஉ)

குருவுக்குக் கடுங்காரச் செயநீர்கேளு கூறரிய பூ
நீறாகல்லுச் சுண்ணாம், கருவுக்கு ளமுரிவிட்டு கலக்கி
வைத்துச் சாதகமாய் மூன்றுதினங் கடந்தபின்பு, தி
ருவுக்குள் தெளிவிறுத்துச் சேரரெண்டு திறமான
பீங்கானில் வைத்துக்கொண்டு, கருவுக்குள் போடுகி
ற மருந்தைக்கேளு கனமான அஞ்சுசுண்ணாங் காசு
போடே. (கங)

போடப்பா காசிலைதான் வங்கச்சுண்ணம் பொ
லிவான வெடியுப்புச் சுண்ணம்போடு, நீடப்பா சின
மொரு காசுபோடு நீக்கான சூடனுமோர் காசுபோடு,
தேடப்பா பூரமொரு காசுபோடு தெளிவான வீரமொ
ரு காசுபோடு, ஆடப்பா நாபியொரு காசுபோடு அ
திலேநற்சார மொருகாசு போடே. (கச)

Digitized By Roja Muthiah Research Library

காசிடைதான் குருவண்டு வுரமுஞ்சுதங் கனமான புனுகோடு புருவினெச்சம், கேசியதோர் குக்குடத்தின் வெண்மலமுங் கூட நெகிழாம லுமரிவிட்டு அரைகால்சாயம், வாசியதா முன்னீரி லரைத்துக்கொண்டு மறவாம லண்டமது முப்பத்தொன்று, தேசியதாம் வெண்கருவைக் கூடவிட்டுச் சிறப்பான எருக்கம்பால் சேர்வாரே. (௧௫)

வார்த்துநன்றாய் மர்த்திப்பாய்க் குச்சிபோலே மறவாமல் மூன்றுநாள் மர்த்திச்சப்பா, போற்றியதோர் தெளிவிறுத்துப் பீங்கானுக்குள் பொற்கொடி முன் வைத்ததனைப் பூசைபண்ணி, மாற்றியதோரரைத்துசுத்தி பானஞ்செய்து மறவாமலஞ்செழுத்து மெட்டெழுத்தோதி, ஆற்றியதோர் சவுக்காரந் துவைத்துப் போடு சுகமாக வெழுனாள் ரவியிற்போடே. (௧௬)

போட்டபின்பு சுண்ணாம்பு முப்புநேரேபொடித்துமரை சுண்ணாம்புத் தண்ணீர்விட்டு; நாட்டபின்பு புடம்போட்டு பெடுத்தரைத்து நலமாகக் குகைபோலே பண்ணிக்கொண்டு, நீட்டியபின் மேல்மூடி ஒன்று செய்து நினைவாக அதுக்குள் சவுக்காரம்வைத்து; ஆட்டியபின் மேல்மூடி சீலைசெய்து அதட்டிபொருபுடம்போட சுண்ணமாமே. (௧௭)

சுண்ணமென்ன துறைக்கெல்லாங் கடுங்காரமேற்ற தொடு குறிபோற்கடுங்கார மேறுமேறுங், கன்னமென்ற திறவுகோல் வழலைச்சுண்ணங் கடுங்காரமேறினால் சரக்குக் கட்டும், பன்னமென்றகல்லுப்பு மிதுக்குட்சாதும் படிமுன்னே நவச்சாரங் கட்டிப்போகும்

Digitized By Roja Muthiah Research Library

வண்ணமென்ற வீரமது மணியுமாகு மகத்தானபூர மறு சுண்ண மாமே. (கூ அ)

ஆமப்பா தாதுவகை அறுபத்துநாலு மப்பனே மெழுகாகுங் குருவுமாகும், வாமப்பா வுபரசங்க ளீய மாகு மார்க்கத்தில் குளிகையுமாஞ் செந்தூரமாகும், போமப்பா வெகுதூர மெட்டியோடும் போக்கதிலே மெத்தவுண்டு புகட்டியாடும், ஓமப்பா காலாங்கி பாத ம்போற்றி யுலகத்தோர் பிழைக்கவெண்ணி வுரை செய்தேனே. (கக)

உரைசெய்தே னீசனுட வடமொழியைப்பார்த்து உத்தமனே யேழா யிரமாய்முன்னே, நிறைசெய் தேனேழுந்தா னெழுநூறுக்கி நிகண்டாக மறையாமல் திறந்துபோட்டேன், புரைசெய்தே யெந்நூலி லொன்றும் பொய்யா புத்தியில்லாப் புல்லருக்கு மறிவுதோணுங், கரைசெய்தேன் வாதமடை திறந்துபோனால் கைதவறி நூல்களெல்லாங் கசடாய்ப்போமே. ()

போகாம லாயிபதம் பூசைபண்ணு போக்கோடே ஆதார மேறிப்பாரு, ஏகாமல் வாசியைத்தான் அங்கென்றாணு எழும்பாமல் மாயையைத்தா னறுத்துத்தள்ளு, நோகாமல் சடமெல்லாங் கற்பமுண்ணு நோக்கிநின்ற அறிவுக்குள் மனதைப்பூணு, சாகாமல் தேகத்தைச் சித்திபண்ணு சதாநித்தங்குருவுடைய பதத்திலுண்ணே. (உக)

உப்புக் கட்டு.

உண்ணவே யுப்புடைய கட்டைக்கேளு ஓடுகிற தூரமிது வுயர்த்திமெத்த, பண்ணவே பலநூலி லில்லையில்லை பாடினதால் சித்தரென்மேல் பகையுமாச்சு,

Digitized By Roja Muthiah Research Library

கண்ணவே சவுக்காரச் சுண்ணமொன்று கலந்துசமன் சாரத்தைக் கல்வத்திட்டு, பண்ணவே நால்சாமம் உமிநீர்விட்டுப் பக்குவமா யரைத்துருட்டிக் குகையில் வையே. (உ௨)

வைத்துமேற் சில்லிட்டு சீலைசெய்து வளமாக பத்தெருவிற் புடத்தைப்போடு, வைத்துமேலாறவிட் டெடுத்துவாங்கி நலமான கடுங்காரஞ் செயநீர்குத்தி, தைத்துமே மூன்றுநாள் ரவியிற்போடு சாதகமாய்த் தினந்தினமுஞ் செயநீர்குத்தி, பைத்துவெண்ணை பக்குவமாய் பீங்கானிலப்பிப் பருவமா யிராக்காலம் பனியில்வையே. (உ௩)

வைத்துடனே மொழுமொலெனத் தண்ணீராகும் வாகாக இன்னீரில் வீரம்போட்டு, வைத்துடனே யிந்துப்புக் கல்வத்திட்டுக் காணிந்த நீர்விட்டு, அரைநால் சாமம், மெய்த்துடனே யெடுத்துருட்டி சுண்ணமூசை மேல்மூடி சீலைசெய்து புடத்தைப்போடு, வைத்துடனே யிந்துப்பு சுண்ணமாகும் நனைத்துமே கடுங்காரம் ரவியிற்போடே. (உ௪)

போடப்பா தினமூன்று காயக்காயப் பொசிவானபின்னெடுத்துப் பனியில்வைப்பாய், நீடப்பாசெயநீரா மிதனைவாங்கி நிலைத்துநிற்கும் வீரத்தைப் பொடித்துத்தூவு, ஆடப்பா செயநீரு மொருபலந்தான் வாங்கி யதற்குள்ளே பூரமொரு பலத்தைப்போடு, நாடப்பா காற்றில்லா குளிர்ந்திடத்தில் நணுகாமல்மூன்றுநாள் மூடிவையே. (உ௫)

வையப்பா ரவிதனிலே அஞ்சுநாள்தான் வைத்தபின்பு பூரமது வுப்புமாகும், செய்யப்பா சுண்ணம்

புக்குகையிலிட்டு சிறப்பாக மேல்மூடி சீலைசெய்து, மெய்யப்பா பத்தெருவிற் புடத்தைப்போடு வெறித்த புலிபோலுமூன்று வெண்ணையாகும், கையப்பா மட்டேனே வெந்துநீறுங் கடுங்காரச் செயநீரில் நனைத்தேயப்பே. (௨௬)

அப்பியே பீங்கானில் ரவியிற்போடு அஞ்சுநாள் தினந்தினமுஞ் செயநீர்குத்தி, செப்பிடே யொருவருடன் பேசவேண்டாஞ் செகச்சால மிதுக்குள்ளே அடங்கிப்போச்சு, கப்பியாஞ் சுண்ணமெல்லா மிதிற்கீழாச்சு கரையில்லை யிதற்குள்ளே சொல்லவென்றால், வெப்பியே விம்மிவிம்மி யலையவேண்டாம் வெருளாதே பீங்கானில் பதனம்பண்ணே. (௨௭)

பண்ணப்பா வீரமொரு பலந்தான் தூக்கிப் பரிவான சவுக்காரச் செயநீர்விட்டு, தண்ணப்பா கல்வத்தி லரைநால்சாமந் தனிப்பிறகு வழித்தெடுத்து வில்லையாக்கிக், கண்ணப்பா ரவிதனிலே யுலர்ந்தபின்பு காசிடைதான் சவுக்காரச் சுண்ணம்போட்டு, விண்ணப்பா பூரமாஞ் சுண்ணமொன்று வெண்காரஞ் சாரமிவை காசுதூக்கே. (௨௮)

ஆக்கியபின் கல்வத்தில் சாரநீரால் துடியாக அரைத்துமேற் கவசங்கட்டி, பாக்கியமாம் வெண்கருவுஞ் சுக்கான்கல்லும் பக்குவமா யரைத்துமேல் கவசங்கட்டித், தாக்கியபின் ரவிதனிலே யுலரவைத்துச் சாதகமாய்ச் சுண்ணாம்புக் குகையில்வைத்து, நீக்கியபின்சீலைசெய்து புடத்தைப்போடு நிர்மலம்போல் வெண்ணீராய் நிறைந்துபோமே. (௨௯)

Digitized By Roja Muthiah Research Library

வேடியுப்பு ஜெயநீர்.

போகாமல் வெடியுப்புச் செயநீர்கேளு போக் கோடேவெடியுப்பு நாலாங்ராய்ச்சல், வாகாயல்பலம் பத்து நிறுத்துக்கொண்டு மைந்தனே பூநீறு பலமும் போடு; தாகாமல் சீனமொரு பலமும்போடு நபங்காத கல்லுப்பு பலமும்போடு, வேகாமற் சூடனது காசு போடு விரவியதோர் சாரமொரு காசுபோடே. (௰)

போட்டெல்லாங் கல்வத்திற் பழச்சார்விட்டுப் பொலிவாக மூன்றுளாட்டு ஆட்டு, நீட்டெல்லாம் வழித்து அயச்சட்டியிட்டு நேர்ப்பாகத் தீயெரிப்பாய் நான்குசாமம், வாட்டெல்லாம் வழித்துமொரு பிங்கானுக்குள் மைந்தனே கடுங்காரச் செயநீர்குத்தி, தீட்டோடே யஞ்சுநாள் ரவியிற்போட்டுச் சிறப்பாகச் சுண்ணமென்ற குகையிலூதே. (௧௧)

ஊதையிலே சுண்ணும்பாய் வெந்துநீறு முற்றமனே பிங்கானி லெடுத்துக்கொண்டு, மாதையிலேகடுங் காரச் செயநீர்குத்தி மைந்தனே நீற்றியதை பனியில் வைப்பாய், பாதையிலே ஜலமாகு மிந்தநீரிற் பருவமுடன் வழலையென்ற சுண்ணங்காசு, கோதையிலே பூரமென்ற சுண்ணங்காசு கொடியதொரு வீரமென்ற சுண்ணங்காசே. (௧௨)

காசிடைதான் செயநீரிற் கலக்கிக்கொண்டு கடியதொரு சரக்குகளிற் சுறுக்குப்போட, ஆசிடைதானறுபத்து நாலுங்கட்டு மாச்சரிய முபாசங்கள் சத்தேயாகுங், தாசிடைதான் கெளரிவெள்ளை லிங்கம் வீரந் தயங்காத தாளகமுஞ் சிலையுங்கெந்தி, தேசிடை

Digitized By Roja Muthiah Research Library

தா ளுகத்தைப் பதையாமற்கொல்லுஞ் சிணத்திலே க
ருவங்கஞ் சாய்க்கச்சாமே. (௩௩)

உப்புக் கட்டு

சாமப்பா வுப்பிதுக்குள் சாற்றக்கேளு தனித்த
தொரு வெடியுப்பு சீனக்காரம், ஓமப்பா கடல்நு
ரையுஞ் சூடணிந்து வுத்தமனே வெண்காரந் துரிசிகா
ரம், காமப்பா வெடியுப்பு நீரைவார்த்து நலக்கவரை
யேழுநாள் ரவியிற்போடு, வேமப்பா சரக்கெல்லாம்
வெந்துநீறும் வெருளாதே பீங்கானி லெடுத்து
வைபே. (௩௪)

வையப்பா வுப்பேது வென்றியானால் பூதத்தான
வாருதியில் சத்திறுதந், தையப்பா மலைபோலே நிற்கு
ம்பாரு தனையெடுத்துப்பாக்குப்போ லுடைத்துக்கொ
ண்டு, செய்யப்டாபழச்சாறுதினமூன்றாட்டுத் திறமா
ன உப்பங்கே சுத்தியாகு, மெய்யப்பா ரவிதனிலே உ
லரப்போடு விரவிபங்கே யுட்பூச மருந்துகேளே. ()

கேளப்பா சவுக்காரச் சுன்னமொன்று கெடியா
ன வீரமொன்று பூரமொன்று, வாளப்பா சவுக்காரச்
செயநீர்விட்டு மைந்தனே குழம்புபோற் கல்வத்தாட்
டி, கேளப்பாகல்லுப்பில் துவைத்துவாட்டுக் கொள்கி
யந்த தணலுக்கு ளடர்ந்துவாட்டி, நாளப்பா குழம்
பையெல்லாம் பூசிவாட்டி நலத்தபின்பு முன்னெட்டு
மருந்தைப்பூசே. (௩௫)

பூசிபதை வாட்டுதற்கு விபரங்கேளு பொலிவா
னவெடியுப்பு நீரைவாத்துத்; தாசியதைக் கல்வத்திற்
குழப்பிக்கொண்டு தனையெல்லாம் பிரட்டிநன்றுப் வா

Digitized By Roja Muthiah Research Library

ட்டிப்போடு, மாசியதை கல்லுப்புப் பல்த்தைக்கேளு வகையாகமுப்பலத்திற் பூசிப்போடு, தேசிபதைஅடுக் கடுக்காய் மூதிரவாட்டிச் சிறப்பாகத் தணலுக்கு ள டர்ந்து வாட்டே. (௩௭)

வாட்டிடவே கல்லுப்புத் தேறிப்போரு மருவிய தோர் ஊஷரமும் உப்புநேரே, நாட்டிடவே நாயுருவி பிரண்டைச்சாம்பல் நலமான கிளிஞ்சிநீர் சரியாக் கூட்டி, ஆட்டிடவே அமுரிவிட்டு மெழுகாய்ப்பண் ணி அடைபோலே ரெண்டாக்கிச் சட்டியிலேபோட் டு, நீட்டிடவே அடையேலே உப்பைவைத்து நேர்பா க அதுமேலே அடையால்மூடே. (௩௮)

மூடியே மேல்மூடி சீலைசெய்து முசியாதே அடுப் பேற்றி யெரிஷல்சாமம், ஆட்டியே தீபம்போ லெரித் துவாங்கி ஆறவிட் டெடுத்தந்தப்படியே வைத்து, நா டியே கெசபுடத்திற் போட்டாயானல் நலமான வயி ரம்போ லிருக்கக்கட்டுந், தேடியே ஆறவிட் டெடுத்து ப்பாரு சிவசிவா முத்துப்போல் மணியுமாமே. (௩௯)

ஆமப்பா மணியெடுத்து உருக்கிப்பாரு அரகரா பொன்போலேயின்றேயாடுந், தேமப்பா கரிதனிலே யி ருக்கித்தாலுற் சிறப்பாக முன்போலே மருந்துபூசி, வாமப்பா புடம்போடு உருகிற்கு மணிபோலே நின் ருங் கரியினுள்ளே, தாமப்பா உப்புமணி தாவடமா ய்க்கோர்த்து தாயையு தந்தையுந்நீ பூசைபண்ணே. ()

பண்ணப்பாபானமொடு சத்திவைத்து பரிவாகப் பூசைபண்ணி மதுவையுண்டு, விண்ணப்பா தாவடத் தை கரத்தில்வைத்து வேதாந்த அநுபவத்தில் மன

Digitized By Roja Muthiah Research Library

தையுன்னி, கண்ணப்பா அஞ்செழுத்து மெட்டெ ழுத்துமோது கயிலையுறை சிவன்வந்து நடனஞ்செய் வார், நண்ணப்பா சிறுபிள்ளை யாயிவந்து நாட்டிலு ள்ள அதிசயங்கள் சொல்லுவாளே. (௪௩)

உப்புக்குரு.

சொல்லுவாள் அஷ்டகர்ம மெட்டெட்டுந்தா ன் தோற்றுத கருமத்தின் வழியுஞ்சொல்வாள், சொ ல்லுவாள் வாமத்தைப் பழித்தபேரைக் கூப்பிடுவாள் வாமத்தில் கொள்கிறாரே, வெல்லுவாள் சிவகாமி சொல்லபானும் விடுத்துப்பார்த் துணர்ந்துமக்க ளுக் காய்ச்சொன்னேன், மல்லுவாள் சமாதியிலே உறைத் துப்பாரு மாயப்பிரபஞ்சமெல்லா மொழிந்துபோமே.

போகாம லுப்பினுட குருவைச்சொல்ல புகழாக சவுக்காரச் சுன்னமொன்று, நோகாமல் கர்ப்பூரச்சுன் ன மொன்று கோக்கரிப வீரத்தின் சுன்னமொன்று, வேகாமல் புனுகொன்று சீனமொன்று விரவியரை ச வுக்கார நீரினாலே, வாகாம லுப்பினுட மணிக்குப்பூசி மாசற்ற ரவிதனிலே யுலரப்போடே. (௪௫)

உலர்ந்தபின்பு சுண்ணாம்புக் குகையில்வைத்து உத்தமனே மேல்மூடி சீலைசெய்து, அலர்ந்தபின்பு ப த்தெருவிற் புடத்தைப்போடு ஆதியென்ற கல்லுப்புச் சுண்ணமாகும், குலந்தனக்கே கோடா விக்காம்புபோ ல கொள்ளிபதோர்சரக்குக்குக்காலன்காலன், நலந்த னுக்குக் கடுங்காரச் செயநீர்குத்தி நாளேழு ரவியிற் குள் உலரப்போடே. (௪௪)

போட்டுவே தினமேழில் பூப்போலாகும் பொலி வான சுண்ணவெண்ட சாரங்கூட்டி, நாட்டவே தினமெ

Digitized By Roja Muthiah Research Library

ன்று அரைத்தாயானால் நலமான வருணசலம் போ
லேயிற்கும், நீட்டவே ரவிதனிலே யுலர்ந்தபின்பு நே
ரான சுண்ணாம்புக் குகையில் வைத்து, ஆட்டவே மேல்
மூடி சீலைசெய்து அதட்டியொரு புடம்போடச் சுண்
ணமாமே. (சரு)

சுண்ணத்தைப் பனியில்வைக்கச் செயநீராகுந்
தோற்றிய பின்னீரில் வீரச்சுண்ணம், வண்ணத்தை
அகற்றுவிக்குஞ் சவுக்காரச் சுண்ண மாசற்ற வெளி
யாகும் பூரச்சுண்ணங், கண்ணத்தை வெளியாக்கும்
நீரிற்போட்டு கலக்கியொன்றாய் மர்த்தித்துச் சரக்கிற்
பூச, அன்னத்தை அுந்தபால் சலம்வெறுப்போ
லனுகிடிலோ கட்டியங்கே யணிபோலாமே. (சசு)

ஆமப்பா அறுபத்து நாலுதாது மப்பனே வுபர
சங்கள் நூற்றிரண்டுபத்து, போமப்பா லவணமுத வி
ருபத்தஞ்சும் பொன்காய்க்கு மரமாகப் பண்ணிவிக்கு
ம், நாமப்பா காலாங்கிப் பதத்தைப்போற்றி நாட்டினு
ள்ள பேர்களுக்கு பிழைக்கச்சொன்னேன், வாமப்பா
என்னாலி லொன்றுதப்பில் மதிகெட்ட போகமுனி
யென்றுசொல்லே. (சஎ)

சொல்லவே யுப்பினுட மணியைக்கேளு துடியா
கக் கரியில்வைத் துருக்கும்போது, மல்லவே தங்கமோ
ரிடையைநீட்டு வாய்திறந்து ஆவென்று சுழித்துவாங்
கும், வெல்லவே நாகமோ ரிடையைப்போடு மேதிச்சு
வாங்கயிலே சூதம்போடு, தெல்லவே வீரமோ ரிடை
யைப்போடு திரண்டுருகி வாங்கயிலே கெந்திபோடே.

போட்டடனே களங்காகும் உப்புமக்காள் பொ
லிவான நவலோக மொன்பதுக்கொன்றிய, காட்டுட
னே பத்தரையே மாற்றாகுங் கனகத்தைக் கண்டு

Digitized By Roja Muthiah Research Library

டனே கெற்சிக்காதே, ஆட்டேனே அன்னமரைத் த ண்ணீர்கொள்ளு ஆசையென்ற புளியுப்பை யிகழ்ந்து தள்ளு, நாட்டேனே சிவசொத்தை வறுமைபோலெ ன்னு நம்போலே சமாதியிலே யிருந்திடாயே. (சகூ)

இருந்திட்ட வுப்பினுட செந்தூரத்தை யிதமாக க்கேளுங்கள் மாணாக்களே, வருந்திட்ட சூதமொ ன்று நாகமூன்று மருவியிதை யுருக்கியல்லோ பொடி யாய்ப்பண்ணி, திருந்திட்ட வீரமென்ற சுண்ணமொ ன்று சுரப்பாக மர்த்தித்துப் பனியில்வைக்க், அருந்தி ட்ட செயநீரா மிதனைவாங்கி ஆதியென்ற வுப்புமணி தன்னிற்றோயே, (ருய)

தோச்சுமே பறித்தகட்டை மேலேசுத்தி சுகமா க விலுப்பைநெய்யால் விளக்கைவைத்து, பாச்சுமே றாலிழையால் திரியைப்போட்டுப் பக்குவமாய் வாங்க மட்டும் வாட்டித்தீரு, ஏச்சுமே உட்புகுந்து பறிதான ப்பா இதமான அருணனைப்போ லாகும்பாரு, காச்சு மே நவலோக மன்பதுக்கொன்றிய கையோடே பத் தரையுங் கண்டுகொள்ளே. (ருக)

கொள்ளப்பா செந்தூரங் குன்றிட்டுங் கோடா ன கோடிவரை யிருந்தாந்தேகம், விள்ளப்பா சுக்கில த்தை கட்டிநித்த மேலேற்ற மல்லாமல் கிழேடாது, துள்ளப்பா நரைதிரைக ளெல்லாமாறுஞ் சுகமாகக் காயமது சிவந்துபின்னும், விள்ளப்பா சட்டையொ ன்று சக்கிப்போகும் வேதாந்த சாரமெல்லாம் வெளி யாப்போமே. (ருஉ)

போமப்பா பச்சையுப்பு தின்றாலில் புகழான சேர்வையிலே யிறக்கிப்போடும், வேமப்பா அழுரியி

Digitized By Roja Muthiah Research Library

லேயிறங்கிப்போகும் வெறிப்பான சடமெல்லாந் த
ளர்ந்துபோகும், போமப்பா சடமலைந்து நரைமெத்
தாகி புகழான தந்தமெல்லாங் கழண்டுபோகும், நா
மப்பா கட்டியதோ ருப்பைத்தின்று நலமான சமாதி
யிலே யிருந்திட்டேனே. (ருங)

இருந்திட்டேன் சமாதியிலே கற்பமுண்டு ஏழு
யுகங் கடந்தபின்பு எழுந்திருந்தேனய்யா, அருந்திட்
டபாட்டர்பக் கற்சென்றுயானு மருகிருந்து தொழு
திரஞ்சி தீட்சை கேட்டேன், திருந்திட்ட காலாங்கி
யையர்பதஞ் சென்று செப்பமுடனேழுயுகம் வாத
ம்பார்த்தேன், பருந்திட்ட மாகியல்லோ குளிகைகட்
டிப் பக்குவமா யண்டமெல்லாம் பார்த்திட்டேனே, ()

பார்த்திட்டே னண்டரண்ட பதத்துமட்டும் பரி..
வான மலைதோறு மனிதர்கள்கோடி, ஆர்த்திட்ட மலை
தோறுஞ் சித்தர்கோடி அந்தந்த மலைகளிலே மூலி
கைபோமெத்த, ஏர்த்திட்டசாஸ்திரங்க ளனேகமுண்
டு எந்தெந்தநூல்பார்த்து மெளிதிற்காணார், மார்த்திட்
ட மாகவல்லோ வுப்புச்சொன்னேன் மறைத்தார்கள்
சாஸ்திரத்திற் சித்தர்தானே. (ருரு)

மறைத்ததென்ன வென்றக்கால் சொல்லக்கே
ளு மலைகளெல்லாஞ் சித்தர்மய மாச்சுதென்று, நிறை
த்ததென்ன ஆதியுப்பை யிழுக்காய்ச்சொல்லி நேரா
ன வழியைத்தான் மூடிப்போட்டார், உறைத்ததெ
ன் னவழியினால் வாதம்போச்சு ஓகோகோ காயசித்
தி கவனசித்திபோச்சு, குறைத்ததென்ன சித்தரென்
று சொல்லியானுங் கூறினேன் வெளியாகக் கூறினே
னே. (ருசு)

Digitized By Roja Muthiah Research Library

கூறியதோர் சவுக்கார உண்டைசெய்து குறிப்
பாகச் சுத்திபண்ணி சுண்ணம்பண்ணு, மாறியதோர்
கடுங்காரச்செயநீர் பண்ணு மைந்தனே கற்பூரஉப்புப
ண்ணு, தேறியதோர் வீரத்தைச் சுண்ணம் பண்ணு சி
றப்பாக வெடியுப்புச் செயநீர்பண்ணு, ஆறியதோர்
கல்லுப்பைக் கட்டியாடு அரகரா வாதமிதி லடங்கிப்
போச்சே. (ருஎ)

போச்சென்று வுப்பினுடமெழுகுகேளு போரா
ன வுப்பதுவும் பலமதொன்று, ஆச்சென்ற குகையில்
நின்றுருகும்போது அப்பனே சாரமது பலமுங்கால்
தா, வீச்சென்று வெண்காரம் பலமுங்கால்தானேரா
ன கெந்தகமும்பலமரைதான்சேர்த்து, காச்சென்றசவு
க்கார நீரைவார்த்துக் கலந்தரைத்துக் குன்றிபளவு
டைசெய்யே. (ருஅ)

செய்தவுண்டை உப்புநின் றுருகும்போது சித
றாமல் ஒவ்வொன்றாய்க் கொடுத்துவாநீ, வைத்தவுண்
டை புகையாமல் உள்ளேவாங்கி மயினமாமுப்பது வு
யிப்பால்வாங்கி, பெய்தநவலோகத்தில் நூற்றுக்கொ
ன்று போட்டிடவே தசமாற்றாய் நிற்கும் பாரு, அ
ய்தவுப்புக்காசிக்கு மோடாதப்பா ஆச்சரியங்காயசி
த்தி சுறுக்காம் பாரே. (ருகூ)

பாரிந்த மெழுகுதன்னைக் குன்றியுண்ணு பத்திய
மா புளியுப்பு பெண்ணுந்தள்ளு, காரிந்த னாற்பதுநா
ளுள்ளறையில்வாழு கனமான யோகத்தே நின்று
தேறு, சாரிந்த சட்டைபொன்று தள்ளிப்போடுஞ் ச
ந்திரனோ சூரியனோ வென்பார்பாரு, ஆரிந்தப்படி செ
ய்வார் காதாக்கள் செய்வா ராச்சரிய மூலகத்தோர்
பாஷாணர்தானே. (கூ0)

Digitized By Roja Muthiah Research Library

த்தாலென்ன வுலகோற்கு வாதமெய்தில் தறுதரு ம்பனுப்த்திரிந்து பெண்ணைச் சேர்ந்து, பாவென்ற அ தரமுண்டு மருந்தேயாகி பலதினைவாய்க் கற்பழித்துப் பாசமெய்தி, கோவென்ற குருவேது காயசித்திபேது குறிப்பான ஆதாரவழிதானேது, வாறென்றி யவ் குளிகையென்ன வென்று வாய்ப்பேச்சாய் திரிந்தலை ந்து மருளுவானே. (சுக)

மருளாமல் போகவல்லோ வாதஞ்சொன்னேன் மாண்டிறந்து போகாமல் காயசித்திசொன்னே, னி ருளான வொளிகாண போகஞ்சொன்னே னேழுவரை காணவல்லோ குளிகை சொன்னே, னருளான மனம டங்கப் போதஞ்சொன்னே னனந்த மாவதற்கு வஸ் துசொன்னேன், பொருளான குருபதத்திற் றொண்டு பண்ணு போக்கோடே யுப்பைமுந்திக் கட்டிபாடே.

ஆடவே உப்பென்ற சுண்ணமொன்று அணைத்தி டுநீ சாரத்தை ரெண்டுநீயும், நீடவே கல்வத்தி லரை னுல்சாமம் நேர்ந்தபின்பு சுண்ணமென்ற குகையில் வைத்தூது, நாடவே கடுங்காரச் செயநீர்குத்தி நாள் மூன்று மர்த்திச்சு ரவியில்வைப்பா, யூடவே பனியி ல்வைக்கச் செயநீராகு முத்தமனே யின்னீரி னை டங்கேளே. (சுரு)

கேளப்பா யின்னீரில் வீரச்சுண்ணங் கெடியாக மர்த்திச்சு பலந்தான்பூரம். நாளப்பா பீங்கானில்பூரம் போட்டு நலமாக செயநீரை, அதிலேவாரு, நீளப்பா மூன்றுனாள் நிழலில்வைத்து நேர்பாகரவிதனிலே யஞ் சுனாள்போடு, வாளப்பா அரைத்துநன்றாய் வில்லைகட் டி வளயான சவுக்காரச் சுண்ணம்பூசே. (சுச)

Digitized By Roja Muthiah Research Library

பூசியல்லோ சுண்ணமென்ற குகையில்வைத்துப்
பொருந்தவே மேல்மூடி சீலைசெய்து, ஆசியல்லோ யீ
சானம் பூசைபண்ணி அஞ்செருவிற் புடம்போட பூ
ரம்நீறும், வாசியல்லோ கடுங்காரச் செயநீர்த்தி மாக
த்தான ரவிதனிலே யுலரப்போடு, வாசியல்லோ சிவ
காமி சொன்னமார்க்கஞ் செப்புகிறே னிதின்வேகஞ்
செப்புறேனே. (சுரு)

செப்பியதோர் பூரமது பலந்தானென்று தெளி
வான சாரமது பலமுமொன்று, ஒப்பியதோ ரிதுரெ
ண்டுங் கல்வத்திட்டு ஓங்கியதோர் நெட்டெழும்புமட்
டு மாட்டு, தப்பியதோர் சுண்ணாம்புக் குகையில்வைத்
துச் சார்வாக மேல்மூடி சீலைசெய்து, அப்பியதோர் பு
டம்போட வெந்துநீறு மாச்சரியம் பனியில்வைக்கச்
செயநீராமே. (சுசு)

ஆமப்பா இந்நீரில் வீரச்சுண்ணமதட்டியே க
லக்கிமெள்ள வைத்துக் கொண்டு, ஓமப்பா சரக்கான
அறுபத்துநாலு முற்று மெள்ள வாட்டிடவே மணியு
மாகுஞ், சாமப்பா சாரமுதலவண மெல்லாஞ் சணத்
திலே சுண்ணாம்பாய் விரிந்துபோகும், வேமப்பா கண்
டருமோ வெள்ளையாகும் வேதித்த தாளகத்தின் ம
ஞ்சல்போமே. (சுஎ)

மஞ்சலென்ற கெந்தகமோ வெள்ளையாகு மாசற்
ற வீரமது குருவுமாகும், அஞ்சலென்ற லிங்கமதுமெ
ழுகேயாகு மாதியென்ற கல்லுப்பு மணியுமாகுந், து
ஞ்சலென்ற உபசரங்க ளீயமாகுந் தொடுமுன்னே சூ
தமது விறைச்சுப்போகுங், கஞ்சலென்ற லோகங்கள்
வெண்ணெயாகுங் காட்டிடவே நூற்றொன்றி லேம
மாமே. (சுஅ)

Digitized By Roja Muthiah Research Library

ஏமமே யாச்சுதென்று பூரிக்கவேண்டா மெளிதாக மூலத்தை யிருத்திப்பாரு, வாமமே கெதியாக அனுதினமும் போற்று வழிபாறு தலமெல்லாம் கண்டு பாரு, சேமமே தமர்வாசற் குள்ளேபுக்கி செப்பரிய மதியளவுந் தொட்டேயேறு, காமமே கெதியென்றுவிகவேண்டாங் கருத்தென்ற வாளிறு லப்பொறியை வீசே. (சுகூ)

வீசிடவே பூரமென்ற நீறினாலே விளங்கியதோர் தாளகத்திற் சுறுக்குப்போட்டு, தூசிடவே சவுக்காரச் சுண்ணம்வீரந் துடியான பூரமென்ற சுண்ணமூன்று, ஆசிடவே வெடியுப்பு நீராலாட்டி அப்பியே தாளகத்தில் ரவியிற்போடு, வாசிடவே சுண்ணாம்புக் குகையில் வைத்து மண்செய்து ஊதிடவே சுண்ணமாமே. (எ0)

சுண்ணமென்ற தாளகத்தில் வீரங்கூட்டி துடியாக மர்த்திச்சு வங்கத்தப்பி,கன்னமென்ற அண்டோடு கீழ்மேலிட்டு கடுகவே சுண்ணமென்ற குகையிலூதூ, வன்னமென்ற வங்கமது சுண்ணமாகும் வாதமென்ற மடைதிறக்குந் துறவுகோலாஞ், சின்னமென்ற வேங்கைகையி லாடுபோல திடுக்கிட்டுச் சூதமது உண்டையாமே. (எக)

ஆமப்பா துரிசியொரு பலமேதூக்கி அதிதமென்ற பூரநீர்தன்னிற் தோய்ச்சு, சேமப்பா ரவிதனிலே வுலரப்போடு சிறப்பாக எழுநா ளானபின்பு, தாமப்பா சவுக்காரச் சுண்ணமொன்று தயங்காத வீரமென்ற சுண்ணமொன்று, வாமப்பா வங்கமொன்று பூரமொன்று வகையான சீனமொரு காசுதானே. (எ௨)

Digitized By Roja Muthiah Research Library

தானென்ற புனுகோடு உரமுங்கூட்டி சமரசமா
ய்க் கடுங்காரச் செயநீர்குத்தி, வானென்ற துரிசியின்
மேல் கவசங்கட்டி வகையான சுண்ணாம்புக் குகையில்
வைத்து, கானென்ற மேல்மூடி சீலைசெய்து கெசப்பு
டத்தில் போட்டெடுத்து ஆறவிட்டு, ஆனென்ற கவ
சத்தை யுடைத்துப்பார்த்தா லம்மம்மா கடுங்காரச்
சுண்ணமாமே. (எங)

ஆச்சப்பா துரிசியது குருவுமாகு லண்டரண்ட
கடாகமெல்லாங் கிழிஞ்சுபோகு, மூச்சப்பா ஆடுமு
ன்னே சூதங்கட்டு மூதண்ட சவ்வீரமெழுகே யாகும்,
பாச்சப்பா அண்டமெல்லா மெழுகாய்ப்போகும் பா
ஷாண குலமெல்லாம் வெண்ணையாகு, மேச்சப்பா ய
ரிநீறும் வெள்ளிநீறு மெடுத்தகவர் தானென்றில்கோ
டியாமே. (எச)

கோடியென்று சொல்வதுவுங்கொஞ்சங்கொஞ்ச
ங்குருகாம லெடுக்கலா மனேகவித்தை, வாடியென்று
பிளையாமற் சித்திக்குமாகும் மாசித்த ராட்டெல்லா மி
துதானல்லோ, நாடியென்றுந் துரிசியினால் சிங்கிபண்
ணி நலமுற்ற குளிகைகட்டி சாரணையேசெய்து, ஆடி
யென்றுங் குளிகைதன்னை வாயில்வைத்து அண்டரெ
ண்ட தலமெல்லாம் பார்த்திட்டேனே. (எரு)

பார்த்திட்டே னண்டத்திற் சித்தர்கோடி பரிவா
கஅவரைநீ கண்டுபேசில், மார்த்திட்ட குருவேது என்
றுரைக்கில் மகத்தான மூலர்போ னென்றுசொல்லு,
சேர்த்திட்ட சாஸ்திரமுஞ் சூஸ்திரமுங்கேட்பார் சிற
ப்பாகக்கட்கத்தி லிருக்குதென்று, கார்த்திட்ட குளி
கையுட யோகங்கேட்கில் கண்ணிமைக்குள் கற்பமொ
ன்று புக்குமென்னே. (எசா)

Digitized By Roja Muthiah Research Library

என்னவே சாரத்தை யண்டப்போற்சீவி யித
மான அபினோடு மிளகுபூரங், கன்னவே மேனிச்சாற்
று லரைத்துப்பூசி கடுகவேரவிதன்னி லுலரப்போட்டு,
பன்னவே அதுமேலே அரக்குத்தானே பக்குவமா யி
ளக்கிமேற் கவசங்கட்டி, மன்னமே சாணாங்கி சீ
லைசெய்து வகையாகி வங்கத்தில் தாக்கக்கேளே, ()

கேளப்பா வங்கத்தை குகையிலிட்டுக் கொடியாக
வுருகையிலே தோய்த்துவாங்கி, வாளப்பா வெழுதரந் தோ
ய்த்துவாங்கி வகையான சாரமது சுத்தியாகுங், காளப்
பா சவுக்காரச் சுண்ணம்வீரந் தயங்காத பூரமொடு மூ
ன்றாங்கேளு, வேளப்பா வெடியுப்பு நீரைவார்த்து வி
ரவியரை சாரத்தின் மேலேபூசே. (எஅ)

பூசியதை சுண்ணாம்புக் குகையில்வைத்துப் புட
ம்போட்டே யெடுத்துப்பார் தவளநீறு, மாசியதைகடுங்
கார செயநீர்குத்தி யப்பனே பனியில்வைக்க செயநீ
ராகுங், தேசியதை சரக்குகளிற் சுறுக்குப்போட செ
யமான மெழுகாகும் வேதையாகும், ஆசியதை பெ
ண்ணாதே கற்பமுண்ணு அருணனைப்போல் சிவப்பா
குங் காயந்தானே. (எகூ)

தானென்ற செயநீரில் வீரச்சுண்ணஞ் சமரசமா
ய் பூரமென்ற சுண்ணமொன்று, கானென்ற சவுக்கா
ரச் சுண்ணமொன்று கலந்தந்த செயநீரில் படிகிமே
லே,-வானென்ற தினந்தோறுந் தோய்ச்சுத்தோய்ச்சு
மகத்தான ரவிதனிலே யெழுநாள்போடு, பானென்ற
வெடியுப்புச் சுண்ணம்பூசி பருவமாச் சுண்ணமென்ற
குகையில்வையே. (அ௦)

Digitized By Roja Muthiah Research Library

வைத்துமேற் சீலைசெய்து புடத்தைப்போடு வா காகவெடுத்துப்பார் சீனச்சுண்ணங், கைத்துமேல் கடு ங்காரச் செயநீர்குத்தி காணிதுக்குள் சமனாகச் சார ஞ்சேர்த்து, தைத்துமேல் கல்வத்திலிட்டுமாட்டிச் சம ரசமாய்ப் புடம்போட்டு வெடுத்துக்கொட்டி, மைத்து மேல்பணியில்வைக்கச் செயநீராகு மாசறற் நீராலே யெல்லாஞ்சாமே. (அக)

சாமென்ற நீரிலே வீரச்சுண்ணந் தயங்காத பூர மென்ற சுண்ணம்போட்டு, காமென்ற நீரிலே கலக்கி வைத்துக் கடுஞ்சூடன் பலமொன்றில் நீரைவார்த்து, ஆவென்ற நிழலிலே மூன்றுநாள்வைத்து அதின்பிற கு ஏழுநாள் ரவியிற்போடு, வாமென்ற வில்லைபண் ணி யுலரப்போட்டு மாசற்ற கல்லுப்புச் சுண்ணம் பூசே. (அஉ)

பூசிய சுண்ணம்புக் குகையில்வைத்துப் பொ லிவாகப் புடம்போட பூப்போலாகுங், காசியென்ற கடுங்காரச் செயநீர்குத்திக் கனமான அண்டத்தின் மேலேபூசி, தேசியென்ற கெந்திகத் துள்ளேவைத் து சிறப்பாக மூன்றுநாள் ரவியிற்போட, தூசியென் ற மேலோடு ரெண்டுக்கூட சுழன்றுவெந்து சுண்ண ம்பாய் நீற்றுப்போமே. (அங)

நீறியதில் வீரமென்ற சுண்ணம்போட்டு நேர்பா க சாரநீர்விட்டே யாட்டி,மாறியதில் நியினையின்மேல் கவசங்கட்டி மைந்தான சுண்ணம்புக் குள்ளேவைத் து, தேறியதில் மேல்மூடி சீலைசெய்து சிறப்பாக கெச புடத்திற் போடுநீயும், ஆறியபின் னெடுத்துப்பார் க டிதாஞ்சுண்ண மரகராயிதி ஞண்மை யறிந்திலேனே.

அறிந்திலேனிச்சுண்ணம் வீரச்சுண்ண மப்பனே யிரண்டையுந்தான் சாரநீரால், பிறிந்திலேன் மர்த்திச்சுத் தங்கத்துக்கப்பா பேரானவண்டத்தோல் கீழ்மே லிட்டு, செறிந்திலேன் சேசபுடமாய் வெளியிற்போடு சிறப்பான பரிதானுஞ் சுண்ணமாகும், கறிந்திலேன் வாதமடை திறந்துபோச்சு கைக்குள்ளாய் வாதமெல்லாஞ் சிக்கிப்போச்சே, (அரு)

போச்சப்பா பரிதானுஞ் சுண்ணமானால் பொட்டிட்டால் சூதமது கட்டிப்போகும், நீச்சப்பா வாதமெல்லாங் கைக்குள்ளாகும் நிறைநிறைபா தாதுவெல்லா மணிபோலாடுங், காச்சப்பா மீதகமது பொன்போலாகுங் கண்கொள்ளுங் காயசித்தி சுறுக்குமெத்த, வாச்சப்பா இத்தனையு முப்பாலாச்சு மயங்காதேயுப்பைமுந்திக் கட்டியாடே. (அசு)

ஆடவே வாசனையை யடித்துத்தள்ளி யப்பனே யஷ்டாங்க மணைந்துபாரு, போடவே கற்பமுண்டு காயசித்திபண்ணு பேரான மணித்தாயை நித்தம்பூசி, கூடவே குருபதத்திற் கொன்றுபண்ணு குறிப்பாகக் கைமுறையு மினமும்பாரு நீடவே சத்துருவு மித்துருவும்பாரு நினைவெல்லாம் வேதாந்தக் குறியில்லையே. (அஎ)

குறிப்பாக வெண்காரக் கட்டுச்சேகரு கூறரிதுயி தின்பெருமை சிவனுங்காணார், நெரிப்பாக சத்தெல்லா மிதிநூலல்லோ நேரான காரம்விட்டால் சத்துப்போச்சு, வெறிப்பாக லோகங்க ளினத்துக்கெல்லாம் விரவியிதை யிட்டாலே முகம்விட்டாடுங், கரிப்பாகம் போலல்லோ காரஆட்டு கைவிட்ட சரக்கெல்லா முட் கொள்ளாதென்னே. (அஅ)

Digitized By Roja Muthiah Research Library

என்னவே காரமது பலகைபோலே எடுத்துமே யாவெருதின் சாணியாலே,கன்னவே கழுவிநன்றாய்ச் சுத்திபண்ணிக்கலங்காதே சவுக்காரச்சுண்ணம்வீரம், பன்னவே பூரமொடு மூன்றுங்கேளு பதாமல்களஞ் சரைதான் தூக்கிக்கொண்டு, தன்னவே மர்த்திச்சு சாரநீரில் தயங்காதே ரவிதனிலே தோய்த்துப்போடே. (௮௯)

போடவே தினமேழில் வெளுறிக்கட்டும் பூனைக் கண் ணொளிபோலே வர்ணங்காணு, மாடவே நாகத்தின் செயநீர்க்குள்ளே அபரஞ்சி ரேக்கதனை மேலே சுத்தி, நீடவே தீபத்தில் வாட்டுவாட்டு நேர்ந்தஅபரஞ்சியைத்தான் சுழிக்குவாங்கும், வாடவே யருணனைப்போல் சிவப்பேபாகி மாதளம்பூப் போலிருக்கு மக்காள்பாரே. (௯௦)

பார்க்கவே நவலோகம் நூற்றுக்கொன்று பாச்சிடவே பதினாறு மாற்றுமாகு, மார்க்கவே தினம்பணந்தா னுண்டாயாகி லருணனைப்போல் தேகமுமாங் கண்ணொளிபோமீறுஞ், சேர்க்கவே காயமது கற்பாந்தகாலந் திரையமற் பண்ணிவிக்கும் நரைபோயில்லை, காற்கவே சூதத்தைச் சணத்திற்கொல்லுங் கண்ணிமைக்குள் பாஷாணஞ் சத்துமாமே. (௯௧)

சத்தான சாரநீர்க் குள்ளேமைந்தா தயங்காத சவுக்காரச் சுண்ணமிட்டு, பத்தான வீரமிட்டுப் பூரமிட்டுப்பரிவாகப் பீங்கானில் வாங்கிக்கொண்டு,அத்தான வண்டமது யன்பத்தொன்று அதீதமென்ற மஞ்சலாங் கருவைவாங்கி, நித்தான சட்டியிட்டு படுப்பிலேற்றி நினைவாக வறுத்திடுவாய்க் கருகத்தானே. (௯௨)

Digitized By Roja Muthiah Research Library

கருகவே வறுத்திடவே தயிலமாருங் காணாந்
வேளையிலே படிதானென்று, பருகவே யிலுப்பெண்
ணெய் கூடவிட்டுப் பக்குவமா யான பின்பிறுத்துக்
கொண்டு,சருகவே அப்பிரேகம் பலந்தான்ரெண்டு த
ன்னோடு காந்தமது பலமுரெண்டு, திருகவே கருவளை
யல் பலமுரெண்டு சிறந்ததொரு வெண்காரம் பலமி
ரண்டே. (கூஅ)

இரண்டோடு மிவையெல்லாம் பொடியாய்ப்பண்
ணி சேரானவண்டத்தின் தயிலத்திற்குழப்பி, பண்
டோடே மண்ணாலே குகைதான்பண்ணி பக்குவமா
ய்ச் சுட்டெடுத்து வைத்துக்கொண்டு, தண்டோடே த
யிலத்தை யுட்குகையில்பூசிச் சார்வாகனுகமொரு ப
லந்தானிட்டு, கண்டோடே வெறுங்குகைக்கு ளூறு
க்கிமைந்தா கனமான சாரத்தின் பொடிமேற்றாவே.

தாவையிலே நாகமது கண்விட்டாடுஞ் சுகமாக
மருந்திட்ட குகையில்வார்த்து, தாவையிலே தயிலத்
தைக் குத்துக்குத்து தனிப்பிறகு சாரநீர் குத்திவாநீ,
பாவயிலே வில்லைபா யிருக்கும்பாரு பக்குவமா யெடு
த்துமுன்போல் தயிலம்பூசி, காவயிலே முன்போல
யுருக்கிமைந்தா கனமான சாரத்தின் பொடிமேற்றா
வே. (கூ௯)

தாவிப்பின் முன்குகையில் மருந்துபூசி துடியா
க பதற்குள்ளே சாய்த்துப்பின்பு, பாவிபபினதுமே
லே தயிலங்குத்திப் பரிவாகபதுமேலே சாரநீர்க்குத்
து, மேவிபபினிப்படியே யன்பத்தொன்று மெலியாம
ல் சாய்த்துவா பாகமாக, காவிபபின் புகையஞ்சுங் க
ட்டிப்போகுங் கனமான முழுநட்டு நாகம்பாரே. ()

Digitized By Roja Muthiah Research Library

பாரப்பா நாகமது கட்டிற்றுறல் பணபேதி சூதணபேதி சத்தபேதி, ஆரபபா விதிஞட்டைக் காணப்போரு ரம்மம்மா சிவயோகி சித்தர்காண்பார், தூரப்பா எடுத்தசலந் துலையாப் போல தடந்தேறி கோடிமட்டு மெட்டியோடுவ், காரப்பா குருபதத்திற் றொண்டுபண்ணு கைமுறையைத் தவறுமற் சூட்டுசூட்டே. (கூஎ)

நாகசெந்தூரம்.

கூட்டவே நாகமொரு பலந்தானப்பா துடிபான தங்கமொரு பலத்திலீய, நீட்டவே ரெண்டுமொன்று யுருதும்போது நினைவாகச் சூதமொரு பலத்தைப்போடு. ஆட்டவே கல்வத்தி விதனைக்கொட்டி லணையப்பா பலம்ஞுலு கெந்திதானுங், கூட்டவே சூடனது பலமும்ரெண்டு கெடியான மல்லிகையின் சாற்றூலாட்டே (கூஅ)

ஆட்டியே தினமூன்று காயக்காய வதின்பிறகு பொடியாக்கிக் குப்பிக்கேற்றி. நீட்டியேவாலுகையில் பனிரெண்டுசாமம் நேர்பாக முத்தீயு மாட்டித்தீரு, கூட்டியே வஸ்துசுத்தி யாசனத்தில் கொடியவிறு வாணிக்குப் பூசைசெய்து, மாட்டியே நவலோக மாயிருத்துக்கொன்று மாற்றேறது இருபத்து அஞ்சுதானே.

நாகச் சுண்ணம்.

அஞ்சான செந்தூரங் குன்றியுண்ணு அப்பனே மண்டலத்திற் சட்டைபோகும், பஞ்சான நோய்களெல்லாந் தவிடுபொடியாகும் படிமுன்னே காயமதுயிறுகிக்கொள்ளுந், தஞ்சானசிசுப்போல தேகமாகுஞ் சாவில்லை சகந்தவரை நரைதிரைபோயில்லை, பிஞ்சான

Digitized By Roja Muthiah Research Library

காயமுமாம் பத்தியமாபுண்ணு பேசாதே ஒருவருடன் மூலம்பாரே. (௰)

பாற்கவே நாகமொரு பலத்தைநீயும் பரிவாகத் தகடாக்கிப் பூசக்கேளு, சேற்கவேவீரமென்ற சுண்ணமொன்று சிறப்பான பூரத்தின் சுண்ணமொன்று, காற்சுவே தாளகத்தின் சுண்ணமொன்று கலங்காதே சாரநீர் விட்டேயாட்டி, ஆற்கவே மர்த்திச்சுத் தகட்டிற்பூசி ஆதியாளு சுண்ணாம்புக் குகையிலூதே. (௰௧)

ஊதவே சுண்ணாம்பாய் நீறிப்போகு முற்றமனே வாசிணைக்குப் பாஷாணஞ் சாகும், பாதவே சூதமது பிட்டலிபோலாகும் பண்பான வீரமது மணியுமாகுங், கோதவே லிங்கமது கட்டிப்போகுங் கொடிதான சரக்குகளிற் பூசிவாட்ட, ஓதவே சரக்கெல்லா மணிபோலாகு முற்றமனே ளுகத்தி ளுட்டந்தானே. (௰௨)

காரீயச் சுண்ணம்.

தானென்ற நாகம்போற் காரீயஞ் சாய்த்து சமத்துடனே தகடாக்கிப் பூசக்கேளு, ஊனென்ற வெள்ளையென்ற பாஷாணத்தோடு வுத்தமனே சவ்வீரம் பூரஞ் சீனங், காணென்ற சவுக்காரச் சுண்ணாஞ்சூடன் கலந்தரைத்து சாரத்தின் செயநீராலே, பானென்ற தகடதனிற் பூசிவைத்துப் பக்குவமாஞ் சுண்ணமென்ற குகையிலூதே (௰௩)

ஊதையிலே வெந்துருகிச் சுண்ணமாகு முற்றமனே சுண்ணத்திற் சாரங்கூட்டிப், பாதையிலே கல்வத்தி லிட்டேயாட்டிப் பக்குவமாய்ச் சுண்ணமென்ற குகையில்வைத்து, வேதையிலே மேல்மூடிச்சீலைசெய்

Digitized By Roja Muthiah Research Library

து விளங்கவேபுடம்போட வருப்பூப்போல, காதையி லே கடுங்காரச் செயநீர்குத்திக் கனமான பீங்கானில் பணிபடவேவைவயே. (௱௪)

குளிகை.

வைத்துடனே பலபலெனத் தண்ணீராகும் வா காகமுன்னீரில் வீரம்பூரம், கைத்துடனேயுப்பான சு ண்ணமிட்டுக் கனமானதுரிசிநீர் களஞ்சுபோட்டு, தை த்துடனே கல்வத்திற் சூதம்போட்டுத் தாக்கியரை கால்சாமங் கல்வத்திட்டு, மொய்த்துடனே உண்டை யா யெடுத்துக்கொண்டு முயற்சியா யாரையிலேக் கவசு ங்கட்டே. (௧0௫)

கட்டியே அவிபுடமாய்ப் பத்துப்போடு கனமா ன சூடன்றீ பதனில்வாட்டி, தெட்டியே கறண்டியி லே யெண்ணைகுத்துருக்கிச் செயமான பின்பெடுத்து சிரசில்வைக்க, வெட்டியே பாரநீயுங் கத்தியோடா வி ரவியேவாயில் வைக்கதம்பனேயே யாகும், வாட்டியே உபசரத்தின் ஈத்தையிந்து மார்க்கமாய் சாரணைதான் செய்திடாயே, (௧0௬)

செய்திட்டகுளிகைதன்னே வாயில்வைக்கத் திற மான அண்டரண்ட பதங்களெல்லாங், கைத்திட்ட மாகவுந்தான் காட்டிவிக்குங் கண்ணிமைக்குள் சங்க வரை புக்குவிக்குங், கொய்த்திட்ட அண்டத்தில் சித் தருண்டு குளிகையெங்கே பாற்போமென் பாரீயவே ண்டா, மெய்த்திட்ட புதித்யினுற் கொடுத்தாயானுல் விரைந்தெடுத்து அண்டத்தில் பாய்வார்பாரே.(௧0௭)

பாரப்பா அடுக்குகளில் புக்கிக்கொள்வார் பாஞ் சுபோம் நீயெங்கே தேடப்போறய், சேரப்பா பாட்ட ரூட மணியைவாங்கித் திறமாகபார்ப்பமென்று வாயி

Digitized By Roja Muthiah Research Library

ல்வைத்து, காரப்பா அண்டத்திற் புக்கிப்போனான் க
டுகவொரு மணிவாயில் வைத்துப்பாட்டர், தூரப்பா
கெவனத்திற் தேடிப் பார்த்தார் சுத்திபெங்குங்காணு
மல் திகைத்திட்டாரே. (க0அ)

திகைத்திட்டுக்குகையில்வந்துசீஷருக்குச்செப்பி
னார் கேசரத்திலா டுப்போது, பகைத்திட்ட சித்தர்கள்
தானனேகங்கோடி பாஷிக்குங் குளிகையைத்தான்
கேட்பார்மக்கள், நகைத்திட்டு அவர்கையி லீயவே
ண்டாம் நம்போலே எளிதமாய் போகவேண்டாம், பு
கைத்திட்ட பாட்டர்சொல்ல கேட்டேனனும் பேய்ம
க்காள்புத்திகொண்டு பிழைத்திடீரே. (க0௯)

பிழைத்திட்டுக் குளிகைகட்டி போகம்பார்த்துப்
போரான காயத்தைச் சுத்திப்பண்ணி, குழைத்திட்
டே யாத்தாளைப் பூசைபண்ணிக் கூறரிய வஸ்துசுத்
தி பானம்பண்ணி, அழைத்திட்டு வாசியைத்தான் அ
ங்கென்றாணி அடுக்காறு தளத்தில்நிற்கு மகூரமுங்
கண்டு, மழைத்திட்ட சந்திரனி லமுர்தத்தையுண்டு
வழிபோடே மனதூணிப் பாருபாரே. (கக0)

பார்த்திடவேதங்கமொன்று வருகும்போது பரி
வான சூதமொன்று காரந்தோய்ந்து, காத்திடவே
நாகமொன்று கொடுத்துவாங்கிக்காணிதுக்குச் சமனா
கக் கெந்திகூட்டி, ஆத்திடவேதாளகமுஞ் சிலையும்வீர
மழகாக னுவிலொன்று கூடக்கூட்டி, மாட்டிடவே கல்
வத்தி விதனையிட்டு மல்லிகையி னிலேசாற்றி லரைத்தி
டாயே (ககக)

அரைத்திடுவாய் தினமூன்று சாறுவிட்டு அழகா
கப் பொடிபாக்கிக்குப்பிக்கேற்றி, மேரைத்திடுவாய் வா

Digitized By Roja Muthiah Research Library

லுகையி லடுப்பிலேற்றி நேர்பாகத் தீயெரிப்பாய் பனி ரண்டுசாமம், விரைத்திடுவாயாயிபதம் பூசைப்பண்ணி வெருளாதே பெடுத்துப்பார் அருணன்போலாங், கரைத்திடுவா யாயிரத்துக் கொன்றேயீய கைகண்ட மாற்றென்ன யிருபத்தஞ்சே. (கக௨)

சவ்வீர் வைப்பு.

அஞ்சமே செந்தூரம் பணந்தானென்று அனு பானந்தேனோடே மண்டலமே கொள்ளு, நெஞ்சமே நோய்களெல்லாந் தவுடுபொடியாகுங் கெடியான கா யசித்தி யருணன்போலாங், துஞ்சமே நரைதிரைக ளெல்லாமாறுஞ் சுகமான சட்டையொன்று கக்கிப் போடும், வஞ்சமே கற்பாந்தங்கோடி காலம் வாசி யைநீ மூலத்தி லிருத்திப்பாரே. (ககங)

சவ்வீர வைப்பு.

இருத்திடவே சவ்வீர வைப்புக்கேளு எழிலான வெடியுப்பு நாற்பது பலந்தான், பொருந்திடவே சீனமது அஞ்சுபலந்தான் புகழாக விவைரெண்டுங் க ல்வத்திட்டு, வருத்திடவேதாமணிச்சார் 8விட்டேபாட் டி வகையாக வில்லைதட்டி யுலரப்போடு, தரித்திடவே கலசத்திலிதனைப்போட்டுச் சக்கரமாம் பாலையைத்தா ன் மேலேமூடே. (ககச)

மூடியே சீலைசெய்து அடுப்பிலேற்றி மூசியாதே பீங்கானுங் கிண்ணிவைத்து, சாடியே தணலெரிப்பா ய் முச்சாமந்தான் தணலுக்குள் வேர்வைபோ லிறங் கும்பாரு, வாடியே வெளுப்பாக இறங்கும்நீரை வி கைபாக வூற்றிவிடு மறுகால்நீரை, தேடியே விதநக்கு

Digitized By Roja Muthiah Research Library

ளடைத்து வைத்துச் சிதறாமல் நீரையெல்லாம் வாங்குவாங்கே. (கக௫)

வாங்கியே சூதமொரு பலந்தானெட்டு வகையாக பரும்பீங்கான் தன்னில்வைத்து, ஓங்கியே திராவகத்தை யதிலேவிட்டு உற்பனமாய்த் தணலில்வைத்துக் கம்பாற்றின்று, தேங்கியே மணற்போலே யாரும்பாரு சிறக்கவே கல்லுப்புப் பலந்தானாறு, பாங்கியே துரிசியொரு பலந்தானாறு பக்குவமாம் பூநீறு பலந்தான் ரெண்டே. (கக௬)

இரண்டோடு வெடியுப்புவொன் றரைதானப்பா இனமான சீனமது ஒன்றரையேயாகும், கண்டோடு அன்னமென்ற பேதிதானுங் கடுகவே ஒருபலந்தான் கூட்டிப்போடு, தண்டோடு சாரமது அரையேபோடு சார்வான கலலுப்புத் துரிசிதன்னை, பண்டோடே பொடியாக வறுத்துப்போடு பக்குவமாய் வெவ்வேறாய்ப் பொடித்துவையே. (ககஎ)

வைத்தெல்லாஞ் சூதத்தில் ஒன்றாய்ப்போட்டு வாகாகப் பொடிசெய்து குப்பிக்கேற்றி, வைத்தெல்லா மரைவாசிதானே போடு பக்குவமாய் வாலுகையின் மேலேபேற்றி, நைத்தலோ தீப்போடு கமலம்போலக் நாலுநாள் முச்சாம மாறவிட்டு, கைத்தல்லோ பனிரெண்டு சாமமானால் கனமான தேங்காய்போலிருக்குந்தானே. (ககஅ)

தானென்ற சவ்வீரப் பொடிதான்சேரை சமத்தான கல்லுப்பு ஒன்றுக்குமுக்கால், வானென்ற சவ்வீரப் பொடிக்குப்பாதி மகத்தான துரிசியென்ற பொடிதானப்பா, கானென்ற துரிசிக்குப் பாதிபூநீறு கன

மான நீறுக்கு சீன்முக்கால், வேனென்ற வெடியுப்பு
மப்படிபேயாகும் வெடியுப்பு மூன்றிலொன்று சா
ரஞ்சேசேர. (௧௧௯)

சேர்க்கவே யன்னமென்ற பேதிதானுஞ் சிறந்த
பூநீறுக்குப் பாதியப்பா, ஆற்கவே பொடிசெய்து குப்
பிக்கேற்றி அரைவாசி வாலுகையின் மேலேவைத்து,
ஏற்கவே தீயிடுவாய் கமலம்போல விதமான ஞானு
ள் முச்சாமப்பா, பார்க்கவே யாறவிட்டுளரித்தாயானு
ற் பக்குவமாய் பனிரண்டு சாமந்தானே. (௧௨௦)

சாபம்.

தானென்ற மும்முறைதா னிப்படியே செய்தா
ல் சமத்தான கொச்சியென்றபேருமாச்சு, கானென்
ற பறங்கிவைத்தா னையிசொல்ல கனமான வீரத்தால்
வாதமாச்சு, வேனென்றவீரத்தைச்சுண்ணஞ்செய்தா
ல் வெருளாமல் தங்கமது பூப்போலாகுந், தேனென்
ற சரக்கெல்லாஞ் சுண்ணமாகுஞ் சிறுபிள்ளை யாடுமி
ந்த வாதந்தானே. (௧௨௧)

வாதத்துக் காதியென்ற வீரப்போக்கை மறைத்
தாரே நாதாக்கள் ரிஷிகள்சித்தர், வேதத்தின் முடிவு
போ லொளிப்புமெத்த வெட்டவெளி ஆச்சுதென்று
லோகமெல்லாம், போதத்தின் பஞ்சகர்த்தாள் சிருட்
டிபோகும் பொன்மயமா யுலகமெல்லாம் போகுமெ
ன்று, நீதத்து சாஸ்திரத்திற் சொன்னாரில்லை போபா
க வென்னூலிற் சொன்னேன்காணே. (௧௨௨)

சொன்னதினால் சித்தரென் மேற்பகையுமாச்சு
தோற்றாத கருவெல்லாம் வெட்டவெளியாக, பன்ன
தினால் பலவென்று விரித்துச் சொன்னேன் பரத்துக்

கேயொப்பென்று மனதிலெண்ணி, தன்னதினால் மட பதியள் சாஸ்திரத்திலில்லை சண்டாளர் கைகொடுக்கி லிந்த நூலை, மன்னதினால் நூல்கொடுத்தோன் நரக மெய்தி மாண்டிறந்து கடைநரகில் வீழ்வான்காணே.

காணவேயிர்முடவாதிகட்குக் கைகொடுக்கி லிந்த நூல் கருவையுண்ணி, பூணவே பார்த்தலைஞ்சு யேமங் கண்டு புளகித்து மெய்மறந்து பெண்ணைக்கண்டு, ஆ ணவே தனமீய்ந்துகற்பழித்து அழிம்பாகிக் குடிகெடு த்து ஆசையூட்டி, ஊணவே காமநோய் கொண்டேயே ங்கி யுலகத்து நடைதப்பி யுய்வன்றானே. (கஉ௪)

ஞானி.

தானனஞானிக்கு மிந்நூலெய்திற் சண்டாளபா சத்தை யறுத்துத்தள்ளி, ஊனான காயத்தைச்சித்திப ண்ணி யுத்தாறு தலங்களெல்லாஞ் சோதிச்சேறி, பானன நிராதாரத்துள்ளேசொக்கிப் பரத்துக்கு அடு க்க நின்றுபானம் பண்ணி, ஆனன அன்னமரைதண் ணீர்காலா மருந்தியே ஒருபொழுது யிருப்பார் கா ணே. (கஉ௫)

இருந்திட்டு கருவெல்லா மெண்ணிப்பார்த்து எ ளிசாக தொழில்செய்து ஏமங்கண்டு, திருந்திட்டுச் சி வனுடைய சொத்தேயென்று சிலவுசெய்பார் கனமா ன கற்பத்துக்குப், பொருந்திட்ட மாத்திரமே எடுத் துவித்துப் பூசைதிரவியத்துக்குங்கற்பத்துக்கு, மருந் திட்டு ஒன்றுமறியா தார்போல ஆசைவைத்து யிருப் பார்கள் ஞானிதானே. (கஉ௬)

ஞானிக்கு வறுமைவந்தால் சகலசித்தும்பொய் யாம் நாட்டினுள்ள மனிதர்கள்தானகைப்பாரென்று,

Digitized By Roja Muthiah Research Library

ஞானிக்குப் பசிவந்தால் மனமலையுமென்று நலமான காயசித்திப் போகுமென்று, ஞானிக்கு விகடம்வ ரலாகாதென்று நாதாக்கள் சொல்லாத கருவைச்சொ ன்னேன், ஞானிக்குச் சொன்னதர்மக் குருவுக்காச் சு நலமான சவ்வீர வைப்புகேளே. (கஉஎ)

சேகப்புச் சவ்வீர வைப்பு

கேளப்பா வெடியுப்பு பலமோநூறு செடியான சீனமது நூற்றுப்பத்து, வாளப்பா சவுட்டுப்பு யிருபத் தஞ்சு மருவியதோர் துரிசியொரு முப்பதாகும், நாள ப்பா நவச்சாரம் பலமுப்பத்து நண்பான சத்திபென் ற சாரமஞ்சு, காளப்பா கல்லுப்பு பலமஞ்சு கடி சாக கல்வத்திற் பொடியாப்பண்ணே. (கஉஅ)

பொடிபண்ணிப் பிரண்டைச்சார் தன்னிலேதான் பேணியரைத் தேழுநாள் வில்லைசெய்து, கெடிபண்ணி ரவிதனிலே உலரப்போடு கெட்டியாம் பாண்டத்தி லரைவாசியிட்டுத், தடிபண்ணிச் சக்கரமாம்பாலைதன்னை சாங்கமாய் மூடியல்லோ முசைமண்செய்து, துடிப ண்ணி யடுப்பேற்றித்தீயைமூட்டுத் துப்பரவாய்நீரை வாங்கு ளாங்கே. (கஉக)

நீரிலே வெள்ளைநீர் தனையகற்றி நேர்பான சிவந் தநீர் தன்னை வாங்கி, சீரிலே அரக்கான குப்பிதன்னில் சிறப்பாக அடைத்துவைத்துச் சேதிகேளு, தூரிலே சூதமொரு பலந்தான்பத்து சூட்சாதி கல்லுப்பு அஞ் சுபலமாகும், ஊரிலே துரிசியது ரெண்டரையே பலந் தானுற்பனமாம் வெடியுப்பு ரெண்டுபலமாமே (கநo)

ஆமப்பா சீனமது ரெண்டுபலமாகு மன்னமென் ற பேதிபது பலமிரண்டு, ஓமப்பா சாரமது பலமிர

ண்டு உறுதியாம் பூநீறு பலமிரண்டு, காமப்பா லிங்கமது பலமுமெட்டுக் கம்பிரச கற்பூரம் பலமுமெட்டு, காமப்பா வெள்ளையது பலமுமொன்று நற்கவுரி மணோசிலையு மொன்றுபோடே. (௧௯௧)

போடவே பலமொன்று கெந்திதாலும் புசுழான சூடனது பலமுமொன்று, வாடவே தொட்டிபொரு அப்பிரேகம் நிமிளை யத்தமொடு வைக்கிறாந்தம்லோகந்தானூர், தேடவே கலக்கரவி சாஸ்திரவேதி சிறப்பான சிங்கியொடு குதிரைப்பல்லு, நீடவே அஞ்சனக்கல் துத்தத்தோடு வெடிசான சிலாசத்துங்கல்னார் தானே. (௧௯௨)

தானென்ற கடல்நுரையு பலம்பொன்றாகத் தாக்கியரை வெட்டுனுள் திராவகத்தைவிட்டு, பானென்ற ரவிதனிலே யுலரப்போடு பருப்பீங்கான் தன்னிலிட்டுத் தணலில்வைத்து, ஊனென்ற பொடிபோலே வறுத்துக்கொண்டு உற்பனமாய்க்காசிபென்றமேருக்கேற்றி, வானென்ற அரைவாசி மணலைப்போட்டு மயங்காதே வாலுகையில் வைத்திடாயே. (௧௯௩)

வைத்திட்டுத் தீபெரிப்பாய்ப் பனிரண்டுசாமம் வளமான தீபப்போலாறவிட்டுக்; கைத்திட்டுத் தீபெரிப்பாய்க் கமலம்போலே கலங்காதே பனிரண்டு சாமந்தானு, பொய்த்திட்டுப் பகல்முழுதுந் தீபைப்போடு முயற்சிபா யிராக்கால மாறப்போடு, நைத்திட்டு ஆறுனெளான பின்பு நலமாகும் பதம்பார்த்தே யிறக்கிடாயே.

இறக்கியே குப்பியைத்தான் முன்மருந்துகூட்டி யிதமாக திராவகத்தி லரைத்துலர்த்தி, நறுக்கியே முன்போல பொடியாய்ப்பண்ணி நலமான காசியென்ற

மேருக்கேற்றி, உறக்கியே வாலுகையின் மேலேவைத்து உற்பனமாய்த்தீயிட்டுஆறுநாலுசாமம், மறக்கியே யாறவிட்டே யுடைத்துவாங்கி மறுகாலு முன்போல மருந்தைக்கூட்டே. (௩௬௫)

கேந்தித் தயிலம்.

கூட்டியே மும்முறைதான் செய்தாயானால் கொடுஞ்சிவப்பா சவ்வீர மிருக்கும்பாரு, நீட்டியே நெரிவிஷமும் பலமுமஞ்சு நெடிதான அலரிவேர்ப்பட்டை பலம்பத்து, மூட்டியே கெந்தகந்தான் பலமிரண்டு முட்டையா மஞ்சளென்ற கருவாலாட்டி, வாட்டியே வில்லைபண்ணி புடத்தயிலம்வாங்கி வகையான வீரத்திற் சுறுக்குப் போடே. (௩௬௬)

வீரமெழுகு.

போடடனே மெழுகான பதத்தில் வாங்கி பொன்ரேக்கு சுத்திவைக்க தின்றுபோடு, நீட்டடனே நாலுக்கு மொன்றுதங்கம் நிகழாமற் சுத்திவைக் கத்தின்றுபோடு, மூட்டடனே ஆயிரத்துக்கொன்றேயிய முசியாதே பதினாறு மாற்றுமாகு, மாட்டடனே உபசரங்களியமாகு மாசற்ற வீரத்தை யொளித்தார் பாரே: (௩௬௭)

ஒளித்தாரே ஞாதாக்க ளென்றசொல்லி யுத்தமித்தாய்ப் பாதத்துக் குண்மைபாச, அளித்தாரே லோகத்திற் பிழைக்கவென்று ஆச்சரியம் வீரம்விட்டால் வாதம்போச்சு; களித்தாரே முன்சொன்ன வீரமெல்லாங் காரமிடும் வயித்தியத்துக் காகுமாகும், சுளித்தாரே யேமமொன்றுங் காணாதேங்கிச் சுணங்கலாச்சு சுட்டலைந்து மாள்வான்றானே. (௩௬௮)

Digitized By Roja Muthiah Research Library

பறங்கிப் பாஷாண வைப்பு.

மாளாமற் பறங்கியென்ற பாஷாணத்தை வைக்கிறதோர் முறைகேளு மாணுக்காளே, தாளாமற் சூதமொரு பலந்தான்பத்துச் சாதகமாய் கல்லுப்பு பலந்தானெட்டு, மீளாமல் வெள்ளையென்ற பாஷாணமஞ்சு விரவியே கல்வத்திற் பொடித்துக்கொண்டு, கோளாமல் திராவகத்தி லிட்டுளுள்கூட்டி கெடியாகப் பொடிபண்ணி மேருக்கேற்றே. (௧௩௯)

மேருக்கே யேற்றியபின் வாலுகையில்வைத்து விதமாகத் தீயிடுங்கள் பனிரண்டுசாமம், பேருக்கே பதங்கமது யிறுகியேறிப் பெருந்தேங்காய் போலிருக்கும் பாஷாணந்தான், பேருக்கே முன்போல மருந்துகூட்டிப் பேசாதே திராவகத்தை விட்டேயாட்டி, பாருக்கே பொடிபண்ணி மேருக்கேற்றிப் பக்குவமாய் வாலுகையில் பதித்திடாயே. (௧௪௦)

பதித்திட்டுப் பனிரண்டு சாமந்தீயைப்பகல்முழுதுமெரியவிட்டு ஆறப்போட்டு, விதித்திட்டுப் பக்குவத்திலிறக்கிப்பாரு மேலோடு தள்ளியே பொடியாப் பண்ணி, மதித்திட்டு முன்போல மருந்துகூட்டி மறவாதே மூன்றுதிரந் தீர்த்தாயானால், சதித்திடப் பறங்கியென்ற பாஷாணமாகுங் கண்ணிமைக்குள் ரசிதவித்தை யாகும்பாரே. (௧௪௧)

பாஷாண மெழுகு.

பாரப்பா பறங்கியென்ற பாஷாணந்தான் பலமெடுத்து அயச்சட்டிக் குள்ளேவைத்து, நேரப்பா துண்டிப்பால் நாலுசாமம் நீங்காதே சுருக்கிடவே மெழுகாய்ப்போகும், தூரப்பா யிரும்புசெய்பில் நூற்றுக்

Digitized By Roja Muthiah Research Library

கொன்றிய துடியான ரசிதமது பதினாறுகுஞ், சீரப்பா சரக்கெல்லாங் கட்டிப்போகுஞ் சிறுபிள்ளை யாடுமிந்த வாதந்தானே. (கசஉ)

சாஸ்திர விபரம்.

வாதமென்றாற் கொஞ்சத்திற் கிடைக்குமோதான் மகத்தான யோகிமுதல் ரிஷிகள்சித்தர்,நீதமென்ற பஞ்சகர்த்தா விவர்களெல்லாம் நேரப்பா பார்க்கையிலுந் தப்பிப்போகும், வேதமென்ற அந்தத்தின் முடிவுக்கொக்கும் விரைந்தமனோன்மணித் தாயார்சொல்ல யானும், பாதமென்ற சிரசில்வைத்துக் கேட்டுகேட்டுப்பரிவாகப் பிள்ளைகட்கா யுரைசெய்தேனே. ()

உரைசெய்தார் சித்தர்கள்தான் அனேகங்கோடி புத்தகமே அகஸ்தியர்தா னெட்டுப்பாவாய், நிறைசெய்த நவகண்டஞ் சொன்னாரைய்யா நேர்பான வெண்பாவாய் கோரக்கர்தாமுந், திரைசெய்தே ஏழாயிரந்தான் சொன்னார் திறட்டியல்லோ மச்சமுனிமூன்றுகாண்டஞ்சொன்னார், புரைசெய்த சிவவாக்கியர் அஞ்சுகாண்டஞ் சொன்னார் போக்கோடே சித்தர்சொன்னார் கரைகாணேனே. (கசச)

காணாத காசிபர்தான் வண்ணஞ் சொன்னார் கரையற்ற ரோமமுனி வடுகிற் சொன்னார், பூணாத ராமதேவர் சந்தப்பாசொன்னார் புகழுரிய நந்திகள்தான் சந்தஞ்சொன்னார், கோணாத சனற்குமா முனிதானையா குறைத்துமே கலித்துறையாய்த் தெளிவாகச் சொன்னார், தோணாத திருமூலர் நயனார்தாமுஞ் சொன்ன திருமந்திரந்தான் காடுகாடே. (கசரு)

Digitized By Roja Muthiah Research Library

காடாகப் போகாமற் பதஞ்சலிமாமூர்த்திக் கண
க்கோடே யெழுகாண்டஞ் சொன்னாரையா, தோடா
கச் சட்டைமுனி நிகண்டோடொக்கத் தூசரமா யிருப
த்தி யேழுநூறு, பாடாகக் காலாங்கி நாயர்தாமும் பக்
குவமாய் நாலுகாண்டஞ் சொன்னாரையா, நாடாகயி
ளைத்தபேர்க் குதவியென்று நலம்பெறவே யெழுகாண்
டஞ் சொன்னேன் பாரே. (கசசா)

பார்க்கவே பேழையுந்தா னெழுநூறுக்கிப் பரி
வாகச்சொல்லிவிட்டேன் சூக்ஷமாய்த்தானும், நேர்க
வே யென்பிள்ளை கொங்கணர்தானப்பா நிறைமூவாறு
யிரத்தைந் நூறுஞ்சொன்னார், சேர்க்கவே சட்டை
முனி நூலுநன்று செகமறிய கொங்கணர்தா நூலும்
நன்று, காற்கவே சங்கமுனி நூலுநன்று கருதியே
மனதூன்றிப் பாருபாரே. (கசஎ)

பாரப்பா மற்றமற்ற நூற்களெல்லாம் பரிபாஷை
க்கருவாகச் சொன்னாரையா, நேரப்பா கண்ணாடி மு
கத்தைப்போல நேர்பாகச் சொல்லிவைத்தார் ராமதே
வர். சேரப்பா சாஸ்திரங்கள் பார்க்கப்பார்க்க திரட்
டெல்லாம் வெளியாகு மறைப்புமில்லை, ஆரப்பா என்
னுடைய நூலைக்கண்டோர் ஆதியென்ற கொங்கணர்
தான் கரைகண்டாரே. (கசஅ)

சோரவீர வைப்பு

கரைகண்ட சோரமென்ற வீரம்வைக்கக் காட்டு
கிறேன் கனிவாய்க்கேளுங்கள் மக்காள், பகைகண்டச
வ்வீரம் பலந்தானெட்டுப் பாச்சிநன்றாய்க் கல்வத்திற்
பொடியாய்ப்பண்ணி, திரைகண்ட கல்லுப்புச் சுண்
ணம்ரெண்டு செகமறிய சவுக்காரச் சுண்ணம்ரெண்டு,

Digitized By Roja Muthiah Research Library

வரைகண்ட துரிசியென்ற சுண்ணம்ரெண்டு மாசற்ற வெடியுப்புச் சுண்ணம்ரெண்டே. (௧௪௯)

ரெண்டான சாரமென்ற சுண்ணம்ரெண்டு நேர்பான சினமென்ற சுண்ணம்ரெண்டு, பண்டான அன்னமென்ற பேதிரெண்டு பாங்கான பொடிபோட்டே ஒன்றுப்ச்சேர்த்துத், தண்டான மேருவுக்கு அரைவாசி போட்டுச் சாதகமாய் வாலுகையின் மேலேவைத்து, செண்டான அடுப்பேற்றி எறிப்பாயப்பா செகமறிய பனிரெண்டு சாமந்தானே. (௧௫0)

தானென்ற வீரத்தை யெடுத்துப்பார்த்தால் சாதகமாயடியிலே தானேநிற்குங், கானென்ற இரும்புமேல் அணுப்போல்வைத்துக் கனமான நீரையள்ளி யதிலேகுத்து, தேனென்ற துருவாகுந் தண்ணியிலேகுழைத்து சிறப்பான காகத்தி னிறகிற்பூச, கோனென்ற கொக்கிறகு போலவாகுங் கொள்ளையோ கொள்ளையிதில் வாதந்தானே. (௧௫௧)

துருசிக்குரு.

காதந்தா னெப்படிதான் வருகுமக்காள் மகத்தான துருசியல்லோ நீறபண்ணவேணுஞ், சூதந்தான் தன்னையல்லோ கட்டவேண்டுந் துடியான சூதமல்லோ காயசித்தியாகும், வேதமென்ற பொருளறிந்தால் ஞானியாவான் விரைந்தாறு ஸ்தலங்கண்டோன் யோகியாவான், காதந்தா னென்றுசொல்லி வார்த்தையாச்சுக் கலந்தோடி நடந்தாக்கால் தலையும்பாரே. ()

பார்ப்பதுபோல் துருசியொரு பலத்தைவாங்கிப் பரிவான சோரமென்ற வீரந்தன்னை, சேர்ப்பதுதான் முக்காசினிடையேதூக்கிச் செயமான வாய்நீரால் மர்த்

Digitized By Roja Muthiah Research Library

திச்சப்பா, காற்பதுதான் துரிசியின்மேற் பூசுபூசு சு
வமான ரவிதனிலே பேடுபோடு, சோற்பதுதான் ப
த்துனாள் போட்டாயானால் சுகமான துருசியது நீறு
மாமே. (கருரு)

ஆமேதான் சாறுவாராத் தழைகளெல்லாம் அதி
ல்மெள்ளக்குருப்போட்டுப் பிழியந்தண்ணீர்,போமே
தான் பாலெல்லா முறிந்துநீராய்ப் புட்டியில்லே சுத்தச
லம் போலேநிற்கும், வேமேதான் சரக்குகளிற் சுறுக்
குப்போட விடுபட்ட மெழுகாகும் வேதையாகும், ஓ
மேதானவலோகத் தீர்த்தாயானு லொருகோடிக்கோடு
மிது ஓசத்திதானே. (கருசா)

ரச செந்தூரம்.

ஓசத்தியென்ற விராவியிலேக் குள்ளேகேளு உ
ரலிலிட்டு இடித்தபின்பு துரிசிச்சுண்ணம், பிசத்தி
யென்ற வராகனிடை பதிலேபோட்டுப் பிசைந்துவை
த்துக் கிட்டியிட்டுப்பிழியந்தண்ணீர், குசத்தியென்ற
சூதமது அயச்சட்டியிட்டுக்கொடுஞ்சுறுக்குப் போட்
டுவா ஒருசாமந்தான், நசத்தியென்ற யிட்டலிபோலா
கும்பாரு நாமறியோ மிதுபோராப் போக்குத்தானே.

குளிகை சாரணை.

போக்கான சூதத்தில் தங்கமிட்டுப் பேரானகெந்
தகமோ சரியாய்க்கூட்டி, தாக்கான தாளகமுஞ் சிலே
யும்வீரந் தயங்காதமல்லிகையின் சாற்றாலாட்டி, நோ
க்கானகுப்பியிலே பொடிபண்ணிப்போட்டு நுகர்ந்து
நின்ற வாலுகையில் செந்தூரித்து, வாக்கான ஆயிர
த்துக் கொன்றேயீய மாற்றென்ன பனிரண்டுங் கா
ணுங்காணே, (கருகூ)

Digitized By Roja Muthiah Research Library

காணந்த உபரசங்கள் நூற்றிரண்டுபெத்தும் கன்மான பாஷாண மறுபத்தாறுலுங், தோணவந்த லவணமூத விருபத்தைந்துஞ் சொல்முறையாய் நவலோகம் நவரத்தினங்கூட ஆனந்த மிதுவெல்லாஞ் சத்தாய்வாங்கி அம்மப்பா ரூதத்தி லொவ்வொன்றாயீய்ந்து, பூணந்த குடோரிலிட்டுக் கக்கப்பண்ணிப் புகழானசாரணையிற் சாய்த்திடாயே. (கருஎ)

சாய்த்திடவே ஒருதாந்தா னுபரசத்தையீய்ந்து சாதகமாஞ் சகடென்ற குளிகையாச்சு, வாய்த்திடவே ரெண்டுதரந் தீந்தாயானால் மாசற்ற போகியென்ற குளிகையாச்சு, மாய்த்திடவே மூன்றுதரம் தீர்ததாயானால் மகத்தான போகியென்ற குளிகையாச்சு, ஆய்த்திடவே ஐந்துதரந் தீர்த்தாயானால் அஷ்டமாங் குளிகையென்று யறிந்திடாயே. (கருஅ)

அறிந்திடவே ஏழுதரந் தீர்த்தாயானால் அப்பனே மோகினியாங் குளிகையாச்சு, செறிந்திடவே யிருனான்கு தீர்த்தாயானால் செகமறிய அஷ்டமாசித்தியாச்சு, பிறிந்திடவே பதினாறு தரமுந்தீர்ந்தால் பேரான காமதேனு குளிகையாச்சு, கறிந்திடவே பதின்மூன்று தரந்தான்தீர்ந்தால் கமலினியாங்குளிகையென்ற நாமமாச்சே. (கருகூ)

லிங்கமெழுகு

ஆச்சப்பா பதினைந்து தரமுந்தீர்ந்தா லப்பனே சந்தான குளிகையாச்சு, போச்சப்பா பதினேழு தரமுந்தீர்த்தால் பேரான சுரூபமென்ற குளிகையாச்சு, வாச்சப்பா குளிகைதன்னை வாயில்வைத்து வடகடலுந் தென்கடலு மறுவலாகுந், தோச்சப்பா அண்டத்

Digitized By Roja Muthiah Research Library

தின் கமரிற்புக்கி சுரூபமென்ற சிலம்பொலியில் மே வலாமே, (கசுo)

மேவவே துரிசியென்ற குருவைத்தொட்டு விள ம்புகிறேன்தாசானப் பூவைவாங்கி, பாவவே துரிசியி ட்டுப் பிழிந்துக்கொண்டு பரிவான அயச்சட்டிக் கு ள்ளேவார்த்து, தாவவே நெடுங்கம்பி லிங்கமொன்று தனைப்பொடித்து அயச்சட்டிக் குள்ளேவைத்து, கா வவே வெடியுப்புக் காசிடையேபோட்டுக் கனமானவ டுப்பேற்றித் தீயைமூட்டே, (கசுக)

மூட்டவே வெந்துநன்றய் மொழுதயாகு முனி யவே வழித்தெடுத்துப் பீங்கானில்வைத்து, நாட்ட வே நவலோகம் நூற்றுக்கொன்றில் நலமானமாற்றெ ன்ன பத்தரையேகாணு, யாட்டவே தினங்குன்றி யு ள்ளேகொள்ள வருணனைப்போல்தேகமுமாங் கண்டு கொள்ளு, பூட்டவே நரையெல்லா மாறிப்போகும் பொற்சடையோன் தேகமுமாங் கண்டுபாரே. (கசுஉ)

பாஷாண மேழுகு,

கண்டுபார் விராகனெடை துரிசுசுண்ணங் சன மான சதிர்க்கள்ளிப் பாலிற்போட்டு, விண்டுபார்சாம ந்தான் மூடிவைக்க விடுபட்டசுத்தசலம் போலேயா குங், கொண்டுபார் வெண்ணெயென்ற பாஷாணந்தா ன் கொடிதான அயச்சட்டிக் குள்ளேவைத்து, மண்டு பார் நால்சாமம் சுறுக்குப்போட மகத்தான வெள்ளை யது மெழுகுமாமே. (கசுஙு)

மெழுக்கெடுத்து வங்கத்தி லிடைக் கிடைதானீ ய மெதுவான வங்கமது நொருங்குமபாரு, அழுக்கெ டுத்து வங்கத்தை வெள்ளியிலேதாக்கு அப்பனே ரசி

Digitized By Roja Muthiah Research Library

தமது பொடியேயாகுங், தழுக்கெடுத்துச்சூதத்தைச்ச மனுப்சேர்த்து தாக்கியரை பாலென்ற தண்ணீர்விட் டு, நழுக்கெடுத்து நால்சாம மரைத்தபின்பு நலமாகவ ழித்தெடுத்து அகலில்வையே. (கசுச)

ரசித பாஷாணம்.

வைத்துமே அயவகலால் மூடிச்சீலை மண்செய் து பத்தெருவிற் புடத்தைப்போடு, நைத்துமே வெந் ததுவுங் குருவாய்நிற்குஞ் சமுசயங்களெண்ணுமல் வ ங்கம்நூற்றில், நைத்துமேஓரிடைதான் கொடுத்தாயா னுல் நலமான மாற்றென்ன பதினைந்தாகு, மெய்த்து மே செம்புஅயங் தன்னிலீய விடபட்ட வெள்ளிமய மாகும்பாரே. (கசுரு)

பாரப்பாசிதமென்றபாஷாணம்வைக்கப் பண்பா கச் சொல்லுகிறேன் மாணுக்கனே, நேரப்பாசங்கி னுட சுண்ணந்தானும் நிறுத்தல்லோ பலம்பத்துக் க ல்வத்திட்டு, சேரப்பா சீனமென்ற பொரிதான்பத்து சிறப்பான கல்லுப்பு பொடிதான்பத்து, வேரப்பா வெள்ளையென்ற பாஷாணம்பத்து மேவியதோர் சார மது பலமிரண்டே. (கசுசு)

ரசித பாஷாண மெழுகு.

இரண்டோடே சூதமது பலமும்பத்து நேர்பா னதிராவகத்தி லெட்டுநாளாட்டி, தண்டோடே ரவித னிலே புலரப்போட்டுச் சாங்கமாய்ப் பொடிப்பண்ணி மேறக்கேற்றி, வெண்டோடே வாலுகையின் மேலே வைத்து விரவியேகமலம்போல் தீயைப்போட்டு, பண் டோடேபனிரண்டு சாமமானுற் பக்குவமாய்ப் பலகை போல் பதங்கமாமே. (கசுஎ)

Digitized By Roja Muthiah Research Library

ஆயிந்த பாஷாணம் பலந்தான்வாங்கி அபச்சட்டிக் குள்வைத்து யப்பால்கேளு, சாயிந்த சதிர்க்கள்ளிப் பால்தான்சேரை சயத்துடனே யெரியலாம் பால் தான்சேரை, வேயிந்த ரெண்டுமொன்றாய் கலக்கிவைத்து விரவிபதோர் கருணைவிபலம் பொடித்துப்போடு, ஓயிந்தமூன்றுனுள் கலக்கிவைத்து உர்பனமாய்த் தண்ணீராஞ் சுறுக்குப்போடே. (கசஅ)

சுறுக்கிடவே ரசிதமென்ற பாஷாணந்தான் துடியானமெழுகாகுஞ் சுரண்டிவாங்கி, நறுக்கிட்ட வெள்ளீயத் தீய்ந்தாயானால் நலமான நீர்வற்றி ரசிதமாகு, முறுக்கிட்ட மெழுகாலே சூதங்கட்டு முயற்சியாந் துரிசியென்ற குருவுமாகும், குறுக்கிட்டவாதமொன்று பார்ப்போமென்பார் குலாமரவர் வாதியல்ல குருடர்தாமே. (கசக)

குருடனென்றால் பத்திபய புத்தியுண்டு குரங்கான வாதியென்றால் தழையைத்தேடி, முரடனைப்போலொண்ணாதே யொண்ணைச்சேர்த்து முயற்சியாயவரைத் தங்கே புடத்தைப்போடு, திருடனைப்போல் விழித்தங்கே யெடுத்துப்பார்த்துச் சீயென்று எறிந்துவிட்டு பின்னொன்றைப் பார்ப்பான், கெருடனைப்போல் ஞானமுறை வாதியென்றால் கேழ்வியாற் சுடாமல்குருத் தேடுவானே. (கஎ0)

குருத்தேடியவர்சொன்ன மொழியைக்கேட்டுக் குறையாத சாஸ்திரத்தைத் தேடிச்சேர்த்துக், கருத்தேடி கைமுறைகள் கண்டுதேறி கலங்காமல் யோகத் தேகின்றுதேறி, யுருத்தேடியுட்கருவி பிறக்கருவி யறிந்து உடலறிந்துவுயிர்நிற்குந்தானந்தேடி, அருளாதே

Digitized By Roja Muthiah Research Library

டி யாத்தாளை யறிந்துதேடி யவள்சொல்லக் கேட்டுணா
ர்ந்து வாதப்பாரே. (கஎக)

பாரப்பா தூரிசியென்ற சுண்ணந்தானும் பதருமல் விராகனிடை யெடுத்துக்கொண்டு, நேரப்பா எருக்கின்பால் ரெண்டுஞ்சேரில் நினைவாக வதிலிட்டுச் சாமம்வைக்க, சேரப்பா புஷ்ட்டியற்றுச் சலமாய் நிற்குஞ் செகப்பான கெவுரியென்ற பாஷாணந்தான், வாரப்பா அயச்சட்டிக்குள்ளே வைத்து மறவாமல் நால்சாமம் சுறுக்குப்போடே. (கஎ௨)

கெவுரி மெழுகு.

போட்டுடனே மெழுகாகு மெடுத்துமக்காள் பேரான காரியம் பலந்தானென்றில், நீட்டுடனே சரியிடையாய் மெழுகுமீய நேர்பாக வாங்கியது தாளாய்ப்போகு, மாட்டுடனே யித்தாளை தங்கத்திலீய மலிந்து தங்கம் நொறுங்கியே தூளாய்ப்போகும்; ஆட்டுடனே யிதுக்குநேர் சூதங்கூட்டி அரைத்துமுன்னீர் தன்னாலே வில்லைகட்டே. (கஎ௩)

கட்டியே அயச்செம்புக்குள்ளேவைத்துக் கனமான பத்தெருவிற் புடத்தைப்போடு, ஒட்டியே குருவாகும் நூற்றுக்கொன்றீய வோடுமே பத்தரைதான் உயர்த்திமெத்த, துட்டியேயிம்மெழுகு சூதங்கட்டுந் துலையாத சரக்கெல்லாங் கொல்லுங்கொல்லு, மெட்டியே வெகுதூரம் ஓடுமோடு மெடுக்கெடுக்கத் துலையாத ஊற்றுமாமே. (கஎச)

தாளக மெழுகு.

ஊற்றான தாளகந்தான் பலத்தைவாங்கி யுறுதியாஞ் சுண்ணத்திற் சுத்திபண்ணி, மாத்தான அயச்ச

ட்டிக்குள்ளேவைத்து மருகவே யிலைகளிப பாணுக்குள்ளே, நீத்தான துரிசியென்று சுண்ணம்போட்டு நீராகமுறித்தபின்பே யெடுத்துக்கொண்டு, காத்தான தாளகத்திற் சுறுக்குப்போட கனமான மெழுகாகு மெடுத்துக்கொள்ளே. (௧௭௫)

கொள்ளவேசுத்தித்த செம்புமொன்று குவிந்துநின்று வுருகையிலே மெழுகொன்றீய, மெள்ளவே வெண்கலம்போல்தகர்ந்துநிற்கு மேதிச்சுஉருகையிலே தங்கம்மீய, தள்ளவே சுழித்துஒன்று யாடும்போது தங்கத்தின் சரியிடைக்கு ஞாகமீய, அள்ளவே கூட்டியெல்லாம் பொடியாய்ப்பண்ணி அதியாஞ் சூதத்தைச் சரியாக்கூட்டே. (௧௭௬)

செந்தூரம்.

கூட்டவே சூதந்தான் கெந்தகத்தின்ரெட்டிக் குறிப்பாக முன்பாலின் தண்ணீராலாட்டி, நாட்டவே வில்லைபண்ணி அபசிமிளில் வைத்து நலமாக மேல்மூடி மண்சீலைசெய்து, வாட்டவே பத்தெருவிற் புடத்தைப்போடு மகத்தான செந்தூர மாவிதானப்பா, ஆட்டவே மதிதன்னில் நூற்றுக்கொன்றீய அருணணைப்போற் சிவப்பான தங்கமாமே. (௧௭௭)

தங்கமாங் குருப்பட்டாற் சூதங்கட்டுஞ் சாவென்ற பேர்போச்சு தேகத்துக்கு, பங்கமாஞ் சடக்குகளிற் போட்டுப்போட்டுப் பதைத்தங்கே கட்டிப்போந் தூரவோடுங், செங்கையாஞ் சாறுவார்த் தழைகளெல்லாங் கெடியாகப் பிசைந்தமுத்திப் பிழியத்தண்ணீர், சங்கையா முட்கொள்ள காயசித்தியாகி சதகோடி யுகவரைக்கு மழியாதென்னே. (௧௭௮)

சிகப்புநவசார வைப்பு.

என்னவே செகப்பான நவக்ஷாரத்தை யிதமாக க் கேளுங்கள் மாணுக்காளே, பண்ணவே வெடியுப்பு ரெண்டுபத்து பலந்தான் பருவமுடன் சீனமது யிருப த்தஞ்சு, கன்னவே ரெண்டையுந்தான் கல்வத்திட்டுக் காரமாம் ஞுபுருவிச் சாற்ருலாட்டு, தென்னவே தெ ல்லுப்போல் வில்லைகட்டித் திறமான ரவிதனிலே காய ப்போடே. (௧௭௬)

போடவே தினமூன்று காயக்காயப் பெருக்கான பின்பெடுத்துக் கலையத்திட்டு, ஆடவே சக்கரமாம் பா லைமேலே யணைத்தாப்போல் வைத்திட்டு மாஷமண்பூ சி, நீடவே அடுப்பில்வைத்து தீயைமூட்டு நினைவாக வெள்ளைநீர் வருகும்பாரு, வாடவே சிவந்தநீர் பி ன்வருமக்காள் மகத்தானபீங்கானி லெடுத்து வை யே. (௧௭௭)

வைக்கவே அரக்காலே குப்பிபண்ணி வருகிற தோர் திராவகத்தை யதிலேவாரு, தைக்கவே வெள் ளைதனை வீசிப்போடு நவச்சார மொருசேரை கல்வத் திட்டு, ஐக்கவே திராவகத்தால் ஆட்டுவாட்டு அறசா ம மாட்டியபின் வழித்தெடுத்து, பதைக்கவே பெரு ம்பீங்கான் தன்னில்வைத்துப் பருவமாய் திராவகத் தைக் குத்துகுத்தே. (௧௭௮)

குத்தியே ரவியில்வைத்து மூன்றுனாள்தான் கு றிப்பாக தணல்மேலே பீங்கான்வைத்து, பத்தியே பொடிபோலே வறுத்துப்போடு பருவமாய்க் காசியெ ன்ற மேருக்கேற்றி, யத்தியே யரைவாசி மட்டும்போ டு அழகான வாலுகையின் மேலேவைத்து, யெத்

தியே தீப்போடு கமலம்போல விதமாக பனிரண்டு சாமந் தானே. (கஅஉ)

தானே னூல்சாமமூமே யெரிப்புப்போடு சாதக மா யிராக்கால மாறப்போடு, காலென்ற மூன்றுனு ளானபின்பு கடுங்குப்பி யெடுத்துடைத்தால் தேங்காய்போலே, தேனென்ற சிறுதிட்டத்தில் சிவந்துகாணுந் திரும்பவிட்டுக் கல்வத்திற் பொடியாப்பண்ணி, பானென்ற திராவகத்தைவிட்டே யாட்டிப் பரும் பிங்கானிலிட்டு திராவகத்தைக் குத்தே. (கஅங)

குத்தியே நாள்மூன்று ரவியிற்போடு குவிந்தபின்பு தணலுக்குள் வறுத்துப்போடு, எத்தியே பொடியாக்கி மேருக்கேற்றி யிதமான வாலுகையில் தீயை மூட்டு, பத்தியே கமலம்போ லெரிப்பாயப்பா பனிரண்டு சாமமுந்தான் கடந்தபின்பு; தத்தியே குப்பியைத்தா னுடைத்துப்போடு தனில்நிற்கும் பதங்கத்தை எடுத்துக்கொள்ளே. (கஅச)

சிகப்புச் சாரசெந்தூரம்.

கொள்ளவே முன்போலே திராவகத்தாலாட்டிக் குவிந்தபின்பு நீர்குத்தி ரவியிற்போடு, அள்ளவே தணலுக்குள் வறுத்துப்போட்டு அத்தமாங் காசியென்ற மேருக்கேற்றி, தள்ளவே வாலுகையில் தீயைமூட்டித் தனையெடுத்து முன்போல பாவனையைசெய்து, துள்ளவே யேழுதிரந் தீர்த்தாயானால் சூரியன்போல் சிவந்திருக்குஞ் சாரந்தானே. (கஅரு)

சாரந்தான் பலம்பத்து நிறுத்துக்கொண்டு சமத்தாக சூதமது பலமும்பத்து, வாரந்தான் தங்கமது

Digitized By Roja Muthiah Research Library

ரெண்டரைப் பலந்தான் மருவநன்றாய் லேசாகக்கல் வத்திட்டு, தீரந்தான் எலும்பிச்சம் பழச்சார்விட்டுத திரளவரை நாள்மூன்று பொடியாய்ப்பண்ணி, காரந் தான் காசியென்ற மேருக்கேற்றிக் கனமான வாலுகை யில் வைத்திடாயே. (கஅசு)

வைத்துமே பனிரண்டு சாமந்தீயை மறவாமல் போட்டுவரத் தீபம்போல, மைத்துமே மாதளம்பூப் போல வாகு மைந்தனே வேறொன்று சூப்பிக்கிட்டு, நைத்துமே சீலையினால் காற்றோடாமல் நலமாகக் கட்டி வைத்து ஆயிரத்துக் கொன்று, தைத்துமே காசிடை தான் கொடுத்தாயானால் தங்கமது பதினாறு மாற்று மாமே. (கஅஎ)

தங்கமே ஆச்சுதென்று கெர்ச்சிக்காதே தளராம ற் காயத்தை சித்திபண்ணி, பங்கமே வாராமல் பணந்தானுண்ணு பளபளக்கு முடம்பெல்லாம் பாலே யாவா, யங்கமோ சரீரமது பவளம்போலா மரனுண்ட கற்பமிது யானுமுண்டேன், சிங்கமே யிவனென்பார் நரையோயில்லை செகமெல்லாங் குன்றியிடைக்கொ வ்வாவாறே. (கஅஅ)

ஒவ்வாது வமமப்பா சாரத்துக்கு உத்தமியாமனே ன்மணித்தா யொப்புவொப்பு; சவ்வாது உடன்கூட்டி ச் சரக்கிற்பூசி தணலில்வைத்து ஊதையிலே சவனே யாகும், கவ்வாது நவலோகம் படுமுன்னேதான் கனக மயமாகிவிடுங் கணக்கோ மெத்த, பவ்வாது உலகத்திற் கேட்டபேர்கள் பரியாசமென்பார்கள் பாஷாண்டிதா னே. (கஅசு)

Digitized By Roja Muthiah Research Library

பாஷாண்டி.

பாஷாண்டி மெத்தவுண்டு லோகத்துள்ளே பரிவாக அவருடனே பேசவேண்டாம், பாஷாண்டி வாதமுண்டோ வென்றுகேட்டால் பண்பாக செய்தொழிலே வாதஞ்சொல்லு பாஷாண்டி வைத்தாலுஞ் சகித்துக்கொண்டு பயபக்தி மார்க்கமாய் விசேஷஞ்சொல்லி, பாஷாண்டி முகத்துமுன் நிற்குமோதேவி பாங்கான தேசம்விட்டு மறுதேசம்புக்கே. (௧௬௦)

புக்கியே ஞானமுற்ற வாதியுடன்பேசு புறம்பான மனுஷருடன் பேசவேண்டாம், மக்கியே மனதடக்கிப் போதம்பாரு மகத்தான பெரியோர்க்குத் தொண்டுபண்ணு, எக்கியே மூலத்தைக் கும்பித்தேறு இயலாக ஸ்தலங்களெல்லாஞ் சோதித்தேறி, நக்கியே அமூர்த்தத்தை மவுனம்முன்னி நாதாக்கள் ரிஷியுடைய மார்பில்நில்லே. (௧௬௧)

நில்லென்ற வறுபத்துநால் மார்புள்ளே நிலைத்து நிற்கும்வாதசித்திக் குளிகைசித்தி, கல்லென்ற காயசித்தி கவனசித்தி கரைகாணா யோகசித்தி ஞானசித்தி, வில்லென்ற எட்டெட்டுஞ் சித்தியுண்டு மேதினியுங் கொள்ளாது கரைகொள்ளாது, சில்லென்ற காடுபோற் சாஸ்திரங்கள் மெத்த செப்பரிது உரைகாணா வாதந்தானே. (௧௬௨)

வாதந்தான் முன்பின்னாய்ச் சொல்லிவைத்து மறைத்தாரே சரக்கென்ற வைப்புதன்னை, நீதந்தானுதியுப்பை யிழுக்காய்ச்சொல்லி நிலைத்துநிற்கும் வீரத்தை மறைத்துப்போட்டார், வேதந்தான் முடிவுக்கு ஒப்பாய்நின்ற வீரத்தை வைத்தாலே வாதமாடும், பா

Digitized By Roja Muthiah Research Library

தந்தா னில்லாமல் நடக்கப்போமோ பரிவாக சிவந்திருந்த சாரந்தானே. (கசுங)

களங்கு சூதக்கட்டு.

சிவந்திருந்த சாரத்தின் மகிமைசொல்ல சித்தர் முதல் ரிஷிகளுக்கும் முடியாதப்பா, வுவந்திருந்த காலாங்கி னுயர்சொல்ல வுண்மையாய்க் கேட்டிருந்தேன் கொஞ்சங்கண்டேன், நவந்திருந்த சூதத்தைத்தூரத்திக்கொல்ல நண்பாக வெகுசுளுவு நல்கப்போகா, தவந்திருந்த பிள்ளைசென்று நடந்தாற்போல சரக்கெல்லாங் கண்ணிமைக்குள் கொல்லுந்தானே. (கசுச)

கொல்லுகிற குருவேது வென்றுயானுல் குவிந்தபடி சொல்லுகிறேன் குறிப்பாய்க்கேளு, வெல்லுகிற சூதமொன்று கெந்தியொன்று விடுபட்ட தாளகமு மனோசிலையும்லிங்க, தல்லுகிற சிவப்பான சாரமொன்று மப்பனே பழச்சாற்றுல் சாமமாட்டி, தொல்லுகிற வில்லைசெய் துலரப்போடு சுரப்பாக அயக்குகையில் வைத்திடாயே. (கசுரு)

வைத்துமேற் சிலைசெய்து புடத்தைப்போடு வயிரவற்குவஸ்துசுத்தி பூசைபண்ணி, கைத்துமே கவசத்தை வாங்கிப்போடு களங்காக வேயிருக்கும் நவலோகத்தில், அத்துமே யாயிரத்துக் கொன்றுபோடு அப்பனே பாற்றென்ன டானிரெண்டாகும், நைத்துமே காவிக்கு முப்புக்கேகா நலமான சீஷனுக்கு தொழிலைச்சொல்லே. (கசுசா)

சொல்லவே சூதத்தைக் கட்டுதற்குச் சுளுவாக வழிசொல்வேன் கேளுமக்காள், அல்லவே யிருப்பகவிற் பழச்சார்விட்டு அதீதமென்ற சாரத்தைப் பொ

Digitized By Roja Muthiah Research Library

டியாய்ப்பண்ணி, மல்லவே சூதமொரு பலத்தைவிட்டு மறவாமற்றனலில்வைத்துப் பொடியைத்தூவு, கல்லவே கட்டியது மணிபோலாடுங் கரியில்வைத்து யுருக்கிடவே புசிதமாமே. (கசுஎ)

ஆமப்பா இச்சாரம் பொடியாய்ப்பண்ணி அப்பனே அண்டமென்ற கருவிற்போட்டு, ஓமப்பா ரவியில்வைக்கத் தயிலமாகு முற்பனமாய்ப் பணவிடைதான் தயிலங்கொள்ள, பொமப்பா சாவுபொய்யாங் கற்பகாலம் பொலிவாகவயிரம்போ லிருக்குந் தேகங், காமப்பால் வித்தைக்கு மெத்தநன்று கைவிட்ட சூக்கிரம்போ லாடும்பாரே. (கசுஅ)

துரிசி வைப்பு.

பார்க்கவே துரிசியொரு வைப்புச் சொல்வேன் பரிவான செம்பாலே பானைபண்ணி, காற்கவே கல்லுப்புப் பொடியாய்ப்பண்ணி காணிதுக்குப்பதிறுறு வெடியுப்புசீன, மேற்கவே நிறுத்தந்த பானையிலேபோட்டு இதமான பழச்சாறு மோரும்வாறு, ஆற்கே மேல்மூடி புதைத்துப்போடு ஆறுதிங்க ளானபின்பு எடுத்துப்பாரே, (கசுகூ)

பச்சை சூதக்கட்டு

எடுத்துப்பார் பச்சையாய்க் கட்டியாக இதமான வயிரம்போல் துரிசியாகும், அடுத்துப்பார் உப்பதுவுஞ் சத்தியாச்சு அப்பனே செம்பதுவு சிவமுமாச்சு, கடுத்துப்பார் தயிரதுவும் விஷ்ணுவாச்சு கலந்துநின்ற பழச்சாறு பிரம்மாவாச்சு, தொடுத்துப்பாரிதைக்குருவு செய்யில்வேலை துலையாத வாதந்தி லாதிபாமே. (உ00)

Digitized By Roja Muthiah Research Library

வாதத்தி லாதியென்ற சூதங்கட்டும் வகைசொல்வேன் பச்சையென்று மயங்கவேண்டாம், நீதத்தில் துரிசியது பலமுமொன்று நேர்பாகப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு, பூதத்தி லிரும்பான கரண்டிதன்னைப் புதக்கியேதண்ணிவிட்டுக்கழுவிப்போட்டுச், சூதத்தைநிறுத்ததிலே பலமும்போட்டுத் துப்பரவாய் தண்ணீரை முக்கால்வாரே. (உ0க)

தண்ணீர்தான் சொதிக்கையிலே துரிசித்தூளைச் சாதகமாய்த் தூவிவா தண்ணீர்மேலே, தண்ணீர்தான் சுண்டிடவே மறுதண்ணீர்விட்டுக் கசக்காமல் தூவிவர சூதத்துள்ளே, விண்ணீர்தான்மூன்றுதரம் விட்டுக்காயச்ச மெழுகுபோ லுருண்டிருக்குஞ் சூதந்தானு, சிண்ணீரை விட்டுநன்றாய்த் தேய்த்துத்தேய்த்துச் சிறப்பாகக் கழுவிடவே தீர்க்கமாமே. (உ0உ)

தீர்க்கமாயுருட்டியதை வைத்துக்கொண்டு செப்பரிய மத்தங்காய்க் குள்ளேவைத்து, மூர்க்கமாய் ரவிபுடந்தான் பத்துப்போடு முயற்சியாய்ப் பின்னெடுத்துக் கழுவிப்போட்டு, ஆற்கமாய் வெள்ளியது விராகனிடைபத்து அழகாகச் சிமிள்போலே திருவல்வைத்து, தூற்கவே சூதவுண்டை நடுவேவைத்துத் துப்பரவாய்மேல்மூடி திருவிப்போடே, (உ0௩)

திருவியே மறுசூற்றால் நல்லெண்ணெய் சிறப்பாகக் கலசத்தி லரைமட்டும்வார்த்து, மருவியே வெள்ளியென்ற கிண்ணிதன்னை வட்டமிட்டு ஊஞ்சல்போல் கலசத்தில்விட்டு, தருவியே பேலோடு கொண்டுமூடிச் சாங்கமாய் மாஷமண் மேலேபூசிக், கருவியே கலசத்தின் கழுத்துதன்னிற் கட்டுகியேபணம்போல தமருபோடே. (உ0௪)

தயரிட்டுக்கலையத்தைப் யாணிமேல்வைத்துத்தய ங்காதேவிரற்பருமன் திரியைப்போட்டுக், கமரிட்டு வி ளக்கேற்றி ஞனுசாமங் கலங்காதே யெரியிட்டுஆறவி ட்டு, அமரிட்டு வெள்ளியென்ற கிண்ணிதன்னை அ சையாமல் திருவலிட்டு வுண்டைவாங்கிப், பமரிட்டுத் தண்ணியிலே கழுவிப்போட்டுப் பத்துவிசை யவிபுட மாய்க் காயிற்போடே. (உ0ரு)

காயிலே போட்டபின்பு தண்ணீரிற்கழுவி கசக் காமல்வெள்ளியுட சிமிளில்வைத்துப், பாலிலே முன் போலெண்ணெயிலேபோட்டுப் பக்குவமாய் நால்சா ம மெரித்தபின்பு, போயிலேயிப்படிதான் நூறுபுட ம்போடு போன எண்ணெயிலே பத்துவிசைபோடு தேயிலேவெள்ளியைத்தா னடித்துப்போடுஞ் சிறப் பாகவெள்ளியைத்தா னீயம்விட்டுதே. (உ0சா)

சூத செந்தூரம்.

ஊதியே முன்னிறையிற் சிமிழ்ப்போற்பண்ணு உத்தமனேபுடம்பண்ணு எரிப்புப்பார்த்து, பாதியே யிப்படிதான் செய்துக்கொண்டு பரிவாகக்கரியில்வை த்து உருக்கவாடுஞ், சோதியேதங்கமிட் டுறக்கிக்கொ ண்டு குறிப்பானநாகமது கூடவிட்டு, ஆதியேசமனாக ப் பொடியாய்ப்பண்ணி அந்தகெந்திச்சூதமிடை சரி யாய்க்கூட்டே. (உ0எ)

கூட்டியேகல்வத்திற்பொடியாய்ப்பண்ணிக் கொ டியான மல்லிகையின் சாற்றாலாட்டி, நீட்டியேமூன் றுநாளரைத்தபின்பு நேராகப்பொடிபண்ணிக் குப்பி க்கேற்றி, மூட்டியே வாலுகையின் மேலேவைத்து மு

Digitized By Roja Muthiah Research Library

யற்சியாய்த் தீமூட்டுக் கமலம்போலே, ஆட்டியேபனி ரண்டு சாமமானு லருணநிறம் போலாகும் வேதைகே ளே. (உ0அ)

துரிசுக் களங்கு,

கேளப்பா னூற்றொன்று நவலோகத்தோடுங் கெ டியான மாற்றென்ன எட்டுமாகும்,வேளப்பாகுளிகை க்குச் சாரணையேசெய்தால் விரவியே கோடிலக்ஷந் காதமோடுங், தாளப்பா ஆச்சுதென்று தயங்கவேண் டாங் தயங்காதே மூலிகையி லாச்சுதென்று, பாரப்பா துரிசிவிட்ட சூதக்கட்டுப் படும்பேச்சு மூலிகையில் க ட்டாதென்னே. (உ0கூ)

என்னவே யுபரசங்கள் நூற்றிரண்டுபத்து இலை களிலே சுருக்கிட்டால் சத்துவாறு, பன்னவே பா ஷாண மறுபத்து நாலும் படுமுன்னே கட்டாகாச் சு ண்ணமாகா, மன்னவே யுப்புவகை யிருபத்தஞ்சு மல் லிகைப் பூப்போல மலர்ந்துசுண்ணம், சன்னவேசா ர காரங்களாலே சகலமுந்தான் கட்டினமாங்குருவு மாமே. (உக0)

ஆமப்பா மூலிகையிற் சிறிதுமுண்டு அந்தவுத்த மூலிகைதான் மனுஷற்கெய்தா, வாமப்பா மலைகளி லே யுண்டுவுண்டு மகத்தானகல் லதுவுஞ் சூதமுண் டு, தாமப்பா மனுஷரங்கே சஞ்சரிக்கப்போகா சஞ்ச ரிப்பார் நாதாக்கள் ரிஷிகள்சித்தர், போமப்பா மனு ஷருக்குக் காரசாரம் புகழாதி வாதத்தில் துரிசியா மே. (உகக)

துரிசிக் களங்கு.

ஆதிபாங் துரிசியொன்றிற் களங்குசொல்ல ய ரைகிறேன் பண்பாக வறிவுள்ளோர்க்கு, பாதிபாங் து

Digitized By Roja Muthiah Research Library

ரிசியொரு பலமேதூக்கிப் பண்பாகக் கொந்தியது பல
மேழுக்கால், வாதியாஞ் சூடனது பலமரைதான்போ
டு மாசற்ற சவ்வீரம் பலமுங்கால்தான், பேதியா
திதுமூன்று முமிநீர்விட்டுப் பெலக்கவரை நால்சாம
ம் பின்புகேளே. (உகஉ)

கேளுநீ மெழுகாகும் பதத்தில்வாங்கி கெடிபட
வே துரிசியின்மேலே யப்பி, வாளுநீ யுலர்ந்தபின்பு
அதின்மேற்போட வகையாகச் சுண்ணாம்பு கவசம்
போடு, தாளுநீ யுலர்ந்தபின்பு சீலைசெய்து தணலி
லே யூதிநன்றாய்க் கவசம்வாங்கி, நீளுமே நீறியதைக்
குகையில்வைத்து நேர்சார மிட்டுருக்க மணியுமாமே

மணியெடுத்து அடித்தாக்கால் ரவியுமாகு மாசற்
ற வெள்ளிதன்னில் நாலத்தொன்று, தணியாக உருக்
கிடவே மூன்றுமாற்று தப்பாது கைகண்ட தொழிலு
மாகும், அணிபாக இச்செம்பு களங்குசெய்ய யப்ப
னே செந்தூரங் குருத்தான்செய்ய, கனியாக நாலா
று காணுங்காணுங் கருத்திதுக்குள்ளேதென்றற் கெ
ந்தி தானே. (உகச)

துரிசி செந்தூரம்.

தாளுதுந் துரிசியென்ற செந்தூரத்தைச் சாற்று
கிறேனிதுலெதுவு முன்னேபாரு, தேனுகும் வெடியுப்
புச் செயநீர்தன்னில் சிறந்துநின்ற துருசிபொரு பலந்
தானெட்டுக், காணுகுஞ் செயநீரில் தோய்த்துத்தோ
ய்த்துக் கடுரவியிற்போட்டு வரத்தினந்தா னேழு, பா
ணுகும் வெடியுப்பு முப்பது பலந்தான் பண்பான சீன
மதுமுப்பத்தைஞ்சே. (உகரு)

அஞ்சவே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி யப்ப
னே கழுதையுட கத்தம்வார்த்து, துஞ்சவே யரைத்து
நன்றாய் வில்லைபண்ணித் துடியான ரவிதனிலேயுலரப்
போடு, மிஞ்சவே கலசத்திற் போட்டுநீயும் மேலாகச்
சக்கரமாம் பாலைவைத்து, கெஞ்சவேவுருந்துரைத்துச்
சீலைசெய்து கெடியாக வடுப்பேற்றித் தீயைமூட்
டே. (உகசு)

மூட்டவே மேலோடிப் புகைபோடொக்க மூக்
காலே சலம்விழுகும் வெள்ளைநீறு, யாட்டவே வெள்
ளையைத்தா னகலவைத்து யதின்பின்பு சிவந்தசலம் வ
ருகுமக்காள், பூட்டவே பீங்கானில் வாங்கிவாங்கிப்
பேரான யரக்காலே குப்பிபண்ணி, நீட்டவே யதில்வா
ரு கரையாதப்பா நேரான லோகமென்றாற் கரைந்து
போமே. (உகஎ)

போமென்ற ரவியில்வைத்து துரிசிநீர் வாங்கி
ப் பொடிப்பண்ணிக் கல்வத்திற் திராவகத்தைவார்த்
து, ஆமெனவே யறுசாமமரைத்தபின்பு யப்பனே பெ
ரும்பீங்கான் தன்னில் வைத்து, காமெனவே நீர்சுத்
தி ரவியிற்போடு கலங்காதே மூன்றுநாளானபின்பு,
தாமெனவே தணலுக்குள் வறுத்துப்போடு தயங்கா
தே பொடிபோலே மேருக்கேற்றே. (உகஅ)

திராவகம்.

ஏற்றியே தீமூட்ட பனிரெண்டுசாம மிதமாகக்
கடந்தபின்பு ஆறவிட்டு, மாற்றியே யுடைத்தெடுத்து
க்கல்வத்திட்டு வாகான திராவகத்தா லரைத்துமுன்
போல், தூற்றியே பெரும்பீங்கான் தன்னில்வைத்துத்
துடியான திராவகத்தை குத்துகுத்து, ஆற்றியே தண

Digitized By Roja Muthiah Research Library

லுக்குள் வறந்துப்போடு யதீதமாங் காசிமேருக்குள் போடே. (௨௧௯)

போட்டுமே வாலுகையின் மேலேவைத்துப் பொலிவாகத் தீபம்போல் தீயைப்போடு, ஆட்டுமே பனிரெண்டு சாமமானு லப்பனே யாறவிட்டு எடுத்துப் பாரு, காட்டுமே யைந்திரந்தா னிப்படிபேபண்ணு கசடற்று அருணனைப்போல் சிவந்துகாணுந், தீட்டுமே யம்மரத்தைக் கத்திகொண்டு செதுக்கிய வாறெக்குந் துரிசியாட்டே. (௨௨0)

சூதமணி

ஆட்டான செந்தூர நவலோகத்தி லணைத்திடவே பத்தரைதா னுயிரத்துங்கொன்று, மூட்டான சூதத்தைக் கரண்டியிலே விட்டு முதிர்ந்துநின்ற செந்தூர மாரையிலேக்கிட்டு, காட்டான சாறதனைப் பிழிந்தாயானுல்கனகம்போல் திரண்டுருண்டு மணியுமாகும் வாட்டான சூடன்தீக் குள்ளேவாட்டி மருவிநன்று யுருக்கிடவே சோதியாமே (௨௨௧)

சோதியாங் குளிகைதனை வாயில்வைக்கச் சுக்கில தம்பனைபாரும் வாசியாகும், வாதியாங் கைக்குளிது இருந்ததென்றல் வாதாடி சண்டையிட்டோர் வணக்கமாவார், சாதியாங் குலங்களென்று தர்க்கம்பேசி சண்டையிட்டு மயிர்பிடித்துச் சாகவேண்டாம், பேதியாங் காயத்தைச் சுத்திபண்ணு பேரான சித்தருட மரபிலில்லே. (௨௨௨)

சித்தரென்ற நாமமது எதினலாச்சு சிவவிந்தைக் கட்டிபதோர் திறமையாலே, பத்தரென்ற நாம

Digitized By Roja Muthiah Research Library

மது எதிஞலாச்சுப் பானமென்ருல் தூஷிக்காப் பருவத்தாலே, சித்தரென்ற நாமமது எதிஞலாச்சு நிலைத்தாண்டு தலங்கண்ட நிலைவிஞலே, முத்தரென்ற நாமமது ஏதுக்காச்சு முச்சலித்த விடங்கண்ட ஞானியோர்க்கே. (உஉங)

ஞானிஞ னென்றுசொல்லிப் பேச்சால்மாண்பர் நலமான யவ்வேடம் பூண்டுகொண்டு, யோனிதனைக் காசைகொண்டு சாத்திரங்கள்சொல்லி முண்மையென்ற மந்திரங்க ளுபதேசித்துப், பாணியென்ற பணம் பறித்துப் பொய்கள்சொல்லிப் பரத்துக்கே வழியென்ற நரகத்திற்புக்கி, சூனியென்ற நோய்வந்தா லமைச்சபடியென்று சுழன்றலைவார் ஞானியல்ல வேஷத்தோரே. (உஉச)

ரச செந்தூரம்.

வேடமாந் துரிசியென்ற செந்தூரம்பலந்தான் விளங்கியதோர் சுத்தித்த சூதமொன்று, காடமாந் தங்கமென்ற ரேக்குத்தானுங் கடுகவே யரைப்பலந்தான் கூட்டிவிட்டு, பாடமாம் பொடுதலையின் சாற்றிலாட்டிப் பக்குவமாய்ப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றி, வாடமாம் வாலுகையின் மேலேவைத்து வளமாகப் பனிரண்டு சாமந்தீபே. (உஉரு)

தீயெரித்து ஆறவிட்டு எடுத்துப்பாரு செகப்பென்ருல் வெகுசெகப்பு மருணன்போலா, மாயெரித்து நவமேலாக மாயிரத்துக்கொன்று மணைத்திடவே பதிஞறு மாகுமப்பா, பாயெரித்துப் பணவிடைதான் தேனிலுண்ணு பளபளப்பு முடப்பெல்லா மண்டலத்திற்சித்தி, வேயெரித்து வெகுளமையுர்ரு லென்ன

Digitized By Roja Muthiah Research Library

ஞானம் விளங்கியதோர் சித்தியெல்லா மண்ணைப்
போமே. (உஉசு)

மண்ணாசை கொண்டல்லோ சிறிதுபேர்கள் மா
யமாம் வாசினையா லிறந்துபோனார், பெண்ணாசை
கொண்டல்லோ சிறிதுபேர்கள் பொன்தோற்றுப்
பொய்யராய் மாண்டுபோனார், உன்னாசைக் கொண்ட
ல்லோ சிறிதுபேர்கள் உலுத்தராய்ப் பிட்சையெடுத்
துண்டிறந்தார், கண்ணாசைப் பசுவுக்கு இருக்குமாப்
போல் கலக்கமற்ற ஞானிக்கு வேறென்சொல்லே. ()

இந்துப்பு வைப்பு.

வேடமாமிந்துப்பு வைப்புச்சொல்வேன் விளங்
கியதோர் நாலடுப்புவரிசைக்கட்டிப், பாடமாமடிக்க
னத்த சட்டிவைத்துப் பருவமாய்க் கடல்நீரி லுப்புக்
காய்ச்சு, கோடமாந் தினதினமுங் காய்ச்சிக்காய்ச்சி
க் கொட்டியே யடிப்பார முள்ளபானை, காடமாய் நி
றைத்திட்டு அடுப்பிலேற்றிக் காடாக்கினிபாகவே தீ
யைமூட்டே. (உஉஅ)

மூட்டவே வெந்துருகி சலமாய்நிற்கு முனையாக
மூப்பதுக்கு மொன்றுசினம், நீட்டவேவெடியுப்பு மு
ப்பதுக்குமொன்று நேராகப் பொடிப்பண்ணி யதிலே
போட்டு, ஆட்டவே வெந்துருகிச் சலமாய்நிற்கு
மாறவிட்டுப்பானையைத்தா னுடைத்துவாங்கி, காட்ட
வே வெளுப்பாகக் கட்டியாகுங் கல்லுப்பிற் செய்தாக்
காற் சிவந்துபோமே. (உஉகூ)

சிவக்கின்றஇந்துப்பு வாதத்துக்காகா செய்கின்ற
பேர்களுக்குக் கல்லுப்புச்சுண்ணம், பவக்கின்ற லோக
த்தோர்க் கல்லுப்புச்செய்வார பறங்கியென்றால்கடல்

Digitized By Roja Muthiah Research Library

நீரி லுப்புக்காய்ச்சி, துவக்கின்ற வண்ணார்தனடுப்பு ப்போலத் தூரமாய்க்கட்டிவைத்துச் செய்வாரய்யா. அவக்கின்ற கட்டியோ வெளுப்புமெத்த ஆகையாற் சுண்ணாம்புக் கிதுதானன்றே. (௨௬0)

கேந்தியுப்பு.

கன்றெனவே கெந்தியுப்பின் வைப்பைக்கேளு நலமாகக் கடல்நீரி லுப்புக்காய்ச்சி, கன்றெனவே யடிகனத்த பானையிலேபோட்டுக் காய்ச்சினதோருப்புக்குப் பதினாறிலொன்று, துன்றெனவே சுரைக்கெந்திப் பொடித்துப்போடு தூரமாய் மூப்பதுக்கு மொன்று நீலம், பன்றெனவே வெடியுப்புப் படியேயாகும் பாங்காகப் பொடித்தெல்லாங் கூடப்போடே. (௨௬௧)

கூடஇட்டே யடுப்பேற்றி யெரினால்சாமங் கொடியகாடாக்கினியாய்த் தீயைப்போடு, ஆடவிட்டு உப்பு றுகி நின்றபோது அதிற்போடு மருந்தெல்லாம்பொடியாய்ப்பண்ணி, வாடவிட்டு நாற்சாம மெரித்தபின்பு மயங்காதே சீதளமா யாறப்போட்டு, நாடஇட்டுப் பானையைத்தா னுடைத்துவாங்க நலமான வயிரம்போ லுப்புமாமே. (௨௬௨)

உப்பான கெந்தியது திராவகத்துக்காதி யுத்தமனே சாரணைக்கு யுதவியாகும், தப்பான சொல்லில்லைக் கருமறைப்போயில்லைச் சத்தியமாய்நான்பார்த்தபடிதான்சொன்னேன், கப்பான அஞ்சுகொப்பில் மனந்தான்சென்று கலக்கத்தில் விழுகாதே கருத்தாணிப் பாரு, அப்பான அப்புப்போல்நேர்மைபாரு அழும்பருடன் பேசாம லிருக்கநன்றே. (௨௬௩)

Digitized By Roja Muthiah Research Library

சூடோரி வைப்பு.

நன்றெனவே சூடோரியொன்று சொல்லக்கேளு நலமான வெடியுப்பு நாலாங்காய்ச்சல், கன்றெனவே பலம்நாலு கல்வத்திட்டுக் காணிதுக்குச் சமனாகப் பூநீர்போட்டு, வின்றெனவே வெள்ளையென்ற பாஷாணந் தான் வெங்காரம் பலம்நாலு பொரித்துப்போடு, நன்றெனவே தாளகமும் நாலுபலம்போடு சாதகமாய்சூதமது பலமும்நாலே. (உ௱௪)

நாலோடு யரைப்பலந்தான் சாரம்போடு நலமான கல்லுப்பு வறுத்துப்போடு, சாலோடு நாலுபலங் கூடப்போட்டுத் தனையெல்லா மெருக்கினுடப் பாலினாலே, காலோடு யறுசாம மரைத்துநன்றாய்க் கனமான ரவிதனிலே பொடியாய்ப்பண்ணி, மேலோடு காசியென்ற மேருக்கேற்றி விரவியே யரைவாசி மட்டும் போடே, (உ௱௫)

போட்டுமே வாலுகையின் மேலேவைத்துப் பொலிவாகத் தீமூட்டு கமலம்போல, பாட்டுமே பனிரெண்டு சாமந்தானும் பதறுமல் போட்டுவா கமலயத்தீயா, யாட்டுமே யாறவிட்டு எடுத்துப்பாரு அரகரா வயிரம்போற் பதங்கித்துநிற்கும், காட்டுமே சத்துகளில் கரைந்துநீராங் கண்விட்டு ஈயம்போ லிறங்குந்தானே. (உ௱௬)

சூடன் வைப்பு.

தானென்ற சூடனது வைப்பைக்கேளு தனித்துநின்ற வாழையுட கிழங்குதண்ணீர், தேனென்ற படிபத்து யளந்துகொண்டு சிறப்பான செம்பினது பாண்டத்திலிட்டு, வேனென்ற வெடியுப்பு நாலுபத்து பல

ந்தான் வெருளாதே பொடிபண்ணி கூடப்போட்டு,மா னென்ற அடுப்பேற்றி யெரிநேர்பாக வற்றியெல்லாங் குழம்புபோல் வருதல்பாரே. (உ௱௭)

வருதல்கண்டு கருவாயின் படைதன்னை வகையா கப் பொடிப்பண்ணி தைலம்வாங்கி, திரிதல்கண்டு ப டிதானுங் கூடவிட்டுச் சிறப்பாக புட்டான பதத்திற் காய்ச்சு, கருதல்கண்டு இறக்கியே ஆறவிட்டுக் கசகா மலுளிகொண்டு வெட்டிவாங்கி, யருதல்கண்டு பரணி தனி லடைச்சுப்போடு ஆச்சரியஞ் சூடனென்ற பே ருமாச்சே. (உ௱௮)

ஆச்சிந்த சூடனைத்தான் பொடியாய்ப்பண்ணி ய கண்டசெப்புப் பானைதனிற் கால்வாசிபோடு,பாச்சிந்த செம்பிடத்தில் நீரைத்தானே பக்குவமாய் மேல்வைத் துச் சீலைசுத்தி, காச்சிந்த அடுப்பெரித்து கமலம்போ ல க்கபொறுக்கத் தண்ணீரை பதத்தைப்பார்த்துக், கீ ச்சிந்த ஆறவிட்டு யெடுத்துப்பார்க்கக் கிண்ணியென் ற கற்பூர மாகும்பாரே. (உ௱௯)

பாரப்பா கிண்ணியென்ற கற்பூரத்திற் பக்குவ மாய் கட்டினதோர் சரக்கையெல்லாம், வாரப்பா ப றிசுத்தி வாட்டென்றதெல்லா மைந்தனே யிதனுடை ய தீயில்வாட்டு, நேரப்பா புகையடங்கி பறியுள் வாங்கி நேர்பாக செந்தூர மாகும்பாரு, காரப்பா வி ளக்குத்தான் கற்பூரவிளக்கு கறுக்காமல் சிவக்குமிந்த த் தீபந்தானே, (உ௱௰)

அயமுருக்கு,

தானென்ற அயமுருக்க வித்தைகேளு சாதக மாபெலியாலம்பால் ரெண்டுசேரில், காளென்ற கெந்

தகத்தைப் பொடியாய்ப்பண்ணி கனமாக நாலுபலங் கூடப்போட்டு, வேனென்ற வெங்காரம் பலமுரெண்டு மெலிவான குடோரிகாற் பலமும்போடு, ஊனென்றசெவ்வல்லிக் கிழங்குதானு முாலிலிட்டு யிடித்துச் சார் சேரைவாறே. (உசக)

வாற்றுடனே எள்ளெண்ணெய் ரெண்டுசேரு வாகாகஇவைபெல்லா மபச்சட்டியிட்டு, போற்றுடனே யடுப்பேற்றி யெரித்துமெள்ளப் பொங்காமல்தயிலமென்ற பதத்தில்வாங்கு,சேர்த்துடனே அயப்பொடிதான் பலமும்நாலு திறமான காந்தத்தா லெடுத்துக்கொண்டு, வத்துடனே பிங்காணிற் பொடியைப்போட்டு இதமான தயிலத்தில் பிசறிவைபே. (உசஉ)

வைத்துமே முன்றுநா ளானபின்பு வச்சிரமாங் குகைதன்னி லடைத்துமூடி, பொய்த்துமே சரவுலேயினுறுக்கியாட்டுப் போரானஅயந்தானுங் கரடுமாகும், நைத்துமேப் பொடியாக்கித் தயிலத்திற்பிசறி நலமாகமுன்போலே யுறுக்கிததிரு, கைத்துமே யைங்துதிர முருக்கித்தீர்ந்தால் கனமான அயந்தானும் நாகமாமே, (உசங)

அய நாகம்.

நாகமாம் அயந்தானுஞ் சிவந்திருக்கும் நண்பாக யிடைக்கிடைத்தங் கத்திலீய்ந்து, பாகமாயுருக்கையிலே நாகமீயப் பதையாமல் நாகமங்கே கட்டிப்போகுஞ், சாமமாங் கல்வத்தி லிதனையிட்டுத் தனைப்பொடித்து நாகயிடை சூதங்கட்டி, ஆகமாஞ் சூதத்தில் ரெட்டிக்கெந்தி யரைத்துமே மல்லிகையின் சாற்றாலாட்டே. (உசச)

Digitized By Roja Muthiah Research Library

ஆட்டுவது நால்சாம மானபின்பு அப்பனேரவிபி ல்வைத்துப் பொடியாய்ப்பண்ணி, பூட்டுவது காசியெ ன்ற மேருக்கேற்றிப் பேரானவாலுகையின் மேலே வைத்து, காட்டுவாய்ப் பனிரண்டு சாமந்தீயைக் கம லம்போ லெரியவிட்டு களரவாங்கி, ஓட்டுவது நவ லோகம் நூற்றுக்கொன்று உட்புகுந்து பத்தரைதான் தப்பாவாறே, (உசரு)

வாறுகேள் செந்தூரங் குன்றியுண்ணு மண்டல த்தில் நரைதிரைக ளெல்லாமாறும், கூறுகேள் தேக மது கருங்கல்லாகுங் குத்திஞல் மலையெல்லாம் பொ டியாய்ப்போகும், தேறுகேள் காயமது யுகாந்தகால ஞ் சென்றாலும் வயதுபதி ஞறுபோலாம், வேறுகே ள் வாசியெல்லா முள்ளேநிற்கும் வெளியோட மன க்கலக்கம் பண்ணும்பாரே. (உசகு)

காந்தசத்து.

பண்ணவே காந்தத்தின் சத்துகேளு பருக்கை யாய்ப் பொடித்தஅயச் சட்டியிட்டு, குண்ணமவே கொள்ளிலையின் சாறுவாங்கி குழறுதே நால்சாமஞ் சுறுக்குப்போட்டு, விண்ணவே வெள்ளாட்டு உதிரம் வார்த்து விளங்கவே யதின்மேலில் வைத்துக்கட்டி, கண்ணவே குழிவெட்டி யுப்புக்குள்வைத்துக் கலங் காமலிருபதுநாள் மூடிப்போடே, (உசஎ)

போட்டபின்பு யெடுத்துயதை கல்வத்தாட்டி பு கழான கொள்ளிலையின் சாற்றிஞலே, நீட்டபின்பு கலசத்திற் சாறுவிட்டு நினைவாக யதிற்குள்ளே காந் தம்வைத்து, வாட்டபின்பு மேல்மூடி சீலைசெய்து வ லியபுடம் போட்டெடுத்து வைத்துக்கொண்டு, நாட்

Digitized By Roja Muthiah Research Library

டபின்பு நல்லெண்ணே படிதாளென்று நலமான குன்றிமணி படியரைதான்போடே. (உசஅ)

போட்டதனைக் கொள்சாற்றி லூறவைத்துப் புகழாக யூறியபின் கல்வத்தாட்டி, நீட்டதனை மெழுகதுபோ லரைத்துவாங்கி நினைவாக நல்லெண்ணெய் தன்னிற்போட்டு, ஆட்டதனை யெலியாலம் பால்சேரைவிட்டு மழகான கொள்ளிலைச்சாற் சேரைவிட்டு, கேட்டபின்பு கெந்தகந்தா நாலுபலம்போட்டுக் கெடியான வெண்காரம் ரெண்டுபலம்போடே. (உசகூ)

போட்டபபா குடோரியது பலமுங்கால்தான் பொடித்தெல்லாங் கொள்ளிலையின் சாற்றாலாட்டி, நாட்டப்பா நல்லெண்ணெய் தன்னிற்போட்டு நலமாக அடுப்பேற்றி யெறிநேர்பாக, கூட்டப்பா குழம்பாக்கி யிறக்கிவைத்துக் கொடியதொரு காந்தத்திற் பிசறிக்கொண்டு, மூட்டப்பா மூன்றுநா ளானபின்பு மூசைக்கே யெடுத்திட்டு யுருக்கிடாயே. (உருO)

உருக்கவே வெந்துருகி கறமோகு முத்தமனே யுடைத்தெடுத்துப் பொடியாய்ப்பண்ணி, தருக்கவே முன்குழம்பில் பிசறிவைத்துச் சாதகமாய் முன்போல வுருக்கித்தீரு, பருக்கவே யிப்படிதா னெழுதரமூது பண்பாக காந்தமது சத்தேயாகு, மிருக்கவே கற்பாந்த காலமென்று லென்மகனே மெழுகுக்கட்டிக் கிண்ணியாரே. (உருக)

வாற்றிந்தக் கிண்ணியிலே பானம்பண்ணுவகை வகையாய்க் கற்பமெல்லா மிதிலேயுண்ணு, போற்றுமிந்தக் கிண்ணியிலே சூதம்வார்த்துப் புகழான கருவூமத்தஞ் சாறுவிட்டு, ஏற்றுமிந்த வாலுகையின் மே

லேவைத்து இதமாகத் தீயெரிக்க யுண்டையாகும், பாற்றுயிந்த வழித்தெடுத்து களஞ்சுநிறையாக பக்குவமா யுண்டைபண்ணித் தமருபோடே. (உருஉ)

தமரிட்டு யுண்டைபண்ணித் தண்ணியிலேபோட்டுச்சாதகமாய் மூன்றுதினங் கழித்தபின்பு, அமரிட்டுச்செம்பட்டிற் கோர்த்துக்கொண்டு ஆதியாம் பராபரையைப் பூசைப்பண்ணி, கமரிட்டு வஸ்துசுத்தி யர்ச்சனேபெசெய்து காரணமாஞ் சாபவிமோசனமேபண்ணிக், குமரிட்டு யாதார நிராதாரம்பார்த்துக் கொள்கியதோர் சைதன்னியத்தில் மனதையுன்னே. (உருங)

உன்னியே பிறச்சத்தங் கேளாப்பக்க மூவந்திருந்து நிஷ்டையிலே செபமேசெய்து, கன்னியே யஞ்செழுத்து மூன்றெழுத்துமோதி காரணமாங் குருச்சொல்லைக் கருதிக்கேட்டு, பண்ணியே மதியில்நின்ற அமுர்தத்தையுண்ணப் பருதிகண்ட பனிப்போலப்பாவம்நீங்கி, மன்னியே சிலம்பொலியி னுதங்கேட்டு மகிட்சியாய்க் கற்பத்தை யுண்டுதேறே. (உருச)

காந்தசத்துச் செந்தூரம்.

தேறவே காந்தசத்து பலத்தைவாங்கிச்சிறப்பாக தங்கத்தை யிடைக்கிடைக்கிக்கூட்டி, மாறவே ரெண்டுமொன்று யுருகும்போது மைந்தனே நாகமொரு பலத்தைப்போடு, ஆறவே கல்வத்தி லிதனைக்கொட்டியதட்டியே பொடிபண்ணிச் சூதஞ்சேர்த்து, காறவே ரெண்டுபலங் கெந்தியிட்டுக் காரியமாய்ப் பொற்றலையின் சாற்றலாட்டி. (உருரு)

ஆட்டியே யறுசாமம் ரவியில்வைத்து அப்பனே பொடிப்பண்ணிக் குப்பிக்கேற்றி, நீட்டியே வாலுகை

Digitized By Roja Muthiah Research Library

யின் மேலேவைத்து நினைவாகத் தீயிட்டு பனிரண்டுசாமம், பூட்டியே செந்தூரப் பதத்தைப்பாருப் புகழாகச் சலாகைநுனி சிகப்புக்காணும், வாட்டியே யாறவிட்டு இறக்கிக்கொட்டி மைந்தனே தங்கமென்ற சிமிழில் வையே. (௨௫௬)

பத்தியம்.

வைக்கவே நவலோகம் நூற்றுக்கொன்று மாட்டிடவே பனிரண்டு மாற்றுமாகும், மெய்க்கவே பணவிடைதான் தேனிலுண்ணு மேனியெல்லாந் தங்கமயமாகும்பாரு, நைக்கவே நரைதிரைக ளெல்லாமாறும் நமனென்ற சொல்லுமில்லை கற்பகோடி, கைக்கவே புளியுப்பு ரெண்டும்விட்டுக் கன்னியின்மே லாசைவிட்டு உண்ணுவுண்ணே. (௨௫௭)

உண்ணவே கற்பத்துக் குருதிகேளு யுப்பாகாப் புளியாகாப் பெண்ணுமாகா, கன்னமேவ துவர்ப்பாகா மோருமாகா காய்ச்சிந்த வெள்ளுநல்லெண்ணை சுண்ணும்பாகா, விண்ணாமேவ நித்திரையுஞ் சோம்பலாகா வேறான மாங்கிஷங்கள் மச்சமாகாப், பண்ணவே கடுகுள்ளி காயமாகாப் பலபலவாஞ் சிந்தையெல்லா மறுத்துத்தள்ளே. (௨௫௮)

தள்ளியே உண்ணுகிறபத்தியத்தைக்கேளு சார்வான நெய்யாகும் பாலுமாகு, மள்ளியே சிறுபயறு முருங்கையாகு மப்பனே வெள்ளாடு ஞானிபாகுந், துள்ளியே தூதுவளை யிலைக்காயாகுஞ் சுண்டெலியாங் கவுதாரி காடையாகும், பள்ளியே பழமாகுங் கஞ்சாவாகும் பழுவெல்லந் தேனாகும்பானமாமே. (௨௫௯)

Digitized By Roja Muthiah Research Library

ஆமப்பா சிறுக்கீரை யறைக்கீரையாகு மதீதமாம் புளியாரை நல்லாரையாகும், போமப்பா பொன்னிந ல்லாங்கண்ணியாகும் புளிப்பான நெல்லிக்காயவரைக் காயாகுந், தேமப்பாவழுதலங்காய்ப் பீர்க்கங்காயா குஞ் சிறப்பான முசலாகு மூர்க்குருவியாகும், வாம ப்பா மரையாகும் மானுமாகும் வகையாக இப்படிதா ன் பத்தியமா யுண்ணே. (உகூ0)

உண்ணுறது ஒருசேரை அரிசியப்பா உத்தமனே யொருபொழுது வெந்நீர் கொள்ளு, பண்ணுற தோர் மருந்துகளிற் காந்திகொண்டால் பசுவின்பால் இராப்பொழுது ஒருசேர்கொள்ளு, விண்ணுறது உ ள்மூல மேல்மூலம்பாரு வேதாந்தப் பாலையைத்தா ணி த்தம்பூசி, அண்ணுறது குருபதத்தை யடுத்துநித்த மடுக்கடுக்கா யுண்ணுகிற கற்பங்கேளே, (உகூக)

கற்பங்கொள்ள.

உண்ணவே வயதங்கே யிருபதாகி லுற்றமனே யிருபதுநாள் கடுக்காய்கொள்ளு, கண்ணவே வய தங்கே முப்பதாகிற் கடிசாகமுப்பதுநாள் கொள்ளு கொள்ளு, பண்ணவே வயதங்கே நாற்பதாகில் பரிவா க நாற்பதுநாள் கடுக்காய்க் கொள்ளு, நண்ணவே வ யதங்கே யன்பதாகில் நலமான பதினைந்து நாளே கொள்ளே. (உகூஉ)

கொள்ளவே வயதங்கே யறுபதாகில் குறையா தே கடுக்காயுந் தசநாட்கொள்ளு, அள்ளவே யறு பதுமேல் வயதேயாகி லாச்சரியங் காயசித்தியாகாவா கா, விள்ளவே கடுக்காயைப் பொடியாய்ப்பண்ணி மெல்லியதாய் சீலையிலே யரித்துக்கொண்டு, துள்ள

Digitized By Roja Muthiah Research Library

வே அமுரிதனை முறித்துக்கொண்டுச் சுகயாக வெரு
கடித்தூள் குழப்பிக்கொள்ளே. (௨௱௩)

கொள்ளுதற்கு அமுரிதனை முறிக்கக்கேளு குரு
ரமாங் காந்தமென்ற பாத்திரத்தில், விள்ளுதற்கு மு
ன்னீராம் அமுறிதள்ளி விளங்கவே கொள்ளமட்டும்
பின்னீர்வாங்கி, துள்ளுதற்குத் தேற்றினுட வித்துத
ன்னைத் துடியாக இதில்விட்டுக் கலக்கிவைத்து, அள்
ளுதற்குத் தெளிவிறுத்துத் தூளைப்போட்டு அங்கெ
ன்று வாசியோ டிழுத்துவாங்கே, (௨௱௪)

அமுரி மூதண்ட கிஷாயம்.

வாங்கியே தினந்தோறும் விடியற்கால மாலையி
லே கிஷாயமொன்று வைக்கக்கேளு, பாங்கியே மிள
கதுதா னிருபத்தைந்து பரிவாகு மறுகுவேர் பிடிதா
னென்று, தேங்கியே யிடித்துநன்றாய்ச் சட்டியிலே
போட்டுத் திறமாகப் படியொன்று தண்ணீர்விட்டு,
ஆங்கியே யாழாக்காய்க் காய்ச்சிக்கொண்டு ஆவெண்
ணை பாக்களவு போட்டருந்தே. (௨௱௫)

அருந்தியே காலமே கடுக்காய்கொள்ளு அப்ப
னே மாலையிலே கிஷாயங்கொள்ளு, பொருந்தியே வு
டலுக்குத் தாகமில்லைப் புளியுப்பு எண்ணெயெல்லாங்
கழன்றுபோகும், வருந்தியே முன்னிருந்த நோய்க
ளெல்லா மறுதேசம் விட்டுப்போ மயக்கமில்லை, திரு
ந்தியே ஆறுதலக் கிரந்திபோகுஞ் சேர்ந்தோடும் வா
சியெல்லா மிறுகும்பாரே. (௨௱௬)

கற்பங்கோள்ள மாதம்.

இறுகுமே செங்கடுக்காய் மெத்தநன்று இதமா
கக் கிடையாட்டால்பொற் கடுக்காய்நன்று, அறுகு

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.

Digitized By Roja Muthiah Research Library

மே ஆனிஆவணிக்கு மப்பா அழகான வெல்லத்தி
னோடேகொள்ளு, தருகுமே சித்திரைவைகா சிக்கு
மப்பா சாதகமாய்ச் சுக்கின்கிஷா யத்திற்கொள்ளு, ம
றுருபுரட் டாசிஆ டிக்குமப்பா மாசற்ற குறிஞ்சிதே
ன் தன்னிற்கொள்ளு, குறுகுமே அற்பசிகார்த் திகை
க்குமப்பா குமரியாஞ் சோறுதனில் வைத்துக்கொ
ள்ளே, (உ௬எ)

வைத்துமே மார்கழிதை மாசிக்ருந்தான் வாயப்
பாக்கற்கண்டி னோடேயுண்ணு, பைத்துமே பங்குனி
க்கு நெய்யிற்கொள்ளு பனிரண்டுமாதத்திற்குப் பரு
வஞ்சொன்னே, னைத்துமே யிப்படிதான் பருவமாக
காணுண்ட படிசொன்னே னியுமுண்ணு, பொய்த்து
மே போகாமற் பூசைபண்ணு போக்கோடே வாசியை
த்தா னிருத்துவாங்கே. (உ௬அ)

மலங்கழட்ட கிஷாயம்.

வாங்கியேசதிர்கள்ளி காயோபத்து மைந்தனே
குமரிச்சோர் காசுரெண்டு, தேங்கியே அமுரியுடன்
கலந்துகொள்ள சிதைந்துநின்ற ஆமமெல்லாந் தள்ளி
ப்போடும், பாங்கியே முன்னுண்ட புளியுமுப்பும் பல
பலவாய் மலத்தோடே தள்ளிப்போடு, மேங்கியே ச
டலத்தில் விஷநீர்வற்றி எலும்பில்நின்ற சுண்ணும்பு
வேகம்போமே. (உ௬௯)

வேகம்போ மிருபதுனாள் காலையிலேகொள்ளு
மெலிவானமாலையிலே கிஷாயங்கொள்ளு, தாகம்போ
ந்தாளீச பத்திரியுஞ்சுக்குத் தனித்ததொருசீரகமுமா
ஞ்சில் ஏலம், ஆகும்போம் விராகனெடை ஒவ்வொ
ன்றுக்கு அதட்டிபே சட்டியிலேபொடித்துக்காய்ச்சி,

நாகம்போம் மாழூக்கு மாலையிலேகொள்ளு நம
னுக்கு நமனுவாய் நன்றாய்ப்பாரே. (உஎ0)

மிளகு கற்பச் சூரணம்.

பாரப்பா இதுகடந்த பின்புநீதான் பரிவாக ஐந்
தாய் மிளகையேற்றி, சேரப்பா அமுரியிலே கா
லமேகொள்ளு சிறப்பானநாற்பதுனாள் கொள்ளுகொ
ள்ளு, காரப்பா இருபதுனா ளேற்றியுண்ணு கைமு
றையாய் நூறுமட்டு மானபின்பு, தூரப்பா ஐந்தைந்
தாய்க் குறைத்தேயுண்ணு சொல்முறையாய் மாலையி
லே பொடிநீயுண்ணே. (உஎக)

பொடியாவ தேதென்றாற் சொல்லக்கேளு பே
ரான பொற்கொன்றைப் பூவினோடு, கொடியான மல்
லிகையின் பூவினோடு கொக்கிறகு மந்தாரை வெள்ளை
ப்பூவு, மணியாக நிழலுலர்த்தா யுலர்த்திக்கொண்
டு அப்பனே பொடித்துநன்றாய்ச் சூரணமேசெய்து,
நெடியாகத் தேனிலே குழைத்தேயுண்ணு நேர்பாக
மாலையிலே மண்டலந்தா னுண்ணே. (உஎஉ)

மண்டலந்தா னுண்டபின்பு சொல்லக்கேளு வா
கான தூதுவளை யிலையினோடு, விண்டலந்தான் தற்
கோலஞ் சாதிக்காயு மேலான வாலுளுவை வித்தினோ
டு, குண்டலந்தான் கொடிவேலி பொற்கொன்றைப்
பூவுங் கூறான நிலப்பனையின் கிழங்குகூட்டி, முண்
டலந்தான் பொடிசெய்து வைத்துக்கொண்டு முக்கழ
ஞ்சு முட்பன்றி நெய்யிற்கொள்ளே. (உஎங)

கொள்ளவே வாதத்தை யகற்றிப்போடுங் கொடி
தான பித்தமெல்லா முறிந்துபோகுங், கொள்ளவே சிர

Digitized By Roja Muthiah Research Library

சில்நிற்குங் கபத்தைச்சாடுஞ் சங்கிலிபோல் கோழை
யறுந் தமரம்நிற்கும், விள்ளவேமதுதனிலே அமிர்த
ஞ்சேர்க்கு மெய்நிறைந்த ஞுடியெல்லா மிறுகிக்கொ
ள்ளுந், துள்ளவே யிந்திரியச் சோர்வுபோகுந் துடி
யாதே காமனேயக் கொல்லுந்தானே. (உஎச)

கொல்லுகிற காமத்தை மதியிலேற்றுக் குறிப்பா
றுதலங்களெல்லாங் கூர்ந்துபாரு, வெல்லுகிற மன
க்குரங்கு மைந்துந்தாண்ட விடுகாதே விவேகமென்ற
வாளால்வீசு, மல்லுகிற யோகத்தைச் சதாநித்தம்பா
ரு மதியில்நிற்கு மமுர்தத்தைக் கசிந்தேயுண்ணு,
அல்லுகிற ஆத்தாளை நித்தம்பூசி அறிவில்நின்று கு
ருபதத்தை யடுத்துக்கேளே. (உஎரு)

கரிசாலை கற்பம் வேம்பின் சூரணம்.

கேளப்பா கரிசாலை குப்பைமேனி கெடியான க
ரந்தையொடு வல்லாரைநீலி, வாளப்பா பொற்றலையு
ஞ் செருப்படியினோடு வகையாக நிழலுணர்த்தா யுல
ர்த்திக்கொண்டு, தாளப்பா இடித்துநன்றாய் சூரண
மேசெய்து சாதகமா வொருகடிதான் தேனிலுண்ணு,
தேளப்பா கொட்டியதோர் வேகம்போலச் சனத்தி
லேகாய சித்தாமந்தி சந்தியுண்ணே. (உஎசா)

உண்ணப்பா மண்டலந்தா னேய்கள்மூன்று மு
த்தமனே யுதிரத்திற் கிருமிபோகும், கண்ணப்பா பவ
ழம்போல் சிவந்திருக்குங் காயமெல்லாஞ் செமபழத்
தின் வாசம்வீசும், விண்ணப்பா யந்தரத்தில் மீன்க
ளெல்லாம் வெருளாமற் பகற்காணத் தோற்றுவிக்கு,
மண்ணப்பா தன்னிதிகள் தோற்றுந் தோற்றும் வாய்
திறந்த தலமாறும் வெளியாய்ப்போமே, (உஎஎ)

Digitized By Roja Muthiah Research Library

சருக்கரை வேம்பு.

போமப்பா இதுகடந்த பின்புநீதான் புகழ்பெற வே நூறுண்டின் வேம்பைப்பார்த்து, ஆமப்பா பட்டையைத்தான் வெட்டிவந்து அப்பனே நிழலுணர்த்தா யுலர்த்திப்பின்பு, காமப்பா யிடித்துநன்றாய் சூரணமேசெய்து கரிசாலை மல்லிகையின் சாறுவார்த்து, தேமப்பா ஏழுதரம் பாவனையேசெய்து சிறப்பாக வெருகடிதான் கொண்டிடாயே. (உஎஅ)

கொண்டிடவே அனுபான வகையைக்கேளுக் குறிஞ்சித்தே னதிற்குழைத்து நாற்பதுநாட்கொள்ளு, விண்டிடவே யந்திசந்தி கொள்ளுகொள்ளு மெய்யெல்லாங் கருங்காலி வயிரமாகுந், துண்டிடவே நரைதிரைகளெல்லாம்போகுஞ் சுக்கிலந்தான் மேலிறுகிக் கீழோடாது, கண்டிடவே யாறுதலம் வெளியாய்க்காணுங் காலனுமேஅஞ்சிடுவன் காணுகாணே. (உஎகூ)

காணவே மலைதோறுஞ்சற்கரைவேம்புண்டு காய்தின்றால் கற்கண்டு போலேதோணும், பூணவே யிலைதின்றால் மண்டலத்திற்சித்தி புகழான காய்தின்றால் பட்சத்திற்சித்தி, தோணவே பட்டைதின்றால் வாதத்திற்சித்தி துடியான பழந்தின்றால் மாசத்திற்சித்தி, ஆணவே வேறுண்டா லொருநாளிற்சித்தி யாச்சரியமிதுதேடி யறிந்துகொள்ளே, (உஅ0)

சிகப்பு கற்றாழை.

கொள்ளவேசிவப்பான கற்றாழைதானுங் கொணடுவா மண்டலந்தா னந்திசந்தி, விள்ளவே தேகமது கஸ்தூரிவீசும் வேர்வைதான் தேகத்திற் கசியாதப்பா, துள்ளவே நரைதிரைகளெல்லாமாறுஞ் சோம

பென்ற நித்திரையுங் கொட்டாவியில்லை, கள்ளவே காமமது வுடம்பிலூறுங் கண்களுமோ செவ்வலரிப் பூப்போலாமே, (உ௮௧)

சூதமணி.

ஆமிந்தச் சோறெடுத்துச் சூதத்துக்கு அனலி லே வைத்துமெள்ளச் சுருக்குப்போட, வாமிந்த சூத மது மணிபோலாடும் வகைவகையாம் பாஷாணங் க ட்டிப்போகுஞ், சேமிந்த தங்கத்தை யுருக்கிச்சாய்க் கக் கடுஞ்சினத்தில் செம்பாகுந் தூரவோடும், நாமிந் தப்படிப்பார்ததோங் காரீயஞ்செம்பாம் நாதாக்களிப் படியே பார்த்திட்டாரே. (உ௮௨)

மூலிகை விபரம்.

பார்த்திட்ட மலைகளிலே மூலிகையைக்கேளு ப ரிவான கருநெல்லி கறுத்தநொச்சில், பூத்திட்டபுற் சோதி பெரியசோதி புகழ்பெரிய வெள்ளைப்பூத் தூத் தியோடு, ஏத்திட்ட கல்லுக்குள் கஞ்சமப்பா யெளி தான ரோமரிட விருட்சமப்பா, கார்த்திட்ட கருநீலி சுணங்கன் விருட்சங், கருத்திருக்குங் கொடிவேலி சேந்திராயே. (உ௮௩)

சேந்திராய் வெண்புரசு வெள்ளைக்கண்டர் செ ங்கள்ளி செம்பல்லி குண்டவமாம்பாலை, காந்திராய்க் கறுப்பான பசளையோடு கடியதொரு பொற்சிந்தி சா ய்கைவேதி,அந்திராய் கருவிழுந்து சிவந்ததில்லை ஆதி வெள்ளை தூதுவளை கறுத்தவாழை, கந்திராய் கறுப் பான கரிபசாலை கருத்தமத்தை வெள்கரந்தை கல்லா ரையாமே. (உ௮௪)

Digitized By Roja Muthiah Research Library

ஆமப்பா மூலிலையாங் குருந்திலேனுடு ஆச்சரியங் கருந்தும்பை வெள்ளைக்காந்தி, வோமப்பா வெண்டா ழு தண்டையோடு யுந்தமனை முப்பத் திரண்டுமூலி, வாமப்பா மலைமேதாறு மூண்டுமூண்டு மகத்தான மூலி கைதான் பரிசவேதை, சாமப்பா ஒவ்வொன்றில் சூத ங்கட்டுங் கலந்தநின்ற வாசினைக்குப் பாஷாணஞ்சா மே. (உ௮௫)

சாகவே சரக்கான வறுபத்துநாலு தனித்தனி யே வேதையுமாஞ் சகத்துக்கோடுஞ், சாகவே வுபச ரங்கள் நூற்றிரண்டுபத்துச் சவளைபோல் சத்தாக இ றங்கும்பாரு, சாகவே லவணமூத லிருபத்தைந்துந் தனித்தனியே கட்டாகுஞ் சரக்கைக்கொல்லுஞ், சா கவே பண்ணும விருத்திவைக்குஞ் சங்கற்ப விகற்ப மென்ற சட்டைபோக்கே. (உ௮௬)

போக்கான கிளிமூக்கு மரமொன்றுண்டு புகழா ன கிளிப்போலே காயுங்காய்க்கும், வாக்கான இலைய துவு மாசிலைபோற்காணு மைந்தனேயிதினுடைய பழ த்தையுண்ணு, நோக்கான கௌனவழி சுறுக்காபோ டும் நொடியிலே காயசித்தாஞ் சட்டைகக்கும், போக் கானபூப் பூத்தமற்றுள்பழமாம் புண்ணியமாஞ் சி த்தருக்கு வைத்தவாறே. (உ௮௭)

வைத்தமொரு மருந்தெடுத்து அந்திசந்தி வகை யாக மண்டலந்தா னுண்டாயானால், வைத்தமொரு ச டமிருகி தங்கம்போலாம் நாடியெல்லாம் பிகுவாகி அ மூர்ந்துந்தேகங், வைத்தமொரு பித்தமறும் கபத்தைச் சாடுங் கசடான ஆறுதலங் கிரந்திபோகும், மெய்த்த

Digitized By Roja Muthiah Research Library

தொரு சரசோதி நித்தஞ்செய்வாள் வினைபோல ஒளியாகும் வாக்குத்தானே (உஅஅ)

சீந்திக் கற்பம்.

தானென்ற பொற்சீந்தி யானால்நன்று சாதகமாய் சிகப்புநன்று கிடையாவிட்டால், பானென்ற நற்சீந்தி மேல்தோல்போக்கிப் பருந்துண்டாய் கொண்டுவந்து கிழித்துப்போட்டு, கோனென்ற நிழலுலர்த்தி சூரணமேசெய்து கூறுனகற்கண்டுச் சமபாகஞ்சேர்த்து வேனென்ற வெருகடிதூளந்திசந்தி வெருளாதே மண்டலமு முண்டுபாரே. (உஅகூ)

பாரப்பா மேகமென்ற தெல்லாம்போகும் பரிவான வாதபித்தம் பக்குவமாகுஞ், சேரப்பா கபாலத்தில் வெட்டைபோகுஞ் செகமறிய அஸ்திசுர வேகம் போகுந், தாரப்பா தாதுமூற்றுந் தழைக்குநதேகஞ் சதிராக ஆறுதலம் வன்னிமீறும், பேரப்பா சீந்திலுக்குச் சாவோ இல்லை பேரின்ப சாஸ்திரத்தை பேணிப் பாரே. (உகூ0)

நெல்லிக்காய்ச் சூரணம்.

பேணிப்பார் நெல்லிக்காய் முற்றல்வாங்கிப் பேராவின் பால்விட்டு அவித்துக்கொண்டு, ஊணிப்பார் நிழலுலர்த்தி சூரணமேசெய்து வுத்தமனே சுத்தித்த கெந்திசரிகூட்டி, பேணிப்பார் தேனதனிற் குழைத்துவுண்ணு பேராக மண்டலந்தா னுண்டாயானால், ஆணிப்பார் முன்னெடுத்த தேகம்போக்கி ஆச்சரியஞ் சிவசத்தி தேகமாச்சே. (உகூக)

சத்தியது யேதென்றால் கெந்தகமுமாச்சு தனித்துநின்ற சிவன்றானுஞ் சூதமாச்சு,புத்தியது ஏதென்

ருல் மூலமாச்சுப் புகழான ஆறுதலத் துன்னிப்பா ரு, பத்தியது ஏதென்று லறிவுக்குட்புத்திப் பராபர த்தில் இச்சதுவே பத்திபத்தி, முத்தியது ஏதென்று ல் மவுனந்தாண்ட மோசமில்லைச் சைதன்னிய முத் தியாமே. (உகூஉ)

சிவனார் வேம்பு.

ஆமப்பா இதுகடந்து சிவனார்வேம்பு யப்பனே யிடித்துநன்றாய்ச் சூரணமேசெய்து. தேமப்பா வானு ளுநவை சரியாய்க்கூட்டிச் சிறப்பாக கரந்தைச்சார் வா ர்த்தரைத்து, தாமப்பா வில்லைபண்ணி நிழலுலர்த்திச் சாதகமாம் பூப்புடத்தில் தயிலம்வாங்கி, வாமப்பா முக்கழுஞ்சு அந்திசந்தி மறவாதே மண்டலமுங் கொ ண்டிடாயே. (உகூங)

கொண்டிடவே குஷ்டமெல்லாம் போகும்பாரு கூறான சரீரத்தில் வாசம்போகும், விண்டிடவே விஷ கடிகளெல்லாம் போகும் மேனியுமோ மாந்துளிரினி றமுமாகுங், கண்டிடவே கன்னியர்கள் வசமதாவார் காரியமா மைம்புலனை யறுத்துச்சாடுந், துண்டிடவே யாசையுற்றால் காயசித்திபோகுங் தூஷித்துக் கன்னி யைத்தான் தொடலாகாதே. (உகூச)

அண்டம்.

ஆகவே அண்டத்தின் கற்பங்கேளு அப்பனேக ருங்கோழிசாவலுடன்பேடு, வாகவேவளர்த்ததனின் முட்டை யெல்லாம்வாங்கி வகையாகக்கல்லுப்புக்குள் ளேவைத்து, ஏகவே யிருபதுநாள் கழித்துப்பின்பு எடுத்தல்லோ அயச்சட்டிக் குள்ளேயிட்டுப், போக

Digitized By Roja Muthiah Research Library

வே கொருடனது கிழங்குச்சார்விட்டுப் புகழாக யடுப் பேற்றி யெரித்திடாயே. (உகரு)

எரித்திடவே சாறெல்லாஞ் சுண்டிப்போகு மித மாக ஆறவிட்டு வைத்துக்கொண்டு, பரித்திடவே ய ண்டமொன்று மேலோடுவாங்கிப் பதறுமல் ரெண்டா க்கி அந்திசந்திகொள்ளு, தரித்திடவே தினமொன்று மேலோடுவாங்கிச் சாதகமாய்த் தினந்தினமு மொவ் வொன்ருக, மரித்திடவே யெடுத்தசடங் கற்பாந்தகா லம் வைத்திருக்க வேணுமென்ருல் மண்டலந்தான் கொள்ளே. (உகசு)

கொள்ளவே காயமது சிவந்துமின்னுங் குறிப் பான கண்கள்ரெண்டுஞ் சிவந்துபோகும், விள்ள வே கைகள்ரெண்டுங் கற்றாணுகு மெலிவான நரம் பெல்லா மிறுகிக்கொள்ளுந், துள்ளவே யனுபவித் தால் விந்துவீழா சுக்கிலந்தா னிறுகியங்கே மேலே யோடுந், தள்ளவே சட்டையொன்று கக்கிப்போடுஞ் சத்துடனே யிவ்வளவு சாதித்தேறே. (உகஎ)

தலைமுழுக.

சாதித்துதலைமுழுக வரிசைகேளுச் சாதகமாய் பட்சத்துக் கொருக்காலப்பா, போதித்து மிளகோடு மஞ்சல்நெல்லிப் பேரானவேப்பரிசி கடுக்காயோடே, வாதித்து சமபாகம் நிறுத்துக்கொண்டு வளமான ஆ வின்பால்விட்டேயாட்டி, காதித்துத் தலைதனிலே தே ய்த்துக்கொண்டுக் கனமான வெந்நீரில் மூழ்கிடாயே.

முழுகிடவே கபாலமது கெட்டியாகு மூச்சான வாசியது மேற்கொள்ளாது, கழுகிடவே மோகமது தும்பிபோ ாம் நனைந்தாலும் குளிராது வன்னிமீறு

ம், அழுகிடவே கண்ணீரில் தண்ணீர்வீழா அந்தரத்தி ன் மீனெல்லாம் பகலிற்றோணும், விழுகிடவே வுட லினுள்ள விஷநீர்வற்றி மேனியுமோ பொன்னிறம்போ லாகும்பாரே. (உகூகூ)

பார்க்கவே வாரத்துக் கிருகாலப்பா பரிவான யா வினெய் தேய்த்துக்கொண்டு, ஏற்கவே பசும்பயறு அரப்பாய்ச்செய்து எளிதாக வெந்நீரில் முழுகிவா நீ, காற்கவே ரோமமது கருவண்டுபோலாங் கண்ணு க்குள் ஒளிமீறுந் தாகமில்லை, தோற்கவே சுழிமுனையும் நெற்றிக்கேறுஞ் சுழலாமல் பிரபஞ்சத்தின் மாய்கை நீக்கே. (௩00)

சுண்ணும்பு.

நீக்கவே தாம்பூலந் தின்பதற்கு நினைவாகச் சுண் ணும்பு செய்யக்கேளு, காற்கவே கற்பூரச் சிலையின் மேலே கல்லுக்குள் சுண்ணத்தைக் கவசம்போட்டு, பாற்கவே கரியோட்டி லூதஊது பஞ்சுபோல் பொ றுமியங்கே சுண்ணமாகுங், தோற்கவே கல்நுரிப் ப டியேயூது துடியான யண்டத்தோ லூதிடாயே. ()

ஊதுவதுகெருடபட்சி பவழமுத்து உத்தமணிவ் வகையாலுற் சுண்ணமாகுங், கோதுவது கொட்டைப் பாக் கதனைச்சீவிக் குறிப்பாகப் பழுத்திருந்த வெள் ளிலையிற்பூசி, ஓதுவது முன்சாற்றை யுமிழ்ந்துப்போ டு முத்தமனே தாம்பூலந் தின்றுதுப்பு, வாதுவது வா தபித்தஞ்சேத்துமத்தைப் போக்கு மகத்தான யுபரச த்தின் சுண்ணந்தானே. (௩0உ)

வழலை வாங்க.

தானென்ற காலையிலே வழலைவாங்க சாதகமாய்ச் சொல்லுகிறேன் மக்காள்கேளு, வானென்ற கரிசா

Digitized By Roja Muthiah Research Library

லஞ் சாற்றினேடு, வளமான ஆவினெய் சமனைச்சே ர்த்து, ஊனென்ற அங்குஷ்ட விரலிற்றேய்த்து உத் தமனே அண்ணாக்கிற் பிரளவைத்து, தேனென்ற ச ங்கிலிபோல் கபந்தான்வீழ சிறப்பாக பதினைந் திர மும்வாங்கே. (கூ0கூ)

வாங்கிவா இப்படிதான் மண்டலந்தானப்பா மா லையிலே செய்யுகிற வரிசைகேளு. தாங்கியே முறைக் கிரமப் படியேயப்பா சகலகலைவேதனூ லறிந்துகொ ண்டு, பாங்கிவா யோடண்டத் தென்னைதன்னைப் பரி வாகதரிசனையிற் சுற்றுறாறு, ஓங்கிவா இடசாரி தி ருப்புறாமு ஒளிந்திருந்த ஆமமெல்லாங் கழண்டு போமே. (கூாச)

ஆமமே கழலாட்டால் காயசித்தியில்லை அண்ணா க்கில் வீழாட்டா லமுர்தஞ்சிந்தா, வாமமே யில்லாட் டாற் பூசைபோச்சு மாயியங்கே சொல்லதுவு மறை ந்துபோச்சு, ஏமமே பிறப்பதுவு மண்ணாப்போச்சு எடுத்தோடுங் குளிகையுட வேகம்போச்சு, காமமே கெதியென்று விடுகவேண்டாங் கைமுறையா யிருதல த்தி னசட்டைதள்ளே. (கூாரு)

மூலிகைக் கருப்பு

தள்ளியே மூலிகையைக் கருப்புபண்ணச் சாதக மா யறைமட்டுங் குழிதான்வெட்டித், தெள்ளியே சேங்கொட்டை ஒன்றிரண்டாய்வெட்டிச் சிறப்பாக முழவுசாம்பற் பரப்பியேமேலே, அள்ளியே கரம்பைம ண் மேலேபோட்டு அழகாக பாத்திகட்டி நீரைவிட்டு, நள்ளியே யழுகவிட்டு மூன்றுதிங்கள் நலமாகக் கொ த்தியே யாறப்போடே. (கூசு)

Digitized By Roja Muthiah Research Library

ஆறவிட்டுப் பதிப்பதற்கு விபரங்கேளு அழகா
ன குமரியொடு ஓமங்கஞ்சா, தேறவிட்டு வல்லாரைக்
கறியசாலேச் சிறப்பானசெருப்படியும் நீலிவீழி, வே
றவிட்டு பொடுதலேயும் நொச்சிநெல்லி யிதமானகறந்
தையோ மேத்தைத்தும்பை, சீறவிட்டு கொல்லனுட
கோவைவாழைச் சிறப்பாகப் பதித்துவைத்துத் தண்
ணீர்வாறே. (கூ0எ)

வார்த்தல்லோ பயிராக்கித் தண்ணீர்வார்த்துவா
காகக் காய்ந்தபின்பு விரையைவாங்கிப், போட்டல்
லோ முன்போலே சேங்கொட்டையிட்டுப் புகழாக
மருபடிதான் விதையைப்போட்டுக், கோர்த்தல்லோ
கோடிடத்தில் கொட்டையிட்டுப் கொடுஞ்சுறுக்கா
ய் விரையிட்டுப் பயிரைப்போடு, ஏற்றல்லோ யிப்படி
தான் ஞனுதரம்போடு யென்மகனே முழுக்கறுப்பா
ம்மூலிதானே. (கூ0அ)

சித்தர்கள் கற்பமுண்ட விபரம்.

தானென்ற மூலிகைதான் மலேகள்தோருஞ் சா
தகமாய் வைத்தாரே ரிஷிகள்சித்தர், வானென்ற கரு
ப்புக்குப் பரிட்சைகேளு வாகாகக் கொக்கிறகு கொ
ண்டுவந்து, பாலென்ற யிலேக்கசக்கி மேலேபூசப் பரி
வானகாகத்தி னிறகேயாகும், கோனென்ற யிலேதின்
றால் காயசித்திக் கொடுஞ்சுறுக்காய்க் கோடிவரை யி
ருந்துந்தானே. (கூ0கூ)

இருந்தியதோர் குமரியுட கற்பமுண்டு எழுப
துதான் கோடியுக மிருந்தோர் பார்த்தார், அருந்திய
தோர் ஓமமுண்டு காலாங்கினுபர், அறுபதுதான் கோ
டியுகம் வாதம்பார்த்தார், வருந்தியதோர் கஞ்சாவால்

Digitized By Roja Muthiah Research Library

கோரக்கர்தானும் மனதொன்றி: சமாதியிலே ஏழு யுகம்நின்றார், திருத்தியதோர் கரிசாலைக் கற்பமுண்ட சிவயோக முனியுடைய திறமைகேளே. (௬௧0)

கேளப்பா அஞ்சுகம்நா தாக்களோடே கெடியாக தற்கித்துவேததாக்தம்பார்த்தார், வேளப்பா நீலியுண்டு ராமதேவர் விறைந்தேழு லக்ஷமப்பா யோகம்பார்த்தார், நாளப்பா பிரமமுனிச் செருப்படியையுண்டு நாலேழு லக்ஷமப்பா சமாதிபார்த்தார், தேளப்பா ஓமமுண்டு ஆனந்தநாதர் செகத்திலுள்ள அதிசயங்கள் பார்த்திடாரே. (௬௧௧)

பார்த்திட்டவிழிகொண்டு கஞ்சமலைசித்தர்பத்து யுக மாரூடசமாதியிலேநின்றார், வர்த்திட்ட பொடுதலையால் கொங்கணர்தாமப்பா ஏழுயுகங் குளிகைகட்டி வாதம்பாத்தார், கார்த்திட்ட பதஞ்சலிதான் கரந்தையுண்டு கைகொட்டிச் சிதம்பரத்தில் நடனங்கண்டார், போர்த்திட்டக் கொல்லனுட கோவையுண்டு போகமுனி என்றுசொல்லி புளகிற்றேனே, (௬௧௨)

புளகிற்றுக் கோடியுகம் வாதம்பார்த்துப் போக்கோடே யொவ்வொன்றாய் விரித்தேயானும், இளகிற்று எழுகாண்டம் முன்னேசொன்னேன் ஏழையுந்தான் எழுநூறாய் நிகண்டாய்க்கோர்த்தேன், அளகிற்றுகண்டபடி சொன்னேன்மக்காள் ஆச்சரியம் வெட்டவெளி மறைப்போயில்லை, உளகிற்று வுப்பைநன்றாய்கட்டியுண்ணு ஒருசொல்லுந் தப்பாது சித்தியாமே. (௬௧௩)

உப்புக் கட்டு.

சித்தியா மன்னத்தி லுப்புக்கூட்டச் சொல்லுகிறனுதாக்கள் சொல்லாதெல்லாம், பத்தியாற் புங்கம்

வேம் பாலைவாங்கிப் பாரையுப்பைத் தோய்த்தெடுத்து ரவியிற்போடு, முத்திபா யேழுனாள் ரவியிற்போடு முனையான வெடியுப்புப் பலந்தானைந்து, வெற்றியாய் சீனமது பலந்தானைந்து வெண்காரம் பலமைந்து கல்லுப்பைந்தே. (௱கச)

ஐந்தோடு சாரமைந்து பூநீரைந்து ஆதிபாங் கடல்நுரையுஞ் சூடனைந்து; பிஞ்சோடு சவ்வீரம் பலந்தான்ரெண்டு பேரான புங்கம்வேர்ப் பாலாலாட்டி, நஞ்சோடு ஏழுநாளரைத்தரைத்து நலமான ரவிதனிலே யுலரப்போடு, குஞ்சோடு அண்டநீர்ப் பலந்தானைந்து குழப்பியே பாலாலே வைத்துக்கொள்ளே. ()

கொள்ளவே பாரையுப்பிற் றேப்பத்துத் தோய்த்துக் குழிப்பாகக் கரியோட்டில் வாட்டுவாட்டு, மெள்ளவேதணலுக்குளடர்ந்துவாட்டு வெடிப்படங்கி யுப்பதுவுஞ் செம்மையாகுந், தள்ளவே சுண்ணாம்பும், உப்பும்நேரே சமனாகப் பொடித்துமைபோ லமுரிபாலே, துள்ளவே யிரண்டையாய்க் கட்டிவைத்துத் துடியாகக் கவசித்து வுப்பையையே. (௱கசு)

வைத்துமே லடைமூடி சட்டியிலேவைத்து வாகாக நாலாமம் தீயைமூட்டி யெய்த்தமேல் மூடியொருசீலைசெய்து முசியாதே நூற்றெறுவிற் புடத்தைப்போடு, தைத்துமேயாறவிட் டெடுத்துப்பாரு தவளம்போல் பளிங்குநிற மாயிருக்கும், தைத்துமே தயிசோற்றிலிவ் வுப்பையிட்டு நலமாக நாள்தோறுங் கொண்டிடாயே. (௱கஎ)

கொண்டிட்டா லிந்தவுப்புச் சத்தெல்லாந் தள்ளுங் கூசாதே வாசியெல்லாம் நெறிக்கேரும், விண்டிட்

Digitized By Roja Muthiah Research Library

ட புருவமைப்பத் தமர்ந்துநிற்கும் வெளியோடே மன க்கலக்கம் பண்ணிவிக்குந், தண்டிட்ட அமுரியிலே யி றங்காதுப்பு சாதகமாய்ப் பச்சையுப்புத் தின்றுனுகில், மன்றிட்ட சித்தியெல்லாம் பாழாய்ப்போகும் வாய்த் திருந்த கற்பமெல்லா மண்ணுய்ப்போமே. (௲௧அ)

உப்புச் சுண்ணம்.

போமென்ற வுப்புக்குக் காரமேற்றிப் பொலிவா கச் சுண்ணமென்ற குகையிலூத, ஆமென்ற பூப்போ லச் சுண்ணமாகு மந்திடைக்குச் சாரமிடச் செயநீரா கும், வேமென்ற சரக்கான அறுபத்துநாலும் வெரு ளாமல் பொன்போல கண்விட்டாடுஞ், சாமென்றசா வுபொய்யாம் வேதையாகுஞ் சகத்திரந்தான் மாற் றுகுந் தன்னிற்பாரே. (௲௧௯)

உப்புக்களங்கு.

பாரப்பா வுப்புநின்று வுருகும்போது பரப்போ டுயிடைக்கிடைக்கி நாகம்போடு, காரப்பா நாகயிடை சூதம்போடு கனமான கெந்தகந்தான் ரெட்டிப்போ டு, சேரப்பா எடுத்துடனே களங்குமாகுஞ் சேர்ந் தகவ லோகத்தில் அன்பதுக்கொன்றிய, வேரப்பா மா ற்றுகுங் காணுங்காணும் வெருளாதே பணவிடைதா ன் தேனிலுண்ணே. (௲௨0)

உண்ணவே மண்டலத்தி லொளியோமீறு முத்த மனே காலிரண்டுங் கற்றாணுதும், விண்ணவே ப ச்சைரச மென்றுதின்னு வெருளாதே பாஷாண மெ ல்லாந்தின்னு, கண்ணமே யுபரசத்தின் சத்தைத்தின் று கலங்காதே வாசிகொண்டு யுள்ளேபூரி, பண்ண

வே நடக்கையிலு மிருக்கையிலுநீதான் பழக்கமுந்
துமூலத்தைப் பாருபாரே. (௩௨௧)

பாற்கவே வுப்பென்ற களங்கந்தன்னைப் பலபல
வாம் லோகத்தி லன்பதுக்கொன்றீய்ந்து,ஏற்கவே யி
தைவித்து சிலவுசெய்து எளிதாக அன்னமரைத் தண்
ணீர்க்கொள்ளு, காற்கவே ஒருசேரை சமைத்துவு
ண்டு கனமான கற்பத்தைத் தின்றுயேறு, தோற்க
வே யுட்புகுந்து மூலம்பாரு தொடுகுறிபோ லாறுத
லம் வெளியாய்ப்போமே, (௩௨௨)

அப்பிரேகச் சத்து.

வெளியான அப்பிரேகச் சத்துக்கேளு விளங்கு
மே அப்பிரேக முத்தரந்தா, ஞெளியான ரெத்தவர்
ண மிரண்டாம்பட்ச முயர்ந்தமுதற் றுன தான் கிஷ்டு
வர்ணன், மளியான அப்பிரேக நவநீதம்பண்ணி யப்
பனை கிளிப்போலக் கட்டிக்கொண்டு, களியானக்
கொள்ளிலையின் சாறுதன்னால் கலங்காதே நாள்மூ
ன்று டோலையாக்கே. (௩௨௩)

ஆக்கவே டோலைப்போல் சட்டியிலேயிட்டு அ
சையாதே கொள்ளிலையாஞ் சாற்றினாலே, பாற்க
வே அடுப்பேற்றி எரித்துப்பின்பு பருவாழைக் கிழங்
குச்சார் மூன்றுநாள்தான், தோற்கவேமுள்ளங்கிக் கி
ழங்குச்சாற்றில் டோலைகட்டி யெரித்திட்டு மூன்று
நாள்தான், காற்கவே குன்றிச்சார் மூன்றுநாள்தான்
கலங்காதே எரித்துமெள்ள கிளியைவாங்கே. (௩௨௪)

வாங்கியே கல்வத்திற் பலம்பத்துப்போட்டு வ
கையான வெண்காரம் பலந்தான்பத்து, தேங்கியே

Digitized By Roja Muthiah Research Library

சாரமஞ்சு கட்டிப்பொன்று சிறப்பான சக்கரைதே
ன் பழமும்போடு, ஓங்கியே ஆதளையின் பாலைவார்த்
து உறுதியாய்க் குடோரியொரு பலமும்போட்டு, நீ
ங்கியே மூன்றுநாள் நெகிழஆட்டி லேசாக அடைத
ட்டி யுலரப்போடே. (௩௨௫)

உலர்ந்தபின்பு வங்கமென்ற நாள்தானூது உத்
தமனே சரவுலையில் வைத்துவைத்து, அலர்ந்தபின்பு
அப்பிரேகஞ் சத்தாய்வீழும் ஆராய்ந்து சத்தெல்லா
ம் பொறுக்கிக்கொண்டு, கலந்தபின்பு கறடெடுத்துக்
கல்வத்தாட்டிக் கலங்காதே முன்போலமருந்தரைத்து
க்கூட்ட, நலந்தபின்பு வில்லைகட்டிச் சரவுலையிலூது ந
லமாக அப்பிரேகஞ் சத்துமாமே. (௩௨௬)

ஆமப்பா கறடெடுத்து முன்மருந்துகூட்டி யரை
த்துநன்றாய் வில்லைக்கட்டி ஐந்துதரமூது, ஓமப்பா ச
த்தெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து உத்தமனே வெண்கா
ரஞ் சரியாய்க்கூட்டி, தாமப்பா குகையிலிட்டுவுருக்கி
நன்றாய்ச் சாய்க்கவே நல்லெண்ணெய் தேங்காய்போ
லுங், காமப்பா யிலுப்பைப்பூ நெய்யுந்தேனுங் கலந்
தொன்றாய் மர்த்தித்துச் சாய்த்திடாயே. (௩௨௭)

சாய்த்திடவே மூன்றுதிரங் கற்பங்கள் போக்
கும் தங்கமதுரெண்டுக்கு அப்பிரேகம்நாலு, பாய்த்
திடவே ரெண்டுமொன்று யுருக்கிக்கொண்டு பரிவாக
மெழுக்குகட்டி கிண்ணிவாரு, மாய்த்திடவே கிண்ணி
க்குச் சீலைசெய்து வாலுகையின் மேலேவைத்துச்
சூதம்வாரு, ஏய்த்திடவே கருவூமத்தைச் சாறுவிட்டு
இதமாக எரித்திடவே வெண்ணையாமே. (௩௨௮)

Digitized By Roja Muthiah Research Library

வெண்ணையெல்லாம் வழித்தொரு மொத்தையா க்கி மேலான குளிர்ந்தநீர் தன்னிறபோட்டுத், திண்ணி யா யிருகியது கல்லுப்புப்போலச் சேர்ந்தெடுத்து ஆ ரையிலைக் கவசங்கட்டி, தன்னையா அவிபுடமாய்ப் பத் துப்போட்டு தயங்காதே மத்தங்காய்க்குள்ளே வைத் து, விண்ணையாய் விராலியிலைக்குள் வைத்துப் விதமா ன விராலியிலைக் குள்ளேபோடே. ()

போட்டெடுத்துச் சூடனுடத் தீயில்வாட்டிப் பு கழாகக் கறண்டியிலே யெண்ணெய்க்குத் துருக்கி, ஆ ட்டெடுத்து நாலுக்குமொன்று தங்கம் அழகாக சூதத் திற் பாதிநாகம், நீட்டெடுத்து உருக்கியொன்றாய் ம ணியைவாங்கி நேர்பாகக் கல்வத்திற் பொடித்துநன் றாய்த், தோட்டெடுத்த சுத்தித்த கெந்திதானும் து ரிசாக சூதயிடை கூடக்கூட்டே. (௯௰)

கூட்டியெல்லாம் பொற்றலையின் சாற்றாலாட்டிக் குழிப்பாகப் பொடிப்பண்ணிக் குப்பிக்கேற்றி, ஆட்டி யே வாலுகையின் மேலேவைத்து அறுசாம யானடி ன்புக் கடுந்தீப்போட்டு, நீட்டியே பனிரெண்டுசாமமா னால் நிலைத்துநிற்கு மாதளம்பூ நிறந்தைப்போல, வா ட்டியே நவலோகம் நூற்றுக்கொன்றீப மாற்றென்ன பனிரண்டாம் பணவிடைதானுண்ணே. (௯௧)

உண்ணாவே மண்டலந்தா னந்திசந்தி யுத்தம னே யுகந்தவரை யிருத்துந்தேகந், தண்ணாவே யிரு ட்டரையி லிருநதாயானால் சந்திரனோ சூரியனோ வெ ன்பார்பாரு, சுண்ணவே மேனியது கஸ்தூரிவீசங்க மலம்போல் சால்கைரெண்டு மிருதுவாகு, மெண்ண வே கற்பமெல்லா மப்படியாயேறு மிருந்துபார் சமா திக்குள் கற்பமொன்றே. (௯௨)

Digitized By Roja Muthiah Research Library

கெந்தகச் செம்பு.

ஒன்றான கெந்தகந்தான் பலந்தான்பத்து உத்தமனே சுத்திபண்ணி அயச்சட்டியிட்டு, கன்றான குமரிச்சார் கீழ்மேலுமிட்டுக் களரவே கொதிப்பிப்பாய் நாலுசாமம், பன்றான பசரிச்சார் சுறுக்குப்போடுப் பருவமாய்ப் புங்கம்பால் நாலுசாமம், கன்றான நிழலுலர்த்திக் கல்வத்திட்டுக் கடுகவேபொடிப் பண்ணி மாந்துவீரின் சாறே. (௩௩௩)

சாற்றிநெவெண்சாம மாட்டுமாட்டுத் தயங்குமணித் தக்காளிச் சாற்றாலாட்டு, பேற்றினல் மந்தாரை வெள்ளைப்பூவைப் பிசைந்தந்த சாற்றிநெலெண்சாம மாட்டு, வாற்றினல் புளிப்பான மாதளையின் பழந்தான் வகையான சாற்றிநெலெண் சாமமாட்டுத், தேறறினல் தாமரைப்பூச் சாற்றாலாட்டிச் சிறப்பாகக் காந்தமைந்து பலந்தான்போடே. (௩௩௪)

போடவேவெண்காரம் பலந்தானைந்துப்பெரிதானக் குடோரிபொருப் பலமும்போடு, நீடவே குன்றிமணிக் கட்டுவுப்பு நிலைக்கவொரு பலம்போட்டு ஆவின்பாலால், வாடவே யெண்சாம மாட்டிப்பின்பு வகையாக வில்லைதட்டி யுலரப்போட்டு, நாடவே நல்லெண்ணெய் படிதானென்று நலமான அயச்சட்டிக் குள்ளேவாரே. (௩௩௫)

வார்த்துமே யடுப்பேற்றி வில்லையிட்டு வாகானகமலம்போ லெரிநேர்பாக, ஏத்துமே மொறுமொறுத்தப் பதத்தில்வாங்கி யிருபுறமுந் தருத்தியிட்டுச் சரவுலையிலூது, போற்றுமே மணிமணியாய்ச் சத்துவீழும் போற்கறட்டையெல்லாஞ் சோதித்துவாங்கித்,

காற்றுமே முன்போலக் காரங்கூட்டிக் கலங்காதே ஐந்துதர மூதிடாயே. (௩௩௬)

ஊதியே சத்தெல்லா மொன்றுப்சேர்த்து முத்தமனே வெண்காரங் கூடக்கூட்டிக், காதியே குகைபிலிட் டுருகவாட்டிக் கனமான அப்பிரேகம் போலச்சாய்த்தால், சாதியே சாய்ந்தாக்கால் வருணன் போலத் தயங்காதே சத்தாகுங் கெந்திச்சத்து, வாதியோ யிதைக்காணப்போ கானமாண்பர் மாசற்ற நாதாக்க ளாடுமோட்டே. (௩௩௭)

நடராஜர்.

ஆட்டான கெந்தகத்தின் சத்துவேக மாரறிவார் சிவயோகி யல்லார்காணூர், நீட்டான அம்பலத்தில் சோழன்றானும் நிலைத்தநட ராசரைத்தான் வார்க்கச்சொன்னூர், பூட்டான சிற்பர்கள்தான் கருக்கட்டி வார்த்தார் புண்டுபுண்டுப் போகவுமே சிற்பரேங்கிக், கூட்டான மனதுநொந்துத் திகைக்கும்போது கொடுமூல நாயருமே வந்திட்டாரே. (௩௩௮)

வந்திட்டு சிற்பரைத்தான் வரவழைத்து மனக்குறைதான் என்சொல்லும் மைந்தாவென்ன, வெந்திட்ட விக்கிரகம் வாற்கவாற்க வின்னமாய்ப் போகுதையாஎன்ன செய்வோம், நொந்திட்ட மனதுகண்டுத் திருமூலர்தாமும் நொடியிற்குள் வார்த்திடுநீ யென்றுசொல்லி, சந்திட்டுக் காசிடைதான் செம்பையீய்ந்தார்க் கடுகவே சிற்பருந்தான் வார்த்திட்டாரே. (௩௩௯)

வார்த்திடவே தங்கமெல்லாம் செய்பாய்ப்போச்சு மனம்புண்ணுப் நிற்கையிலே சோழன்வந்தார், எத்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106

Digitized By Roja Muthiah Research Library

திடவே விக்கிரகம் வார்ப்பித்தாயோ வெடுத்தாரே யெ
ன்றிடவே கொடுமுன்வைத்தார், பார்த்திடவே தங்க
மெல்லா மெடுத்துக்கொண்டுப் பரிவாகச் செம்பா
லே வார்த்தாயென்று, வார்த்திடவே யாக்கினைதான் ப
ண்ணச்சொன்னார் விடுபட்டார் சோழர்முன்னே காய
ர்தாமே. (௫௪௦)

ஆமப்பா சிற்பரைத்தான் கொல்லவேண்டாம் ம
திகமாய்ப் பொன்னுனக்குத் தாரோமென்று, வேமப்
பா வெள்ளியைத்தா னுருக்கச்சொல்லி விரைந்தநூ
லாயிரத்திற் காசிடைதான் போட்டார், தாமப்பா மா
ற்றதுவும் இருபதாச்சுச் சாதகமாய்க் குளிகையிட்டு ம
றைந்துபோனார், சேமப்பா தவசியெங்கே யென்றுகே
ட்கத் தேடியெங்கும் பார்த்திட்டார் திகைத்திட்டா
ரே. (௫௪௧)

கெந்தி சத்துச் செந்தூரம்.

திகைத்திட்டு வந்துசொன்னார் சோழர்முன்
னே சிவசிவா வென்றுசொல்லி வாயைப்பொற்றி,
நகைத்திட்டுச் சிற்பருக்கு வெகுமானமீய்ந்து நாதாக்
கள் மகிமைசொல்ல யாராற்கூடும், மிகைத்திட்டு விடு
திக்கிப் போனார் சோழர் வேண்டியதோர் கெந்தகத்தி
ன் சத்துவேகம், பகைத்திட்டுச் சித்தருடன் உங்களு
க்குச்சொல்லி பாரிதுக்குள் செந்தூரஞ்செய்யக்கே
ளே. (௫௪௨)

கேளப்பா கட்டியதோர் சூதமொன்று கெடியா
க வுருகையிலே சத்துமொன்று, நீளப்பா தங்கமொ
ன்று நாகமொன்று, நேராகவுருக்கியொரு மணியாய்
வாங்கி, வேளப்பா கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி

Digitized By Roja Muthiah Research Library

விளங்கிநின்ற தாளகமுஞ் சிலையொன்றுபோடு, நாளப்பா பொற்றலையின் சாற்றாலாட்டி நலமாகத் தெல்லுப்போல் வில்லைபண்ணே. (௩௪௩)

பண்ணியதோர் வில்லைதனை யகலிலிட்டுப் பாச்சியே மூடியொரு சீலைசெய்து, கண்ணியே பத்தெருவிற் புடத்தைப்போடுக் கண்கொள்ளா வருணன்போல் செந்தூரமாகும், நண்ணியே செந்தூரமாயிரத்துக் கொன்று நாட்டிடவே பதினாறு மாற்றுமாகும், புண்ணியமே செய்தவர்க்குச் செந்தூரமாகும் பொல்லாத துரோகிக்கி எய்யாவாறே. (௩௪௪)

வாறுகேள் செந்தூரங் குன்றியுண்ணு மண்டலந்தா னந்திசந்தி மறவாமல்நீயுந், தேறுகேள் தேகமது செப்புத்தூளாஞ் சிதறடித்தால் மலைகளெல்லாந் தவுடுபொடியாகுங், காறுகேள் கத்தியினால் வீசினாக் கால் கலீலென்று வெங்கலத்தி னோசையாகும், நாறுகேள் நரம்பெல்லாஞ் சிவந்துகாணும் நாதாக்கள் சித்தியெல்லாம் மிதுக்குள்ளாச்சே. (௩௪௫)

மயூரச் செம்பு.

ஆச்சப்பா மயூரத்தின் செம்பெடுக்க யறைகிறேனானந்தானறிந்தமட்டும், வாச்சப்பா மயிலிறகைக்கொண்டுவந்து வளமாகத்திரிதிரித்து எள்ளெண்ணெய் தோய்த்து, நீச்சப்பா சுட்டெடுத்துக் கரியாய்ப்பண்ணி நிலைக்கவொரு சேருமட்டும் நிறுத்துக்கொண்டு, தோய்ச்சப்பா கல்வத்திலிதனைப்போட்டுத் துடிராசர் வறதமொரு பலந்தானேர்ந்தே. (௩௪௬)

அஞ்சான வெண்காரம் பலந்தானைந்து ஆதியாங் குடோரியது பலமுமொன்று, நஞ்சான வீரமது

பலமுமொன்று நாயகமாங் கல்லுப்புப் பலமுமொன்று, பிஞ்சான குண்டுமணி எள்ளுமொச்சைப் பேசாதே ஒவ்வொன்றும் பலமும்போட்டுக், கஞ்சான ஆதளையின் பாலைவார்த்துக் கடியெறை மூன்றுனாள் வில்லைக்கட்டே. (௬௪௭)

கட்டியதோர் வில்லைதனை நாளத்தூதிக் கறட்டோடே மணிமணியாய் ரவிதரணிற்கும், ஒட்டியதோர் செம்பையெல்லா மெடுத்துக்கொண்டு ஓகோகோ கறட்டெல்லாம் முன்போலூது, செட்டியதோ ரைந்துதர மருந்திட்டாட்டி தெல்லுப்போல் வில்லைகட்டி ஊதலூது, அட்டியதோர் செம்பெல்லாங் காரமிட்டாட்டு அரகரா முன்போலச் சாய்த்திடாயே. (௬௪௮)

சாய்த்திட்ட செம்பாலே சூதங்கட்டுஞ் சமுசயங்களெல்லாந்தே பாஷாணஞ்சாகும், மாய்த்திடவே அரவதுவுந் தீண்டாதையா மகத்தான விஷங்களொன்றுங் கிட்டாதையா, பாய்த்திடவே செம்போடே தங்கஞ்சேர்த்துப் பாங்கான கைவளையல் மோதிரங்கள் பண்ணு, காய்த்திட்ட குண்டலங்கள் விக்கிரகம்பண்ணு காட்டிலுள்ளச் சித்தரெல்லாந் தரிப்பார்பாரே.

பாரப்பா மயூரத்தின் செம்புவொன்றுப் பாங்கான தங்கமொன்று நாகமொன்று, சேரப்பா மூன்றுமொன்று யுருக்கிக்கொண்டுச் செயமான சூதத்தைவொன்றாய்க்கூட்டிக், காரப்பா கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி கசடகற்றி கெந்தகத்தைப் பாதிகூட்டி, வாரப்பா செருப்படியின் சாற்றாலாட்டி வளமாகத் தெல்லுப்போல் வில்லைகட்டே. (௬௫0)

Digitized By Roja Muthiah Research Library

கட்டியே யஞ்செருவிற் புடத்தைப்போடுக் கை
முறையா யாறவிட்டேயெடுத்துப்பாரு, கட்டியே மாத
ளம்பூப் போலேயாகுந் தனையெடுத்து ஆயிரத்துக்
கொன்றேபோடு, மட்டியே மாற்றென்ன பதினறுகா
ணும் மைந்தனே பணவிடைதான் பாலிலுண்ணு, எ
ட்டியே காயமது விருப்புந்தாணு மென்னென்ன க
டித்தாலுஞ் செத்துப்போமே. (௫௫௧)

அயச் செம்பு.

போமென்ற அயத்தினுட செம்பைக்கேளு பு
கழானரோமமது எள்ளெண்ணெய் தோய்த்து, ஆ
மென்ற அயச்சட்டிக்குள்ளேயிட்டு அப்பனே மூன்று
பத்துப் பலத்தைப்போட்டு, தாமென்ற அரபொடி
தான் பலமோபத்து கைமுறையா யரபொடியைப் பி
சரிவைக்க, தேமென்ற அப்பேற்றி ரோமத்தினுறையில்
சிறப்பாக வுண்ணவுண்ணப் பிறட்டித்திரே. (௫௫௨)

தீரென்ற ரோமமெல்லாங் கரியாகமட்டுஞ் செய்
முறையாய் யரப்பொடியைப் பிரட்டிவாங்கிச், காரெ
ன்ற கரியோடே வைத்துக்கொண்டு கார்த்திகையின்
கிழங்கதுவும் பலமும்பத்து, சேரென்ற செவ்வல்லிக்
கிழங்கும்பத்து சேர்த்திடித்துச் சாறுவொரு படியும்
வாங்கி, ஆமென்ற ஆதளையின் பாலேவார்த்து யழகா
ன எள்ளெண்ணெய்ப் படிதான்வாறே. (௫௫௩)

வார்த்தெல்லாங் குழம்புபோல் வருதல்கண்டு வ
கையான வெண்காரம் பலந்தானைந்து, சேர்த்தெல்லா
ந் துருசியொரு பலந்தானைந்து, தேசில்லா கெந்தகந்
தான் பலமும்மூன்று, கோர்த்தெல்லாம் பொடியாக்கி
எண்ணெயிலேபோட்டுக் கொதிப்பித்துக் குழம்பான

Digitized By Roja Muthiah Research Library

பதத்தில்வாங்கிக், காத்தெல்லாம் வழித்துவொருக் கலைபத்திட்டுக் கைமுறையா யரப்பொடியில் பிசறி வையே. (௬௫௪)

வையப்பா ரோமமென்ற கரியினோடே மயங்கா தே குகையிலிட்டு மாட்டிவூது, தையப்பா மணிமணி யாய் யிறங்கும்பாரு தனையெடுத்து யுடைத்துமுன் போல் தைலத்திற்பிசறி, கையப்பா வைந்துதிரம் மு ருக்கித்திரு கசடற்று வெள்ளிபொன்போல் கண்விட் டாடும், மெய்யப்பா களங்கற்ற செம்பேயாகும் வே தையிதில் முடிவுசொல்ல விண்கொள்ளாதே. ()

கொள்ளாத அயச்செம்பு பலந்தானொன்று குறி ப்பான தங்கமொன்று நாகமொன்று, விள்ளாத ஈப மொன்று உருக்கியாட்டி விறவிடுநீ கல்வத்திற் பொடி யாய்ப்பண்ணி, அள்ளாத சூதமது பலந்தானொன்று அசடில்லாக் கெந்தகந்தான் பலமுநானு, தள்ளாத ம ல்லிகையின் சாற்றாலாட்டித் துடியாக வெண்சாமம் ரவியிற்போடே. (௬௫௬)

போட்டெடுத்துப் பொடியாக்கி மேருக்கேற்றிப் புகழான வாலுகையின் மேலேவைத்து, ஆட்டெடுத் துப் பனிரண்டுசாமந்தீயை ஆறவிட்டுப் பார்த்தாக்கா ல் செந்தூரமாகும், பூட்டெடுத்து ஆயிரத்துக் கொன் றுபோடு புகழாகப் பதினாறு மாற்றுமாகும், நீட்டெ டுத்து மண்டலந்தான் தினங்குன்றியுண்ணு நேரான சட்டைகக்கிப் பாலையாமே. (௬௫௭)

காந்தசத்துச் செம்பு.

ஆமென்ற காந்தமது பலந்தான்பத்து அப்ப னே குன்றிபோ லுடைத்துக்கொண்டு, காமென்ற

Digitized By Roja Muthiah Research Library

செம்மறிப்பால் படிதானானு களரவிட்டு சுறுக்கிடுநீ
நாலுசாமம், தாமென்ற கல்வத்திற் செம்மறிப்பால்
விட்டுத் தாக்கியரை நால்சாமம் புடத்தைப்போடு, ஆ
மென்ற பாலாலே அரைத்தரைத்து அப்பனே யைந்
துபுடம் போட்டுத்திரே. (௫௱௮)

தீர்ந்தபின்புப் பொடியாக்கி அயச்சட்டியிட்டு
செம்றிமயின் ரோமமது பலந்தான்பத்து, ஆய்ந்தபி
ன்பு சுறுக்கிட்டு ரோமந்தன்னை யப்பனே தைலத்திற்
புரட்டிப்போடு, காய்ந்தபின்பு ரோமத்தின் தைல
மெல்லாங் கரிபோடே வாரிவைத்துக் கருக்கைக்கே
ளு, தேய்ந்தபின்புக் கருங்குன்றி வேர்ச்சார் படிதா
ன் சிறப்பானக் கொள்ளிலைச்சார்ப் படிதானென்றே.

ஒன்றான பொன்னிறு வாரைச்சாறு உயர்ந்த ஆ
தளையின்பால் படிதானென்று, கன்றான செவ்வல்லி
க்கிழங்குச்சார்படிதான் கார்த்திகையின் கிழங்குச்சா
ர் படிதானென்று, தின்றான புளியபறணைக் கிழங்குச்
சாறு சிறப்பான நல்லெண்ணெய்ச் சமனாய்க்கூட்டி,
நன்றான அடுப்பேற்றிக் கமலம்போலெரித்து நலமா
கக் குழம்பானப் பதத்திற்பாரே. (௫௯0)

பார்க்கவே கெந்தகந்தான் பலமூன்று பரிவா
ன வெண்காரம் பலமுமைந்து, ஏற்கவே துரிசிபது ப
லமுமைந்து எளிதான வீரமது பலமுமொன்று, கா
ற்கவே குடோரிபது பலமுமொன்று கல்வத்தி லிட்
டெல்லாம் பொடியாய்ப்பண்ணி, சேற்கவே மூன்மருந்
தி லொக்கப்போட்டுச் சிறப்பாகக் குழம்பானப் பதந்
தில்வாங்கே. (௫௯௧)

வாங்கியே காந்தத்திற் பிசறிக்கொண்டு வளமா
கச் சரவுலைபா லூதலூது, தாங்கியே கரட்டோடுச்

Digitized By Roja Muthiah Research Library

சத்தாய்வீழுந் தப்பாமற்சத்தெலலாம்பொறுக்கிக்கொண்டு, தேங்கியே கறடுடைத்துத் தயிலத்திற்பிசறிச் செப்பரிய காளத்தக ஊதித்தீரு, பாங்கியே யைந்துதர மூதித்தீரு பருதிப்போல் நிறமாகச் செம்புமாச்சே. (௯௬௨)

செம்பான காந்தமது பலந்தானறு திரமான தங்கமதுப் பலந்தானென்று, கம்பான நாகமது பலந்தானென்று கருதிபதோர் கட்டானச் சூதமொன்று, நம்பான இவையனைத்து முறுக்கிக்கொண்டு நலமாகக் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி, கொம்பான குலாமல்லிச் சாற்றாலாட்டிக் குமுறவே மூன்றுநாள் ரவியிற்போடே. (௨௯௩)

போட்டுவா முன்சொன்ன சூதத்திலாட்டிப் புதிதானக்[கெந்தகத்தைச் சுத்திசெய்துப்போட்டுக், கேட்டுவாய் பொடிப்பண்ணி மேருக்கேற்றிக் கெடியான வாலுகையின் மேலேவைத்து, நாட்டுவா பணிரெண்டு சாமந்தீபை நலமாகவாறவிட் டெடுத்துப்பாரு, சாட்டுவா மாதளம்பூப் போலேயாகுஞ் சகத்திரந்துக் கொன்றோடும் வேதைதானே, (௯௬௪)

தானான செந்தூரங் குன்றியுண்ணச் சாதகமாய் மண்டலத்திற் சட்டைக்குங், கோனான காயமெல்லாஞ் சிவந்துமின்னுங் கோடியான நரம்பெல்லாம் பவழம்போலாம், பானான வஸ்துவுண்டா லகிரியில்லைப் பாஷாண வர்க்கங்கள் கறிசோறாகு, மூனான சட்டைகானுங் கோடிகால முற்றமனே சமாதியிலே யிருக்கலாமே. (௯௬௫)

லோகத் திராவகம்.

இருக்கவே லோகமென்ற திராவகத்தை யியம்பி டவே யானந்தா முற்றுமேகேளு, பருக்கவே வெடியுப் புப் பலந்தானூறு பரவியதோர் சீனமது எண்பத் தைந்து, தருக்கவே துரிசியது நாற்பதாகுஞ் சாரத் தான சாரமது மிருபதாகும், முருக்கவே கல்லுப்புப் பலந்தான்பத்து முயர்த்தியாம் பூநீறுப் பலந்தானைந் தே. (௩௬௬)

ஐஞ்சான சத்தியென்ற சாரம்நாலு மழகாகுங் கெந்தியுப்புப் பலந்தான்மூன்று, வஞ்சான முருவியு ப்புப் பலந்தாமொன்று வகையெல்லாம் பொடித்து வொரு சட்டியிட்டு, கஞ்சான கமுதையுட கந்தம்வா ர்த்துக் கடிகியரை யேழுநாள் ரவியிற்போட்டு,துஞ்சா ன யடிக்கனத்த கலசத்திட்டு துயரறவே யரைக்கல ச மட்டும்போடே, (௩௬௭)

போட்டதின்மேற் சக்கரமாம் பாலைசட்டிப் பொ ருந்தவே மேற்கவிழ்த்து மாஷந்தன்னால், நாட்டதி ன்மேற் சீலைசெய்து ரவியில்வைத்து நலமாக வடுப்பே ற்றி யெரிநேர்பாக, நீட்டதின்பின் பீங்காணுங் கின் ணிவைத்து நேர்பாகச் சட்டியின்மேற் தண்ணீர்க்கு த்து, பூட்டதின்மேற் புகையோடே சலந்தான்வீ ழும் பொருந்திமுன்னீர் தனையகற்றிப் பின்னீர்வா ங்கே. (௩௬௮)

வாங்கியே முன்வைத்த சரக்குதன்னை வகையாக வைந்துபங்கு செய்துவைத்துத், தேங்கியே மருபங்கி லிதனையூற்றிச் சிறப்பாக முன்போலக் கலசத்திட்டு, தாங்கியே யடுப்பேற்றி யெரித்துவாங்கிச் சாதகமாய்

முன்போலே மருசரக்கிலூற்றி, பாங்கியே யுலரவிட்டுக் கலையத்திட்டுப் பக்குவமா யைந்துதர மிப்படியே வாங்கே, (௬௬௯)

வாங்கியே யரக்காலே குப்பிசெய்து வளமாகத் திராவகத்தை யதிலேவாரு, தேங்கியே சூதமொரு பலந்தானெட்டு சிறப்பாகக்கல்வத்தி லிட்டுக்கொண்டுப், பாங்கியே தினமூன்று திராவசத்தாலாட்டிப் பெரும்பீங்கான் றன்னிலே வழித்தெடுத்து,தாங்கியே கரியோட்டில் வறுத்துப்போடு சரசமாய்ப்பொடிப்போலே மேருக்கேற்றே. (௬௭0)

ஏற்றியே வாலுகையின் மேலேவைத்தே யிதமாகத் தீயெரித்துப் பனிரெண்டுசாமம், போற்றியே யாறவிட்டு யெடுத்துக்கொட்டிப் புகழாகத் திராவகத்திலரைத்துலர்த்தி, தூற்றியே பொடிபோலே குப்பிக்கிட்டுச் சுகமான வாலுகையின் மேலேவைத்துப், பாத்தியே பனிரெண்டு சாமந்தானும் பக்குவமாய்த் தீயெரித்து ஆறவிட்டுவாங்கே. (௬௭௧)

வாங்கியெல்லா முன்போலே யரைத்தெடுத்து வரிசையா யைந்துமுறை தீர்த்துப்பேறு, தாங்கியே செந்தூர மருணன்போல தளத்திலே யிருக்குமப்பா யிதனின்வேதை, ஓங்கியே கோடிக்கு ஒன்றுவேதைமுத்தமனே கதலியுட பழத்தைவாங்கி, தேங்கியே பணவிடைதா னுள்ளே கொள்ள சிவசிவா சூரியன்போல் தேகமாச்சே. (௬௭௨)

ஆச்சப்பா திராவகத்தி லனந்தவித்தை யாராய்ந்து ஒவ்வொன்றுய்ப் பார்த்துத்தேரு, வச்சப்பா கட்டினமோ ருருக்கினமோகோடி யெடுத்தோடுங் குளி

Digitized By Roja Muthiah Research Library

ணைமுதற் செந்தூரங்கோடி, வாச்சப்பா சுண்ணமொ
டு களங்குகோடி யுழங்கிபதேகர்க் குருக்கோடி மெழு
குகோடி, பாச்சப்பா வொவ்வொன்றில் வேதைகோடிப்
பரீக்ஷிக்கத் தாமமுத லெட்டுமாமே. (௩௭௩)

துருசித் திராவகம்.

ஆமென்ற துரிசியுட திராவகத்தைச்சொல்வே
னப்பனே துரிசியொரு பலந்தானூறு, காமென்றவெ
டியுப்புப் பலந்தானூறு கலங்காத சீனமது பலந்தா
னூறு, வேமென்ற சவுட்டுப்புப் பலந்தானைந்து வெ
ருளாதே வளைபலுப்புப் பலமுமைந்து, தாமென்ற
கெந்தியுப்புப் பலமுமைந்து தயங்காத யிந்துப்புப் ப
லமுமைந்தே. (௩௭௪)

ஐந்தோடு சத்தியென்ற சாரம்பத்து அப்பனே
கல்லுப்புப் பலமும்பத்து, நஞ்சோடு வீரமது பலமு
மூன்று நவச்சார மிரண்டுபத்து பலத்தைப்போடு,
பிஞ்சோடு கருராங்கு பலமுமொன்று பேசாதே வா
ழையுப்பு யுருவியுப்பு, பஞ்சோடு மணியுப்பு மேனியு
ப்புப் பதருந்தே யொவ்வொன்று பலமும்போடே. ()

போட்டொல்லாம் பறங்கியுட சாறுயம்வார்த்து
ப்போராக நாள்மூன்று வாட்டுவாட்டு, ஆட்டெல்லாம்
ரவியிலிட்டு பைந்துபங்குபண்ணி யப்பனே யொருப
ங்கு கலைப்பத்திட்டு, பூட்டெல்லாம் பாலையென்ற சட்
டிமூடிப் போராக மாஷத்தால் சீலைசெய்து, மூட்டெல்
லா மடுப்பேற்றி பீங்கான்வைத்து முயற்சியாய் திரா
வகத்தை வாங்கிடாயே, (௩௭௭)

வாங்கிட்ட திராவகத்தை மருசரக்கிலூற்றி வள
பாக ரவியிலிட்டு கலசத்திற்போட்டு, தேங்கிட்ட தி

Digitized By Roja Muthiah Research Library

ராவகத்தை வாங்கித்திரு சிறப்பாக வைந்துதிர மிப்ப
டியேவாங்கு, பாங்கிட்ட யரக்காலே குப்பிபண்ணிப்
பதனமாய் மூட்டிவைத்துப் பாங்கைக்கேளு. தேங்கி
ட்டப் பாறையுப்புப் பலமீரேழு சிறப்பாக திராவகத்
திற் றேய்த்திடாயே. (௯௭அ)

தோய்த்துமே தினமேழு ரவியிற்போடு திறமான
வெடியுப்புச் சீனக்காரங், காய்த்துமே கடல்நுரையு
ஞ் சூடனிந்துக் கலங்காதேபூநீறுக் காரம்வீரங், தே
ய்த்துமே நவச்சாரந் துரிசிவெள்ளைச் சிறப்பாகப் பதி
னொன்றுந் திராவகத்திலாட்டி, ஏய்த்துமே வில்லைகட்
டி யுலரப்போட்டே யிதமாக வகலிலிட்டு அவிபுட
மாய்ப்போடே. (௯௭௯)

புடம்போடு யரைத்தரைத்து யைந்துதிரந்தானு
ம் புகழாக எருவெடுத்துப் பத்துமட்டுந், திடம்போ
டுத் திராவகத்தில் பலந்தானேழுச் சிறப்பாகப் புடம்
போட்ட மருந்தைத்தானுங், கடம்போடு குழம்பாகக்
கரைத்துக்கொண்டுக் கல்லுப்பில் பிசரியல்லோ கரி
யோட்டில்வாட்டு, நடம்போடு குழம்பெல்லாந் தோய்
த்துவாட்டு நலமாகக் கரியோட்டில் முதிரவாட்டே.

வாட்டியே கவசிக்க மருந்துகேளு வகையாக ஏ
ரலென்ற கிளிஞ்சிதன்னை, காட்டியே சுண்ணம்புஞ் ச
வுட்டுமண்ணுங் கலங்காதே தண்ணீரால் கலக்கிக்
கொண்டு, ஒட்டியே தீயெரித்து வற்றமட்டு முத்தா
னே புடம்போட்டுத் தூளாய்ப்பண்ணி, நாட்டியே தி
ராவகத்தா லரைத்தரைத்து நலமாக யைந்துபுடம்
போட்டுத்தீரே. (௯அ௧

Digitized By Roja Muthiah Research Library

உப்புக் கட்டு.

திரவே புடம்போட்ட மருந்துதன்னைத் திராவகத்தா லரைத்துருட்டி மெழுகுபோல, ஆரவே முன்னுப்பில் கவசங்கட்டி அசையாதே கலைபத்தில் பூநீர் வைத்து,ஊரவேயதின்மேலே யுப்பைவைத்து உத்தமனே மேலுமந்தப் பூநீர்போட்டு, நேரவே சில்லிட்டுச் சீலைசெய்து திறமாகக் கெஜபுடமாய்ப் போட்டுவாங்கே. (௫அ௨)

வாங்கியே உப்புமணி பார்த்தால்மக்காள் வயிரம்போலிருகியது தந்தம்போலாம், ஏங்கியே கரியில் வைத் துருக்கிப்பாரு என்மகனே தங்கம்போல் கண்விட்டாடுந், தேங்கியே கரியில்நின்றுக் கம்பித்தால் சிறப்பாக முன்போலப் புடத்தைப்போடு, ஓங்கியே யொருவருடன் பேசவேண்டாம் உரத்தியே கடுங்காரஞ் சுண்ணத்தி லூதே. (௫அ௩)

சுண்ணமென்ற குகைதனிலே ஊதியபின்மைந்தா துடியாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு, கண்ணமென்ன திராவகத்தி லிதனைப்போட்டுக் கலரவேமர்த்தித்து வைத்துக்கொண்டு, பன்னமென்ற சூதமதாபலந்தானெட்டுப் பாச்சியே கல்வத்தில் திராவகத்தைவாரு, சின்னமென்ற சாமமொன்று அரைத்து நன்றாய்ச் சிறப்பாக ரவிதனிலே போட்டிடாயே. ()

போட்டுவா அரைத்தரைத்து ரவிதனிலேயப்பா புகழாக மாதமொன்று மறவாமல்நீயும், காட்டுவா சூதமது சிவப்பேயாகுங் கண்கொள்ளா வேதையுமாங் கண்டுகொள்ளு, நீட்டுவா குகையிலிட்டுக் காயவைத்து நினைவாகக் கையிடவே குளிர்ந்துபோகும், பூட்டு

Digitized By Roja Muthiah Research Library

வா வென்னீரைக் கொப்பறையிற்காய்ச்சிப் புகழாக த்துளிருத மதுக்குட்போடே. (௩அரு)

பாலரசம்.

போட்டுடனே குளிர்ந்ததண்ணீர் போலேயாகும் போக்கானபாலேரசம் பரிட்சைசெம்மை, நாட்டுடனே நாலுபலம் நிறுத்துக்கொண்டு நலமான தங்கமது பல ந்தாவொன்று, பூட்டுடனே கல்வத்தி லிதனைப்போட் டுப் புகழான கருந்துளசிச் சாறுவிட்டு, தோட்டுட னே நாள்மூன்று அரைத்துப்பின்பு துடியான கெந்த கத்தைச் சேருபோடே. (௩அசு)

போட்டரைத்து தினமொன்று ரவியில்வைத்துப் பொடியாக்கிக் காசியென்ற மேருக்கேற்றி, நீட்ட ரைத்து வாலுகையின் மேலேவைத்து நினைவாக தீயி டுவாய்ப் பனிரண்டுசாமம், கூட்டரைத்து ஆறவிட்டு எடுத்துப்பாரும் கொடியான மாதளம்பூ நிறம்போலே நிற்கும், தோட்டரைத்துச் சந்திரோதையமென்ற நா மந் துலங்கியதின் மகிமைசொல்ல முடியாவாறே. ()

முடியாத செந்தூரங் குன்றியுண்ண முனைபான காயமது சிவந்துமின்னும், பிடியாத மதயானைபோ லேயொத்துப் பெண்களுடன் அனுபோகம் பண்ணி னுக்கால், துடியாக நூறுபே ரிருக்கவேணுஞ் சுக்கி லந்தா னூறுகின்ற கேணியாகும், மடியாத நோயெல் லாம் மருந்துப்போடு மம்மம்மா செண்பகத்தின் கண் போலாமே. (௩அஅ)

லிங்க மெழுகு.

ஆமிந்து செந்தூர மாயிரத்துக்கொன்று அணை த்திடவே யிருபத்துமைந்துமாற்று, போயிந்தச் சரக்

சூகளிற் பொட்டுப்போட பேராககட்டுண்டு மெழுகு மாகுங், காயிந்தத் துரிசியின்மேல் வாய்நீருலப்பிக் க டு·ஷியிற் போட்டிடவே குருவுமாகும், வாயிந்தத் து ரிசியினால் சூதங்கட்டும் மகத்தான லிங்கமது மெழுகு மாமே. (௩அ௯)

மெழுகாகப் பொன்னிறு வாரைதன்னை மேதித் து பிடித்துவைத்துக் குருவைப்போட்டு, நழுகாகச் சாறுமொரு படியும்வாங்கி நல்லலிங்கம் வொருபலந் தான் கட்டியாக, சுனுவாக அயச்சட்டிக் குள்ளேவை த்துச் சுறுக்கிடவே லிங்கமது மெழுகாய்ப்போகும், வி ழுகாக நவலோகம் நூற்றிலீய வேதிச்சு மாற்றென்ன பணிரண்டாமே. (௩௯0)

மகா திராவகம்.

ஆமப்பா மகத்தான திராவகத்தைச்சொல்வே னப்பனே பெருக்கோடு குப்பைமேனி, போமப்பா தாழையொடு யறுகுவாழைப் பேரான மத்தையொடு துத்திகள்ளி, தாமப்பா தென்னிலையும் நாயுருவிஞண ல் தயங்காத பிரண்டையெள்ளு முடக்கொத்தானுஞ், சாமப்பா புரசோடு முள்ளங்கிதன்னைத் தயங்காதே காயவைத்துச் சாம்பலாக்கே. (௩௯௧)

காயவைத்துசுட்டுமே சாம்பலாக்கிக் கலங்காதே வெவ்வேறுய்த் தண்ணீற்கரைத்து, தோயவைத்து மூ ன்றுநாள் தெளியவாங்கிச் சுகமாக வடுப்பெரித்து உ ப்பாய்க்காய்ச்சி, வாமென்ற ரெண்டுபலந் தூக்கிக் கொண்டு வளமானழுயல்ப்புழுக்கை யெலிப்புழுக்கை தேமென்ற வவ்வாலின் புழுக்கையோடு சிறப்பாக இவைமூன்றுஞ் சுட்டுசாம்பல், காமென்ற கடல்த்த ண்ணீர்க் குள்ளேபோட்டுக் கலங்காதேதெளிவிருத்து வுப்பாய்க்காய்ச்சே. (௩௯௨)

Digitized By Roja Muthiah Research Library

காய்ச்சியே பலம்பத்து நிறுத்துக்கொண்டு கடி
தான வீரமது பலமுமூன்று, தாய்ச்சியே தாளகமும்
பலமுமூன்று தயங்காத சிலையதுவும் பலமும்மூன்று,
பாய்ச்சியே வெள்ளையது பலமுமூன்று பரிவான கெ
ந்தகமும் பலமுமூன்று, வாய்ச்சியே துத்தமது பல
முமூன்று மகத்தான பேதியது பலந்தானுமே. ()

ஆறுக சாரமது பலந்தானுறு அடவான கல்லுப்
புப் பலந்தானுறு, ஏராகவிந்துப்புப் பலந்தானுறு வெ
ளிதான வளையலுப்புப் பலந்தானுறு, பேராக வெங்
காரம் பலந்தானுறு பெலத்துநின்ற சத்தியென்ற சா
ரமாறு, நீராகப் பூநீறு பலந்தானுறு நிலைத்தகெந்தி யு
ப்பதுவும் பலந்தானெட்டே. (௩௧௫)

எட்டான கடல்நுரைதான் பலமுமெட்டு யிய
லான துரிசியது பலந்தானெட்டு, கட்டாத வெடியுப்
புப் பலந்தானூறு கலங்காத சீனமது பலந்தானூறு,
தெட்டாத பறங்கியுட சாறுபம்வார்த்துச் சிறப்பாக
வழுனை ளரைத்துலர்த்திப், பட்டாத ஐந்துபங்கு
பண்ணிவைத்துப் பக்குவமாயொருபங்கு கலையத்தா
ட்டே. (௩௧௬)

ஊட்டியே மேற்சட்டிக் கவிழ்த்துமூடி யுத்தம
னே மாஷத்தால் சீலைசெய்து, நீட்டியே யடுப்பேற்றி
யெரிநேர்பாக நிலைத்ததுவும் புகைபோட்ட சலந்தா
ன்வீழும், காட்டியே புகைநின்றால் திராவகமும்கிறகு
ங் கலங்காத முன்வைத்த சரக்கில்வார்த்து, குட்டி
யே ரவியில்வைத்து கலசத்திட்டுத் துடியாகத் தீநீரை
வாங்குவாங்கே. (௩௧௭)

Digitized By Roja Muthiah Research Library

வாங்குமே பைந்துதர மூட்டியூட்டி மறவாதே அரக்கான குப்பியிலேவாரு, தேங்குமே மண்கல்லு ரோமமஸ்திசிறப்பான நவலோக மெல்லாஞ்சாம்பல். ஏங்குமே முகத்திலந்த தூமம்பட்டால் எளிதிலே க ண்களெல்லாங் கறைந்துபோகும், பாங்குமே தூமமு கம் பார்த்துநின்று பதறுதேவிரகைமெள்ள யடுப்பிற் போடே. (௫௯௮)

போட்டிட்டுத் தூரத்தே நின்றுகொள்ளு புகை மேலே பட்டுதென்றால் சடம்விரிந்துபோகும், வாட் டடவே சரக்குகளிற் றேப்த்துப்போட நகத்தான மெழுகாகும் வேதையாகும், நீட்டிட்டு யேறலென்ற கிளிஞ்சிதன்னை நீரோடே யுவருமண்ணுந் தண்ணியி லேபோட்டுக், காட்டிட்டு யடுப்பேற்றி யெரித்துவாங் கிக் கனபுடமாய்ப் போட்டெடுத்துத் தூளாய்ப்பண் ணே, (௫௯௯)

பண்ணியே திராவகத்தில் போட்டுவைத்துப் ப தறாதே மூன்றுதினங் கழித்துப்பின்னை, நண்ணியே கல்வத்தி லரைத்துருட்டி நலமாக யகலிலிட்டுப் புட த்தைப்போடு, கண்ணியே யைந்துதரந் திராவகத்தி லரைத்து கடுகியே புடமைந்துப் போட்டுத்தீரு, திண் ணியே பொடியாக்கிப் பீங்கானில்வைத்துச் சிற்பரம் போல் சாரமது கட்டிவாங்கே. (௬௱)

வாங்கிபொரு கலயத்திற் பொடிகீழிட்டு வாசா ன சாரமென்ற கட்டிவைத்து. தேங்கியே மேலுமந்த பொடியைப்போட்டுச் சிறப்பாக மேல்மூடிச் சீலைசெ ய்து, தாங்கியே பைந்தெருவிற் புடத்தைப்போடுத் தயங்காதே யாறவிட்டு யெடுத்துக்கொண்டு. ஓங்கியே

பொடியெல்லாம் பொடித்துக்கொண்டு மூத்தமனே முன்போலே கட்டிவையே. (௫0௧)

கட்டிவைத்த முன்போலப் புடத்தைப்போடு காணப்பா ஏழுபுடம் போட்டுத்தீரு, அட்டிவைத்துத் தந்தம்போ லிருக்கும்பாரு மாச்சரியஞ் சாரத்தின் முடிவுசொல்லப்போகா, மூட்டிவைத்து சாரத்தில் செயநீர்கோடி மூதண்ட குருக்கோடி செந்தூரங்கோடி, பொட்டிவைத்து திறந்ததுபோல் வாதமாச்சுப் போக்கதிலே மெத்தவுண்டுப் புகட்டியாமே. ()

ஆடவே சாரத்தைக் கட்டியாக அதின்மேலே சவ்வீரம் பூரஞ்சீனம், நீடவே புழுகோடு சூதமஞ்சும் நேரான வாய்நீறு லரைத்துப்பூசி, கூடவே சுண்ணும்புக் குகைவிட்டுக் கூசாதே கரியோட்டி லூதிவாங்கு, சூடவே நீராகும் பீங்காணில்வைத்துத் துடியாகப் பனியில்வைக்கச் செயநீராமே. (௫0௫)

ஆமின்னஞ் செயநீரால் சொல்லக்கேளு ஆச்சரியஞ் சூதத்தைக் கல்வத்திட்டு, வேமின்னஞ் செயநீரா லரைத்தரைத்து வெருளாதே ரவிதனிலே காயப்போட்டு, தாமின்ன மிருபதுனா ளரைத்தரைத்துச் சாமந்தான்தவறாதே ரவிதனிலே காயப்போட, சேமின்ன மேழுசட்டை நீக்கிப்போட்டு சிவந்திருக்கும் ரசந்தானுஞ் சேதிகேளே. (௫0௬)

சேதிகேள் தேங்காயின் குடுக்கையிலேவார்த்து சிறப்பாக மெழுகடைத்து வைத்துக்கொண்டு, வாதிகேள் ரவிமதியில் தகடுவாங்கி வளமாக ரசந்தடவிப் புடத்தைப்போடு, பாதிகேள் பதினாறு மாற்றுமாகும் பரிசத்தில் வேதையுமாம் பாருபாரு, சோதிகே ளிந்

த ரசந் தின்றகாயஞ் சுறுக்காகச் சட்டைகக்கிப் பாலே யாமே. (ச0ரு)

கெந்தகத் தயிலம்.

ஆமின்னங் கெந்தகத்தின் றயிலஞ்சொல்வே ன ப்பனே கெந்தகந்தான் பலமும்பத்து, காமின்னங் கற் றுழைக் குள்ளேவைத்துக் கடுஆவின் பால்நெய்யில் சுத்திபண்ணி, தேமின்னங் கல்வத்தி லிதனைப்போட்டு சிறப்பான குருக்கத்தி விரையைவாங்கி, ஓமின்ன மை க்கொன்றை விரையிஞேடே உற்பனமாய்ச் சமனுக்கி வெங்காயச்சாறே. (ச0சா)

சாற்றினு லரைத்தரைத்து வில்லைகட்டிச் சார் வாகப் பூப்புடத்திற் றயிலம்வாங்கு, சேற்றினுல் தயி லம்விட்டுக் கெந்தகத்தைச் சிறப்பாக இருபதுனுளாட் டு ஆட்டு, பேத்தினுல் துரிசிவெள்ளைப் பலந்தானெ ன்று பேராகக் கட்டியதோர் சாரமொன்று, காற்றினு ல் கட்டியதோ ருப்புவொன்று கலங்காதே கூடவிட்டு மூன்றுனுளாட்டே. (ச0எ)

ஆட்டியபின் காசிமென்ற மேருவிற்போட்டு அப் பனே மூக்கின்வாய் கதம்பைவைத்து, மூட்டியபின் கவிழ்த்துச் சட்டியிலேபோட்டு மூக்கின்வாய் பிரம் பைவிட்டு மணலைக்கொட்டி, நீட்டியபின் னடுப்பேற்றி யடுப்புக்குள்ளே சிறப்பாக பீங்கானும் பாணிவைத் து, ஓட்டியபி சட்டியின்மே லெருவைப்போட்டு உ த்தமனே தயிலமெல்லா மெடுத்துவையே. (ச0அ)

தயிலமெல்லாம் வீழ்வதற்கு மூன் மபுடம்போட த் தங்காமலிறங்கிப்போம் பீங்கானுள்ளே, அயிலமெ ல்லா மீய்ந்தாலுந் தயிலம்விலைக்கொவ்வா தாச்சரிய

Digitized By Roja Muthiah Research Library

ம் பரிமேலே பூசிக்காய்ச்சே, மயிலமெல்லாந் தங்கம
து செம்பேயாகு மாசற்ற செம்பொன்று நவலோகங்
கோடி, கயிலமெல்லா முருகையிலே செம்பையிய க
ண்கொள்ளா வேதையுமாங் கண்டுபாரே. (சமகூ)

கேசரத்தின் தயிலம்.

பாரப்பா கேசரத்தின் றயிலஞ்சொல்வேன் பரி
வான கேசரந்தான் பலந்தானூறு, சேரப்பா யிளவய
து ரோமந்தன்னை சீயக்காய் கொதிபவிட்டுக் கழுவிப்
போட்டுக், காரப்பா எள்ளுப்போல் நறுக்கிக்கொண்
டு கசக்காமல் எள்ளெண்ணெய்த் தன்னிற்றோய்த்து,
சீரப்பா சட்டியிலே வறுத்துக்கொண்டு சிறப்பாகக் க
ல்வத்தி லிதனைப்போடே. (சசo)

போடவே கெந்தகந்தான் பலமும்பத்து பொலி
வான தாளகமும் பலமுமைந்து, நாடவே சிலையது
வும் பலமுமூன்று நஞ்சான வீரமது பலமும்ரெண்டு,
கூடவே கட்டியதோர் சாரமொன்று குறிப்பாகக் க
ட்டியதோர் கல்லுப்பொன்று, தேடவே துரிசிருரு ப
லந்தானொன்று சிறப்பாகக் கூடவிட்டுத் திறமாயாட்
டே. (சசக)

ஆட்டுவது எருக்கம்பால் நாலுசாமம் அப்பனே
மெழுகாகும் பதத்தில்வாங்கு, பூட்டுவது தெல்லுப்
போல் வில்லைகட்டிப் போரானபூப்புடத்திற் தயிலம்வா
ங்கி, நாட்டுவது பரணியிலே அடைத்துவைத்து நல
மான அரப்பொடிதான் பலமுமெட்டு, மூட்டுவது த
யிலத்திற் பிசரிக்கொண்டு முயற்சியாய்க் காரமிட்டு
உருக்கிடாயே. (சசஉ)

Digitized By Roja Muthiah Research Library

அயச்செம்பு.

உருக்கிடவே ஐந்துதிரந் தயிலத்திற்பிசிரி உத்தமனே ரவிபோலே செம்புமாகுஞ், சொருக்கிடவே மதிதனிலே அன்பதுக்கொன்றுத் துடியாக மாற்றேழு காணுங்காணும், அருக்கிடவே தங்கமிட்டு நாகமிட்டு ஆதியென்ற சூதமிட்டுக் கெந்தியிட்டு, பருக்கிடவே வாலுகையிற் செந்தூரித்தால் பதினாறு மாற்றாக விளங்கும்பாரே. (சகங)

தாளகச் செம்பு.

பாருமின்னந் தாளகத்தின் செய்புசொல்வேன் பருங்கல்லுச் சுண்ணாம்புச் சுட்டுக்கொண்டு, காருமின்னந் தாளகத்தைக் கிளிபோற்கட்டிக் கற்சுண்ணங் கீழ்மேலு மூடிநன்றாய், வாருமின்னம் வெண்ணீரை விட்டுநீற்று மறவாதே யிருபத்து ஒன்றுநீயுஞ், சேருமின்னங் கூழ்ப்பாண்டங் காடியிலேபோட்டுத் திறமாகக் கொதிக்கவிட்டு மிறக்கிடாயே. (சகச)

இறக்கியே கல்வத்திற் சேரைப்போட்டு இதமான குலாமல்லிச் சாற்றாலாட்டி, அரக்கியே உலரவிட்டு ஐந்துநாளாட்டு ஆடுதின்னாப் பாளைச்சார் நாலு சாமம், மறக்கியே சிறுகுட்டித் தக்காளிச்சாறு மைந்தனே அவுரியிலைச் சாற்றாலாட்டு, நறக்கியே எருக்கினுடப் பழுப்புச்சாறு நலமான அகத்தியுடப் பழுப்புச்சாறே. (சகரு)

பழுப்பான கொட்டைக் கிழங்குச்சாறு பரிவான வெருகினுட கிழங்குச்சாறு, கொழுப்பான வெள்ளாட்டு ரெத்தத்தோடு கூறுத முசலிரத்தங் கோழிரெத்தஞ், செழுப்பான வெள்ளைமந்தாரைப் பூச்சாறு

Digitized By Roja Muthiah Research Library

திறமான இந்திரமாங் கோபப்பூச்சி, நழுப்பான பூறு கம் நூறுபோட்டு நலக்கரைத்து ஒவ்வொருநு ளுலர ப்போடே. (சகசா)

உலர்ந்தபின்பு துரிசிபலம் நாலுபேரடு உத்தம னே வெண்காரம் பலமூன்று, அலர்ந்தபின்பு வெ டியுப்புப் பலந்தான்ரெண்டு அப்பனே வீரமது பல ந்தானென்று, நலந்தபின்பு கட்டியதோர் கல்லுப் பொன்று நவச்சாரங் கட்டியதோர்ப் பலந்தானென் று, குலந்தனக்குக் கோடாலி குடோரிபொன்றுகூசா தே கூடவிட்டு அரைத்திடாயே. (சகஎ)

அரைத்திடவே எரியாலம் பாலாலாட்டி அப்ப னேமூன்றுனாளரைத்துப்பின்பு,கிரைத்திடவே தெல் லுப்போல் வில்லைகட்டி நேராக சரவுலையி லூதுஊது, திரைத்திடவேஉருகியது சத்தாய்வீழுஞ் சிதறுமலெ டுத் தெல்லாங் கறட்டைத்தானும், புரைத்திடவே பி ன்பொருக்கா லுருக்கிப்பாரு பொன்போலாஞ் சத்தெ ல்லா மெடுத்துக்கொள்ளே. (சகஅ)

தாளகச் சத்துக் கிண்ணி.

கொள்ளவே குகையில்வைத்துக் காரமிட்டுக் கூ சாதே யுருக்கியெல்லா மணிபாய்வாங்கி, விள்ளவே ந வலோகம் நூற்றுக்கொன்று மேவியதோர் காசிடை தான் சத்தையிய, துள்ளவே பதினாறு மாற்றுமாகுந் துடியாக சத்திலே கிண்ணிவார்த்து, அள்ளவே சீலை செய்து வாலுகையில்வைத்து ஆதியாஞ் சூதமிட்டு கொதிக்கவையே. (சகக)

கொதிக்கையிலே கருவூமத்தஞ் சாறுவாரு கூசா தே வெண்ணெயைப்போ லாகுமட்டும், விதிக்கையிலே

வெண்ணெயெல்லாம் வழித்துக்கொண்டு மேலான குளிர்ந்தநீர் தன்னிற்போட்டு, மதிக்கையிலே ஆரையிலேக் கவசங்கட்டி வகையாக ஈரஞ்சு புடத்தைப்போடு, துதிக்கையிலே மணிபாலே சிவத்தைப்பண்ணு செனனமென்ற மூலேழு மோட்சந்தானே. (௪௨௦)

தானென்ற மணியாலே செந்தூரம்பண்ணு சமத்தாக குருப்பண்ணு களங்குபண்ணு, வானென்ற வெளிகடக்க காயசித்திபண்ணு யாசற்ற யோகசித்தி கவனசித்திபண்ணு, தேனென்ற அமுர்தமெங்கே சித்திபண்ணு செகச்சால வார்த்தையெல்லாஞ் சகம்போலெண்ணு, கோனென்ற குருத்தேடி தொண்டுபண்ணு கூப்பிட்டால் ஏனென்பா ளாயிதானே. ()

சாதிலிங்க வைப்பு.

தானென்ற சாதிலிங்க வைப்புக்கேளு சாற்றரிய சூதமது பலந்தானூறு, தேனென்ற கெந்தகந்தானிருபத்தைந்து சிறப்பாக கெந்தகத்தை ஓட்டிவிட்டு, வானென்ற தணலில்வைத்து உருக்கிக்கொண்டு வரிசையாய்ச் சூதத்தை அதின்மேலகொட்டி, கானென்றஅயத்துடுப்பால் கிண்டுகிண்டுக் கருப்பாகத் தூள்போலேயாகும்பாரே. (௪௨௨)

ஆகுமப்போ கெந்தகத்தில் நாலத்தொன்று அசையாத வெடியுப்புப் பொடித்துப்போடு, வாகுமப்போ செம்பாலே குடம்போற்பண்ணி வகையாக யதுக்குள்ளே தூளைப்போடு, ஏகுமப்போ அரைவாசி மட்டும்போடு எளிதான வாலுகையின் மேலேவைத்து, போகுமப்போ தீயெரிப்பாய் எட்டுநாள்தான் புகழாகப் பதங்கித்து லிங்கமாமே. (௪௨௩)

ஆமப்பா பதங்கித்து பவழம்போலே அசையாத மேல்நின்ற ததுதான் லிங்கம், போமப்பா பாண்டம து செம்புத்தொட்டிப் புகழாக அடியில்நின்ற தீய்மு ருகலாச்சு, சாமப்பா நடுவில்நின்றால் கார்முகியுமா ச்சு கட்டியிதை மெழுகுசெய்யில் வேதையாகுஞ், சேமப்பா பாஷாண முப்பத்திரண்டு சிறப்பான வைப் புக்கு நாலுமாச்சே. (சஉச)

நாகபாஷாண வைப்பு.

வைப்பான நாகமென்ற பாஷாணத்தை வகையா கச் சொல்லுகிறேன் வேதையாக, மெய்ப்பான நாகம து பலந்தான்பத்து விரவியே யிலுப்பைநெய்யில் சு த்திப்பண்ணி, நைப்பானதக டடித்துப்புளி யிலைப் போல்நறுக்கி நட்பான கூத்தனென்ற இலையரைத்து, கைப்பான தகடுக்குக் கவசங்கட்டி கடுகியைந்து எரு தனிலே புடத்தைப்போடே. (சஉரு)

போட்டபின்பு ஈரஞ்சு புடந்தானப்பா புகழாக அயச்சட்டித் தனிலுறுக்கி, நீட்டபின்பு குமரிவேர்ப் பொடிப்பொடியாய்நறுக்கி நினைவாகக் கூடவிட்டு அ யத்தால்கிண்டு, காட்டபின்புப் பனிரண்டு சாமந்தானு ங் கற்றாழம் வேர்போட்டு கிண்டக்கிண்ட, மாட்டபி ன்பு மஞ்சல்நிறம் பற்பமாகு மைந்தனே யிதைநிறுத் துக் கல்வத்திற்போடே. (சஉசா)

போடவே நாகமென்ற நூள்தான்பத்துப் பேசா த ரூதமது பலந்தான்பத்து, நீடவே துரிசியது ப லந்தானைந்து நேர்பான சூடனது பலமுமைந்து, வா டவே வெண்காரம் பலந்தானைந்து வரிசையாங் கெந் தியது பலமுமைந்து, தேடவே வெள்ளைபது பல முமூன்று சிறப்பான வீரமது பலமூமூன்றே. ()

Digitized By Roja Muthiah Research Library

மூன்றேடு தாளகமும் பலமுமூன்று முயற்சியா
ஞ் சிலையதுவும் பலமுமூன்றே, தூன்றேடு இவைவெ
ல்லாங் கல்வத்திலிட்டுத் துடியாமற் பொடிப்பண்ணி
சூட்சங்கேளு, தான்ருக கொம்மட்டி மாதளையின் ப
ழச்சார்தானரைத்து எட்டுனாள் ரவியில்வைத்து, மூ
ன்றேடு பொடிபண்ணிக் குப்பிக்கேற்றிப் புகழான
வாலுகையில் வைத்திடாயே. (சஉஅ)

வைத்திட்டுத் தீயெரிப்பாய் பனிரண்டுசாமம்
வாகான கமலம்போல் தீயைமூட்டு, தைத்திட்டு ஆற
விட்டு மூன்றுனாள்போடு சாதகமா யறியபி னு
டைத்துப்பாரு, மொய்த்திட்டு மேலேரிப் பதங்கித்து
நின்ருல்மூற்கனும் பாஷாண மிந்திரனுமங், தைத்திட்
ட விலாட்பக்கஞ் சோரமென்றநாமம் காணப்பா அடி
யில்நின்ருல் நாகமாமே. (சஉகூ)

ஆமென்ற பாஷாண மூன்றுதானும் அன்றெரி
த்தார் மன்மதனை ஈசன்ருனும், ஓமென்ற நெற்றிக்க
ண் சுவாலைக்கொக்கு முத்தமனே சரக்குக்கு காலன்
காலன், போமென்ற வெகுதூர மெட்டியோடும்
பொன்பிறக்குங் கற்பகமாம் விருட்சமப்பா, வேமெ
ன்ற காலனுண்டக் கற்பமப்பா விரைந்துண்ண காயசி
த்தி மண்டலத்திலாமே. (சஙo)

சித்தியாஞ் சூதமென்ற பாஷாணவைப்புச் செப்
பறிது சித்தருட நூலிலில்லை, பத்தியாம் பாஷாணம் ப
ணந்தா னென்னப் பராபரியாயப் பேச்சாச்சு வாதப்
பேச்சு, முத்தியாஞ் சூதமென்ற பாஷாணத்தை முன்
னூற்றுக் கொன்றிடவே பத்தும்பத்தும், வெற்றியாம்
பாலிரணம் பச்சைவேதை வெகு நூலையாராய்ந்து
சொன்னேன்காணே. (சஙக)

Digitized By Roja Muthiah Research Library

காணப்பா என்னூலி லொன்றுதப்பில் கடை கெட்ட போக்கென்று சொல்லிக்காட்டு, பூணப்பா கைதப்பில் போக்குத்தப்பும் புத்தியுண்ட செய்திடி லோ வொன்றும்பொய்யா, வீணப்பா ஒருதிறந்தான் தப்பித்தாலும் மிறளாதே மூன்றுதிர முனைந்துபாரு, தூணப்பா துரும்பான வாருபோல சொல்முறைகள் மறவாதே சூட்டிப்பாரே. (சஙஉ)

சூட்டியதோ ரின்னூலின் பாஷாணங்கள் சுளுக் காகும் வேகைதக்குப் பச்சைதன்னில், பூட்டியதோர் பூட்டென்பார் பாஷாணத்தில் பிரித்துக்கொள் வே தையென்று சொன்னாரில்லை, காட்டியதோ ரித் தொடையின் புண்தனக்குக் கண்மறையச் சீலையினா ல் மூடினாப்போல், மூட்டியதோர் மூட்டென்று இது தான்மைந்தா முட்டாளே யிம்மட்டு மறிந்துஆடே.()

சூதபாஷாணம்.

ஆட்டவே சூதமது பலந்தான்பத்து அந்திடை க்கி வெள்ளையென்ற பாஷாணந்தா, னீட்டவே கெந் தியது பலமுமைந்து நிலையான வெடியுப்புப் பலமு மூன்று, வாட்டவே துரிசியது பலமுமூன்று மகத் தான தாளகமும் பலமிரண்டு, மூட்டவே சிலையதுவு ம் பலமுமொன்று முயற்சியாய்க் கல்வத்திற் பொடி யாய்ப்பண்ணே. (சஙச)

பொடிப்பண்ணி தவசியென்ற முருங்கைச் சாற் றில்போக்கோடே வழுனளரைத்து மைபோல், முடிப் பண்ணி ரவியிலிட்டு மேருக்கேற்றி முயற்சியா வாலு கையின் மேலேவைத்து, அடிபண்ணித் தீயெரிப்பாய் பனிரண்டுசாம மாறவிட்டு ராமாறு பகலிற்போடு, கெ

டிபண்ணி பனிரண்டு சாமமானால் கெடியாக குப்பி யைத்தா னுடைத்துப்பாரே. (சஙரு)

உடைத்திடவே மேலோடிபதங்கித்துநின்றானுத் தமனே சூதமென்ற பாஷாணமாச்சு, அடைத்திடவே நடுவில்நின்ற பாஷானந்தா னப்பனே நீலமென்ற பே ருமாச்சு, கடைத்திடவே அடியில்நின்றால் காகபாஷா ணங் காணிதுக்குள் கரைகண்டு சொல்லப்போகா, ந டைத்திடவே சிவகாமி சொல்லைக்கேட்டு நாதாக்கள் பதமறியச் சொன்னேன்பாரே. (சஙசு)

சொன்னதொரு சாஸ்திரத்தின் பலன்களெல்லா ஞ் செப்பரிய மணித்தாய்க்குங் குருவுக்காச்சு, பன் னதொரு மனதிலுள்ள கருவையெல்லாம் பாடினே ன் வெட்டவெளி யாகத்தானும், மன்னதொரு நாதா க்கள் நூலைப்பார்த்து மவுனமாய் வைத்ததெல்லாம் வெளியிற்போட்டார், இன்னதொரு சாஸ்திரத்தைக் குகைக்குள்வைத்து இருக்காகும் நூல்தனையே வெளி வைத்தாரே. (சஙஎ)

வைத்ததொரு சாஸ்திரத்தில் வழலைதன்னை வ சையாகச் சொல்லாமல் மறைத்துப் போட்டார், மெத்ததொரு வீரமென்ற போக்குத்தன்னை வெளியா கச் சொல்லாமற் சூத்திரமாய்ச்சொன்னார், நைத்த தொரு சரக்கான வைப்புதன்னை நலமாக வொளித் து வாதமெங்கே செய்வார், பைத்ததொருவாதத்தி லாதியென்னப் பாங்கான வழலையொடு வீரந்தா னே. (சஙஅ)

தானென்ற வழலையென்ற சுண்ணமானால் சகல மெல்லாங் கட்டுண்டு சுண்ணமாகும், வேனென்ற ம

Digitized By Roja Muthiah Research Library

காவீர மாச்சுதென்றால் வேதையென்ற சொல்லுக்கு வுறுதியாகும், காவென்ற கல்லுப்புக்கரியில் நின்று கசடான சரக்கெல்லா மூறல்போகும், வேனென்ற மகாவீரம் வாய்க்காவிட்டால் வேதையென்ற சொல்லெல்லாம் விழலாய்ப்போமே. (சகக)

குங்கும பாஷாணம்

போமென்ற குங்குமமாம் பாஷாணவைப்புப் புகட்டுகிறேன் புத்தியில்லாப் புல்லருக்கும், ஆமென்ற சூதமது பாஷாணம்பத்து அழகான குதிரைப்பல் பாஷாணம்பத்து, வேமென்ற வெண்காரம்பொரிக்காரம்பத்து வெளுப்பான சீனத்தின் பொரிதானைந்து, காமென்ற அன்னத்தின் பேதிபலமைந்து கடிதான கெந்தகந்தான் பலமுமைந்தே. (சச0)

பலமாகுந் தாளகந்தான் சிலையுமரைப்பலந்தான் பாங்காக நிறுத்திபல்லோ கல்வத்திட்டு, குலமாகு மெலுமிச்சம் பழச்சார்விட்டுக் குமட்டியரைத் தேழுநாள் ரவியிற்போடு, தலமாகுங் காசியென்ற மேருக்கேற்றித் தளராமல் வாலுகையின் மேலேவைத்து, நிலமாகும் பனிரெண்டு சாமந்தீமூட்டு நிசமாகும் பதம் பார்த்து ஆறபபோடே. (சசக)

ஆறவிட்டு யுடைத்துப்பார் கட்டியாக அப்பனே குங்குமத்தினிறமதாகும், நீர்விட்ட சரக்குக்குக் காலனுகும் நெடுங்கால மிருக்கவென்றால் வீசமிடையுண்ணு, தேரவிட்டு மண்டலத்திற் சட்டைகக்குஞ் சித்தர்கள்தா னுண்டல்லோ காயசித்தியாளுர், மீதவிட்டு மெழுகாகப் பண்ணிக்கொண்டு விரவியதோர் சூதத்திற் பொட்டுப்போடே. (சசஉ)

Digitized By Roja Muthiah Research Library

போடவே யானையைப்போல் வீரிட்டுச்சாகும் போக்கோடே தங்கமிட்டு ஞாசமிட்டு, ஆடவே கெந்தி யிட்டு செந்தூரித்து ஆயிரத்துக் கொன்றிடவே யை யைந்தாகும், வாடவே மயங்காமல் சரக்குவைப்பு வ ரிசையாய்ஒவ்வொன்ருய்ப் பார்த்துத்தேறு, தேடவே காயத்தைச் சுத்திப்பண்ணி செகசால மார்க்கத்தின் சட்டைப்போக்கோ. (சசங)

போக்கான லவணமென்ற பாஷாணத்தைப்பொ ல்லாத வாதிக்குக் காட்டவேண்டாம், தேக்கான தெ திருலே யென்றுகேட்டால் செகச்சால மயக்கத்திற் சிக்கிக்கொண்டு,நோக்கான பெண்ணுசை தனிலுழன் று நோயெய்தி குடிகெடுத்து நுணுக்கமாகி,தாக்கான லோகத்தோர் குடிகெடுத்து சங்கியா யிருப்பார்கள் சண்டிதானே. (சசச)

தானென்ற பெண்ணுசைச் சுற்றுமானுல் சண் டாளகோபத்தை விடுகமாட்டார், ஊனென்ற சுகத் தையல்லோ இச்சித்துக்கொண்டு உற்றுநின்ற சை போகத் தாலேகெட்டு, வானென்ற பொருள்தேட மா ட்டார்மாண்பர் மகத்தான அறுதலத்தின் தெரிசினை யைப்பாரார், பாரென்ற ஞானவெள்ள முண்டுகொண் டு பதருமவிருக்கறியார் மூடர்தானே. (சசரு)

லவண பாஷாண வைப்பு.

தானென்ற வெடியுப்பு பலந்தானூறு சாதகமா ய் பாணத்திற் போட்டுப்பின்பு, கானென்ற காடியொ டு எலுமிச்சம்பழச்சாறு கலந்துகொண்டு சமனுக உ ப்புக்குநாலு,பானென்ற சாறுவிட்டு கரையக்காச்சிப் பக்குவமாய் வடிகட்டிப் பதத்திற்காச்சி, வானென்ற யைந்துதரங் காச்சிக்கொண்டு மாக்ர்கமா ரவியுலர்த் த பிறம்பாவையே. (சசசு)

பிறம்பான பூநீறு பலந்தானூறு புளிப்பான கா டியொடு பழச்சாற்கூட்டி, திறம்பான தெளிவிருத்து உப்பாய்க்காச்சிச் சேர்ந்துநின்றவுப்புதன்னைமுன்போ ற்கரைத்து, அறம்பான ஒருநிரைக்கு ளுநிறைதண் ணீர் அசட்டைப்பாய் விடுகாதே யைந்துதிறங்காய்ச்சி, உறம்பான வுப்பெடுத்து ரவியில்வைத்து வுத்தமனே கல்லுப்புப் பலந்தானூறே. (சசள)

நூரோடு பழச்சாறு புளிச்சக்காடி நூகர்ந்துநின் ற நானூறு பலந்தான்வார்த்து, காரோடு கொதிக்க வைத்துக் கரைந்தபின்பு கலங்காமல் வடிக்கட்டி யுப் புக்காய்ச்சி, வீரோடு யைந்துதிரங் கரைத்துக்காய்ச் சி விளங்கியதோரவியிலிட்டுப் பலம்பத்திறுத்து, தா ரோடு காய்ச்சியதோர் வெடியப்புப்பத்துத் தாட்சியி ல்லாப் பூநீறு வுப்புப்பத்தே. (சசஅ)

உப்போடு வெள்ளையென்ற பாஷாணம்பத்து உசந்துநின்ற சூதமது பலந்தான்பத்து,அப்போடு கெ ந்திபது பலமும்பத்து ஆதியாந் துரிசியது பலமும்ப த்து, வைப்போடு சாரமது பலமுமைந்து மாசற்ற சி னத்தின் பொரிதானைந்து, மப்போடு தாளகமு பல முமைந்து மாசற்ற சிலைபதுவும் பலமுமூன்றே. ()

மூனோடு இவையெல்லாங் கல்வத்திட்டுமுப்புரத் தை எரித்தகுப்பை மேனிச்சாறு, பூனோடு ஏழுனாள ரைத்து மைபோற் பொடியாக்கி காசியென்ற மேரு க்கேற்றி, வானோடு வாலுகையின் மேலேவைத்து மற வாதே தீமூட்டுக் கமலப்போல், தூனோடு பனிரண்டு சாமமானால் துடியான லவணமென்ற பாஷாணமாச் சே. (சரு0)

Digitized By Roja Muthiah Research Library

கோடுஞ்சிங்கித் தயிலம்.

ஆச்சென்ற கொடுஞ்சிங்கித் தயிலஞ்சொல்வே ளுதளையும் வாலுளுவை புரசுமெட்டி, நீச்சென்ற கஞ்சாவூம்பத்தை புங்கு கெடிதான குருக்கத்தி அழிஞ்சில்புன்னை, வாச்சென்ற தாளியொடு வாளம்வேம்பு வகையான நீமெரட்டிக் கழுதைமுள்ளி, காச்சென்ற பதினைந்தும் விரையைவாங்கிக் கணக்காகப் படியொன்று அளந்துபோடே. (௪௫௧)

போட்டிதெல்லாங் கோடனுட கிழங்குச்சாற்றில் பேராக வூறவைத்து மூன்றுநாள்தா, நாட்டிதெல்லாங் கல்வத்தி லிட்டுஆட்டி யதிற்போட மருந்தினித்தா னறைவேன்கேளு, நீட்டிதெல்லா மரிதாரஞ் சிலையுங்கெந்தி நேரான வெடியுப்பு சீனஞ்கூடன், பூட்டிதெல்லாஞ்சாம்பிருணி சாரம்வீரம் புகழ்ந்தகருங் குங்கிலியம் பூநீர்தானே. (௪௫௨)

தானென்ற துரிசியொடு அன்னபேதி சாதகமாய் வகைக்கிரண்டுப் பலந்தான்போடு, காவென்ற முன்மருந்தோ டொக்கப்போட்டுக் கலந்தரைப்பாய் கோடனுடக் கிழங்குச்சாற்றில், தேனென்ற எட்டுநாள் மெழுகுபோலாட்டித் தெல்லுப்போல் வில்லைபண்ணி யுலரப்போடு, பானென்ற பூப்புடத்திற் றயிலம் வாங்கிப் பாச்சியெல்லாம் பறணிதனி லடைத்திடாயே. (௪௫௩)

அடைத்திட்ட தயிலத்திற் றுரிசிவெள்ளை யப்பனே பலமொன்று நிறுத்துக்கொண்டு, கிடைத்திட்ட தயிலத்தில்மர்த்தித்தப்பா கெடிதானலிங்கத்திற் சுறுக்குப்போட, முடைத்திட்ட மெழுகாகும் நவலோக

த்தில் முசியாதோ ஆயிரத்துக் கொன்றுமீயப், படை த்திட்ட மாற்றதுவும் பதினாறுகும் .பரிசனத்தில் வே தையுமாங் கண்டுபாரே. (சுருச)

ரசமணி

பாரென்ற சூதமொரு பலந்தானெட்டும் பாய்ச் சியல்லோ கல்வத்தி லிட்டுநீயு, மாரென்ற தயிலமொ ரு துளியுங்குத்தி யரைத்திடவே வெண்ணெயைப் போலாகுப்பாரு, காரென்ற கிளிகட்டி சூடன்றீயில் கலங்காதே யிருநாழி வாட்டிபின்பு, சிரென்றகரண்டி யிலே வெண்ணெய்க்குத்தி திறமாக யுருக்கிடவே ம ணியுமாமே. (சுருரு)

ஆமிந்த மணிதனக்குச் சாரணையைச்செய்ய அ ண்டரண்ட பதமளவும் போகலாகும், போமிந்த ம ணிதனையே வாயில்வைத்துப் புகழான உமிநீரை யு ள்ளேகொள்ளச், சாமிந்த சடந்தானுஞ் சட்டைகக் கிச் சந்திரர்கள் சூரியர்கள் போலாந்தேகம், நாமிந்த ப் படியுண்டோம் பாட்டருண்டார் நாதாக்க ளிப்ப டியே யுண்டிட்டாரே. (சுருசு)

உண்டிட்ட மணிதனக்கு நலத்தொன்று மூத்த் மனே தங்கமிட்டு நாகமிட்டுப், பண்டிட்ட சாரமிட்டு யுருக்கிக்கொண்டு பாச்சிக்குச் சரியாகக் கெந்திக் கூட்டி, கன்றிட்ட கல்வத்திற் பொடித்துக்கொண்டு கலங்காதே குலாமல்லிச் சாற்றாலாட்டி, மண்டிட்ட மூன்றுக்கு ளரைந்துப்பின்பு மயங்காதே காசிபென் ற மேருக்கேற்றே. (சுருஎ)

ஏற்றியல்லோ புத்தீயு மூன்றுநாள்தா னிதமாக ஆறவிட்டு எடுத்துப்பாரு, போற்றியல்லோ வருண

ளைப்போல் சிவந்துநிற்கும் பொலிவாக பனைவிடைதா
ன் தேனிலுண்ணு, சாற்றியல்லோ மண்டலந்தான்
தப்பாதுண்ணு சட்டைகக்கிச் சந்திரன்போல் முக
முமாகு, மாற்றியல்லோ கெவனவழி சுறுக்குமேற்ற
மாச்சரியஞ் சிங்கியென்ற தயிலந்தானே. (சருஅ)

துவாதசத் தயிலம்.

தானென்ற துவாதசத்தின் தயிலஞ்சொல்வே
ன் சாதகமாஞ் சேங்கொட்டை நீரெட்டிமுத்து, தே
னென்ற குருக்கத்தி வாலுளுவைவித்துச் சிறப்பாக
ப்பேய்க்கொமட்டி வித்திஞேடு, கானென்ற பெருங்
காட்டா மணக்கம்வித்துக் காக்குறட்டான் வித்திஞே
டு சேர்வாளம்வித்து, பானென்ற புல்லிலா மணக்கம்
வித்துப் பகரறிய குன்றிமணி அழிஞ்சிவித்தே. ()

வித்தோடு பிருபமணி பனிரண்டுங்கேளு விளங்
கியதோர் படியொன்று அளந்துப்போட்டுப், புத்தோ
டு சேவுகனார் கிழங்குச்சாற்றில் பொலிவாக யூறவைத்
து மூன்றுனாள்தான், பத்தோடு கல்வத்தி லரைத்
துமைபோல் பகரறிய கெந்தகமுந் தாளகமுஞ் சிலையு
ங், கொத்தோடு சவ்வீரங் கெவுரிவெள்ளைக் கொடிய
தொரு பூநீறு சவுட்டுமுப்பே. (சகூய)

உப்பான கல்லுப்புவெடியுப்புச்சீன முத்தமனே
துரிசியொடு சூடனிந்து, விப்பான முன்மருந்தோ
டொக்கப்போட்டு விரவியரை எட்டுனாள் கிழங்குச்சா
ற்றி, லப்பான தெல்லுப்போல் வில்லைபண்ணி ஆதியா
ம் பூப்புடத்தில் தைலம்வாங்கி, செப்பான தநிலடை
த்துத் தருசிசீரிட்டு சீரானச் சரக்குகளிற் சுறுக்குப்
போடே. (சகூக)

Digitized By Roja Muthiah Research Library

சுறுக்கிடவே தெதிலேயென்று லிங்கம்வெள்ளை த்து டியான மால்தேவி சிலையும்வீரம், முறுச்கிடவே கெவு ரியொடு கெந்திருத முனையான நாகமொடு காரீயம் வ ங்கம், நறுக்கிடவே துரிசியொடு செம்புச்சாரம் நல மான சிங்கியொடு மெழுகுமாகுங், சுறுக்கிடவே ஒவ் வொன்றில் வேதைகோடி கரையில்லைக் கணக்கில்லைக் கலந்துபாரே. (சகஉ)

திசமுகக் குரு.

பாரப்பா திசமுகமாங் குருவினுட்டுப் பணைபேதி சிணைபேதி சத்துபேதி, தாரப்பா தூமமொடு சந்தான பேதி தயங்காதப் பரிசமொடு லேபனபேதி, சேரப் பா தீபமொடு எட்டுமாகுஞ் சித்தருட நூல்களிலே யி ல்லையில்லை, ஆரப்பா யிதின்பெருமை யறியப்போரு ரரனறிவார் ஆத்தாள்தா னறிந்தவாரே. (சகங)

வாறான பூநீறு பதக்குவாரி மாட்டிதுக்கு யெட் டொன்று கல்லுச்சுண்ணம், பேரான கழுதையுட மூ த்திரத்திற் பிசைந்துநன்றாய்க் கலக்கிவைத்து மூன்று நாள்தான், தாறான நாலானுள் தெளிவைவாங்கித் த யங்காதே கல்லுப்புச் சூடன்ரெண்டு, மாறான வகைக் கிரெண்டுப் பலமேதாக்கி அப்பனே பொடிபண்ணி தெ ளிவிற்போடே. (சகச)

போட்டுமே அடுப்பேற்றி யெரித்துவுப்பாய் பே ரான பதத்தெடுத்துக் கல்வத்திட்டு, ஆட்டுமே அண் டமுன்னீ ரெருக்கம்பாலு மாட்டிநன்றாய்க் கலக்கி வைத்துக் கல்வத்திட்டு, மூட்டுமே மூன்றுநா ளரைத் தபின்பு மெழுகாகும் பத்தெடுத்து வில்லைகட்டி, தீட் டுமே ரவிதனிலே காயப்போட்டு செப்பில்வைத்து சீ லைசெய்து புடத்தைப்போடே. (சகரு)

Digitized By Roja Muthiah Research Library

வழலை.

புடம்போடு அஞ்செருவி லாறவிட்டுவாங்கி பேராக முன்போல யரைத்துக்கட்டி, கடம்போடு மூன்றுதரம் போட்டுத்திரு கசகாமல் வழலையென்ற குருதாணுச்ச, திடப்போடு செப்புக்கு ளெடுத்துவைத்துத் திறமான நயுருவி சுட்டச்சாம்ப, லடம்போடு பதக்கெடுத்து ஆனைநீர்விட்டு அதட்டிநன்றாய்க் கலக்கிவைத்துத் தெளிவைவாங்கே. (சகசு)

பூரம்.

வாங்கியே அண்டோடு சுண்ணம்பண்ணி வளமாகப் பலமிரண்டுக் கூடப்போட்டு, தேங்கியே யிந்துப்புப் பச்சைப்பூரஞ் சிறக்கவே யிரண்டுபலங் கல்வத்திட்டு, தாங்கியே அரைத்துமைபோல் தெளிவிலிட்டுச் சார்வாக அடுப்பேற்றி யெரித்துவுப்பாய், பாங்கியே கல்வத்திலிட்டுஆட்டிப் பதறுமல் முன்போல அரைத்துக் கட்டே. (சகள)

கட்டியே மூன்றுபுடந் தீர்ந்தபின்பு கசகாமல் வெவ்வேறே எடுத்துவைத்து, தெட்டியே பூரமென்ற குருதாணுச்சு செகமெல்லா மெச்சுமிந்த குருவிறுட்டு,தட்டியே யெருக்கோடு மூலஞ்சுட்டுத் தயங்காமல் பதக்கெடுத்து குதிரைநீரில், மட்டியே யிருதுணி நீரிற்போட்டு மறவாமல் மூன்றுநாள் கலக்கிவையே. ()

வைத்தபின்பு தெளிவிறுத்துப் பாண்டத்திட்டு மறவாமல் சங்குநீ ரெண்டுபலம்போட்டு, நைத்தபின்புக் கடல்நுரையுங் காரம்ரெண்டு நலமாகப் பலமிரண்டு கல்வத்திட்டு, கைத்தபின்பு பொடிபண்ணிக் கு

Digitized By Roja Muthiah Research Library

ழம்பிற்போட்டு கலங்காத உப்பான பதத்தில்வாங்கி,
மொய்த்தபின்பு முன்னீரா லரைத்துக்கட்டி மூன்று
புடம் போட்டெடுத்துப் பதனம்பண்ணே. (சசுகூ)

சாரம்.

பண்ணிபதால் சாரமென்ற குருதானுச்சு பகர
ரிய சதிர்க்கள்ளி சுட்டசாம்பல், தண்ணியதால் பதக்
கெடுத்துப் பாண்டத்திட்டு நலமான வெள்ளாட்டு அ
முரிதானும், கண்ணிபதா லிருதுாணி அமுரிவார்த்துக்
கலக்கிவைத்து தெளிவிருத்து கிளிஞ்சிர்சுண்ண, மெ
ண்ணியதா லிரண்டுபலங் கூடப்போட்டு மிதமாக அ
டுப்பேற்றி யெரித்திடாயே. (சஎ0)

துரிசி.

எரித்திடவே குறுகியது குழம்புபோலா மெளி
தான வெண்காரந் துரிசிரெண்டு, மரித்திடவே பொ
டியாக்கிக் குழம்பிலிட்டு வளமாகக்காச்சியதை உப்பா
ய்ப்பண்ணி, தரித்திடவே முன்போலப் புடத்தைப்
போடு தபங்காதே பெடுத்துவைத்து மாட்டக்கேளு,
குரித்திடவே துரிசியென்ற குருத்தானுச்சு கொடிவே
லி சுட்டுநீ சாம்பலாக்கே. (சஎக)

வீரக்குரு.

சாம்பல்தான் பதக்கெடுத்து பாண்டத்திட்டு சா
ர்வான பசுவினிட கோமியத்தைவிட்டு, வாம்பல்தான்
கரைத்துவைத்து மூன்றுநாள்தான் வகையாகத் தெ
ளிவிறுத்து ஈத்தைச்சுண்ணங், கூம்பலேத்தா னிரண்டு
பலங் கூடப்போட்டு குழம்பானப் பக்குவத்தில் வெ
டியுப்போடு, வேம்பலேத்தான் வீரமது பலமிரண்டு
விரவிநன்றுப் பொடிபண்ணி குழம்பிற்போடே. ()

Digitized By Roja Muthiah Research Library

வெள்ளை.

போட்டுமே யதட்டிநன்றாய்க் கலக்கிவைத்துப் பேராகத் தெளிவிருந்து அடுப்பிலேற்றி, வாட்டுமே நர்கரமாம் வண்டுசுட்டு மருகவே சுண்ணாம்பா யிரண்டுபலம்போடு, தேட்டுமே குழம்பானப் பதத்தில் வாங்கிச் சிறப்பான வெள்ளையொடு சீனம்ரண்டு, ஆட்டுமே பொடிபண்ணிக் குழம்பிற்போட்டு யடுப்பேற்றியெரித்தந்த வுப்பைவாங்கே. (௪௭௩)

வாங்கியே முன்போலே யரைத்துக்கட்டி வகையாக மூன்றுபுடம் போட்டுத்தீர்ந்து, தாங்கவே செப்புக்கு ளெடுத்துவைத்துச் சாரணைதான் கொண்டு[illegible]து நிழலுலர்த்திப், பாங்கியே சுட்டுநன்றாய்ச் சாம்பலாக்கிப் பதக்களந்துபாண்டத்திற் போட்டுநீயுந், தேங்கியே யிருநாழி ஒட்டைநீர்விட்டுச் சிக்கெனவேகலக்கி யதைத் தெளிவைவாங்கே, (௪௭௪)

வாங்கியே வூமைபென்ற சிப்பிதன்னை வகையாகச் சுத்திபண்ணிச் சுண்ணாம்பாக்கி, தேங்கியே ரெண்டுபலம் நிறுத்துப்போட்டுச் சிறப்பாக யடுப்பேற்றிக் குழம்பாய்க்காய்ச்சி, ஓங்கியே தாளகமும் வளையலுப்பு மொக்கவேபொடிப்பண்ணிரெண்டுபலம்போட்டு, ஏங்கியே யுப்பாகக் காய்ச்சிக்கொண்டு எடுத்தரைத்து முன்போலே புடத்தைப்போடே. (௪௭௫)

போடென்ற யுமிசுட்டுச் சாம்பலாக்கிப் புகழாகப் பதக்களந்து பாண்டத்திற்போட்டு, நாடென்ற கடலில்நிற்குஞ் சிவந்த சொரியை நலமாகவெடுத்துவந்து பாண்டத்துள்ளே, ஊடென்ற வுப்பிடவுந் தண்ணீராகு முத்தமனை யிருநாழி நீரைவிட்டு, ஆ

Digitized By Roja Muthiah Research Library

டென்ற மூன்றுநாள் கழித்தபின்பு அப்பனே தெ
ளிவிறுத்துப் பாண்டத்தில்வாங்கே. (௬௭௬)

வாங்கும்போ அடுப்பேற்றி யெரிக்கும்போது
வளமான கண்டோடு சுண்ணம்பண்ணி, தாங்கும்
போ ரெண்டுபலங் கூடப்போட்டுத் தயங்காதே யடுப்
பேற்றி யெரித்தாயானால், ஓங்கும்போ குழம்பான
பதத்தைப்பார்த்து உற்றுநின்ற சரக்கையினிச் சொ
ல்லக்கேளு, தூங்கும்போ சூதம்ரெண்டு பலத்தை
ப்போட்டுத் துடியான கெந்தியுப்பு ரெண்டுபலம்போ
டே. (௬௭௭)

போட்டெல்லா மடுப்பேற்றி யுப்பாய்க்காய்ச்சிப்
பொலிவான பின்பெடுத்துக் கல்வத்திட்டு, மூட்டெ
ல்லா முன்னீரா லரைத்துக்கட்டி மூன்றுபுடம் போ
ட்டெடுத்து வைத்துக்கொள்ளு, ஆட்டெல்லாஞ் சூ
தத்தி லாட்டுஆட்டு யண்டபகி ரண்டமுதல் வெந்து
நீறும், காட்டெல்லாம் வாழையுட சாறுசுட்டுக் காரி
யமாய்ப் பதக்களந்துப் பாண்டத்திற்போடே.(௬௭௮)

போட்டுமேவாழையுட கிழங்குச்சாற்றில் பேரா
ன தெளிவிறுத்து யடுப்பில்வைத்து, ஊட்டுமே சுண்
ணும்பு சொல்லக்கேளு உயர்ந்துவரலூமச்சி சுண்ணம்
பண்ணி, நாட்டுமே பலமிரண்டு நிறுத்துப்போட்டு ந
லமான குழம்பாகும் பதத்திற்கேளு, ஆட்டுமே அன்
னமென்ற பேதியோடு அசையாதலிங்கமது ரெண்டுப
லந்தூக்கி, பூட்டுமே பொடிபண்ணிக்குழம்பிற்போட்
டுப் பிரட்டிபெல்லாம்வாங்கியல்லோகல்வத்தாட்டே,

ஆட்டியே முன்போல மூன்றுபுடம்போட்டு அ
யச்சிமிளி லெடுத்துவைத்துப் பதனமாகப், பூட்டியே

Digitized By Roja Muthiah Research Library

தெற்மைசுட்டுச் சாம்பலாக்கிப் புகழாகப் படியளந்து பாண்டத்திற்போட்டு, மூட்டியே கள்ளென்ற காடி தானு மூசியாதே யிருநாழி விட்டுப்பின்பு, வாட்டியே மூன்றுனாள் கலக்கிவைத்து மறவாதே தெளிவிருத்து அடுப்பிற்காய்ச்சே. (சஅ0)

காய்ச்சியே குழம்பான பக்குவத்தில் கலந்திடுநீ கெருடபட்சி சுண்ணாம்பிரண்டு, பாய்ச்சியே குக்கிடவெண் மலமிரண்டு பகரரிய கெந்தகமும் பலமிரண்டு, தாய்ச்சியே பொடிபண்ணிக் குழம்பிற்போட்டுச் சார்வாக யடுப்பெரித்து உப்புவாங்கி, மூச்சியே முன்போல யரைத்துக்கட்டி மூன்றுபுடம் போட்டெடுத்துப் பதனம்பண்ணே. (சஅக)

பண்ணியபின் திசமுகமாம் குருவுமாச்சுப் பணவிடைதான் பத்துமெடுத் தொன்றாய்க்கூட்டி,ஒண்ணியே கல்வத்தில்முன் னீராலாட்டி உத்தமனே செப்புக்கு ளெடுத்துவைத்து, நண்ணியபின் மேல்மூடி சீலைசெய்து நயமாகவைந்தெருவிற் புடத்தைப்போடு, எண்ணியபின் னாறவிட்டு எடுத்துக்கொண்டு இதமான பொற்சிமிழிற் பதனம்பண்ணே. (சஅஉ)

பண்ணியதோர் குருவெடுத்து விராலிக்கிட்டுப் பரிவாகச் சாறெடுத்து அயசசட்டிவார்த்து, ஒண்ணியதோர் தேய்ந்தகொழு கரியிலூதி உத்தமனே காந்தத்திற் காட்டித்தோய்ப்பாய், விண்ணியதோர் கொழுக்காய்ச்சி தோய்க்கத்தோய்க்க விண்டுவிண்டு அதரதராய்ப் பொருமிவீழும், நண்ணியதோர் சாறெல்லாம் வைத்துத்தோய்த்து நலமான அதரெல்லாம் வாரிக்கொள்ளே. (சஅங)

Digitized By Roja Muthiah Research Library

அயச் சவளை.

வாரியே பெருங்காட்டா மணக்கினெண்ணெய் வார்த்தல்லோ வெண்காரஞ் சரியாய்க்கூட்டி, நாரியேகு கையிலிட்டு மூன்றுதரமுருக்கி நலமான ஈயம்போல் சவளையாகும், மேரியே யுடைந்ததுபோல் வாதவெள்ள மிறைக்கிறைக்கத் துலையாது அயத்தின்வித்தை, வாரியே பொங்கையிலே சகலமூமுட்கொள்ளு மகத்தான அயமூருக்கிக் கொல்லுந்தானே. (௬௮௪)

தானென்ற நாகத்தைப் பனையாமற் கொல்லுஞ் சமுசயங்க ளெண்ணூதே சகலமூம்முட்கொள்ளு, வானென்ற சூதமது கட்டிப்போகு மாசற்றஅயனுக மாட்டுமோட்டு, தேனென்ற சிவகாமி சொன்னமார்க்கஞ் செப்பரிய நாதாக்கள் மெச்சும்வித்தை, பானென்ற செந்தூரங் களங்குசெய்யில் பரிவாக ஆயிரத்துக்கோடும்பாரே. (௬௮௫)

அண்ட மெழுகு.

ஓடுமே அண்டத்தைப் பணம்போல்பொற்று உத்தமனே களஞ்சிடைதான் குருவைப்போட, வாடுமே செந்திரிக்க மேலேவைத்து மாசற்ற ரவிதனிலே சாமம்வைக்க, தேடுமே அண்டமெல்லா மெழுகாய்ப்போகுஞ் சேர்ந்த மூவாயிரத்துக் கொன்றேயோடும், பாடுமே வீணையைப்போல் மெழுகுகொள்ளப் பரிவான அண்டத்தி னுகைமதானே. (௬௮௬)

அண்டவித்தை பாருக்காஞ் சிவயோகிக்காகு மாத்தானைப் பூசித்த வாமிக்காகும், பிண்டவித்தை மும்மூல யோகிக்காகும் பேரான அசபையெட்டை

Digitized By Roja Muthiah Research Library

நாவிற்சேர்க்கும், வண்டவித்தை பொல்லாது துரோ
கிசெய்யு மகத்தான வேதாந்த ரிஷிகள்சித்தர், கண்
டவித்தை மனதடக்கி ஊமையாவார் காரணமாஞ் சீ
ஷருக்குப் போகிப்பாரே. (சஅஎ)

பாரென்ற குருவெடுத்துக் காசிடைதான் றூக்கி
பரிவான சதிரக்கள்ளிப் பாலிற்போட்டு, காரென்றசா
மத்தில் சுத்தசலமாகும் கல்வத்திற் சூதமிட்டு சுத்திப
ண்ணி, பாரென்ற அயச்சட்டிக் குள்ளேவிட்டுப் பத
ருமலொருசாமஞ் சுறுக்குப்போட, கோரென்ற பி
ட்டவிபோற் கட்டியாகுங் கூப்பிட்டா லேனெங்கும்
வாதந்தானே. (சஅஅ)

சூதக் கட்டு.

வாதந்தான் வேணுமென்றால் சூதத்தைக்கட்டு
மகத்தான அஷ்டகர்ம மெட்டெட்டுமாடுங், காதந்தா
ன் கோடியது நிமைக்குமுன்னே கலந்தோடி புக்கிவ
ரு மணியின்வேகம், வேதந்தா னத்திடத்து முடிவுக்
கொக்கு மேவியதோர் சிலம்பொலியி நாதங்கேட்கும்,
நீதந்தான் சூதத்துக் கடுத்தவாறு நிமிஷத்திற் காயசி
த்துங் கவனசித்துமாமே. (சஅகூ)

ஆமிந்த மணிநின்று யுருகும்போது அந்திடைக்
கித் தங்கமிட்டு நாகமிட்டு, வேமிந்த தாளகமுஞ் சிலே
யும்வீரம் மேதிச்சுக் கல்வத்தி லிட்டுஆட்டி, சேமிந்த
கெந்தகத்தை ரெட்டிப்பிட்டுச் சிறப்பான பொற்றலே
யின் சாற்றாலாட்டி, ஓமிந்த காசியென்ற மேருக்கேற்
றி யுற்பனமாம் வாலுகையின் மேலேவைவையே. (சகூ0)

வைக்கவே பனிரண்டு சாமந்தீபை யறவாதே மு
த்தீயு மாட்டுமாட்டு, தைக்கவே மாதளம்பூ நிறத்தை

ப்போலாஞ் சார்வாகச் சிலாகிட்டு கிண்டிப்பாரு, ஒ
க்கவே நவலோக மாயிரத்துக்கொன் றுத்தமனே ப
திறுறு மாற்றுமாகும். மெய்க்கவே செந்தூரங் குன்றி
யுண்ணு மேனியுமோ அருணநிற மாகுந்தானே. ()

வங்காளப்பச்சை வைப்பு.

தானென்ற வங்காளப் பச்சைவைப்புச் சாதக
மாய்ச் சொல்லுகிறேன் மாணுக்காளே, ஊனென்ற
செம்பான பரபொடிதான்பத்து உத்தமனே துரிசிப
த்து வெடியுப்புரெண்டு, வானென்ற எலுமிச்சம் ப
ழச்சார்விட்டு மருகவே மத்தித்து கல்வத்திட்டு, கோ
னென்ற குப்பையிலே மூன்றுதிங்கள்புதைந்துக் கூ
சாமலெடுத்துப்பார் பச்சையாமே. (சகூஉ)

செம்பு சுத்தி.

ஆமப்பா செம்புதனைச் சுத்திப்பண்ண பணறகி
றேன் கருங்குன்றி கொள்ளிலையின்சாறு, வாமப்பா
கல்லுருவி நொசசிலேயோடு வகைநான்கு மிடித்துநன்று
ய்ப் பழச்சார்விட்டு, காமப்பா குன்றுமணி அரைத்
துப்போட்டுக் கலக்கியொன்றாய் மத்தித்து யதற்குள்
சாய்ப்பாய், சேமப்பா ஏழுதிர முறுக்கிச்சாய்க்க செ
ம்பினுட யூறலெல்லாங் கழன்றுபோமே. (சகூ௩)

போகவே யிச்செம்பால் கிண்ணிபண்ணுப் புக
ழான சேங்கொட்டை நீரொட்டிமுத்து, வேகவே வெ
ளிக்காட்டா மணக்கம்வித்து விரைந்தநேர் வாளம்வி
த்து சரியாய்க்கூட்டி, சாகவே துரிசியொன்று சார
மொன்று சாதகமாய்க்கல்லுப்பு வெடியுப்பொன்று,
ஏகவே உரலிலிட்டு யிடித்துயெல்லா மிதமான கார்த்
திகையின் கிழங்குச்சாறே. (சகூச)

Digitized By Roja Muthiah Research Library

ரசப்பதங்கம்.

சாற்றினால் மூன்றுநா ளரைத்துமைபோல் சந்தித்து வில்லைகட்டி யுலரப்போட்டு, பேத்தினால் பூப்புடத்திற் றயிலம்வாங்கிப் பீங்கானும் பரணிதனி லடைத்துவைத்து, வாத்தினால் பதங்கமொன்று சொல்லேவன் யானும் வகையானக் கல்லுப்பு வெடியுப்புச்சீனந், தேத்தினாற் றரிசியொடு சாரந்தானுஞ் சிறப்பாகவேவ் வொருகா சிடையேதூக்கே. (௪௬௫)

தூக்குவது அரிதாரஞ் சிலையுங்கெந்தி துடியான வெள்ளையொடு கெவுரிலிங்க, மாக்குவது கடல்நுரையும் வீரந்தொட்டி யழகான குதிரைப்பல் அன்னபேதி, தேக்குவது பூநீறு சத்திச்சாரஞ் சிறப்பான வெண்காரங் காந்தஞ்சிங்கி, நீக்குவது அப்பிரேகம் ராசவர்க்கம் நேரான நிமிளையொடு பொன்னம்பர் தானே. (௪௬௬)

தானான அரப்பொடியும் நாகம்வங்கஞ் சார்வானகாரீயம் வெங்கலத்தின் பொடியுந், தேனான வகைக்கியொரு காசிடையேதூக்கிச் சிறப்பாக முப்பத்தொன்று மாச்சு, வானான சூதமது முப்பத்தொன்று வகையெல்லாங் கல்வத்திற் பொடித்துப்போட்டுக், கோனான தயிலத்தைக் குத்தியாட்டுக் குறிப்பாக வெழுதினமு மரைத்துலர்த்தே. (௪௬௭)

உலர்த்தியே யிரும்பாலே உள்ளங்கைபோலுற் றமனே லேசாகச் சட்டிப்பண்ணி, மலர்த்தியே வறையிட்டு செப்புக்கிண்ணி மருகவே பரைக்குள்ளே வழக்கம்பார்த்து, அலர்த்தியே சட்டியிலே மருந்தைவைத்து அதின்மேலே கிண்ணிவைத்துப் பொருந்தப்

பார்த்து, சிலர்த்தியே சந்துக்குச் சீலைசெய்யுந் திற மையைத்தான் வரிசையாய்ச் செப்புறேனே. (சகூ௯)

செப்பவே செம்பினுட அரப்பொடியுங் கடுக்கா ய்த் திறமான இரும்பினுட அரப்பொடியுங்கூட்டி, அ ப்பவே கருமணலுஞ் சங்குநீறு அடவானக் குருந் தைக்கல் மீனினெட்டி, நப்பவே வெண்கருவு மத்தி ப்பாலும் நலமாக இதில்விட்டு இடித்துநைய, உப்ப வே மெழுகுபோல் பதமாய்ப்பண்ணி உத்தமனே ச ந்துக்கு வடைத்திடாயே. (சகூகூ)

அடைத்திட்டு செம்புமேற் கவசம்பண்ணி அச காமற் பதனமாய்ச் சீலைசெய்து, உடைத்திட்டுமுக்கவ ரில் சட்டிவைத்து உற்பனமாய் யிலுப்பைநெய்யில் வி ளக்குவைத்து, படைத்திட்டு அங்குஷ்டப் பருமமாக ப் பத்திநின்ற திரிபோட்டு விளக்கையேற்றி, கடைத் திட்டு மூன்றுநாள் விடாமலேற்று கைகண்டப் பதங் கமிறு எரும்பாரே. (௫00)

ஏரியதோர் பதங்கமெல்லாம் வழித்தெடுத்து யி தமான அப்பிரேக நவநீதம்பண்ணி, கூரியதோர் வெ ண்கருவா லரைத்துவாங்கிக் குகைபோலே மேல்மூடி ரெண்டுசெய்து, மாரியதோர் பதங்கத்தை யுள்ளே வைத்து வகையாக மேல்மூடி சீலைசெய்து, தேரிய தோர் கெசபுடத்திற் போட்டெடுத்துச் சிறப்பாக ம ருந்தெல்லாம் வாங்கிக்கொள்ளே. (௫0க)

வாங்கியே குகையில்வைத்துக் காரமிட்டு வள மாக யுருக்கியொரு மணியாய்வாங்கி, தாங்கியே எடு த்துப்பார் முத்துப்போல தவளம்போல் சூதமது யி ருக்கும்பாரு, ஏங்கியே ஆசென்று மயங்கவேண்டா

Digitized By Roja Muthiah Research Library

யியல்பாகக் கெந்தியிட்டுத் தங்கஞ்சேர்த்து, ஓங்கியே நாகமிட்டுக் கல்வத்திற்போட்டு உத்தமனே மைக்கொன்றைச் சாற்றாலாட்டே. (௫0௨)

ரச செந்தூரம்.

ஆட்டியே காசியென்ற மேருக்கேற்றி அப்பனே வாலுகையின் மேலேவைத்து, மூட்டியே பனிரண்டுச் சாமந்தியை முசியாம லாறவிட்டு எடுத்துப்பாரு, நீட்டியே செந்தூர மருணன்போலாம் நேரான நவலோகம் நூற்றுக்கொன்றீய, காட்டியே தசமாற்றுங் கண்டுபாரு கனமானப் பதங்கத்தின் மகிமைதானே (௫0௩)

மகிமையென்றப் பதங்கத்தைப் பலந்தான்தூக்கி மகத்தானக் கல்வத்திற் பொடித்துப்பின்பு, மகிமையென்ற அரப்பொடிதா நாலுபலம்போட்டு மகத்தானகாரமொரு பலமும்போட்டு, மகிமையென்ற பெருங்காட்டா மணக்கினெண்ணெய் வார்த்தரைத்துச் சாமமொன்று குகையிலிட்டு, மகிமையா மூன்றுதிர முருக்கிப்போட மாசற்ற அயந்தானும் நாகமாமே. ( )

அய நாகம்.

நாகமென்ற அயத்திடைக்குத் தங்கம்கூட்டி நலமாக உருகையிலே நாகம்நீட்டு, ஒகமென்ற புகையேமுங் கட்டிப்போகு முத்தமனே சூதமிட்டு கெந்தியிட்டு, பாகமென்ற பொற்றலையின் சாற்றாலாட்டிப் பக்குவமா யஞ்செருவிற் புடத்தைப்போட்டு, வேகமென்ற நவலோகம் நூற்றுக்கொன்றீப வேதிச்ச மாற்றென்ன பனிரெண்டாச்சே. (௫0௫)

Digitized By Roja Muthiah Research Library

வெள்ளைப் பதங்கம்.

ஆச்சப்பா வெள்ளையென்ற பதங்கங்கேளு ஆதி வெள்ளைப் பாஷாணங் குதிரைப்பல்லு, ஓச்சப்பா தாளகமும் பூநீறுவீர முத்தமனே சாரமொடு துரிசிசீனம், பாச்சப்பா கல்லுப்பு வெடியுப்புகெவுரி பரிவாக வெள்ளையென்ற அப்பிரேகத்தோடு, காச்சப்பா நாகமொடு வெள்ளீயப்பொடியுங் கடல்நுரையுஞ் சங்குநீ றண்டத்தோடே. (௫0சு)

ஓட்டோடு யன்னமென்ற பேதிதானு முற்றமனே சூடனொடு யரபொடியுஞ் சிங்கி, காட்டோடு வைக்கிருந்தங் கஞ்சமென்றநிமிளை காந்தமொடு சத்தியென்ற சாரந்தானும், நாட்டோடு இருபத்து யைந்துமாச்சு நலமான சூதமது யிருபத்தைந்து, பாட்டோடு எருக்கம்பால் விட்டேயாட்டிப் பதறும லேழுனு ளரைத்துலர்த்தே. (௫0அ)

உலர்த்தியே வில்லையைப்போல் வைத்துக்கொண்டு உத்தமனே வெள்ளியினுற் கிண்ணிபண்ணி, அலர்த்தியே அயச்சட்டி உள்ளங்கைபோ லப்பனே வரையிட்டு பண்ணிவித்து, மலர்த்தியே மருந்துதனையுள்ளே வைத்து வகையாக மேற்கிண்ணி பொருந்தப் பார்த்து, பிலர்த்தியே முன்கவசம் போலேசெய்துப் பேறுக முக்கவரில் மேலேயேற்றே. (௫0அ)

ஏற்றியே அகல்வைத்துத் திரியைப்போட்டு இதமான உள்ளியெண்ணெய் விளக்குயேற்று, போற்றியே மூன்றுநா ளவியாமலேற்றுப் பேரான பதங்கமது பேறும்பாரு, ஆற்றியே பதங்கமெல்லா மெடுத்து வாங்கி அதிகவெள்ளை யப்பிரேகம் நவநீதம்பண்ணு,

Digitized By Roja Muthiah Research Library

சாற்றியே குகையொன்று சில்லுபண்ணு சார்வான
அண்டவெள்ளைக் கருவாற்பண்ணே. (௫0௯)

பண்ணியதோர்க் குகைக்குள்ளே மருந்துவைத்துப் பரிவாக மேல்மூடி சீலைசெய்து, கண்ணியதோர் கெசபுடத்திற் போட்டெடுத்துக் கனமான குகைக்குள்ளே வைத்துருக்கி, நண்ணியதோர் சூதம்நின்று உருகும்போது நலமான கிண்ணியை நீ சமனுப்போடு, திண்ணியதோர் சூதமிடை வெள்ளியம்போட்டுத் திறமாகக் காரமிட்டு உருக்கிச்சாயே. (௫௧0)

சாய்த்திட்ட மருந்தெடுத்து நிறுத்துக்கொண்டு சார்வாகநாலுக்கு சூதமொன்று, பொய்த்திட்ட மருந்துக்கு நாலத்தொன்றுப் புகழான வெள்ளையது நிறுத்துப்போட்டு, காய்த்திட்டமூலைப்பாலை விட்டேயாட்டிக் கனமாகவில்லைசெய்து அயச்செப்பில்வைத்து, ஏய்த்திட்ட வைந்தெருவிற் புடத்தைப்போட்டு எளிதான செம்புவங்கம் நூற்றுக்கொன்றே. (௫௧௧)

ஒன்றான வெள்ளியது மாற்றுக்கேளு உற்பனமா இருபத்து ஐந்துமாற்று, கண்ணான சூதமது வெள்ளியாகுங் காரீயம்வெள்ளியாம் நாகம்வெள்ளி, மன்னான தூயவெள்ளியாகுமக்காள் மாயமாம் வாசனையை நீக்கித்தள்ளி, விண்ணான அம்பலத்தில் தெரிசித்தப்பால் மேவியதோர் சிலம்பொலியி னுதங் கேளே. (௫௧௨)

பச்சைக் கர்ப்பூர வைப்பு.

காதமென்ற பச்சைக்கற்பூரம்பண்ண நலமாகச் சொல்லுகிறேன் கேளுகேளு, போதமென்ற சூதமது பலந்தானெட்டுப் பேரான கெந்தகமோ பலந்தா

Digitized By Roja Muthiah Research Library

னென்று, நீதமென்ற கெந்தகத்தை ஓட்டிவிட்டுருக் கி நினைவாக சூதத்தையதிலே விட்டுக்கிண்டி, நாதமெ ன்ற கரிபோலே தூளாய்ப்போகும் நலமாக எடுத்து வைத்துப் பாகங்கேளே. (ருகங)

கேளப்பா மண்ணாலேதோண்டி ரெண்டுபண்ணி க் கெடியாகச் சந்துவாய் பொருந்தச்சுட்டு, நாளப்பா தோண்டியதி னுள்ளேபூச நலமான மத்தைச்சார் மூ ன்றுதிரம்பூசு, வேளப்பா யுலர்ந்தபின்பு அடித்தோ ண்டிக்குள்ளே விரவியதோர் கரியுப்பு அரைத்தோ ண்டிமட்டும், வாளப்பா பொடிபண்ணித் தோண் டியிலேபோட்டு மருவியதோர் செங்கல்மா நாழிதா னே. (ருகச)

தானான அரைவாசிஉப்புமேற்போட்டுத் தணலுக் குள் சூதத்தூள் பரப்பிவைத்து, கானான அதின்மே லே செங்கல்மாப்போட்டு கையாலே அமுக்கிட்டு மேற்றோண்டிகவிழ்த்து, வானான சந்துக்கு சீலைசெ ய்து மருவியதோ ரடுப்பேற்றி எரிப்பாயப்பா, தேனா ன காடாக்கினி நாலுசாமஞ் சிறப்பாக எரித்திடவே பதங்கமாமே. (ருகரு)

ஆமப்பா பதங்கமது மேற்றோண்டிக்குள்ளே அ ப்பனே ஏறியது மாப்போல் நிற்கும், தாமப்பா பதங்க மெல்லா மயிற்குச்சிகட்டித் தும்பாமல் எடுத்தல்லோ குப்பிக்கிட்டு, வாமப்பா வாலுகையின் மேல்வைத்து மறவாமல் தீப்போட்டுப் பனிரண்டுசாமம், காமப்பா பதங்கமது யிறுகியேறிக் கம்பிபோல் வெளுப்பாக இருக்கும்பாரே. (ருகசு)

இருக்கிறதோர் கர்ப்பூரம் விராகனுவு இதமான
கெந்தியது விராகனென்று, பருக்கிறதோர் கல்வத்தி
ற் பொடியாய்ப்பண்ணி பணவிடைதா னனுபானத்
தோடேகொள்ள செருக்கிறதோர் கடிவிஷங்கள் பு
ண்கள்சூலை செருமிய வெண்குஷ்டங்கள் பவுத்திரங்
கள்கிரந்தி, அருக்கிறதோர் வியாதியெல்லா மகன்று
போகு மாதித்தன் கண்டபனி போலாம்பாரே. ()

பனியென்ற பச்சைரசஞ் செந்தூரிக்கப் பாங்கா
ன சூதமது பலந்தானெட்டு, கனியென்ற கெந்தகந்
தா னிரண்டு பலமாகுங் கனமான ஓட்டிலிட்டு தண
லில்வைத்து, தொனியென்ற கெந்தகத்தை யுருக்கிக்
கொண்டு சூதத்தை யதில்விட்டு அயத்தால்கிண்டு, ந
னியென்ற சூதமது கரிபோலாகும் நயத்தோடே வா
ங்கிமெள்ள குப்பியிலே போடே. (ருகஅ)

போட்டுமே அரைவாசி குப்பிக்கப்பா பேரான
வாலுகையின் மேலேவைத்து, நாட்டுமே ஓட்டாலே
மேலேமூடி நயமாக அடுப்பெரித்து சாமம்ரண்டு, ஓட்
டுமே ஓடதனைவாங்கிப் போட்டு உக்கிறமா எரித்தாக்
கால் கெந்தகந்தான்பத்தும், வாட்டுமே கெந்தகத்தி
னுலத்தொன்று மருவியதோர் தாளகத்தை நிறுத்து
வையே, (ருககூ)

வைக்கவே கொஞ்சமாய்க் குப்பியிலேபோட்டு ம
றவாம லயத்தினுற் கிண்டுகிண்டு, நைக்கவே தாளகத்
தைப் போட்டுப்போட்டு நயமாகக் கிண்டிவரசிலாகை
யாலே, உய்க்கவே சரக்கெல்லாம் பதங்கமாகு முத்தி
வெருங் குப்பியா யடியிற்காணுஞ், செய்க்கவே யடி

Digitized By Roja Muthiah Research Library

யிலே பருந்தில்லாட்டால் சிறுன பதமென்று அடு ப்பையாற்றே. (ருஉ0)

ஆற்றியே யிருனுழி யானபின்பு அயக்குறட்டால் குப்பிதனை வெளியில்வாங்கி, போற்றியே நீர்தெளித் து ஆறப்போட்டுப் புகமூக குப்பியெல்லாந் தள்ளிப் போட்டு, தேற்றியே சிவப்பாகக் கம்பிபோலே சிறுத் திருய்ப் பலகைபோ லிருக்கும்பாரு, சாற்றியே பண விடைதான் தேனிலுண்ண தப்பாது நோவெல்லாஞ் சாடிப்போமே. (ருஉக)

சாடியே கல்வத்தி லிதனைப்போட்டுத் தயங்காம ற்பொடிப்பண்ணி காட்டுச்சோம்பு, நீடியே கிழங்குச் சார் துவைத்துக்கொண்டு நினைவாக அரைத்திடுவாய் மூன்றுனுள்தான், வாடியே ரவியில்வைத்துப் பொடி யாய்ப்பண்ணி வளமான காசியென்ற குப்பியிலேபோ ட்டு, ஒடியே வாலுகையின் மேலேவைத்து உற்பன மா யடுப்பெரித்து ஆறவிட்டுவாங்கே. (ருஉஉ)

வாங்கியே முன்போலக் கல்வத்திற்போட்டு வள மான கிழங்குச்சார் வார்த்துஆட்டி, தேங்கியே அரை த்திட்டு மூன்றுனுள்தான் திறமாகப் பொடியாக்கி கு ப்பிக்கேற்றி, ஓங்கியே அரைக்கையிலே பலந்தான் கெந்தி உற்பனமாய்ப் போட்டரைத்துக் குப்பிக்கேற் று, தாங்கியே மூன்றுனுள் தீயையாட்டுத் தப்பாமலி ப்படியே அஞ்சுதிர மேற்றே. (ருஉங)

அஞ்சுமே வாலுகையில் தளத்தில்நிற்கும் மச காம லயச்சிமிழி லெடுத்துவைத்து, உஞ்சுமே நவ லோகம் நூற்றுக்கொன்றீய உற்பனமாய்ப் பத்தரை யே மாற்றுகாணுங், கெஞ்சுமே நோவெல்லாந் தவடு

Digitized By Roja Muthiah Research Library

பொடியாகும் கெடியான காலனுமே அஞ்சிப்போவா
ன், மிஞ்சுமே புளியுப்பு விட்டுத்தின்றால் மேவியதோ
ர் சட்டைகக்கிப் பாலையாமே. (௫உச)

பாலையாஞ் சிவப்பான கெந்திதன்னைப் பகரக்கே
ள் பராபரைக்கி முதல்நாதந்தான், ஓலையா லெழுத
வென்று விதனினூட்டு உத்தமனே கடல்தண்ணீர் மை
க்காப்பாகு, மாலையாய் கொன்றையைத்தான் தரித்த
சிவன்மைந்தா மயங்கினு ரிதினுடைய ஆட்டைப்பார்
த்து, ஆலையாஞ் சரக்கெல்லாங் கொல்லுங்கொல்லும்
மம்மம்மா ஆயியுட நாதந்தானே. (௫உ௫)

கோழித்தலை கெந்தி.

நாதமென்ற இதற்குப்பேர் சுகதுண்டகெந்தி ந
லமான கோழிதலை சூடென்றும்பேர், போதமென்ற
இதினுடைய வைப்புத்தன்னை போக்கோடே வெளியா
கச் சொன்னேன் மக்காள், நீதமென்ற நெல்லிக்காய்
க் கெந்தகத்தை நினைவாகப் பலம்பத்து நிறுத்துக்கொ
ண்டு, கீதமென்ற செவ்வகத்தி செவ்வலரி முருக்கு
கெடியான செவ்வல்லி செம்பரத்தைதானே. ()

தானான மாந்துளிரு குமரிவேருந் தயங்குமணித்
தக்காளிச்சாறுக்கியோடு, பானான புளியாரைப் பத்
துங்கேளுப் பாங்காக வெவ்வேறாய்ப் படிதான்சாறு,
கோனான வார்த்தொன்றாய்க் கலக்கிக்கொண்டு கொ
டியதொரு இந்திரமாங் கோபப்பூச்சி, தேனான பூனு
க மிரண்டுங்கேளு தேசிக்கா யளவரைத்துக் கூடப்
போடே. (௫உஎ)

போடவே வெடியுப்புச் சீனம்ரெண்டு பொலி
வாக வகைக்கியொரு பலமும்போட்டு, வாடவே ப

Digitized By Roja Muthiah Research Library

சுவின்பால் படிதானைந்து மாசற்ற எலுமிச்சம் பழச் சார்சேரு. தேடவே கலக்கியொன்றாய் வைத்துக் கொண்டுத் திறமாகச் சட்டியிலே படிதான்வார்த்து, நீடவே சீலைகட்டி அதின்மேற்கெந்தி நினைவாகப் பரப்பியல்லோ மேற்சட்டிமூடே. (ருஉ௯)

மூடியே சீலைசெய்து குழிதான்வெட்டி முயற்சியா யடிச்சட்டிப் புதைத்துப்போட்டு, நாடியே மேற்சட்டித் தெரியவிட்டு நழுவாமற் புடம்போடு பத்தெருவிலப்பா, தேடியே ஆறவிட்டு யெடுத்துப்பாரு சிறப்பாக உருக்கியெல்லாஞ் சாறுதனில்நிற்கும், வாடியே மணியெல்லாம் பொறுக்கிக்கொண்டு மறுபடியுஞ் சாறெருக்கப் படிதான்வாறே. (ருஉ௯)

படிசாறு வார்த்துமே மருசீலைகட்டிப் பாங்காகமணியெல்லாம் பொறுக்கிவைத்துத், துடியாகப் பரப்பியே மேற்சட்டிமூடித் துப்புரவாய்ச் சீலைசெய்து புடத்தைப்போடு, அடிச்சாறு வற்றவற்ற மறுசாறு வார்த்து அதட்டியே யிருபத்து ஒன்றுபோடு, கடிச்சாறு தள்ளிவிட்டு மணியெல்லாம் பொறுக்கிக் கழுவியேதண்ணீரில் ரவியிற்போடே. (ருஙo)

போட்டபின்பு எடுத்தனைக் கல்வத்திட்டுப் பொடிபண்ணிக் கல்வத்தில் மயில்நெய்வார்த்து, நாட்டபின்பு ஏழுனளரைத்து மைபோல் நலமாகக் குழம்பாக்கி அயக்குகையில்வார்த்துப், பூட்டபின்பு வாலுகையில் மேலேவைத்துப் பொருந்தவே தீமூட்டிக்கமலம் போல, தேட்டபின்பு நால்சாம மாறவிட்டெரிக்க சிவசிவா மாதளம்பூ நிறம்போலாமே. (ருஙக)

Digitized By Roja Muthiah Research Library

நிறமான கெந்தகத்தின் வேகம்பட்டால் நிமைக்குமுன்னே சூதமது எமமாகு, மறமான லோகத்தில் பரிசிக்கவேதை அரனுண்ட கற்பமிது யானுங் கொண்டேன், திறமான தங்கமது செம்புமாகுஞ் சேர்ந்தநவ லோகத்தி லாயிரத்துக்கோடுங், குரமாதுமாயியுட நாதமப்பா கொண்டாக்கால் கடிகையிலே சித்தியாமே. (௫௨)

பஞ்ச பக்ஷிப் பாஷாணம்.

சித்தியாஞ்தேவருக்கு மைந்துபூதஞ் செகத்திலுள்ள சித்தருக்கு மைந்துபூத, முத்தியா மூர்வனமுமைந்துபூத முயர்ந்துநின்றவிருக்ஷமெல்லா மைந்துபூதம், புத்தியாப் பறப்பினமுமைந்துபூதம் போக்கானஐந்திறுலெல்லாமாச்சு,பத்தியாம் வாதத்தில் பஞ்சபக்ஷிப் பாஷாண வைப்பதனைப் பாடினேனே. (௫௩)

பாடினேன் வடமொழியைப் பிரித்துப்பார்த்துப் பரிவாக ஆத்தாளைக்கேட்டுக்கேட்டு, ஓடினேன் குளிகையிட்டு நாதாக்கள்பதத்தி லுகந்தமெய்யாகியல்லோ கருக்கள்கேட்டு, வாடினேன் மனமிளைத்தேன் வாதம்பார்த்து மயக்கமெல்லாங் குருச்சொல்லை மனதிலெண்ணி, நாடினே னுலகத்தோர் நம்மைப்போலே நலியாமல் வெளியாகத் திறந்திட்டேனே. (௫௪)

திறந்திடா திருந்தாக்கால் சரக்குவைப்பை செகத்திலே வாதம்பொய் யாகுமென்று, யிறந்திடா திருக்கவென்று வெளியாய்ச் சொன்னேன் யேழைமதி போகாதே பார்க்கவென்றால், மறந்திடாக் கருவையெல்லா முன்னிப்பாரு மாயமாம் வாசனையால் மனம்புண்ணாகும், பிறந்திடா திருக்கவென்றால் காயசித்

Digitized By Roja Muthiah Research Library

திபண்ணு பெரியோர்கள் பதம்போற்றிக் கருவைக் கேளே. (௫௩௫)

கருவென்ன தாளகமும் பலமுமைந்து காந்தளம் பூப் போலான பூநீரைந்து, உருவென்ன லிங்கமது பலமுமைந்து உயர்த்தியாஞ்சிலையதுவும் பலமுமைந்து, குருவென்ன கெவுரியது பலமுமைந்து கூட்டியெல்லாங் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி, திருவென்ன செங்கீரைச் சாறுவிட்டுச் சிறப்பாக ஏழுநாளரைத்திடாயே. (௫௩௬)

அரைத்திட்டுப் பொடிபண்ணி மேருக்கேற்றி ஆறவிட்டுப் பனிரெண்டு சாமந்தீப்போடு, வரைத்திட்டுப் பதங்கமது இறுகியேரி வகையான பஞ்சபட்சிப் பாஷாணமாகும், நரைத்திட்டுப் போகாதுமெழுகுப் பண்ணிக்கொண்டால் நவலோகமாயிரத்துக் கோடும் பாரு, புரைத்திட்டு வீசமிடை பாலினுண்ணு பொலிவான சட்டைகக்கிப் பாலையாமே. (௫௩௭)

பவளபுற்றுப் பாஷாணம்.

ஆமென்ற பவளபுற்றுப் பாஷாணந்தா னரைகிறேனுந்தா னறிந்தமட்டும், போமென்ற தாளகந்தான் பதமும்பத்து புகழான வெள்ளையென்ற பாஷாணந்தான்; காமென்ற பலம்பத்து கல்வத்திட்டுக் கனமாக யரைத்துநன்றாய்ப் பொடியாய்ப்பண்ணி, தேமென்ற இரண்டுபலங் கெந்தியிட்டுச் சிறப்பாக காசியென்ற மேருக்கேற்றே. (௫௩௮)

ஏற்றியே வாலுகையின் மேலேவைத்து இதமாகக்கமலம்போல் தீயைமூட்டு, போற்றியே நால்சாமம்

Digitized By Roja Muthiah Research Library

கமலம்போலாட்டுப் புகழாக ஆறவிட்டுத் தண்ணீர் குத்து, சாத்தியே குப்பியைத்தா னுடைத்துப்பார்த்தால் சாங்கமாய்ப் புற்றுப்போல் பாஷாணமாகு, மாற்றியே யிதைக்கட்டி வேதையோட்டி லம்மம்மா வெகுதூர மோடுங்காணே. (௫௩௯)

கெவுரி வைப்பு.

காணப்பாகெவுரியுட வைப்பைக்கேளு கடிதான வெள்ளையென்ற பாஷாணந்தான், ஊணப்பா பலம்பத்து நிறுத்துக்கொண்டு உத்தமனே கெந்தகமு மிரண்டரைபேபலந்தான், பூணப்பா பொடிபண்ணி மேருக்கேற்றிப் புகழான வாலுகையின் தீயைமூட்டு, வீணப்பா கமலம்போல் நாலுசாமம் விடுபடவே எரித்திட்டு உடைத்துவாங்கே. (௫௪0)

மகா வெடியுப்பு ஜெயநீர்.

வாங்கியே யுடைத்தாக்கா லடுக்குப்போல வகையான சிகப்புமஞ்சள் போலிருக்கும், ஓங்கியே யிதைக்கட்ட யாறுலாகு முத்தமனே வெடியுப்புச் செயநீராலாகுந், தேங்கியே வெடியுப்புச் செயநீர்க்கேளு சிறப்பான பெருங்கம்பி ளுலாங்காய்ச்சல், பாங்கியே பலம்பத்து நிறுத்துக்கொண்டு பக்குவமாஞ் சாரமது காசிடைதானஞ்சே. (௫௪௧)

அஞ்சோடு கல்லுப்பு காசிடைதானஞ்சு மழகான பூநீறு காசுஅஞ்சு, நஞ்சோடு வீரமது காசுஅஞ்சு நலமான அப்பிரகங் காசுமஞ்சு, பிஞ்சோடு வெள்ளையது காசுமஞ்சு பேரான துருசியது காசுமஞ்சு, பஞ்சோடு சீனமது காசுமஞ்சு பாங்கான சூடனது காசுமஞ்சே. (௫௪௨)

Digitized By Roja Muthiah Research Library

காசுதா னேந்தாகும் வெங்காரம்பூரம் காணிதுக்கு சமனகக் கடல்நுரையைப்போடு, மாசுதா னிந்துப்பு அன்னபேதி மகத்தான சத்தியென்ற சாரத்தோடு, தூசுதா னிவையெல்லாங் கல்வத்திட்டு துடியாகப் பொடிபண்ணி சொல்லக்கேளு, பூசுதான் பழம்புளிதான் பதமும்பத்து புகழான கொறுக்காயின் புளிதான்பத்தே. (௫௪௩)

பத்தான ஏறலென்ற சதையினேடு பாங்கான பருங்கொன்றைப் பழத்தைக்கேளு, வித்தான பலம்பத்து நிறுத்துப்போட்டு மேவியதோர் எலுமிச்சம் பழச்சார்விட்டு, முத்தான இடித்துமைபோல் மெழுகாய்ப்பண்ணி முயற்சியா வில்லைசெய்து யுலரப்போட்டு, அத்தான பூப்புடத்தில் தயிலம்வாங்கி அழகாக முன்மருந்தி விட்டேயாட்டே. (௫௪௪)

ஆட்டியே எழுநாள் ரவியிற்போடு அழகான அடிக்கனத்த கலயம்வாங்கி, பூட்டியே கற்சுண்ணங் குழைத்துக்கொண்டு பேரான விரல்பருமன் கனமாய்ப் பூசி, தேட்டியே கலயத்தி னுள்ளும்பூசி சிறப்பான சில்லுக்கு நடுவேபூசி, வாட்டியே கலயத்தில் மருந்தைவைத்து வகையாகச் சில்விட்டு சீலைசெய்யே. ()

வேடியுப்பு ஜெயநீர்.

செய்தபின்பு நூறெருவிற் புடத்தைப்போடு, திறமாக ஆறவிட்டு எடுத்துப்பாரு, கைதபின்பு பொடிபண்ணி பீங்கானில்வைத்துக் கனமான பனியில் வைக்கச் செயநீராகு, மைதபின்பு இன்னீரில் வீரம்பூர மருவநன்றாய்ப் பொடிபண்ணி செயநீர்ற்போ

Digitized By Roja Muthiah Research Library

ட்டு, எய்தபின்பு சரக்கான அறுபத்துறைவு மிதமா
ன செயநீரில் தோய்ச்சுவாட்டே. (ருசகூ)

வாட்டியபின் சுருக்கிடவே மெழுகாய்ப்போகும்
வகையான கட்டினமாம் நீற்றினமுமாகும், பூட்டிய
பின் செந்தூரங் களங்கமாகும் போக்கான சத்துவ
கைக் குளிகையாகும், நீட்டியபி னவலோகம் வேதை
யாகும் நிலைத்துநிற்குங் காவியுப்பு புடத்துக்கேகா, ஓ
ட்டியபின் செயநீரில் சுறுக்காம்வேதை உற்பனமாங்
காயசித்துங் கெவனசித்தாமே. (ருசஎ)

சார ஜெயநீர்.

ஆமப்பா சாரநீர் சொல்லக்கேளு அடுக்கான சா
ரமது பலந்தான்பத்து, ஓமப்பா அண்டநீர் பலந்தா
ன்ரெண்டு உற்பனமாங் கல்லுப்புக் காசுஐந்து, வாம
ப்பா இந்துப்புக் காசுஐந்து மகத்தான பூநீறு காசுஐந்
து, காமப்பா துருசியது காசுஐந்து கடல்நுரைதான்
காசுஐந்து சினமஞ்சே. (ருசஅ)

சினமா மப்பிரேகங் காசுஐந்து சிறப்பான சூட
னது காசுஐந்து. பானமாம் பூரமது காசுஐந்து ப
கர்கின்ற வெண்காரங் காசுஐந்து, ஊனமாம் வீரமது
காசுஐந்து உற்பனமாஞ் சத்தியென்ற சாரமைந்து,
கானமாம் அன்னமென்ற பேதியைந்து கனமான
கல்வத்திற் பொடியாய்ப்பண்ணே. (ருசகூ)

பண்ணியே வெடியுப்புச் ஜெயநீர்வார்த்துப் பா
ங்காக அரைத்திட்டு ஏழுநாள்தான், ஒண்ணியே கல
சத்திற் சுண்ணம்பூசி யுத்தமனே யதுக்குள்வைத்
து புடத்தைப்போடு, நண்ணியே ஆறவிட்டுப் பனியி

Digitized By Roja Muthiah Research Library

ல்லைக்க நலமான வாறுதிபோற் ஜலமுமாகும், கண்ணியே யின்னீரில் வீரம்பூரங் காசிடைதான் பொடித்திட்டு வைத்துக்கொள்ளே. (ருரு0)

கொள்ளென்ற ஜெயநீரால் பாஷாணங்கள் குறிப்பாகச் சுறுக்கிடவே கட்டிப்போகும், அள்ளென்ற கல்லுப்பு மணிபோலாடு மாச்சரியம் நாகத்தை அமுக்கிக்கொல்லுங், துள்ளென்ற சூதத்தை மாலையாக்குந் துடியான பூரத்தைச் சுண்ணம் பண்ணும், புள்ளென்ற லிங்கத்தை மெழுகுபண்ணும் போக்கதிலே வெகுகோடி ஆடலாமே. (ருசுக)

துருசி ஜெயநீர்.

ஆடலாந் துருசியென்ற ஜெயநீராலே அப்பனே துருசியோர் பலந்தான்பத்து, சூடலாங் கெந்தகந்தான் பலமுமூன்று சுடர்க்கொடியாஞ் சூடனதும் பலமுமூன்று, ஊடலாம் வீரமதுப் பலந்தானொன்று உற்பனமாம் வெள்ளையது பலமுமொன்று, நீடலாம் பூனீறு பலமுமொன்று நிச்சயமாங் காரமது பலமுமொன்றே. (ருருஉ)

ஒன்றான சத்தியது காசுஐந்து உற்பனமாய்த் தாளகமுங் காசுஐந்து, மன்றான சிலைபதுவுங் காசுஐந்து மாசற்ற சீனமது காசுஐந்து, குன்றான அண்டநீர் காசுஐந்து கோழியுட வெணமலமுங் காசுஐந்து, வென்றான சூதமது காசுஐந்து மெய்யான புனுகதுவுங் காசுஐந்தே. (ருருஙு)

காசிடைதா னஞ்சாகும் வெள்ளுரமும்பூரங் கனத்ததொரு குருவண்டு அண்பத்தொன்று, துரசி

ணைடதான் கல்வத்திற் பொடிபாய்ப்பண்ணித் துவளவ
ரை பேழுனுள் சாரநீரால், மாசிணைடதான் தெல்லுப்
போல் வில்லைபண்ணி வளமான கலைபத்தில் சுண்ண
ம்பூசி, ஆசிணைடதான் மருந்தையிட்டுச் சீலைசெய்து
அன்பதொரு அணைத்துமெள்ளப் புடத்தைப்போ
டே. (ருச)

புடம்போட்டு எடுத்துடனே குருவுமாகும் பே
ராக நாலிலொன்று சாரங்கூட்டி, திடம்போட்டுக் க
ல்வத்தி லிட்டுஆட்டிச் சீராக நால்சாம மாட்டுஆட்டு,
தடம்போட்டு அண்டோட்டி லிட்டுமூடிச் சார்வாகப்
புடம்போட்டுப் பனியில்வைக்க, நடம்போட்டு ஆறு
போல் செயநீருகும் நலமான முன்னீரில் வீரம்போ
டே. (ருரு)

வீரமிட்டால் சிவப்பாகுஞ் செயநீரப்பா விடுப
ட்ட மதவானை சூதமதுகரும்பு, ஆரமிட்ட புலிகை
யி லாடுபோல அசந்துபோஞ் செயநீரைக் கண்டவுட
னப்பா, காரமிட்ட சூதத்தைக் கல்வத்திட்டுக கடிய
தொரு செயநீரால் மூன்றுனாட்ட, தூரமிட்ட வெ
ண்ணைபைப்போ லாகும்பாரு துடியான மத்தங்காய்க்
குள் வைத்துவாட்டே. (ருசு)

வாட்டியே பேழுபுடம் போட்டெடுத்து வரிசை
யாய்க் கறண்டிதனி லெண்ணைகுத்துருக்கி, பூட்டியே
யெடுத்துப்பார் அந்தரத்தின் மீன்போல புகழாகப்ப
ளிச்சென்று மணியுமாகும், மூட்டியே யுபரசங்கள்
நூற்றிரண்டுபெத்து முத்தமனே பாஷாண மறுபத்து
ஞலுந், தீட்டியே லவணவகை யிருபத்தைந்துத் திற
மாக நவரத்தினம் நவலோகமூட்டே. (ருஎ)

Digitized By Roja Muthiah Research Library

ஊட்டுநீ சத்தெடுத்து விடுவித்தாக்கா லுத்தம னே சாரணைதா னென்றேயாச்சு, பூட்டுநீ யிப்படியே யிருபத்தொன் று போக்கானசத்தெடுத்துக்கொடுத்து கக்கி, லாட்டுநீ சுரூபமென்ற குளிகையாச்சு அண்ட முதல் பதங்களெல்லாம் நிமைக்குள்புக்கி, சூட்டுநீ மூ ன்றுவருங் குளிகைவேகஞ் சுரூபசித்துங் கெமனசித் துஞ் சுருக்காம்பாரே. (௫௫அ)

தாம்பிரக் குரு.

சுருக்காகத் தாம்பிரத்தின் சுண்ணங்கேளு சு ருக்காகப்புளியிலேபோல் தகடுவாங்கி,முறுக்காகப் ப லமெட்டு நிறுத்துக்கொண்டு முனையான பழச்சாற்றி லூறவைத்து, நறுக்காகக் கழுவியதை யெடுத்துக்கொ ண்டு நாறுகின்ற செம்பினுட ஊறல்போக்கி, யிறுக் காக வெள்ளீயஞ் சட்டியிலேயுருக்கி யிதமாக நிமிளை தனை பொடியாய்ப்பண்ணே. (௫௫௬)

பண்ணியதோர் பொடிதானும் வங்கத்துக்குப் ப ரவியதோர் சமபாகம் நிறுத்துக்கொண்டு, ஒண்ணிய தோர் வெடியுப்பு நிமிளைக்குப்பாதி உத்தமனே பொ டியாக்கி வேறேவைத்து, நண்ணியதோர் வங்கம்நின் றுருகும்போது நலமாக ஒவ்வொன்றாய் மாறிமாறி, க ண்ணியதோர் வங்கத்திற் போட்டுக்கிண்டிக் கசகாம ல் சுண்ணமது ஆகும்பாரே. (௫௬0)

சுண்ணமின்ன மாவதற்கு முறையைக்கேளு து டியான வெண்கருவு மெருக்கம்பாலும், வண்ணமின் ன மிரண்டுமொன்றாய்க் கலக்கிக்கொண்டு வங்கத்தில் விட்டரைத்து வில்லைகட்டி, திண்ணமின்ன மகலிலிட் டுப் புடத்தைப்போடு தீர்க்கமா யாறினபின் னெடுத்

துவாங்கி, யெண்ணைமின்னம் நாலுபலம் நிறுத்துக்கொண்டு யியல்பான சூதமது பலந்தாமென்றே. ()

பலமதுதான் கெந்தகத்தை நிறுத்துப்போடு பாஷாண வெள்ளையது காசுஐந்து, நிலமதுதான் தாளகமுங் காசுஐந்து நீச்சான வீரமது காசுஐந்து, குலமதுதான் கல்லுப்புக் காசுஐந்து கொடிதான சாரமதுக் காசுஐந்து, நலமதுதான் சீனமது காசுஐந்து நல்கெவுரி மனோசிலையுங் காசுஐந்தே. (நூ௫௨)

அஞ்சோடு வெண்கார மன்னபேதி அழகான துத்தமொடு காசுஐந்து, கஞ்சோடு இவையெல்லாங் கல்வத்திட்டுக் கடிதான வெண்கருவு மெருக்கம்பாலும், நஞ்சோடு வார்த்தரைத்துக் குழப்பிக்கொண்டு நலமான தாம்பிரத்தின் தகட்டிலப்பி, மிஞ்சோடு கொடிவேலி வேரின்பட்டை மெலிவான அண்டோடுஞ் சமனாய்ச்சேரே. (நூ௫௩)

சேர்த்தல்லோ பொடியாக்கி எருக்கம்பாலுஞ் சினத்தஅண்ட வெண்கருவு மத்நித்துக்கொண்டு, வார்த்தல்லோ அரைத்திடுவாய் நாலுசாமம் வளமான குகைபண்ணி தாம்பிரத்தைவைத்து, ஏர்த்தல்லோ மேலமூடி சீலைசெய்து இயல்பாகக் குழிவெட்டி முழங்கால்மட்டும், போர்த்தல்லோ புளிபறணி எருவடிக்கிப் புகழாக கெசபுடமாய்ப் போட்டுவாங்கே. (நூ௫௪)

வாங்கியே மேற்கவசந் தள்ளிப்போட்டு வாசிபாமுன்குழம்பில் பிசறிக்கொண்டு, தேங்கியே முன்குகையில் வைத்துப்பூசி சிறப்பாக முன்போலே புடத்தைப்போடு, தாங்கியேயிப்படிதான் மூன்றுதரம்போடு தவளம்போல் குருவாகுஞ் செம்புதானும், ஓங்கி

பே யிக்குருவுக் கென்னஜப்பு உத்தமித்தா பொப்பெ ன்று உரைசெய்தேனே. (ருகரு)

தாம்பிரச் செயநீர்.

உரைசெய்தேன் குருவுக்கு இடைக்கிடைதான் சார முத்தமனே பொடிசெய்து கல்வத்திட்டு, நிரை செய்த முன்னீரா லரைத்துக்கட்டி நேர்பாக புடம் போட்டு பனியில்வைக்க, கரைசெய்த செயநீராம் வீ ரம்பூரங் கனமாகப் பொடிசெய்து நீரிற்போட்டு, ப ரைசெய்த செயநீரை வைத்துக்கொண்டு பாங்கான சூ தத்தை யரைத்துருட்டே. (ருசாசா)

சூதக்கட்டு.

உருட்டியே தாவடமா கையிற்கொண்டு உத்தம னே அஞ்செழுந்து மெட்டெழுத்துமோது, மருட்டி யதை சித்தர்கள்தான் பார்ப்போமென்பார் வாங்கியே வாயிலிட்டு ஓடிப்போவார், மெருட்டியதை அவர்கை யில் காண்பிக்கவேண்டாம் வேதாந்த அனுபவத்தை யுற்றுப்பாரு, சிருட்டியதை ஒளித்துவிட்டு மூலம்பா ரு சிவயோகப் பிரமநிஷ்டை தெளிந்துபோற்றே. ()

பொன் தொட்டி.

போற்றவே பொற்றொட்டி வைப்பைக்கேளு பு கழாகத் தங்கத்தால்மேருபண்ணி, மாற்றவே சீலம ண் பிலக்கச்செய்து மகத்தான சூதமது பலந்தானெ ட்டு, ஏற்றவே ரெண்டுபலஞ் சுத்தித்தகெந்தி யியல் பான ஒட்டிலே கெந்தகத்தையுருக்கி, தோற்றவே சூ தத்தை யதில்வைத்துக்கிண்ட சூதமதுகரிபோலே யா குந்தானே. (ருகூஅ)

Digitized By Roja Muthiah Research Library

கரியான சூதத்தில் வெடியுப்புப்பலந்தான் கன மான தாளகமும் பலந்தான்போட்டு, உரியான பொ டிபண்ணி மேருவிலேபோட்டு உத்தமனே குப்பிவா ய் சீல்லிட்டுமூடி, மரியான வாலுகையில் மேலேவை த்து வாய்ப்பாகத் தீமூட்டு பனிரெண்டுசாமந், தெரி யான கெந்தகத்தி னெரிச்சல்கண்டால் சீல்லதனை தள் ளிவிட்டு சிலாகையிட்டுக்கிண்டே. (௬௬௯)

கிண்டையிலே அடிதனிலே மருந்தில்லாட்டால் கெடியான பதமென்று தீயைமாற்றி, சண்டையிலே ஆறவிட்டு ஒருசாமந்தான் சாதகமா யிரும்பான குற ட்டினாலே, மண்டையிலே குப்பியைத்தான் வெளி யேவாங்கி மகத்தான தண்ணீரைத் தெளித்துஆற்றி, பண்டையிலே யிருப்பான கத்திகொண்டு பக்குவமா ய் மேலோடு புறம்பாய்வாங்கே. (௬௭0)

வாங்கியதோர் ஓட்டின்பேர் பொற்தொட்டியா ச்சு மருவியே மேலோடி பதங்கித்துநின்றால், ஓங்கிய தோரெத்தமென்ற பாஷாணநாம மூத்தஅடி நின்றது வு மஞ்சினமுமாச்சு, ஏங்கியதோர் நடுவில்நின்றால் கற்பறியுமாச்சு ஏகநுனி மூக்கில்நின் றால் சரகாண்ட மாச்சு, தாங்கியதோ ரித்தனையு மாயிசொல்ல சாதக மாய் சித்தரெல்லாஞ் சமைந்திட்டாரே. (௬௭௧)

சமைத்திட்ட சரக்குகளில் வேதைகோடி சாதக மா யொவ்வொன்றாய்ப் பார்த்துக்கொண்டு, அமைத் திட்ட நூல்தனிலே மறைப்பில்லாம லறியாத பசசளு க்குந் தெரியவென்று, குமைத்திட்ட முத்துப்போ லொருகயற்றிற்கோர்த்தேன் கொடிகொம்பு கவர்கோ டி மரமொன்றேபோ, விமைத்திட்ட பிள்ளைகளுக் கு

கந்துசொன்னே னெழுனூற்றைப் பார்த்தவர்க ளெ
ன்போலாமே. (ருஎ௨)

நாகக்கிண்ணிப் பதங்கம்.

ஆமின்னம் நாகத்தைச் சொல்லக்கேளு ஆச்சரி
யம் நாகமது புலந்தான்பத்து, ஓமின்னம் நாகத்தை
தகடுவாங்கி உயர்ந்தமைக் கொன்றையிலை யரைத்து
க்கொண்டு, தாமின்னந் தகடுமேற் பொதிந்துமூடிச்
சார்வாகப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு, வாமின்
ன மிப்படியே பத்துவிசைபோட்டு கார்த்திகைக்கிழங்
காலே பத்துவிசைபோடே. (ருஎ௩)

போடப்பா வெறுகினுட கிழங்கிற்பத்து புளிய
ரணைக் கிழங்கிலே பத்துவிசைபோடு, நாடப்பா பின்
பெடுத்து எண்ணெய்குத்தியுருக்கி நலமாகக் கிண்ணி
யைப்போல் வார்த்துக்கொண்டு, ஊடப்பா நேர்வாள
ந் தயிலம்வாங்கி யுத்தமனே சாரமது காசுஅஞ்சு, நீ
டப்பா துரிசியது காசுஅஞ்சு நிலையான கல்லுப்பு கா
சுஅஞ்சே (ருஎ௪)

அஞ்சான பூநீறு காசுஅஞ்சு ஆதியென்ற கெவு
ரியது காசுஅஞ்சு, பிஞ்சான கெந்தகமுங் காசுஅஞ்
சு பேசாத சிலையதுவுங் காசுஅஞ்சு, மஞ்சான வீரம
து காசுஅஞ்சு மாசற்றலிங்கமது காசுஅஞ்சு, துஞ்சா
ன தாளகமுங் காசுஅஞ்சு துடியான வெடியுப்பு கா
சுஅஞ்சே. (ருஎரு)

காசுதா னஞ்சாகுஞ் சீனமப்பா கலந்திந்த எ
டையெல்லாம் மறுபதாச்சு, மாசுதான் சூதமது அறு
பதாகும் வாகான கல்வத்தி லிட்டுக்கொண்டு, ஆசு
தா நேர்வாளத் தயிலத்தாலே ஐந்துனா ளரைத்துநன்

Digitized By Roja Muthiah Research Library

றாய் வில்லைகட்டி, தூசுதா னிழலுலர்த்தி அயத்தகடு
குழித்துத் துப்புரவாய்க் கிண்ணியைத்தான் பதித்தி
டாயே. (௬௭௬)

பதித்திட்டு வறைந்துநன்றாய்ச் சீலைசெய்து பா
ங்காக முன்னுரைத்த மெழுகினாலே, நிறைத்திட்ட வி
லுப்பைநெய்யால் விளக்கைவைத்து நேராக விளக்
கெரிப்பாய் மூன்றுநாள்தான், குதித்திட்ட ரசமெல்
லாம் பதங்கமேறுங் கொள்கியிந்தப் பதங்கத்தைக் க
த்திகொண்டுவாங்கி, விதித்திட்டு நவலோகம் நூற்றுக்
கொன்றீய விரைந்ததுவும் பணிரெண்டு மாற்றுமாமே.

இரத்த சிங்கிவைப்பு.

மாற்றான ரெத்தசிங்கிவைப்பைக்கேளுமருவியிதி
ற் காயசித்தி லோகசித்தியாகும், கூற்றான எமன்போ
ல சுறுக்குமெத்த கொடிவிஷஞ் சூதத்தை நிமைக்குமு
ன்னே கொல்லுங், காற்றான காரீயப் பொடிதான்பத்
துக் கனகத்தின் பொடிதானு மிரண்டரையேபலந்தா,
னீற்றான நாகத்தின் பொடிப்பலந்தானைந்து நெல்லிக்
காய் கெந்தகந்தான் பலம்பத்து போடே. (௬௭அ)

பத்துடனே வெடியுப்புப் பலமுமைந்து பாங்கா
ன தாளகமும் பலமும்நாலு, கொத்துடனே குதிரை
ப்பல் பாஷாணமூன்று கொடிதான சாராயம் விட்டு
ஆட்டி, சித்துடனே லோகமெல்லாங் கறையமட்டுமா
ட்டிச் சிறப்பாக ரவியிலிட்டுப் பொடியாய்ப்பண்ணி,
முத்துடனே காசியென்ற மேருக்கேற்றி மூதண்டவா
லுகையில் வைத்திடாயே. (௬௭௯)

வைத்திட்டுத் தீயெரிப்பாய் எட்டுநாள்தான் ம
றவாம லிரவுபக லாறுமல்தா, னைத்திட்டு அடியிலே

Digitized By Roja Muthiah Research Library

தானே நிற்கும் நலமாக ஆறவிட் டுடைத்துவாங்கி, வைத்திட்டுக் கம்பியா யருணன்போலக் கட்டியாயிரு க்குமப்பா ரசத்தசிங்கி, வைத்திட்ட இதினுடைய ஆட்டினாலே பத்துயுக மாடியல்லோ கரைகாணே னே. (ருஅ0)

கரைகாணு ரத்தசிங்கிப் பலந்தான்பத்துக் கலரி துக்குள் சூதமதுப் பலமும்பத்து, உரைகாணு கெந்த கந்தான் பலமும்பத்து உகந்துநின்ற வெடியுப்புப் ப லந்தானைந்து, பரைகாணு தாளகமும் பலமுமொன் றுப் பரிவானச் சிலையதுவும் பலமுமொன்று, புரைகா ணு அவுரிச்சார் விட்டுஆட்டி பேராக நாள்மூன்று அ ரைத்திடாயே. (ருஅக)

ஏமச் சிங்கி.

மூன்றுனா ளரைத்திட்டுப் பொடியாய்ப்பண்ணி முயற்சியாங் காசியென்ற மேருக்கேற்றி, பூணுனாள் வாலுகையின் மேலேயேற்றி பொருந்தவே தீமூட்டு மூன்றுனாள்தான், தோன்றுனா ளாறவிட்டு உடைத்து வாங்கித் துடியான ஏமமென்றச் சிங்கியாச்சு, வின்று னாள் போகாமல் வீசமிடையுண்ணு மேனியுமோ தங் கநிற மாகும்பாரே. (ருஅஉ)

தங்கநிற மானுக்கால் மேனிதானுஞ் சாவேது னோவேது கற்பாந்தகாலம், பங்கநிறப் பெண்மாய்கை தனையகற்றிப் பாஷாண புளியுப்பைத் தள்ளிவிட்டு, சங்கநிற மாகவுந்தான் பாலினுண்ணு சாவென்றதது பொய்யா முகர்ந்தவரைநிற்கும், கொங்கநிற மாகவுந் தான் நவலோகத்தில் கொடுத்திடவே பதினாறு மாற் றுமாமே. (ருஅங)

மிருதார் சிங்கி.

மாற்றான மிருதார் சிங்கியைக்க மாணுக்காள் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளு, காற்றனக் காரியமிருபது பலந்தான் கலந்துக்கொள் நாலிலொன்று சுரைகெந்தியப்பா, மூற்றான கெந்திக்குப் பாதிவெடியுப்பு முயற்சியாய்ப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு, தேற்றான ஈயத்தைச் சட்டியிலேயுருக்கிச் சிறப்பாகப் பொடியிட்டு வறுத்திடாயே. (ருஅச)

வறுத்திடவே பொடியாலே ஈயஞ்சாகு மாசற்ற பொடியெல்லாங் கலையத்திட்டு, நிறுத்திடவே கலயத்தி லரைவாசியிட்டு நேராக மேல்மூடிச் சீலைசெய்து, கறுத்திடவே அடுப்பேற்றி பனிரண்டுசாமங் கமலம்போ லெரிபவிட்டு உடைத்துவாங்கி, மறுத்திடவே பார்த்தாக்கால் கம்பிபோல மாசற்ற மிறுதார சிங்கியாமே. (ருஅரு)

ஆமப்பா பாஷாண முப்பத்திரண்டு அப்பனே வைப்பதனைச் சொல்லிப்போட்டேன், ஓமப்பா சித்தர்சொன்ன நூலேப்போலே ஒளித்துவைத்து சூஸ்திரத்தைச் சொன்னாரில்லை, நாமப்பாகருவெல்லா மாராய்ந்துப்பார்த்து நலமாக ஒவ்வொன்றாய்ப் பார்த்துக் கண்டு, சேமப்பா எழுநூற்றில் சிக்கில்லாமல் சிறப்பாக வெளியாகத் திறந்திட்டேனே. (ருஅசா)

திறந்திட்டேன் சிவயோகி சித்தர்ஞானி சீராக பிழைக்கவென்று திருவுளத்துக்கொப்பாய், திறந்திட்டேன் சித்தருடன்வாதம்போட்டு சிவயோக பிரமநிஷ்டை முனியருக்காய், திறந்திட்டே னுத்தாளைக் கேட்டுக்கேட்டுத் தேகசித்தி யாகவென்று லோகத்தோர்

கள், திறந்திட்டேன் தேவியுட பூஜைக்காக சிவசொத்தை வறுமைபோ லுண்டிடாயே. (ருஅஎ)

வறுமைபோ லுண்டுடுத்து வாதம்பாரு மதத்தேரி மாயத்தி லழிந்திடாதே, வறுமைபோல் திரிந்துகொண்டு காயசித்திபண்ணு மகத்தான ரிஷிகளுக்குத் தொண்டுபண்ணு, வறுமைபோல் திரிந்துகொள்ளு நாட்டிலுள்ளபேர்க்கு மன்னுயிருந் தன்னுயிராய் மனதிலுண்ணு, யுறுமையா மலையிலுள்ள அதிசயத்தைப்பாரு மகாமூலிப் பாஷாண வகையைத்தேடே.

வகைகேளு பாஷாண பிறப்புதன்னை மைந்தனே முப்பத்தி ரண்டுதாது, துகைக்கேளு மலையெல்லா முண்டுஉண்டு சுணங்கலாத் திரியாதே உட்புகுந்துபாரு, நகைகேளு பாஷாணப் பேருதன்னை நகையான கற்கடகங் கோளகமுஞ்சூத, மிகைகேளு அரிதாரங் கெந்தகமும்வீர மேலான வைக்கிறுந்தம் பலந்தானே. (ருஅகூ)

தானென்ற அமுர்தமொடு சீர்பந்தந் தொட்டிசங்கப் பாஷாணமொடு குதிரைப்பல்கெவுரி, பானென்ற பலன்றுருகந் துத்தபாஷாணம் பரிவான சறக்காண்டம் லிங்கபாஷாணந், தேனென்ற தாளகமும் அவல்பாஷாணஞ் சிலையொடு சாலாங்கங்கற் பரிபாஷாணை, மூனென்ற கல்லானப் பாஷாணத்தோடு முத்தமனே கச்சால பாஷாணமாமே. (ருகூ0)

பாஷாணவகை முப்பத்திரண்டு.

ஆமென்ற ஐந்தின் பாஷாணத்தோடு அப்பனே சீதாங்க பாஷாணமாகும், காமென்ற கார்முகியுஞ் சி

Digitized By Roja Muthiah Research Library

லாமதப்பாஷாணங் கடிதான வெள்ளையோடு அப்பி ரேகப்பாஷாணம், போமென்ற காந்தப் பாஷாணந் தோடு பேரான முப்பத்தி ரண்டுதாது, வாமென்ற ம லேதோரு முண்டுஉண்டு மகத்தான பெரியோரை வ ணங்கிக்கேளே. (௱சுக)

கேட்கையிலே ஆருடைய வர்க்கமென்னில் கெ டியான மூலவர்க்கங் காலாங்கிநாயர், தாட்கையிலே காலாங்கி மைந்தன்போகா சார்வானச் சீஷரென்று சொல்லிக்காட்டு, மீட்கையிலே சந்தோஷித் தழைத் துஉன்னை வேண்டியதோர் பாஷாணமூலிகையு மீய்வா ர், வாட்கையிலே வீடுசுத்து வேட்டைநாய்போல் மா யத்தேஉழவுருக்கால் வாதமென்ன போவே. ()

வாதந்தா னெளிதென்று எண்ணவேண்டா மக த்தான சிவத்தினுட தெரிசினையோடொக்கும், நாத மென்ற சிலம்பொலியில் மேவப்பண்ணும் நாதாக்க ளருகிருந்து வார்த்தைசொல்லாகுங், கீதமென்ற மூ ன்றுலகுஞ் சஞ்சரிக்கலாகுங் கெட்டியாங் காயமது உகாந்தவரையிற்கும், நீதமென்ற சிங்கியைத்தான் செம்புபண்ணு நிலவரமாய் பதினாறு மாற்றுமாமே.()

சிங்கிச் செம்பு.

சிங்கியென்ற செம்புக்குத் தண்ணீர்மிட்டான் நி றமான பழச்சாறு படிதான்வாங்கி, அங்கியென்ற சி ங்கியைத்தான் பொடிபோற்பண்ணி அயச்சட்டி தன் னில்வைத்து சுறுக்குப்போடு, மங்கியென்ற பொடி போலே வறுத்துப்போடு மாசற்ற தண்ணிமிட்டான் கிழங்குவாங்கி, செங்கியென்ற பொடிப்பொடியாய்ச்

Digitized By Roja Muthiah Research Library

சீவிலைவத்துக் கெடியாக நிழலுலர்த்தித் தயிலம்வாங் கே. (ருகூச)

வாங்கியந்த தயிலத்தா லாட்டுஆட்டு மறவாமல் மூன்றுனா ளாகமட்டும், ஓங்கியந்த வெங்காரங் கூட இட்டு எடுத்திட்டு மூசைக்கி உலேயிலூது, தாங்கியந் த மணிமணியாய்ச் செம்புமாகுந் தாக்கியந்த கறடெ ல்லாந் தயிலத்தாட்டு, தேங்கியந்த மூளைபோலே மூ ன்றுதிரமூது சிவசிவாசிங்கியென்ற செம்புமாச்சே.()

சிங்கியென்ற செம்பாலே சுண்ணங்கோடி திற மான செந்தூரங் களங்குகோடி, தங்கியென்ற செம் பெடுத்துத் தங்கங்கூட்டி சார்வானதகடாக்கிச் சூதங் கெந்தி, நங்கியென்ற சாற்றரைத்து தகட்டிற்பூசி ந லமாக மூன்றுபுடம் போட்டெடுத்து, தெங்கியென் ற நவலோகம் நூற்றுக்கொன்றீய திறமான மாற்றது வும் பணிரெண்டாமே. (ருகூகூ)

அயச்செம்பு.

ஆமென்ற அயச்செம்பு சொல்லக்கேளு அயத் தாலே கீழ்மூடி மேல்மூடிசெய்து, போமென்ற துரு சிபது பலந்தான்ரெண்டு போக்கானகெந்தியது பலந் தானொன்று, காமென்ற சூடனது பலமுமுக்கால் காரமாம் வீரமது காசுஅஞ்சு, சாமென்ற பொடிபண் ணி அயத்திற்போட்டு சம்பிரம பழச்சாறு தினமும் வாரே. (ருகூஎ)

வார்த்தல்லோ தினந்தினமு மூடிவைத்து மண் டலந்தான் கடந்தபின்பு எடுத்துவாங்கி, போர்த்தல் லோ அயமெல்லாம் பதறுய்ப்போகும்போக்கான மரு

Digitized By Roja Muthiah Research Library

ந்தோடே சுரண்டிவாங்கி, ஏத்தல்லோ சுண்ணாம்பும் உப்புநேரே பிடித்தல்லோ மருந்துக்குக் கவசங்கட்டி, ஆத்தல்லோ புடம்போட்டு எடுத்துக்கொண்டு அதட்டியே குகையிலிட்டு உருக்கிடாயே. (௫௯௮)

உருக்கிடவே செம்பாகுஞ் சிகப்புமெத்த ஓகோகோ செம்பெடுத்து மதியில்பத்து, நருக்கிடவே யிச்செம்புகொடுத்தாயானால் நலமாகமாற்றஞ்சு காணுங்காணு மருக்கிடவே தங்கமிட்டு கெந்தியிட்டு மாதிபென்ற சூதமிட்டு செந்தூரித்தால், பருக்கிடவே பத்துக்கு குறையாதப்பா பாரிந்த செந்தூரங் குன்றியுண்ணே. (௫௯௯)

பூனாகச் செம்பு.

உண்ணென்ற பூநாகச் சத்துக்கேளு உத்தமனே செம்மண்ணின் பூநாகந்தான், கண்ணென்ற மஹித்தின் சாணிதன்னில் கலந்தெடுத்து பிசைந்துநன்றாய்த் தட்டிப்போடு, மண்ணென்ற காஞ்சபின்பு பாண்டத்திற்போட்டு மறவாமல் மேல்மூடி எரித்தெடுத்து, நண்ணென்ற சாம்பலைத்தான் காடிவிட்டுக்கரைத்து நலமான தெளிவெல்லா மிறுத்துப்போடே. (௬௦௦)

இறுத்துவிட்டு அடிவண்டலுத்துப்பார்த்தா விதமாகப் பளிச்சென்று மின்னல்காணு, மருந்துவிட்ட சூதத்தை விட்டுத்தேய்க்க மாசற்ற செம்பெல்லாம் பிடித்துக்கொள்ளுங், கருத்துவிட்ட காரத்தை யிட்டுருக்க கண்விட்டு ஆடியல்லோ செம்பாய்நிற்கு, மருத்துவிட்ட குளிகைக்கு முந்திமுந்தி அப்பனே உருகையிலே யிச்செம்புதாக்கே. (௬௦௧)

Digitized By Roja Muthiah Research Library

தாக்காட்டால் குளிகைக்கு தீபனமோயில்லை சா ர்வான சத்தெல்லா முட்கொள்ளாது, தாக்காட்டால் கெவனத்தில் சுறுக்கோடாது தனித்தமின்ன லிடியுக் குள் சுழித்துபபோடுங், தாக்காட்டால் சந்திரனில் கு ளிற்சியாலே சஞ்சரிக்க ஒட்டாது குளிர்ச்சிகாணுங், தாக்காட்டா லக்கினியில் காந்திகாணுந் தாக்கியல் லோசாரணையா யாடினுரே. (கூ0உ)

ஆடினதோர் செம்புக்கு ளுலிலொன்று அப்ப னே தங்கமிட்டு தகடுதட்டி, ஓடினதோர் சூதமொடு சிலையுங்கெந்தி உயர்ந்துநின்ற தாளகமும் வீரஞ்சேர் த்து, நாடினதோர் முலைப்பாலை விட்டுஆட்டி நலமா ன தகட்டின்மேல் பூசிப்பூசி, பாடினதோர் மூன்றுபு டம் போட்டெடுத்து பாச்சினு லாயிரத்துக் கோடும் பாரே. (கூ0ங)

படிகச் செம்பு.

ஓடுமே படிகத்தின் செம்புசொல்வே னுத்தம னே வெருசுளுகு ஓடும்வேதை, பாடுமே படிகக்கல் பொடியாய்ப்பண்ணிப் பணமாக மாவாக்கிச் சேரை ளுலு, ஆடுமே ஆவாரம் வேரின்பட்டை அப்பனே ம ருதோன்றி வாகைநெல்லி, தேடுமே பூவரசு மருதுவ ன்னிச் சிறப்பானக் கிளுவையொடு நுணுவேர்தா னே. (கூ0ச)

தானென்ற கருவேலும் வறதங்கிபூலா சார்வா ன யின்பூரல் கடுக்காயோடு, வானென்ற இவ்வகையி ன் பட்டையெல்லாம் வளமாகச் சமபாகம் நிறுத்துக் கொண்டு, கோனென்ற உறலிலிட்டு யிடித்துகையக் கொட்டியே பாண்டத்தில் தண்ணீர்விட்டுப், பானெ

Digitized By Roja Muthiah Research Library

ன்ற எட்டிலொன்ருய்க் காய்ச்சிக்கொண்டு பக்குவமாய் வடித்திறுத்து அயப்பாண்டத்தூற்றே. ()

ஊற்றியபின் படிக்காரஞ் சேருலொன்று ஒளிவான கெந்தகந்தான் பலமூனு, மாற்றியபின் தாளகமும் பலமிரண்டு மாசற்ற துருசியது பலமூனு சாற்றியபின் பூனீறு பலமும்ரெண்டு சாரித்து ஆதளையின் பாலினாலே, ஏற்றியபின் கஷாயத்திற் கூடவிட்டு எலியாலம் பால்சேர்த்துக் கூடவாரே. (கூ0கூ)

வார்க்கவே நல்லெண்ணெய் நாலுசேரை வளமாகக் காய்ச்சியெல்லாங் குழம்பாய்ப்பண்ணி, ஏற்கவே கலயத்தில் வார்த்துக்கட்டி யிச்சையாம் படிகத்தின் மாவிலிட்டு, தோற்கவே அரைத்ததனால் சாமமட்டுந் தெல்லுப்போல் வில்லைபண்ணிச் சரவுலையில் வைத்து, பாற்கவே துருத்தியிட்டு இருபுரமூமூது -படிகமது செம்பாகும் பண்பாய்வாங்கே. (கூ0எ)

வாங்கியே செம்பெல்லா மெடுத்துக்கொண்டு வளமான கறடெடுத்துத் தயிலத்தாலாட்டி, பாங்கியே முன்போல ஐந்துதிரமூதிப் பருவமாய்ச் செம்பெல்லா மெடுத்துக்கொண்டு, ஓங்கியேகுளிகைக்குச் செம்பையிய ஓடுகிறகெவனத்திலிருளெல்லாந் திறக்குந், தாங்கியே யிச்செம்பு மதியிலீயச் சார்வாகப் பனிரண்டு மாற்றுமாமே (கூ0அ)

சங்குச் செம்பு.

மாற்றுனப் படிகத்தைப் போலேயப்பா வளமாகச் சங்கத்தை செம்புபண்ணு, கோற்றுன குளிகைக் கிகொடுத்தாயானல்ுகொடுவேக மோடையிலே நாதம்

பண்ணும், காற்றான துவிளைந்து நெல்லானுப்பேர்ல் கலமானச் சங்கத்தி லுயர்த்திவேதை, மூற்றான மூதே வி விடுபட்டுப்போவாள் முழங்கியதோர் சங்கத்தைச் சேர்ந்துரித்துண்ணே. (சு0கூ)

சூதச் செம்பு.

உண்ணவே சூதத்தின் செம்புகேளு ஒளியாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு, கண்ணவே ஐவேலி குறட்டைகோவைக் கலந்துநின்ற முசுமுசுக்கை மணித்தக்காளி, பண்ணவே அழுக்குரு ஆறுந்தானும் பழம்வாங்கிச் சமபாகம் நிறுத்துக்கொண்டு, திண்ணவே நிழலுலர்த்திப் பூப்புடத்திற் தயிலஞ் சிறப்பாக வாங்கியல்லோ கலயத்தில்வையே. (சுக0)

வையப்பா வெண்காரம் பலந்தானுவு வாகான துரிசியது பலந்தானுவு, மெய்யப்பா கெந்தகமும் பலமிரண்டு மேலாகக் கல்வத்தில் ஒக்கப்போட்டு, கையப்பா தயிலத்தை வார்த்துஆட்டு கனக்கவே எண்சாமம் வில்லைகட்டி, பொய்யப்பா போகாமல் சரவுலையி லூது போக்கோடே மணிமணியா யிறங்கும்பாரே.()

இறங்குகின்ற சத்தெல்லா மெடுத்துக்கொண்டு எளிசாகக் கறடுக்கு முன்மருந்துகூட்டி, அறங்குகின்ற தயிலத்தா லரைத்தெடுத்து அட்வாக வில்லைகட்டி சரவுலையிலூது, கறங்குகின்ற சத்தெல்லா மெடுத்து, க்கொண்டுச் சார்வாக முன்போலே உருக்குஅப்பா உறங்குகின்ற ஆனையைப்போல் சத்துவேகம் ஒருநொடிக்குள் சூதமது விறைத்துப்போமே. (சுகஉ)

போமென்றசூதத்தில் தங்கஞ்சேர்த்து பூவையாம் நாகமிட்டு கெந்தியிட்டு, ஆமென்ற வாலுகையின்

Digitized By Roja Muthiah Research Library

செந்தூரித்தா லருணனைப்போல் செந்தூரமாகும் பாரு, ஓமென்ற நவலோகம் நூற்றுக்கொன்றீய உயர்ந்ததுவும் பதினாறு மாற்றுகாணுந், தாமென்ற செந்தூரங் குன்றியுண்ணு சதகோடி வருடமெல்லா மொருனாளாமே. (௬௧௩)

வைக்கிறாந்தச் செந்தூரம்.

ஆமென்ற வைக்கிறாந்தச் சத்துக்கேளு அப்பனே பலம்பத்து நிறுத்துக்கொண்டு, ஓமென்ற வெண்காரம் பலந்தானைந்து உயர்ந்துநின்ற கெந்தகமும் பலந்தானைந்து, தாமென்ற கல்வத்தி லிதனைப்போட்டுச் சாரித்து அலரிப்பூச் சாற்றினாலே, தேமென்ற வில்லைகட்டி யுலரப்போட்டுச் சிறப்பான சரவிலையி லூதிடாயே. (௬௧௪)

ஊதிடவே உருகியெல்லாஞ் சத்தாய்வீழு முத்துநன்று யாராய்ந்து பொறுக்கிக்கொண்டு, காதிடவே கறட்டையெல்லா முன்போலாட்டிக் கலங்காதே தூருத்திகொண்டு காட்டியூது, சோதிடவே ஐந்துதிர முருக்கித்திரு குறிப்பான சத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து, வாதிடவே காரமிட்டு உருக்கியாட்டி மைந்தனே தங்கமிட்டு தகடுவாரே. (௬௧௫)

தங்கமிட்ட தகட்டின்மேற் பூசக்கேளு தண்மையாஞ் சூதமொடு தாளகமுங்கெந்தி, பங்கமிட்ட தங்கயிடை நிறுத்துக்கொண்டுப் பரிவான கல்வமிட்டு முலைப்பாலாலாட்டி, துங்கமிட்ட தகட்டின்மேற் பூசிப்பூசி துடியாக மூன்றுபுடம் போட்டெடுத்து, நங்கமிட்ட நவலோகம் நூற்றுக்கொன்றீய நலமான மாற்றதுவும் பனிரண்டாமே. (௬௧௬)

Digitized By Roja Muthiah Research Library

உலகவாதி.

ஆமென்ற உலகத்தோர் வாதந்தேடி ஆராய்ந்துச் சரக்குகளைப் பார்த்துப்பார்த்து, போமென்ற விதிதனிலே ஜீவனங்கள் புல்லர்கள்தான் பத்துப்பே ரெட்டுப்பேர்கூடி, தாமென்ற சோதனைதான் பண்ணிப்பண்ணி கலந்துநின்ற சாஸ்திரத்தில் மறைத்துப்போட்டார், நாமென்ற செயநீரால் பார்ப்போமென்று நலமாக சாறுவிட்டு அரைப்பார்பாரே. (சுகஎ)

அரைத்துமே புடம்போட்டுப் பனியில்வைத்து ஆகாகா செயநீர்தா னுச்சுதென்பார், நிரைத்துமே புடம்போட்டுச் சரக்கைக்கட்டி நேராக வாச்சுதென்று லோகத்திலீய்ந்து, கரைத்துமே செம்பையிட்டுக் காரீயங்குத்தி கசடகத்தி யூதியே உரைத்துப்பார்த்து, மரைத்துமே நால்மாற்று ஆச்சுதென்று மயங்குவா ருலகத்தில் சண்டிதானே. (சுகஅ)

சண்டிகள்தான் மெத்தவுண்டு உலுத்தர்மாண்பர் தருகுரும்ப னதிலொருவன் பொன்னைச்சேர்த்து, மண்டியே கடைதனிலே உறைத்துக்காட்டி மனதுநொந்து புண்ணாக்கி போட்டபொன்போய், தண்டியே ஒருகாசு ரெண்டுகாசுஞ் சார்வாகப் பின்னொன்று பார்ப்போமென்று, மண்டியே நான்போட்டே னீபோடென்று மயிர்பிடித்துச் சண்டையிட்டு வழக்காம்பாரே. (சுகசு)

வழக்கிட்டுச் சண்டைகொண்டு பின்னொருவன் வந்து வாதியொரு பரதேசி வந்தானப்பா, நழக்கிட்டு தொழில்செய்து கடையில்விற்றான் நான்பார்த்தேன் வெகுசுளுகு நீயும்பாரு, அழக்கிட்டு ஒன்றேடே

ஒன்றைச்சேர்த்து அமத்தியவர் புடம்போட புகைந் துபோகு, புழுக்கிட்டு இப்படியே சாகமட்டும் புலம்பி யிரந் துண்டவர்கள் கோடிதானே. (கூஉ0

இறந்திட்டார் சித்தரச வாதிஞானி யியல்பான சாஸ்திரத்தை யாராய்ந்துபார்த்து, மறந்திட்டார் க ருவையெல்லா மனதிலெண்ணி மகத்தான பெரியோ ர்க்குத்தொண்டுபண்ணி, திறந்திட்டார் குருசொன்ன மொழியைத்தானுஞ் சிவயோக மார்க்கத்தின்வழியிற் சென்று, அரைந்திட்டா ராத்தாளை கேட்டுகேட்டு ய வர்சொன்ன படிசெய்வார் பெரியோர்தானே.(கூஉக)

பெரியோர்க ளொன்றுசொன்ன மொழியேதுக் குப் பேரின்பசாஸ்திரத்தி லுறைத்ததாலே. பெரியோ ர்க ளாவதுவு மேதாலென்றால் பொய்மறந்து மெய்யு ற்ற பிரதாபத்தாலே, பெரியோர்க ளானதென்ன யோகநிஷ்டையாலே பேரான கற்பமுண்டு காயசித்தி செய்தார், பெரியோர்கள் குருபதத்தை மறவாமலெ ன்னும் பேசாம லூமையைப்போ லிருப்பார்பாரே.()

சாபம்.

பாரப்பாநிர்மூட வாதிகட்குப் பலியாது ஏமமெ ன்ற வித்தைதானும், நேரப்பா பொய்சொல்லும் பு லையருக்கு நிக்ஷயமாய்காணுகிற யோகம்பொய்யாஞ், சேரப்பா காமமென்ற கர்மிக்குத்தான் செயலான கா யசித்தி சேரப்பொய்யாந், தூரப்பா குருசொன்ன மொழிமறந்த துஷ்டருக்கு சகலநூ லெல்லாம்பொ ய்யே. (கூஉங)

பொய்யென்றுவாதத்தைச்சொன்ளுனைகில் போ க்கோடே ஏழுசென்மம் புலையனுவான், பொய்யென்

று காயசித்தி யென்றுசொன்னால் பிறந்திடுவான் கழு
தையென்ற செனமமாக. பொயயென்று யோகத்தை
ச் சொன்னானகில் புழுவான எழுநரகில் மாள்வான்
பாவி, பொய்யென்று பூசையைத்தா னனுஷ்டித்தோ
ர்க்குப்பேராக மூவேழு வங்கிஷம்பாழாமே. (கஉச)

பாழாகும் வஸ்துசுத்தி பானந்தன்னை பகையா
மற்சொன்னோர்க்கு அல்லலுண்டாங், கூழாகுங் கஞ்
சிக்கு ஏங்கியேங்கி கொடிதான பெருவயிறு மீளை
யெய்தி, மீளாகுங் குன்மவலி பிடித்துக்கொண்டு மி
கையெய்தி நகையெய்தி வீதிதோறும், நாளாகு மிரப்
புண்டு கொடுப்பாரற்று நமனுக்கும் பகையாகி நரகெ
ய்துவானே. (கஉரு)

சகத்திர வேதிசத்து.

எய்தவே சகத்திரமாஞ் சத்துக்கேளு இதமான
ஆதளையின் பால்தான்சேரை, கொய்தவே பெருக்க
ம்பால் சேரையொன்று கோழிமுட்டை வெண்கருவு
ஞ் சமனாய்க்கூட்டி, பைதவே வெங்காரம் பலந்தான
ஞ்சு பகர்கின்ற கெந்தகந்தான் பலமூனறு, நைதவே
துரிசியது பலமூமூனறு நாட்டிடுவாய் தாளகமும் பல
மிரண்டே. (கஉசு)

இரண்டெல்லாம் பொடிபண்ணி பாலிற்போட்டு
இயல்பான பன்றிநெய் யிருசேர்விட்டு. பண்டெல்
லா மபச்சட்டிக் குள்ளேவார்த்து பக்குவமா யடுப்பே
ற்றி எரித்துவாங்கி, கொண்டெல்லாங் குழம்பான ப
தத்திறக்கு கொட்டியேகலயத்தில் கட்டிவைத்து, து
ண்டெல்லாஞ் சகத்திரயாம் வேதையிலேவிட்டு துவ
ளவரை எண்சாமம் வில்லைகட்டே. (கஉஎ)

Digitized By Roja Muthiah Research Library

வில்லைகட்டி சரவுலையிற் போட்டுஊது மேலான சத்தெல்லாங் கழண்டுவீழும், கல்லைகட்டி சத்தெல்லாம் பொறுக்கிக்கொண்டு கல்லெடுத்து தயிலத்தி லரைத்துஊது, தில்லைகட்டி ஐந்துதிர மூதுஊது சிறப்பாக சத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து, முல்லைகட்டி காரமிட்டு உருக்கினக்கால் முத்துப்போல் வெளுப்பாக சத்தாம்பாரே. (௩௨௮)

சத்தெடுத்து பலமொன்று நிறுத்துக்கொண்டு தங்கமதுனுக்கு ஒன்றுயிட்டு, பத்தெடுத்து நாகமது ஐம்பலமும்போட்டு பரிவாக உருக்கியொன்றாப் சூதம்போட்டு, கொத்தெடுத்து கெந்தகத்தை ரெண்டு பலம்போடு குறிப்பாக கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி, மத்தெடுத்து அந்திமல்லிச் சாற்றிலாட்டி வகையாக பொடிப்பண்ணி குப்பிக்கேற்றே. (௩௨௯)

குப்பிக்கே பேற்றிட்டு வாலுகையில்வைத்து கூசாதே பனிரெண்டு சாமந்தீப்போடு, துப்பிக்கே சூரியன்போல் சிவந்துகாணுந் துடியாக பணவிடைதான் தேனிலுண்ணு, சிப்பிக்கே உடல்போன்ற சட்டைதள்ளுந் தேகிபைப்போல் நடப்பதற்கு லெகுவுண்டாகும், அப்பிக்கே ஆயிரத்துக் கொன்றேயிய மறுபதன்ற மாற்றுரு மதிந்துகொள்ளே. (௩௩௦)

அண்ட சத்து.

கொள்ளென்ற அண்டோடு சத்துபண்ணி குன்றிமணித் தோல்போக்கி படிதானென்று, அள்ளென்ற ரோமமது பலந்தான்பத்து ஆனையுட தந்தத்தின் தூள்தான்பத்து, தெள்ளென்னு மலடத்தின் கொம்புத்தூள்பத்து சிறப்பான குக்கிலது பலந்தான்பத்து,

LIBRARY SERVICE IND

Digitized By Roja Muthiah Research Library

முள்ளென்ற முசலெலும்புத் தூள்தான்பத்து முயற்சியா யெருக்கம்பால் வார்த்துஆட்டே. (௬௨௧)

ஆட்டியே அஞ்சுனாள் வில்லைபண்ணி அழகான பூப்புடத்தில் தயிலம்வாங்கி, பூட்டியே கலயத்தில் கட்டிவைத்து பொரித்தெடுத்த முட்டைத்தோல் பலமும்பத்து, நீட்டியே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி நினைவாக வெங்காரம் பலமுமஞ்சு, தீட்டியே வீரமது பலமிரண்டு சிறப்பாக கூடவிட்டுத் தயிலத்தாலாட்டே. (௬௱௨)

ஆட்டியே மூன்றுனாள் வில்லைகட்டி அசக்காமல் சரவுலையி லேந்துதாமூது, பூட்டியே சத்தெல்லாம் பொறுக்கிக்கொண்டு பொரிக்கார மிட்டுறுக்கி ஒன்றுய்ச்சேர்த்து. வாட்டியே ஞுக்கு ஒன்றுதங்க மருவிநின்று உருகையிலே கூடயிட்டு, தீட்டியே நாகமிட்டு சூதமிட்டு சிறப்பாக கெந்தியிட்டு களங்கமாமே.

ஆமிந்த களங்கெடுத்து நவலோகத்தி லேந்தூற்றுக் கொன்றிடவே அன்பத்தஞ்சு, வாமிந்த பொன்னதுவும் பச்சைபோற்காணும் வாய்ப்பாகக் குப்பியிலே செந்தூரித்துண்ணு, சேமிந்த செடந்தானும் பச்சைநிறமாகுந் தேகமென்றல் பொற்சிலைபோ லழுந்திக்காணும், காமிந்த கற்பாந்த கோடிகாலங் காலனுமே அணுகாமல் சித்தியாமே. (௬௱௪)

நாக பற்பம்

சித்தியாம் வெகுசுறுக்கு நாகபற்பந் திறமாகக்கேளுங்கள் மாணுக்காளே, பத்தியா நாகமது பலந்தான்பத்து பகர்கின்ற யிலுப்பைநெய்யில் சாரம்போட்டு, முத்தியா மூவாறு திறந்தான்சாய்த்து முசியாமல் தகடுதட்டி புளியிலைபோல்நறுக்கி, கத்தியாங் கடுகு

Digitized By Roja Muthiah Research Library

வொரு பலந்தானஞ்சு காரமா மிளகாயும் பழமுமஞ்
சே. (௬௱௬௰௫)

அஞ்சான அபினஞ்சு பலமூந்தூக்கி அழகான எலுமிச்சம் பழச்சார்விட்டு, துஞ்சான மூணுநாள் நேகவரைத்து துடியாக வழித்தெல்லாங் குழம்பாய் வைத்து, பிஞ்சான தகடுக்குப் பூசிப்பூசி பேராக வாகையுட பட்டைவாங்கி, தஞ்சான இடித்துநன்றாய் தகடுவைத்து சார்வாக மேல்மூடி புடத்தைப்போடே.()

மூடியே சீலைசெய்து அவிபுடமாய்ப்போடு மூயற்சியாய் பத்துவிசை போட்டெடுத்து, ஆடியே விளக்கெண்ணெய் விட்டுருக்க அப்பனே நாலுகிண்ணி பண்ணிக்கொண்டு, நாடியே கிண்ணிநிறை சூதமப்பா நலமான தாளகமுஞ் சரியாய்க்கூட்டி, தேடியே தேசிச்சார் விட்டரைத்துச் சிறப்பாகக் கிண்ணிதனி லுள்ளேபூசே. (௬௱௬௰௭)

பூசியே வாலுகையில் சட்டிவைத்து பொருந்தவே மணல்விட்டு அடியிற்றானும், நேசியே அதின்மேலே உப்புவிட்டு நினைவாக கிண்ணிதனைப் பதித்துவைத்து, தேசியே எலுமிச்சம் பழச்சாறு தானுஞ் சிறப்பாக எரியிட்டு சுருக்குப்போடு, மாசியே பதினைந்து நாள்தான்திலை மறவாதே போட்டுவா யிரவுபகல்தானே. (௬௱௬௰௮)

தானாகும் எலுமிச்சம் பழச்சார்தானுஞ் சாதகமாய் வற்றவற்ற சுருக்குப்போடு, பானாகும் பதினைந்து நாள்தான்சென்றால் பக்குவமா யெடுத்துவைக்கப் பிங்கானுக்குள், கானாகும் மல்லிகைப்பூப் போலேநிற்கும் கசடகத்தி செம்பிலே நூற்றுக்கொன்று, கோ

Digitized By Roja Muthiah Research Library

ஞகு பேழுகிலொட்டிக் கொடுத்தாயானல் குறையா பனிரண்டு மாற்றுமாமே. (கூஙக)

ஆமப்பா துருசியது பலமுமொன்று அழகா னத் தாளகமும் பலமுமொன்று, வேமப்பா கள்ளிப் பால் வார்த்தரைத்து விளங்கவே மூன்றுனாளாகமட் டுந், தாமப்பா குன்றிபோ லுண்டைபண்ணிச் சார் வான வெள்ளீயம் பலந்தானுலு, போமப்பா குகையி ல்ரின் றுருகும்போது போக்கான உண்டையெல்லாங் கிறுசம்போடே. (கூசo)

வெள்வங்கப் பற்பம்.

போட்டுடனே உண்டையெல்லா மானபின்பு பொடிபண்ணி சாரத்தூள் மேலேபோட்டு, ஆட்டுட னே கற்றுழுஞ் சோற்றிற்சாய்த்து அடவாக எழுதிர முருக்கிச்சாய்ப்பாய், பூட்டுடனே வங்கத்தில் சமனு யவெள்ளி பொலிவாக உருக்கியல்லோ கிண்ணிவார்த் து, மாட்டுடனே கிண்ணியிடை சூதம்வீர மருவிய தோர் வெள்ளையென்ற பாஷாணங்காணே. (கூசக)

காணிந்த மருந்தெல்லாங் கல்வத்திட்டு கடிதா ன யெருக்கம்பால் வார்த்துஆட்டி, பூணிந்த மருந்தெ ல்லாங் கிண்ணிக்குள்பூசி பேரான வாலுகையின் மே லேவைத்து, ஆணிந்த அடுப்பேற்றிப் பட்சமொன்று ஆறுமலெரியிட்டு அப்பால்வாங்கி, தோணிந்தப் பிங் காணி லெடுத்துவைக்க சூட்சமாங் குருவாகும் நூற்று க்கொன்றீயே. (கூசஉ)

ஈவதுதான் வங்கத்தில் செம்பிலொன்று எடுத்து ப்பா ரிருபத்து ஐந்துமாற்று, ஆய்வதுதான் சூதமது

வெள்ளியாகு மதிகமாம் பித்தளையும் வெள்ளியாகும்,

தேய்வதுதான் வெள்ளிவித்தை சுருக்குமெத்த சிவ
சிவா சித்தர்சொன்னார் கரைகாணேனே. (கூசக)

காரைகாணு சாஸ்திரங்கள் மெத்தவுண்டு கார
ணமாங் காலாங்கி ஞயர்தாமும், நிரைகாணு பேழுல
ட்சம் விரித்துச்சொன்னார் நேர்பாக விரிவையெல்லா
ம் பார்த்துப்பார்த்து, உரைகாணு சூஸ்திரமாய் சுருக்
கிப்பாவா யுற்பனமாந் தொழில்வகைக ளெல்லாந்
சொன்னேன், பரைகாண என்னூலைப் பொய்யென்
றெண்ணிப் பாழாகும் நரகத்தி லெய்துவாரே. ()

சாபம்.

எய்துவா ரவிகோடி நரகில்தானு மேனமென்ற
பிறப்பாகச் சபிப்பாளாத்தாள், ஐதுவார் வாதம்பொ
ய் யென்றுசொன்னு லாகாகா வங்கிஷங்கள் குடும்ப
மெல்லாம், நைதுவார் நரகெய்தி வெறுமையாகும் நா
தாக்கள் பெரியோர்க ளிட்டசாபந், கொய்துபா ரா
ஞலுந் தீர்க்கக்கூடா கொடுஞ்சித்தர் ரிஷிபிட்ட சாப
ந்தானே. (கூசரு)

தானென குருவுடையப் பதத்தைப்போற்றிச் ச
முசியமா யிருந்ததெல்லாங் கேட்டுகேட்டு, கோனென
குருச்சொல்ல வாதம்பாரு குருவில்லா திருந்தாக்கா
ல் நூலைப்பாரு, ஆனென நூலில்லா வாதம்பார்த்தால்
ஆகாது வாதமொன்றுந் தலைகீழாகுந், தேனென சூதத்
தின் தூபம்பட்டுத் தியங்கியே நரகெய்தி மாளுவா
னே. (கூசகா)

Digitized By Roja Muthiah Research Library

மூளாமல் கனமானக் கற்பமுண்ணி மாயியைத்
தான் பூசைபண்ணி மயக்கம்போகும், தாளாமல் வாசி
யைநீ பூட்டிவாங்கிச் சதாநித்தங் குருபதத்திற் சரணம்
பண்ணு, ஆளாம லம்பலத்தில் மனதையூனு ஆனந்
தமாவதற்கு அமுர்த முண்ணு, மீளாமற் கெவனத்தி
லேறவென்றால் விடுஞ்சூதம் பசிக்குண்ண மருந்துகே
ளே. (௩௬௭)

கேளுநீ ஆணையென்ற சூதராசன் கெவனத்தில்
பறக்குகிற மார்க்கமெல்லாம், வேளுநீ பரிசத்தி லேம
மாக விளங்கியதோர் பகலிரவு மொன்றாய்க்கூட்ட,
தாளுநீ நிமைக்குமுன்னே கோடிகாதஞ் சஞ்சரித்து
அடுக்கெல்லாந் தாண்டியேற, மீளுநீ அட்டமா சித்தி
யாட மிருந்தவட வாக்கினிபோல் பசியுண்டாக்கே. ()

குளிகை.

ஆக்குவது சூதமது குகையில்நின்று அமளியா
யுருகையிலே பூணுகச்சத்தை, நோக்குவது சமனாகக்
கொடுத்துவாங்கி நேராகப்புடமிட்டுவிடுவித்தாக்கால்,
தேக்குவது சூதமென்ற ராசாவுக்கு சிவனுண்ட ஆல
ம்போல் பசியுண்டாகும், நீக்குவது அரசனைப்போ
ல் நினைத்ததெல்லாம்வெல்லும் நேரிட்ட கெந்தகத்
தை யிட்டுத்தாண்டே. (௩௬௯)

தாண்டியபி னுபரசங்க ளெல்லாமூட்டுத் தனித்
தபின்பு மூலிகைக்குள் சத்தையூட்டு, தீண்டியபி னவ
லோக மிட்டுத்தீரு திறமாகப் புடத்தையிட்டு கவரத்
தினமூட்டு, வேண்டியபின் தனித்தங்கச் செம்பையூ
ட்டு மேலான மணிபாத்தா லருணன்போலாந், தூண்

Digitized By Roja Muthiah Research Library

டியே யிவ்வளவுங் கடந்துயேற சுகமான செம்பையி
னி சொல்லக்கேளே. (கூ௫0)

குளிகைக்குள் மருந்துபூச.

சொல்லவே குளிகைக்குள் மருந்துபூச துடியா
ன சிலைகெந்தி மிளிகாந்தங், கொல்லவே பூறுக
மிவைதானைந்து கொடிதாகச் சமபாகம் நிறுக்துக்கொ
ண்டு, கல்லவே கஞ்சாவின் விரையிஞெக்கக் கலர
வே ரோமத்தின் தயிலம்வார்த்து, பல்லவே மூன்று
ஞ ளாட்டியாட்டிப் பக்குவமாய் ரோமத்தின் தயிலம்
வாரே. (கூ௫க)

வார்த்துமே அரைத்துநன்றாய் குகையிற்பூசி வா
காகக் கட்டினதோர் சூதம்வைத்து, ஏர்த்துமே உரு
கையிலே பூறுகச்சத்தை யிதமாக சூதத்தினிடையே
தாக்கு, போர்த்துமே புடந்தானுஞ் சொல்லக்கேளு
பேரான வாழைவித்தை சித்திரமூலங், கோர்த்துமே
நுணியோடு முள்ளங்கிதாழை கொடிதான நாயுருவி
யமுரிகூட்டே. (கூ௫உ)

கூட்டுநீ புரசோடு தேவதாளி கொடிக்கள்ளிப் பு
ன்முருங்கை சதிரக்கள்ளி, மாட்டுநீ எள்ளோடு புறு
விளெச்ச மகத்தான பதினைந்தும் வெவ்வேறேவாங்
கி, நீட்டுநீ வெவ்வேறாய்ச் சுட்டுச்சாம்பல் திறமாக வு
கைவகையாய்ப் படியளந்துபோட்டு, மூட்டு நீபாண்ட
த்திற் கொட்டுநீயு மூத்திரந்தான் பதினைந்து படியும்
வாறே. (கூ௫௩)

சத்துவிடுவி பிடாறனே.

படியஞ்சு கோமியத்தைக் கூடவாரு பாங்கான க
ழுதையொடு குதிரையானை, நெடியஞ்சு ஆட்டோடு நா

Digitized By Roja Muthiah Research Library

னுங்கேளு நிலவரமா யமூரிபடி யஞ்சுவாரு, கொடிய ஞ்சு படிதானும் நாற்பத்தஞ்சு கூசாதே சாம்பனுக்கு ள் கரைத்துவைத்து, தடியஞ்சு மூணுநாள் தெளிவை வாங்கி சாதகமா யடுப்பேற்றி யெரித்திடாயே, ()

எரித்திட்டுக்குழம்புபோல்வருதல்கண்டு இணங் கனேடு படிக்காரஞ் சந்திரனுப்பு, அரித்திட்ட கல் லுப்பு சத்திசார மாதியாம் நவச்சார மெவச்சாரந்தா ன், பொரித்திட்ட வெங்காரம் சவுக்காரந்தான் பே ரான கெந்தியுப்பு வளையலுப்பு, சரித்திட்டு கடல்நு ரையு மன்னபேதி சார்வான துருசிபொடு பூநீர்தா னே. (சுடுரு)

தானான வகைக்கொன்று பலமுமஞ்சு சார்வாக பொடிபண்ணி குழலிலிட்டு, பானன பாஷாண நிலை யைக்கேளு பரிவான கெந்தியொடு சங்குச்சுண்ணந், தேனான வீரமொடு வகைக்கொருபலந்தான் சிறக்க வே எருக்கம்பால் படியேவாரு, கானன குழம்புதனி லொக்கவிட்டு களரவே அடுப்பெரித்து மெழுகுபோ ல்வாங்கே. (சுடுசு)

வாங்கியே பீங்கானில் பதனம்பண்ணி வளமா ன நெற்குழியிற் புதைத்துவைத்து, பாங்கியே பஷூ த்தின் பிறகுவாங்கில் பரிவாகும் பிடராச னென்று பேரு, தேங்கியே கோபமாம் ருத்திரனும் சிங்கமாங் கொடுஞ்சூர அசுரனுகுங், கோங்கியே கொடுங்கால விஷமதாகுங் குளிகைக்குப் புடந்தானுஞ் சுருக்காம் பாரே, (சுடுஎ)

பாரென்ற புடந்தானுஞ் சாத்திரத்தினுள்ளே ப லபலவாய்ச் சொன்னர்கள் நாதாக்கள்சித்தர். நேரெ

Digitized By Roja Muthiah Research Library

ன்ற திருமூல ராயிரத்திற்சொன்னார் நேற்பான காலா
ங்கி சொல்லக்கேட்டு, தேரென்ற எழுனூற்றிற் றிறந்
துசொன்னேன் சிறப்பாகச் சாரணைதான் செய்யுமா
ர்க்கம், வாரொன்ற ஆகாச வீதியோடில் மயங்காமல் சி
றுபிள்ளை ஓடுங்காணே. ௬௫௮)

காணிந்த சூதம்பின் றுருகும்போது கலங்காதே
சமபாகஞ் சத்தையூட்டு, பூணிந்த ரசம்பத்து சத்துப்
பத்து பொலிவாக உருகையிலே புடமொன்றுநீட்டு,
ஆணிந்த சத்தினுட நாகமெல்லா மப்பனே பலபலவா
ம் வர்ணங்காணும், தோணிந்த சூதத்தை நிறுத்துப்
பார்க்க துடியான மணியிடையே நிற்குமென்னே. ()

என்னவே புடத்துக்கு ஏதுஉப்பு ஈசனுட புட
ந்தானுந் தோர்த்துப்போகு, மன்னவே மணித்தாயார்
சொல்லயானும் வகைவகையா சோதித்து பார்த்துக்
கண்டேன். என்னவே உபரசங்கள் னூற்றிரண்டுபத்
து மிதின்கார சாரமுத லிருபத்தஞ்சு, பண்ணவேபா
ஷாண மறுபத்துஞறு பாங்கான நவலோகம் நவரத்
தினமூட்டே. (௬௬௦)

ஊட்டியேயிப்படிதான் சாறணையேசெய்யி லொ
ன்றாக கெவனமது நூற்றுக்கோடு, மாட்டியேமறுதிர
ந்தான் விடுவித்தாக்கால் மகத்தான ஆயிரமாங் காத
மோடு, மூட்டியே மூன்றுதிரம் விடுவித்தாக்கால் மூ
ன்றுபத்துச் சகத்திரந்தான் காதமோடு, மாட்டியே
நாலுதிரம் விடுவித்தேற அப்பனே லெட்சமாங் காத
ம்போமே. (௬௬௧)

போமெனவே ஐந்துதிரம் விடுவித்தேறப் பொ
ருந்தியொரு கோடிக்கு ஓடும்பாரு, தாமெனவே ஆரு

Digitized By Roja Muthiah Research Library

னல் பரிசவேதைத் தாண்டியே யேழுதிரங் கடந்து மேற, ஆமெனவே லெக்கங்கள் சொல்லப்போகா அ ன்றெனு லோகத்திற் தெரிசனவேதை, நாமெனவே காண்கிலேன் சித்தர்வேதை நண்ணியே ஊதுகிலோ வேதையாமே. (௨௨௨)

வேதையாஞ் செப்பிடிலோ ரூபவேதை விளங்கி யே பழுவென்றால் பழுக்கும்வேதை, காதையாங் கு ளிகைதன்னைக் கரத்தில்வைத்து கடுகியேற உறப்பா க்கிற் பொன்னுமாகு, மாதையாம் பொன்னென்று உ ன்னநெஞ்சில் மலைகளெல்லாம் பொன்னாகு மக்காள் பாரு, பாதையாம் பகலிரவு பொன்னாய்ப்போகும் பா ர்பார்த்தாய் சிவன்வந்துப் பாஷிப்பாரே. (௨௨௩)

பாருநீ உபசரங்கள் நூற்றிரண்டுபத்துப் பாஷா ண வர்க்கங்க ளறுபத்துனாலும், வாருநீ லவணவகை யிருபத்தைந்து மகத்தான மூலிகையின் சத்துக்கூடக், கோருநீ நவலோகம் நவரத்தினங்கள் குறிப்பாகக் கு ளிகைக்குக் கொடுத்துகக்கி, வாருநீ விடுவித்தால் சகடு மாச்சு ஆரிந்தப் படிசெய்வா னாறுமாமே. (௨௨௪)

ஆமிந்த மார்க்கமாய் சூதத்துக்கு அணைத்தணை த்துச் சத்துகளை யீயானகில், போமிந்த கெவனம் பொய் சித்தும்பொய்யாய் போனமட்டுங் கெட்டலைந் து புழுத்துமாய்வான், காமிந்த உபசரங்கள் பொன் னேயாச்சு கடுஞ்சூத ராசனங்கே கபளித்தாக்கால், தாமிந்த நாகமுண்ட சூதங்கேளு தனிவேதை யாத் தானு மறியாள்கேளே. (௨௨௫)

கேளுநீ பனிரண்டாங் குளிகைதன்னில் கெடி யான சுரபியொடு போகந்தன்னை, வாளுநீ ரெண்டுக்

கும் நவலோகம்போது மற்றமற்றக் குளிகைதன்னை விடுவித்தேரு, வேணுநீ சத்துகளை யூட்டியூட்டி விடுவித்துச் சாறணைதான் செய்யாவிட்டால். தாணுநீகெவனமது எடுத்துஓடா தனித்துமே பரிசத்தில் வேதையில்லையென்னே. (௬௬௬)

என்னவே சாறணையைத் தீர்க்கமாச்செய்யி லெடுத்தோடு மண்டமெல்லா பதமுந்தாண்டி, பன்னவே ரவிகோடி யிடியோகோடிப் பருதியில் கண்களெல்லாம் மயங்கிப்போகுந், தன்னவே குளிகையினால் மேற்கொண்டோடுஞ் சந்திரனி லோடையிலே நடுக்கல்காணு, மன்னவே குளிகைதன்னால் குளிரும்போகு மாயமாஞ் சுரூபமெல்லாம் வெளியாய்ப்போமே. ()

வெளியாக சூதத்தைக் கட்டாவிட்டால் விரைந்தேறு ஞானமெல்லாம் பொய்யாய்ப்போகும், ஒளியாகயோகமதும் பாழாய்ப்போகு முற்பனமாங்காயசித்தி ஒன்றுமாகா, அளியான ஆதாரக் குறியுமில்லை அணுகையிலே வேதிக்கு மேமமில்லை, தெளிவான மனதாலே யோகம்பார்ப்பார் நிற்மூடர் ஞானியென்று சொல்வார்பாரே. (௬௬௮)

பாரப்பா மூலவன்னி துலங்கினாக்கால் பளிச்சென்று ஆறுதலம் வெளியாய்க்காணும், நேரப்பா மேலாறு வெளியாய்ப்போகும் நெறியான அட்டசித்தி கூறுங்காணுஞ், சேரப்பா பராபரையின் செயலுங்காணுஞ் சேர்ந்தவன்னி நிட்களமும் வெளியாய்ப்போகு, மாரப்பா நிராதாரத் தடங்கினோக்கு மாதியந்த நாமமற்ற அதீதந்தானே. (௬௬௯)

Digitized By Roja Muthiah Research Library

சிங்கி.

தானென்ற சிங்கியொன்று சொல்லக்கேளு சாதகமா யிதுவெகுவு முன்னேபாரு, ஏனென்ற வெழுனூற்றி லொன்றேசிங்கி யிதமான உடும்பாமை அழுங்கினோடு, கானென்ற தாயிரல் மாட்டினுடகொழுப்பு கலந்தைந்தும் ஐங்களஞ்சு கொழுப்புத்தூக்கிப், பானென்ற புழுகைந்து சவாதுஐந்து பருவமுடனென்றாகப் பண்ணிக் கொள்ளே. (௬௭0)

கொள்ளயிலே பரிச்சுண்ணந் தூருசிச்சுண்ணங் கொடிதான பூரமென்ற சுண்ணமூன்று, விள்ளயிலே ஒவ்வொன்று கானஞ்சிதூக்கி விரவியொன்றாய் மத்தித்துக் கலத்திலப்பி, நள்ளவே ரவியில்வைத்துக் காந்திகாட்ட நலம்பெறவேதயிலமாம் வழித்துவாங்கு, துள்ளவே நில்லாமல் நன்றாய்வாங்கித் துடியான பீங்கானில் வைத்துக்கொள்ளே. (௬௭௧)

வைத்தபின்பு கூடவிட மருந்துகேளு வளமான வெங்காரஞ் சாரங்கெந்தி, கைத்தபின்பு சவ்வீரமரிதாரம்பூரங் கருனாபி கஸ்தூரி தொட்டிகூட. பைத்தபின்பு வகையொன்று பணந்தானென்று பண்பாக ஒன்பதையுங் கல்வத்திட்டு, கைத்ததிலே அரைத்துநன்றாய்த் தயிலத்திற்சேர்த்து சாங்கமாய் வைத்திடவே சிங்கியாச்சே. (௬௭௨)

ஆச்சப்பா ரூதமது சுத்தித்துக்கொண்டு அழகாகுங் கல்வத்தில் நிறுத்துவிட்டு, பாச்சப்பா சிங்கியொரு பொட்டுப்போடப் பதையாமல் சேருரசம் வெண்ணெயாகுந், தேச்சப்பா கிளிப்போலே கட்டிக்கொண்டு சிறப்பான சூடனுட தீயில்வாட்டி, ஓர்சென்றக்

கறண்டியிலே எண்ணைகுத்தி யுருக்கிடவே வெள்ளி பொன்போ லாடும்பாரே. (கூஎ௩)

ஆடுகிற சூதமென்ற யானைபட்டுதானு லாகாகா வாதமென்ன மசகமாச்சு, நாடுவா ரிச்சூதந் தாவடமாக்கோர்த்து நலமாகச் சுகாசனத்தி லிருந்துகொண்டு, ஊடுவார் வாசிவா வென்றூமூட்ட உகந்துமுன்னே பஞ்சகர்த்தாள் நிற்பார்பாரு, தேடுவார் கேட்டதெல்லா மீவாரீசன் செகசால வித்தையெல்லாந் தெளிந்துபோமே. (கூஎச)

போமென்ற சிங்கியினால் கட்டுஞ்சூதம் புகழாக ஓரிடைக்குத் தங்கம்நாலு, ஆமென்ற சுண்ணாம்புக் குகையில்வைத்து அப்பனே புடம்போடத் தங்கம்நீறும், நாமென்ற நவலோக மாயிரத்துக்கோடும் நாமறியோ மிதினுடைய வர்ணந்தன்னை, ஓமென்ற பருதிபோல் நிறமேயாகு முத்தமனே வெகுசாறுக்கு ஓட்டிப்பாரே. (கூஎரு)

சவுக்காரச் சுண்ணம்.

ஓட்டுவது சவுக்காரச் சுண்ணந்தொட்டு உப்பினுட உறுதிதொட்டு உயர்ந்துஓடும், ஆட்டுவது வர்ணமென்ன சூதத்தாலே ஆச்சரியஞ் சிவப்பென்ன கெந்தியாலே, பூட்டுவது தங்கத்தால் காரத்தாலே பூப்போலாஞ் சுண்ணமென்ற வீரத்தாலே, நாட்டுவது விண்ணுன பூரத்தாலே நலமான வாதமிதி லடங்கிப்போச்சே (கூஎசா)

போகாமல் சவுக்காரச் சுண்ணஞ் சொல்வேன் பொற்கொடிக்கு ஈசனன்று புகழ்ந்தவாறு, வேகாமல் பூநீறு பதக்குவாரி விரைந்துஒரு பாண்டத்தி ல

Digitized By Roja Muthiah Research Library

ளந்துபோடு, ஏகாமல் மனுஷனுடை அமுரிதானு மித மாகப் பதினாறு படிதான்வார்த்துச், சாகாமல் மூன் றுனாள் கலக்கிவைத்துச் சார்ந்தபின்பு நாலானாள்தெ ளிவை வாங்கே. (சுளஎ)

வாங்கியந்த தெளிவிலே கல்லுச்சுண்ணம் வள மாக நீற்றியதை படிரெண்டுபோடு, தேங்கியதை மூ ன்றுனாள் கலக்கிவைத்துச் சிறப்பாக நாலாநாள் தெ ளிவைவாங்கி, ஓங்கியொரு படிதானுங் கல்லுப்புப் பொடித்து ஒக்கயிந்த தெளிவிலே கரைத்துப்போடு, தாங்கியே நாலானாள் தெளிவைவாங்கிச் சமத்தாக அ டிகனத்த சட்டியிலேயூற்றே. (சுளஅ)

ஊற்றியே வெடியுப்பு சீனந்தானு முயர்ந்துநி ன்ற துருசியொரு சாரம்வீரம், ஆற்றியே வெள்ளை யென்ற பாஷாணந்தா னப்பனே வகைக்கொன்று பலமேதூக்கி, சாற்றியே கல்வத்திற் பொடித்துமை போல் சார்வான முன்தெளிவி னுக்கப்போட்டு, போற்றியே யீசானம் பூசைபணணிப் புகழாக அடுப் பேற்றி யெரித்திடாயே. (சுளசு)

எரித்திட்டு தீபம்போ லடிபற்றும விதமான அ யத்துடுப்பால் கிண்டிக்கிண்டி, வரித்திட்டு குழம்புபோ ல் வருதல்கண்டு வாகான நல்லெண்ணெய் சேரைவா ர்த்து, தரித்திட்டு மெழுகுபோல் வில்லைபண்ணிச் சம ரசமாய் ரவியிலிட்டுக் காய்ந்தபின்பு, மரித்திட்டு ம ல்லிகையின் சாறுவாங்கி வரிசையாய்த் தோய்த்தெடு த்து ரவியிற்போடே. (சுஅ0)

போடவோர் தினமேழு புத்தோட்டுக் குள்ளே பொலிவான எண்ணெயெல்லா மோடேயுண்டு, காட்

டுவா கருப்பாக இருக்கும்பாரு கண்டுநீ மயங்காதே பாக்குப்போற்சீவி, நீட்டுவா சிலைதன்னைக்கீழேபோட்டு நேராக மல்லிகையி னிலைபரப்பி, மாட்டுவாய் சிலை தன்னை மேலேவைத்து மல்லிகையினிலையாலே மூடிப் போடே. (௬௮௧)

மூடியே நெல்லதனை பாண்டத்திட்டு முயற்சியா தண்ணீரில் பிசிரிக்கொண்டு, நீடியே அடுப்பேற்றி ய தின்மேற்சிலை நேர்பாக வைத்துமே எரித்துவாங்கு, வாடியே பேற்சட்டி கவிழ்த்துமூடி மயங்காதேஆவிக ண்ட பதத்தில்வாங்கு, தேடியே சீவனெல்லா மொ ன்றுய்ப்போகுந் திறமானரவியிலிட்டு காயப்போடே.

காய்ந்தபின்பு இலைபரப்பி நெற்பாண்டத்திட்டுக் காரியமா முன்போல அவித்தெடுத்து, மாய்ந்தபின்பு ரவியிட்டுக் காய்ந்தபின்பு மறுகாலு மருந்ததனை சீவ லாக்கி, சாய்ந்தபின்புஇலைபரப்பிஅவித்தெடுத்துச்சா தகமாய் மூன்றுதிர மானபின்பு, ஓய்ந்தபின்பு வில்லை போலப் பண்ணிக்கொண்டு உற்பனமாய்க் கீழ்மேலு ங் கற்சுண்ணம்வையே. (௬௮௩)

வையப்பா சிலைக்குள் கிளிபோற்கட்டி வளமாகச் சட்டியிலே நடுவேவைத்து, மெய்யப்பா மேலாகவட் டமிட்டஓடு மெல்லிசாய் தமருஒரு நூறுஇட்டு, செ ய்யப்பா சட்டியின்மே லுண்ணப்போட்டு சிறப்பான மல்லிகையி னிலைதுவைத்து, கொய்யப்பா தண்ணியி லே போட்டுக்காய்ச்சி குறிப்பாகத் துவாரத்தில் வி ட்டுநீற்றே. (௬௮௪)

நீத்தியபின் ஆவியெல்லாம் வெளிபோகாமல் நே ர்பாகச் சட்டியால் மூடிப்போடு, ஆத்தியபின் மருந்

தெடுத்து காயப்போட்டு அப்பனே மறுசீலைக் குள் ளேவைத்து, சாத்தியபின் முன்போல நீற்றுநீற்றுச் சாதகமாய்ப் பதினொருக்கால் மறவாமல்நீயு, மாத்திய பின் மருந்தெடுத்து அண்டோட்டிவிட்டு வளமாக மேல்மூடிச் சீலைசெய்யே. (சுஅரு)

செய்திட்டு அஞ்செருவிற் புடத்தைப்போடு திறமாகச் சவுக்காரச் சுண்ணமாச்சு, கொய்த்திட்ட சித்தரெல்லாம் வழலைதன்னைக் குவிந்தபடி சொல்லா மல் மறைத்துப்போட்டார், உய்த்திட்டு பிள்ளைகள்தா ன் பார்த்துப்பார்த்து உலகத்தோர் கரிகொண்ட காசி ல்லாம, லெய்திட்டு ஏங்கியே வறுமையுண்டு இறந்தி றந்து போனவர்கள் கோடிதானே. (சுஅசு)

உலகவாதி.

தானென்ற நூல்பார்த்து உலகவாதி தவித்துமே மனம்புண்ணாய் வறுமையுற்று, வானென்ற உலகத் தோர் சிரிக்கக்கேட்டு மருள்கொண்ட பிசாசுபோல் வாயலத்தி, ஊனென்ற சோற்றுக்கு மிடமில்லாம லு ண்பாரை யுடுப்பாரைப் பார்த்துவங்கி, நானென்ற ஆணவத்தால் கெட்டோமென்று நாய்போல திரிந்து மூன்று மாளுவாரே. (சுஅஎ)

மாளாதே யிருக்கவல்லோ வழலைதன்னை மறை யாமற் சொல்லிவிட்டே னெழுநூற்றுள்ளே, கோளா ணசீஷருக்கு னூலீயவேண்டாங் கொடுத்தாக்கால் ரவி கோடி நரகமெய்துந், நாளான என்னூலின் வழலைத ன்னைச் சாற்றினே னொருசொல்லுந் தவறில்லாமல், நாளான அம்பரத்துக் கொப்பாய்ச்சொன்னே னாதா க்கள்பதமறியச் சொன்னேன் காணே. (சுஅஅ)

Digitized By Roja Muthiah Research Library

காணப்பா புடம்போட்ட வழலைதன்னைக் கடுங் காரச்செயநீரிற் றோய்த்துப்போடு, பூணப்பா ஏழுநாள் ரவியிற்போட்டுப் பேரான சுண்ணமென்றகுகையிலூத, தோணப்பா எடுத்துடனே பூப்போல்நிற்குந் தொடுகுறிபோற் சரக்கெல்லாந் துடியாமற்கொல்லும், வீணப்பா கெடுகாதே யென்னூலைப்பாருவேதாதாந்த மாயிவைத்தான் பூசிப்பாயே. (௬௮௯)

பூசித்த வழலையைத்தான் சுண்ணம்பண்ணு புத்திகெட்ட வாதிகளே மற்றொன்றலரகா, நேசித்து வழலையினு லுப்பைக்கட்டு நிலைத்தபின்பு பூரத்தைச் சுண்ணம்பண்ணு, ஆசித்துப் பூரத்தால் தாளகத்தை நீற்று அதீதமாந் தாளகத்தால் வங்கத்தைநீற்று, வாசித்து நூலதனைப் பார்த்தாலாமோ வாதமென்ன கொஞ்சத்தி லாமோசொல்லே. (௬௯0)

சொல்லென்ற வங்கத்தால் துருசுநீர்பண்ணு துருசியினுல் சிங்கிபண்ணு சூதங்கட்டும், மல்லென்ற சூதத்தால் காயசித்தி மக்களே கெவனசித்தி எட்டுஞ் சித்தி, அல்லென்ற கேழ்வியினுல் வாதஞ்சுட்டு ஆற்றுமல் பொய்யென்று லென்னசொல்வே, னில்லென்று லெரிந்தகல்லும் நிற்குமோசொல் நிர்மூட வாதிகளே வழலை பாரே. (௬௯௧)

பாரென்ற வழலையென்ற சுண்ணமொன்று பரிவாகச் சாரமொன்று கூட்டிக்கூட்ட, நேரென்ற சலமாகுஞ் சலத்தினுள்ளே நேர்பாகக் கற்பூரம் வாரியிட்டு, காரென்ற ரவியில்வைத்து உப்பாய்ப்பண்ணிக் கடுவைந்து சுண்ணத்தில் வைத்துஊத, தூறென்ற மல்லிகைப்பூப் போலாஞ்சுண்ணந் தூசான சுண்ணமிடை சாரங்கூட்டே. (௬௯௨)

Digitized By Roja Muthiah Research Library

சாரமிட்டால் செயநீராம் வீரம்போட்டுத் தய ங்காத இந்துப்பு கல்லுப்புச்சூட, ஞரமிட்ட வெடி யுப்பு சீனக்காரம் மஞ்சையுந்தான் வகைக்குரெண் டு பலமேகூட்டிக், காரமிட்டச் செயநீரா லரைத்தரை த்துக் கடுரெவியிற் போட்டிடுவாய் தினந்தானேழு, தா ரமிட்ட சுண்ணும்பு போலேயாகுந் தயங்காதகுழம்பு போலப் பண்ணிக்கொள்ளே. (சுகூங)

உப்புகட்டு.

பண்ணியதோர் குழம்புக்குள் பாறையுப்புப் பல ம்பத்து நிறுத்தெடுத்துப் பாக்குப்போல, ஒண்ணிய தோர் குழம்புக்குள் பிசரிவாட்டு உற்றுநன்ருய்க்குழ ம்பையெலலாம் பிறட்டிப்போடு, நண்ணியதோர் தீக் குள்ளேமுதிரவாட்டு நலமான உவர்மண்ணுங் கிளிஞ் சிநீறுங், கண்ணியதோ ரமுரிவிட்டுப் பிசைந்துகொ ண்டு கடுகவே கீழ்மேலு மடைபோல்மூடே. (சுகூச)

மூடியே சட்டியிலே விட்டுநன்ருய் முரிந்தபின்பு அன்பதெரு அடுக்கிப்போடு, நாடியே குளிர்ந்தபின்பு எடுத்துப்பாரு நலமான தந்தம்போ லிருகிக்கட்டு ஞ், சூடியே கவசமெல்லாந் தள்ளிப்போட்டுத் துடியா ன கட்டுகொடி யிலேயைவாங்கி, தேடியே பழச்சா று விட்டரைத்து திறமாகக் கவசித்துப் புடத்தைப் போடே. (சுகூரு)

உப்புக் கிண்ணி.

புடம்போடு உப்புமணிப் பார்த்தால்மக்காள் போரான முத்தினுட மணிபோற்காணும், விடம்போ ட்ட சிவன்வந்து நிர்தஞ்செய்வார் வேதாந்தமாயிய

Digitized By Roja Muthiah Research Library

ங்கே யஷ்டசத்தி யிய்வாள், தடம்போட்ட நிராதா
ர வழியுஞ்சொல்வார் சதாசித்தங் குருபதத்திற் சர
ணம்பண்ணி, வடம்போட்டு உப்புமணி செபித்தால
ய்யா மகத்தான சித்தியுமா மாட்டிப்பாரே. (சூகசு)

மாட்டிப்பார் மெழுகாலே கிண்ணிபண்ணி மண்
கட்டி மெழுகுதன்னைத் தள்ளிப்போட்டு, வாட்டிப்பா
ர் உப்புருக்கி அதிலேவார்த்து உத்தமனே உப்பினுட
கிண்ணிதன்னில், தீட்டிப்பா ரடித்தூரில் சீலைசெய்து
சிறப்பான வாலுகையின் மேலேவைத்து, வாட்டிப்பா
ர் சூதமது சிறங்கைவிட்டு மைக்கொன்றைச் சாறத
னால் சுறுக்குப்போடே. (சூகஎ)

சூதமணி.

சுறுக்கிடவே சூதமது வெண்ணெபோலாந் துடி
யான சூடனுட தீயில்வாட்டி, மருக்கிடவே கறண்
டிதனி லெண்ணெகுத்தி யுருக்கமணி நின்றுடுங்
கரியினுள்ளே, உருக்கிடவே செம்பட்டில் தாவடமா
ய்க்கோர்த்து உத்தமனே அஞ்செழுத்து மெட்டெழு
த்துமோத, நருக்கிடவே மனோன்மணித் தாய்முன்வ
ந்துநிற்பாள் நாடினதெல்லாஞ் சொல்லிரெட்சிப் பா
ளே. (சூகஅ)

இரட்சிக்க உப்பைநன்றாய்க் கட்டியாடு ஏகாந்த
வழலையைத்தான் முன்னேபண்ணு, பட்சிக்க சூதத்
தைச் செந்தூரம்பண்ணு பார்க்கவே வேணுமென்றால்
சாறணையைத்தீரு, குட்சிக்குள் வாயுவெல்லா மறுத்
துத்தள்ளுங் குடிலமா மனகதத்தில் வழலைவாங்கு,
பிட்சைபெடுத் துண்ணும விரும்பாட்டிப்பாரு பெண்
மாயைத் தனையறுத்துப் புறம்பாய் நில்லே (சூகக)

Digitized By Roja Muthiah Research Library

நில்லென்றால் வாழ்வுனக்கு நிற்குமோடா நேரா க வழலையது சிக்கிச்சானால், அல்லென்ற குபேரனைப் போல் வாழ்வுண்டாகு மாதித்த னுள்ளளவு முண்டு க்கலாகுங், கல்லென்ற கல்லுப்புக் கட்டித்தானால் கார ணமாஞ் சூதத்தைக் கவ்விக்கொல்லு, மல்லென்ற சூ தத்தி லெட்டெட்டுஞ்சித்தி வாய்வீண ராய்த்திரிந் தால் மண்ணாய்ப்போமே. (௭௦௦)

புத்தி.

போகாம லுப்புமுந்திக் கட்டியுண்ணு பொய்யெ ன்றுஞ் சொல்லாதே பொன்னைப்பெண்ணை, ஏகாமல் ம னதுதனி லிச்சிக்காதே யெவ்வுயிருந் தம்முயிர்போ லெண்ணிப்பாரு, வேகாத காலேது என்றுபாரு வெ ளியோடே மனந்திருத்தி உண்ணப்பாரு, பாகாமல்வா சியைத்தான் மூலத்திலுண்ணு பராபரையைப் பூசித் துப் பானம்பண்ணே. (௭௦௧)

பானமென்றால் வெகுபிரிய மென்தாய்க்கப்பா பரிவான சுத்தியொடு பலகாரமன்ன, மூனமில்லாப் பழமோடு வைத்துப்பூசி யுயர்ந்தமணித் தாயாற்குஊ ட்டிப்பின்பு, தானமென்றே குருவுக்கு உடல்பொரு ளுமாவி தயவோடே குருவுக்குத் தாரையூற்றி, வா னென்ற மூலத்தில் வாசியைத்தான்மூட்டி வாசிவா வென்றுசொல்லிப் பானம்பண்ணே. (௭௦௨)

பண்ணியே உப்பெடுத்து வழலைச்சுண்ணம் பரி வான வீரமொடு பூரமூன்று, முண்ணியே களஞ் சிடைதான் வாய்நீருலரைத்து உப்புக்குப் பூசியே, சுண்ணமென்றகுகையில், நண்ணியே வைத்தல்லோ சீலைசெய்து நலமாகப் புடம்போடு உப்புச்சுண்ண,

Digitized By Roja Muthiah Research Library

மெண்ணியே உப்பான சத்துக்குள்ளே இடைக்கி
டைதான் சாரமிட்டு இசையஆட்டே. (எ0௩)

உப்புச்சுண்ண ஜெயநீர்.

ஆட்டயிலே நெட்டேறி மண்டைவேகு மப்ப
னே நெட்டடங்க மாட்டுமாட்டு, ஊட்டயிலே அண்
டோட்டில் வாரியிந்த உயர்ந்தமண்ணுற் சீலைசெய்து
புடத்தைப்போடு, பாட்டயிலே பனிபடவே வைத்
த்தாயானுல் பனிச்சென்று வாருதிபோல் சிலமுமாகு
ங், மூட்டயிலே செயநீரில் வீரம்போட்டு முனையான
கற்பூரந் துவைத்துப்போடே. (எ0௪)

கற்பூரச் சுண்ணம்.

போடப்பா செயநீரில் கற்பூரந்துவைத்து பொ
ருமியது உப்பாகுஞ் சுண்ணமாகும், ஆடப்பா விண்
ணுன பூரந்தானு மக்கினிக்குள் நின்றல்லோ சுண்ண
மாகும், நீடப்பா சுண்ணமென்ற குகையிலூத நேர்ந்
ததுவும் பூனையின்பூப்போலாகும், வீடப்பா வெந்த
துபோல் சரக்கெல்லாம்வேகும் வெட்டவெளி யாச்ச
ப்பா வாதந்தானே. (எ0௫)

தானென்ற சவுக்காரச் சுண்ணத்துக்குத் தனித்
துநின்ற அக்கினியில் கூறுமாச்சு, வானென்ற கல்லு
ப்புச் சுண்ணத்துக்கு மகத்தான ஆதித்தன் கூறுமாச்
சு, ஊனென்ற பூரமது சந்திரனுச்சு உகந்தசதா சிவ
னுக்கு முக்கண்மூன்று, தோனென்ற சித்தரெல்லா மு
க்கண்ணென்பார் சோமசூரி யாக்கினிதான் மூன்று
மாச்சே. (எ0௬)

மூன்றுக்குப் பேரின்னஞ் சொல்லக்கேளு முத்
தென்றும் பவழமென்றும் பச்சையென்றுபேரா, மூ

Digitized By Roja Muthiah Research Library

ன்றுக்கு ளில்லாமல் வாதிதானு மொன்றேடே ஒ
ன்றைவிட்டு அரைத்துச்சேர்த்து, வீணுக்குப்புடம்
போட்டு நவலோகத்தீய்ந்து வேதையிதி லில்லையப்பா
சாஸ்திரம் பொய்யென்று, ஆணிக்கு ளொருவருடன்
சொல்லிக்காட்டி அதிஷ்டமில்லை யென்றுசொல்லி
அலைவார்பாரே. (எ0எ)

அலையாம லெருவிலே சொல்லக்கேளு அடிமா
ன வழலையென்ற சுண்ணமொன்று, முலையான உப்பி
னுட சுண்ணமொன்று முடியான பூரமென்ற சுண்ண
மொன்று, தலையான வீரமொடு உருகுஞ்சூதஞ் சா
ரமொடு குக்குடததின் வெண்மலமும்புழுகு, மலைபா
ன மேதியொடு குருவண்டுசீனம் வகைவகைக்குக் காசி
னைதான் வாய்நீருலாட்டே. (எ0அ)

துருசிச் சுண்ணம்.

ஆட்டியே துருசியது பலத்திலப்பி அப்பனே ஏ
ழுனாள் ரவியிற்போடு, சூட்டியே சுண்ணும்பு உப்பு
நேராய்த் துவளரைத்து அதின்மேலேகவசங்கட்டி,மூ
ட்டியே கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்து முசியாமலொரு
சாமந் தீயைமூட்டு, காட்டியே ஆறினபின் னெடுத்
துப்பார்க காந்தளம்பூப் போலிருக்குங் கருவாய்ப்பா
ரே. (எ0கூ)

பாரிந்த குருவாலே சூதங்கட்டிப் பரிவாகச் சா
ரணையைத் தீர்த்தாயாகில், கூறிந்த அம்புபோல் கொ
டியவேகங் கொள்ளுமுன்னேகோடிலக்ஷங் காதமோ
டும், வாரிந்த சலமபோல லோகமெல்லா மண்முதலா
ய் மலைகளெல்லாம் ஏமமாகும், காரிந்த வாமத்தி லா
யிபாதங் கருணையினுல் துருசியது நீரும்பாரே. ()

Digitized By Roja Muthiah Research Library

நீரான துருசியிலே செயநீர்கோடி நிலைத்துநிற்கு மண்டத்தில் மெழுகுகோடி, வாரான கட்டினமும் நீற்றினமுங்கோடி மருவியதோர் செந்தூரங் குளிகைகோடி, தாரான பழுப்பினமுங் கெடுப்பினமுங் கோடி தயங்காத சத்துவகை செம்புகோடி, ஆரான ஒடுக்கத்தில் நதிகள்போல ஆராலு முடிவுசொல்லப் போகாதென்னே. (எகக)

வராக வித்தை.

என்னவே யென்மனது பனிரண்டாண்டு யிதமாகப் பிடித்துவந்து மூன்றுனாள்தான், பன்னவே யிரையன்றி கட்டிவைத்துப் பக்குவமாய் வதைத்ததுதின் தொப்புட்குள்ளே, கன்னவே கிழித்ததில் வைக்கக்கேளு கல்லுப்புப் பலமஞ்சு வெடியுப்பஞ்சு, உண்ணவே தாளகமும் பலமும்பத்து உயர்த்தியாங் கெந்தகமும் பலமும்பத்தே. (எகஉ)

பத்தான சிலையதுவும் பலமுமஞ்சு பலகையாந் துத்தமது பலமுமஞ்சு, வித்தான வீரமது பலமுமூன்று வெண்காரப் பலகையது பலமுமூனு, முத்தான எருக்கம்பா லிட்டுஆட்டி மூன்றுனாளரைத்தெடுத்து தொப்புளிலேவைத்து, அத்தான ஊசியிட்டு தைத்துப்போட்டு அதைவைக்கும் விபரமினி யறிந்துகேளே.

கேளப்பா எட்டடிதான் சதிரமாகக் கெடியான குழிவெட்டி ஆளுயரமட்டும், நீளப்பா செங்கல்லால் சூழக்கட்டி நேரான அரைபோலே வாசல்நால்விட்டு, சூளப்பா நடுவைஒரு விட்டம்போட்டு சுண்ணும்புக் காரையிட்டுப் புறம்புமுள்ளும், வேளப்பா பன்றி

Digitized By Roja Muthiah Research Library

தனை நடுவேதூக்கி விளங்கவே மேல்மூடி வாசல்விட் டுவையே. (எகச)

விட்டதொரு வாசலிலே யிதான்புக்கி விளங்க வே புழுவாக வாசல்தோறும், பட்டதொரு பொன் னிறம்போல் வருகுமக்காள் பார்த்தெல்லாம் பொறுக் கியே பதனம்பண்ணி, நட்டதொரு புழுவெல்லாம்வ ந்தபின்பு நலமான வெங்கலத்தி னடுவேவைத்து, சு ட்டதொரு ரவியில்வைத்து காந்திகாட்ட சுருதியாந் தயிலமது பரணிதனில்வாங்கே. (எகரு)

தம்பனக் குளிகை.

வாங்கியே தயிலத்தில் துருசிநீரிட்டு வளமான நவலோகந் தடவிக்காச்ச, பாங்கியே பத்தரையே மாற்றுகாணும் பசுமைபாய் நார்போல யிருக்குமே மம், தூங்கியே தயிலமொரு துள்ளிகுத்த துலாஞ்சூ தங் கட்டுண்டு மணியுமாகும், வாங்கியே பணவிடை மண்டலந்தான்கொள்ள வயிரம்போல் தேகமது சித் தியாமே. (எகசு)

சித்தியா முத்தெருக்கன் செவியைவாங்கி திற மான துருசிகுரு விராகனெடையிட்டு, முத்தியா மு லைப்பாலே விட்டரைத்து முழங்குகுகை பிடித்ததனில் பூசகம்பூசி, பத்தியாமணக்காடைத்தவளைநெய்யைப் பருவமா யெடுத்ததனை வேறேவைத்து, வெத்தியாஞ் சூதத்தை சுத்திபண்ணி வெருளாதே முக்களஞ்சு கு கையில்வாரே. (எகள)

வார்த்தல்லோ அயக்கறண்டிக் குள்ளேவைத்து வளமான கரியோட்டில் வைத்துஊதூ, ஏத்தல்லோ சூ தத்தின் மேலேதானு மிதமான தவளைநெய்யைச்சுறுக்

குப்போடு, பார்த்தக்லோ சூதமது வட்டுப்போலாம் பக்குவத்தி லெடுத்துருட்டி வாயில்வைக்க, பூத்தல்லோ தம்பனையாங் கெவுனமோடும் பொன்போல தேகமது மேனியாமே. (எகஅ)

அட்டையில் சூதக்கட்டு.

ஆமப்பா அட்டையுட முதுகிற்சேகு அப்பனே மூன்றுவரை பொன்போற்காணும், ஓமப்பா பழச்சாற்றை வாயில்விட்டா லுத்தமனே வாய்திறக்கு முபாயங்கேளு, காமப்பா கதிர்கொண்டு வாயில்வைத்து கலங்காதே களஞ்சிடைதான் சூதம்வார்த்து, போமப்பாசீலைசெய்து மணலில்வைத்தெரிக்க புட்டுப்போல் சூதமது ஆகும்பாரே. (எககூ)

சூதமது காயசித்தி கெவுனசித்தி துடியான சாறனைதான் செய்தாயாகில், பாதமது பூமியிலே நடவாமற்பண்ணும் பறக்குமே கோடிலக்ஷம் நிமைக்குமுன்னே, வாதமது பரிக்ஷிக்கில் வேதையாரு மகத்தான அஷ்டகர்மஞ் சித்தியாகும், பூதமது சொன்னபடி யேவல்கேட்கும் பெரியோர்கள் மகிமையெல்லாஞ் சூதத்தாட்டே. (எ௨0)

சூதத்தைக் கட்டினால் கோடிசொற்கஞ் சுட்டுமே புகைந்தாக்கால் ரவிகோடிநரகஞ், சூதத்தைக் கட்டினு லவனேவாதி சுடுவாதி சுணங்களுக்கு ஒப்புமல்ல, சூதத்தின் மகிமையென்ன சிவவிந்துவாச்சு சூக்ஷமாம் வாதத்தி லாதியாச்சு, சூதத்தைக் கட்டினவன் சிவனுமாச்சு சூக்ஷமெல்லாஞ் சூதத்தி லடக்கமாச்சே. ()

Digitized By Roja Muthiah Research Library

வெண்கார வைப்பு.

ஆச்சென்ற வெண்கார வைப்பைக்கேளு அப்ப னேசினுமது புலமும்நூறு, பூச்சென்ற புலகைபோல் பொடியாய்வெட்டி பேரான செம்பினுட பாண்டத்தி ற்போட்டு, நீச்சென்ற சதிர்க்கள்ளி வெட்டிவந்து நி னைவாக சாறிடித்து பிழிந்துகொண்டு,பாச்சென்றபா ல்தானும் படிதான்வார்த்து பக்குவமாய் மேலந்த சா றுவாரே. (எஉஉ)

வாரப்பா சுடுகெண்ணெய் படிதான்ரெண்டு வள மான பாண்டத்தி லொக்கவிட்டு, நேரப்பா குவிக்கவி ட்டு சட்டிகொண்டுமூடி நேரான குழிவெட்டி குதி ரைலத்திபோட்டு, சேரப்பா பாண்டத்தி னடுவே வைத்து சிறப்பாக மேலுமந்த குதிரைலத்திபோட் டு, தூரப்பா மண்கொட்டி மூடிப்போட்டு தூசரமாய் மண்டலந்தான் கழித்துவாங்கே. (எஉ௩)

வெண்காரமணி.

வாங்கியே யெடுத்தாக்கால் வெண்காரமாகு மக் களேஉருக்கினத்துக் கீழுதானுருந், தேங்கியே யிதை க்கட்டி செந்தூரஞ்செய்தால் செயலான காயசித்தி ம ண்டலத்திலாகுந், தூங்கியே யிருக்காமல் மனதாணி ப்பாரு சூக்ஷத்தில் வமவித்தை சுருக்குமெத்த, வங்கி யெ ஆவெருதின் சாணியிலேகழுவி யுசத்தியாம் ரவி தனிலே காயப்போடே. (எஉச)

காய்ந்தபின்பு நாயுருவிச் சாற்றில்தோய்த்துக் க ளமான ரவிக்குமுன் வழுனாள்போடு, மாய்ந்தபின்பு சவுக்காரச் சுண்ணம்வீரம் வாய்நீரால் மர்த்தித்துக் க வசங்கட்டி, தேய்ந்தபின்பு சிப்பியென்ற சுண்ணத்தி

Digitized By Roja Muthiah Research Library

ல்லைவத்து சிறப்பாகத் தீயிட்டு ரெண்டுசாமம், சாய்ந் தபின்பு ஆறவிட்டு எடுத்துப்பாரு தந்தம்போல் கட் டியத்து மணியுமாமே. (எஉரு)

நாகச் செயநீர்.

மணியாக நாகத்தைச் சுத்திபண்ணி மருவியபி ன் சுத்தித்த சூதந்தானுந், தணியாக நாகத்தை யுருக் கிக்கொண்டுத் தன்னுலுக்குள் சூதத்தைச் சமனாய்ச் சேரு, பிணியாக ரெண்டுமடக்கிச் சமனாய்வீரம் பே சாமல் மர்த்தித்துப் பனியில்வைக்க, அணியாகச் செ யநீர்தா ஞறுபோலோடு மர்ச்சரிப் பின்னீரில் காரந் தேரயே. (எஉசா)

காரத்தில் பரிசுத்தி செயநீரிற்தோய்த்துக் கற்பூர தீபத்தில் வாட்டிவாட்டு, ஆரத்தில் பரியுள்ளே வாங்க மட்டும்வாட்டி யதின்மேலே மயிர்ச்சுத்தி தீபத்தில் வாட்டி, பாரத்தில் மயிர்கருக வாட்டினுக்கால் பனிச் சென்று மாதளம்பூ நிறம்போலாகுந், தூரத்தில் நவ லோகம் நூற்றுக்கோடுஞ் சுகப்பட்ட மாற்றென்னப் பதினாறுமே. (எஉஎ)

பதினாறு மாற்றான செந்தூரத்தைப் பணவிடை தான் தேனிலுண்ணப் பாலனாவார், விதினாறு மெழு த்ததுவும் பொய்யாய்ப்போகு மேனியுமோ அருணநிற மாகும்பாரு, மதினாறும் நரைதிரையு மாறிப்போகு ம கத்தானக் கண்ணாலுண்டக் கற்பமப்பா, செதினாறுங் காயசித்தி மண்டலத்திலாகுங் கெடியாக உருக்கினு ட போக்கைக்கேளே. (எஉஅ)

மித்திர வகை.

போக்கோடே மித்திரத்தை சொல்லக்கேளு பொலிவான ஏகமப்பா வெண்காரந்தான், வாக்கோடே

ரெண்டினந்தான் சாரகார மருவு மூன்றுவதுவும் படிகி யுடன் குன்றி, தாக்கோடே வெண்கருவும் நாலினத் தைக்கேளு சாரமொடுயிந்துப்பு மெழுகோடு வெண் ணை, தேக்கோடே பஞ்சமித்திரஞ் சொல்லக்கேளு தேன்குன்றி வெல்லமுடன் காரம்நெய்யே. (எ௨௯)

நெய்யாக ஏழுவகை மித்திரத்தைக்கேளு நேய மாந் தருசிலோடு சாரகார, மெய்யாகக் கருரங்கு த் தாளகமும்வீர மெலிவான சவுக்காரம் பதினொ ன்றுகேளு, செய்யாக வெள்ளையொரு குன்றிகாரந் திறமான சாரமொடு சர்க்கரையும்பழமுங், கையாக ஏரண்டம் புருவினெச்சங் காடிகுக்கில் மெழுகோடுப் பதினொன்றுதானே. (எ௩௦)

தானென்ற யிருபத்து லொன்றுசொல்வேன் சவுக் சாரம் கறுத்தவளை கம்பிளியுங்குக்கில், வேனென்ற வெங்காரஞ் சாரத்தோடு வெரிப்பான முசலெலும்பு யானைத்தந்தங், கோனென்ற குதிரையுட குழம்புச்சி வல் குன்றியொடு கலன்கொம்பு முடகொளிஞ்சி வேருந், தேனென்ற தாளகமு மெருமைக்கொம்பு செ ப்பரிய ரங்கோடு வீரந்தானே. (எ௩௧)

ரங்கென்ற எரியாலம் வித்தினோடு நேர்பான பேய்ப்பீர்க்கு புரசம்வித்துப், பங்கோடு வெள்ளையெ ன்ற பாஷாணந்தான் பக்குவமா மெழுகோடு யிருப த்தொன்று, கங்கோடு சபணைச்சேர்த்துக்கொண்டுக் கலந்திடித்து சூரணமா யிழைத்துக்கொள்ளு, மங் கோடு உபரசங்கள் நவலோகங்கள் யுகத்தான மூலி கையில் கலந்துஆட்டே. (எ௩௨)

ஆட்டயிலே உபரசங்கள் சத்துமாகு மப்பனே கடுஞ்சரக்கு மெதுவுமாகு, மூட்டயிலே மூலிகையிற்

செம்புமாகு மூதண்ட மாட்டிவிக்கு முருங்கினந்தா ன்மைந்தா, ஒட்டயிலே உலகத்தில் கல்லானதெல்லா முத்தமனே மணியாக வுருகும்பாரே. (௭௯௩)

நீற்றினம்.

பாரப்பா நீற்றினத்தைச் சொல்லக்கேளுப் பரி வான புழுகிறெடு விரம்பூரம், நேரப்பா குருவண்டு உறமுஞ்சூதம் சேர்பான கார்முகியுஞ் சவுக்காரச்சு ண்ணஞ், சேரப்பா சூடனொடு ஒன்பதுதான்மைந்தா திறமான நீற்றினதுக் காதியாகும், வேரப்பா சுண்ண மென்ற நீற்றுக்கெல்லாம் வெருவிடவே பஞ்சுபோல் பொருமிப்போமே. (௭௯௩)

போமென்ற உபரசங்கள் நவலோகங்கள் போக் கான பாஷாணஞ் சாரகாரம், ஆமென்ற சூதமுதல் செந்தூரிக்க அழகான மால்தேவி சிலைதான்கெந்தி, வேமென்ற கெவுரியொடு அப்பிரேகந்துத்தம் வெடியு ப்பு இவையேழுஞ் செந்தூரித்தூதி, சாமென்ற இ வையேழுங் கூடாவிட்டால் சாத்தியதோர் செந்தூர மாகா தென்னே. (௭௯௫)

வர்ண இனம்.

என்னவே வர்ணஇனஞ் சொல்லக்கேளு ஏத்த மாம் உப்போடு நாகமப்பா, தன்னவே தங்கமொடு உ பரசங்கள்கிளி சாற்றரிய சூதமொடு கவுரிதானும், ம ன்னவே யிவையேழும் வர்ணஇனமப்பா மகத்தானவே தையுமா மாட்டிப்பாரு, கன்னவே யிவையேழும் விட் டானால் கனகமது பிறவாது கருத்தால்பாரே. ()

கட்டினம்.

பாருநீ சரக்குகள்தான் கட்டவேண்டில் பாரயா ஞ் சுண்ணத்தால் சுருக்காகக்கட்டுங், காருநீ தயிலத் தால் சரக்குக்கட்டுங் கடிதான திராவகத்தால் சரக்கு க்கட்டுந், தாருநீ செயநீரால் சரக்குக்கட்டுஞ் சுயம்பா ன குருவாலே சரக்குக்கட்டும், வேருநீ மெழுகாலே சரக்குக்கட்டும் வீணாகப் பார்த்தாக்கால்கட்டாகாதே.

ஊதுக்கு காலம்.

ஆகவே ஊதுகைக்குக் காலங்கேளு அற்பிசியுங் கார்த்திகையு மாரகழியிேனாடு, ஏகவே ஊதுகைக்கு யிசைகின்றகாலம் எனும்போடு மண்ணிலையுஞ் சத்து வருமப்பா, நேகவே உபரசங்கள் சத்துமாகும் நேர்பா கச் சத்தெல்லா மெடுக்கலாகுஞ், சாகவே வேண்டா ங்கார்ண் சத்தைத்தினைணு தாயாரைப் பூசித்துப் பான ம்பண்ணே. (எஙஅ)

செயநீர் காலம்.

பண்ணவே செயநீர்க்குக் காலங்கேளு பங்குனி யுந் தையோடு மாசியாகும், கண்ணவே வெடியுப்புக் காரசாரங் கசக்காமல் நவரத்தினம் நவலோகங்க, ளென்னவே சுண்ணமுமாய் செயநீராகு மெடுக்கெடுக் கத் துலையாது கேணிபோலா, முண்ணவே செயநீரா மூத்துப்பாரு ஓகோகோ வாதமெல்லாஞ் சித்தியாச் சே. (எஙக)

குருமுறை.

சித்தியாங் குருமுறைக்குக் காலங்கேளு சித்திரை வையாசியோடு ஆனியாகும், அக்கியாம் ரவிபட்டு வெ

ந்துநீறி யாதியென்ற குருவாகி வேதையாகும், பத்தி
யாம் பாஷாண முபரசங்கள் பலபலவாம் நவலோகங்
காரசாரம், வெத்தியாம் பூப்போலே பொருமிநீறும்
வெளுப்பென்றால் கொக்கிறகு தோற்றுப்போமே. ()

செந்தூரக் காலம்.

தோத்தவே செந்தூரம் வைப்பதற்கு சுளுகாகு
ங் காலங்கள் சொல்லக்கேளு, மாத்தவே ஆடி யாவ
ணியுமிக்க மாசற்ற புரட்டாசி தன்னிலாகு, மேத்த
வே திராவகமு மிறக்கலாகு மிம்முறையால் தப்பாமலி
சைவாய்ப்பாரு, சாத்தமே காலங்கள் தவறினுக்கால்
சரக்கெல்லாம் மிறட்டாகி தவறிப்போமே. (எசக)

புட நிதானம்.

மிறட்டில்லாப் புடந்தானுஞ் சொல்லக்கேளு
பேரான எருவொன்று காடையாகும், திறட்டில்லாக்
கவுதாரிப் புடத்துக்குத்தான் சீரான எருமூன்று சி
றக்கப்போடு, மிறட்டில்லாக் குக்குடத்தின் புடத்
தைக்கேளு மிறளாமல் பத்தெரு அடுக்கிப்போ
டு,திறட்டில்லா ஏனத்தின் புடத்துக்குத்தானிச்செய
மா மன்பதெரு அடுக்கிப்போடே. (எசஉ)

அடுக்கியே கனபுடந்தான் சொல்லக்கேளு அழ
காக நூறெருவு தன்னிற்போடு, யிடுக்கியே கெசபுடந்
தான் சொல்வேன்யானு மிச்சமா மாயிரந்தா னெரு
த்தாளுகும், தடுக்கியே புடஞ்சொன்ன புடத்துக்
கெல்லாஞ் சாத்திரத்தின் படிபோட்டால் சார்வுமெ
த்த, கடுக்கியே புடத்திட்ட மிதுதான்மைந்தா நலமா
கவுகத்துமுறை வரிசைகேளே. (எசங)

ஊத்து முறை.

கேளப்பா ஒருதுருத்தி சுண்ணாத்துக்காகுங் கெடியான ரெண்டானு துருக்கினத்துக்காரும், வாளப்பா சத்துவென்ற செம்புக்கெல்லா மாட்டுநீ நாலான துருத்திதன்னை, நீளப்பா ஊத்துமுறை வரிசைதப்பில் நிசமான சுண்ணும்பு கறுத்துப்போகும், பாளப்பா சத்தெல்லாங் கறடுகட்டிப் பளிச்சென்று செம்புபோல் நிறமாகாதே. (எசச)

எரிப்பினம்,

நிறமான எரிப்பினுட குணத்தைக்கேளு நிச்சயமா ஒருவிறகு தீபமாகு, மறமான விறகதுதா னிரண்டானுக்கா லப்பனே கமலாக்கினி யென்றுபேரு, குறமான விறகதுதா னஞ்சானுக்கால் கொடிய காடாக்கினியென்றுபேரு, திறமான முத்தீயி னெரிப்புச்சொன்னேன் சேர்ந்தறிவான் வாதியென்ற தீர்க்கவானே, (எசரு)

குகை.

தீர்க்கமாய் சத்துவகை நவலோகங்கள் திறமாக உருகையிலே வீண்போகாமல், மூர்க்கமாக் குகையதுவுஞ் சொல்லக்கேளு முனையான மண்தானு மீராறுபலந்தா, னூர்க்கமா முமிக்கருகலாறு பலமாகு மசடான கழுதைமல மிரண்டுபலம்போடு, ஊர்க்கமாம் வெண்கற்பொடி பலமிரண்டு உயர்த்தியாய் சீலைசுட்ட சாம்பல்ரண்டே. (எசசு)

சாம்பலிலே கடுக்காயின் கொழும்விட்டு சார்வாக மருந்தெல்லா முரலிலிட்டு, கூம்பல்போ லிடித்திட்

டு பதமாய்ப்பண்ணி கொடுமூசை கைமுறையாய் வ ளமாயச்செய்து ஆம்பல்போல் நிழலுணர்த்தி வைத் துக்கொண்டு ஆதியாஞ் சூதமது சாரணையேசெய்யி ல், வேம்பவாங் காரத்தில் இழியாதப்பா வெறுங்கு கைக ளாலுக்கால் பிஞ்சுபோமே. (எசஎ)

பஞ்சபூதக் குகை.

போம்பஞ்ச பூதத்தின் குகையைக்கேளு புகழா ன கடல்நுரைதான் பலமுமஞ்சு, ஆஞ்சுண்ண நீர்வி ட்டு பிருசாமமாட்டி அசையாதே வில்லைபண்ணி ரவி யில்வைத்து, காம்துருத்தி தன்னில்விட்டு சிவக்கவூ து நலமான சுண்ணும்பு ஆகும்பாரு, காமசத்தி சார மஞ்சு பலமும்போட்டு கசகாமல் சுண்ணநீர் விட்டு ஆட்டே. (எசஅ)

ஆட்டியே துருத்திகொண்டு ஊதிமைந்தா ஆதி யபின் கல்வத்திற் பொடித்துக்கொண்டு, வாட்டியே கல்லுப்புபல மஞ்சுபோட்டு வாகான சுண்ணநீர் விட் டுஆட்டி, நீட்டியே ரவியிலிட்டு துருத்தியூது நேர் பாக ஆறவிட்டு எடுத்துப்பாரு, காட்டியே கம்மினல் பின் னெருக்காலரைத்து கசகாமலூதியே கல்வத்தி ற்போடே. (எசகூ)

போட்டுமே பொடியாக்கி சீனந்தானும் பொலி வாக அஞ்சுபலங் கூடப்போட்டு, நீட்டுமே சுண்ணநீர் விட்டுஆட்டி நேர்ந்தபின்பு வில்லைகட்டி யுலரப்போட் டு, பூட்டுமே துருத்திகொண்டு ஊதிமைந்தா பேராக ஆறினபின் கல்வத்திட்டு, நாட்டுமே வெடியுப்பு அஞ் சுபலம்போட்டு நலக்கரைத்து துருத்தியினூ லூதி டாயே. (எ௫0)

Digitized By Roja Muthiah Research Library

ஊதியே பார்த்தாக்கால் பஞ்சுபோல வுத்தமனே ஆறியது சுண்ணம்பாரு, மாறியே பஞ்சுசுண்ணக் குகையென்றுபேரு அப்பனே வாதிசட்கு இதுமுன்வே ணுஞ், சேதியே சரக்கெல்லா மிதுக்குள்வைத்து சி றப்பாக புடம்போட சுண்ணமாகுஞ், சாதியே சாதிக் கும் பகையேயாகுஞ் சாத்தறிது யிதினுடைய சார்வு தானே. (எருக)

கடுஞ்சுண்ணக் குகை.

தானென்ற கடுஞ்சுண்ணக் குகையைக்கேளு சா தகமாய் கற்சுண்ணம் படிதான்ரெண்டு, கானென்ற கிளிஞ்சியுப்பு படிதான்ரெண்டு கலங்காதே படியெட் டு அமுரிவார்த்து, தேனென்ற அடுப்பிலே வைத்துக் காய்ச்சி சிறப்பாக வற்றியபின் னெடுத்துக்கொண்டு, வானென்ற கல்வத்தி லிட்டேயாட்டி வளமாக மேல்மூ டி கீழ்மூடிசெய்யே. (எருச)

செய்திட்டுக்கடுஞ்சுண்ண மாவதற்குத் திறமாக இதில்வைத்து புடத்தைப்போடு, மைத்திட்டு மல்லி கைப்பூப் போலாஞ்சுண்ண மக்களே கட்டியதோர் ச ரக்குக்கெல்லாம், கொய்திட்டு கடுங்காரச்செயநீர்தோ ய்த்துக்கொட்டியே யிதில்வைத்து புடத்தைப்போடு, வைதிட்டு வாதிகளே மயிர்பிடித்து மக்களே கடுங்கார ங் குகையைச்சொல்லே. (எருரு)

அஞ்சுசுண்ணக் குகை.

சொல்லென்ற அஞ்சுசுண்ணக் குகையைக்கேளு துடியான நண்டுகுத்தை கிளிஞ்சிசங்கு, தில்லென்ற சமையாங் கிளிஞ்சியோடு செப்பாதே சமபாகங் கூ ட்டிநீறு, அல்லென்ற வெண்கருவு விட்டேயாட்டி அ

மையாதே குகைபோலப் பண்ணிக்கொண்டு, வெல்லென்றமிழுணர்த்தி காரசாரம்விட்டிதுக்குள் புடம்போட சுண்ணமாமே. (எருச)

அஞ்சுநீர்.

ஆமென்ற அஞ்சுநீர் சொல்லக்கேளு அப்பனே வெண்கருவு முலைப்பாலாகும், போமென்ற வாய்நீரா மெலுமிச்சஞ்சாறும் போக்கான சுண்ணாம்பு நீருமாகும், வேமென்ற கவசங்கள் சுண்ணத்துக்கு விட்டரைக்க உத்தமமா முடிவேதைக்கு, வாமென்ற அரைப்புவந்த விடங்கள்தோறும் வாய்நீரை விட்டரைத்து நவலோகத்தியே. (எருரு)

சயிலகறணித் தயிலம்.

ஈயமே சயில்கறணி தயிலங்கேளு இதுவல்லோ பாஷாண குலங்களுக்கு, மாயமே கோடாலி யாகுமப்பா மற்றொன்று லாகாது மெழுகாகுதற்கு, தோயவே சயிலகறணி தயிலமவிட்டால் சுளுவாகபாஷாணம் வேதையாகுங், காயமே லோகத்தைச் சிவக்கம்பண்ணி காசிடைதா னுயிரத்துக் கொன்றேபூசே, (எருசா)

பூசியே உருகையிலே ஏமமாகும் பூநீறு படிரெண்டு அளந்துகொண்டு, ஆசியே யடிகனத்த பாண்டத்திட்டு அரைப்படிதான் கற்சுண்ணங் கூடப்போட்டு, தேசியே ஒலுமிச்சம் பழச்சாறுபடிதான் சேர்ந்தகிடா ரைத்தம் பழச்சாறுபடிதான், வேசியே வெங்காயச் சாறுஒருபடிதான் வெள்ளுள்ளிச் சாறுமொருபடியும்வாறே. (எருஎ)

படினாலு வார்த்திட்டுக் கலக்கிவைத்துப் பாங்காகமூன்றுநா ளானபின்பு,தொடினாலா நாள்தானுந் தெ

ளிவிறுத்து னோக்கான கல்லுப்பு பலந்தான்ரெண்டு நெடிளுலு பலஞ்சாரங் கூடவிட்டு நீக்கான வெடியுப்பு பலமிரண்டு, கடினுலு பலங்கெந்தி பூரமிருபலந்தான் கண்டரிரு பலமாகுஞ் சூடனுமப்படியே. (எ௫௯)

படியாகுந் தாளகமு மிருபலந்தான்போடு பண்பாகப் பொடிபண்ணி தெளிவிற்போட்டு, கடியாக யடுப்பேற்றி வைத்தபின்வாங்கி கல்வத்தில் மருந்தெல்லாம் வாங்கியிட்டு, நெடியாக மஞ்சலென்ற கருவாலப்பா நீட்டியரைத் தேழுளுள் விலீகட்டி, பிடியாகப் பூப்புடத்திற் தயிலம்வாங்கி பேரான பறணிதனி லடைத்திடாயே. (எ௬௬)

அடைத்திட்டு முன்சொன்ன பாஷாணவைப்பு அப்பனே முப்பத்து ரெண்டுதாது, மடைத்திட்டு மலீகளிலே பிறக்குகின்ற மகத்தான பாஷாண முப்பத்துரெண்டுஞ், சடைத்திட்டு அயக்கறண்டிக் குள்ளே வைத்து சயிலமென்ற கறணிவிட்டு தணலில்வைத்தூத. படைத்திட்டு பவழம்போல் மெழுகுமாகும் பராபரத்தா யருளியதோர் படிசொன்னேனே. (எ௬0)

சொன்னதொரு சூத்திரத்திற் பொய்யொன்றுமில்லை துலங்கியதோர் மணித்தாயை ஏழுதிரந்துதித்தேன், சொன்னதொரு குருபதத்தை யனுதினமுந்துதித்தேன் துலங்கியதோர் மூலரிட குருபதத்தைதொழுதேன், சொன்னதொரு காலாங்கி அய்யருடபதத்தைத் தொழுதுகொண்டு எழுனூற்றுச் சிலுவானஞ் சொன்னேன், சொன்னதொரு சித்தருட பதங்கள் போற்றி சூத்திரந்தான் பாடினது முற்றே முற்றே.

போகர் ஏழாயிர சூஸ்திர மேழுநூறு.

முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library